கனடா காரை
CKCA
கலாச்சார மன்றம்
WORKING TOGETHER IS SUCCESS

[1989 - 2014]

வெள்ளி விழா காணும்

# கனடா - காரை கலாசார மன்றம்

பெருமையுடன் வழங்கும்

# காரை வசந்தம் - 2014



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடும்பப் பல் வைத்தியர்

## அவசர பல் சிகிச்சை நிலையம்



- கிளிப் போடுதல்
- முரசு கரைதலை நிறுத்துதல்
- பல் வேர்களை அடைத்தல்
- அழகுபடுத்தும் பல் சிகிச்சை
- முதியோர் பல் பராமரிப்பு
- பற்களை வெண்மையாக்கல்
- கட்டுப்பற்கள்
- ஞானப்பல் எடுத்தல்
- நிரந்தரமான செயற்கைப்பற்கள்
- பவுண்பல் கட்டுதல்
- குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
- வாய் துர்நாற்றம் அகற்றல்
- பல்அடைத்தல்
- **Implant**

**OPEN 7 DAYS A WEEK**

பிரபல பல் வைத்திய நிபுணர்

**DR. ஆதிகணபதி சோமசுந்தரம்**

**416-750-9969**

**2191 Warden Ave.(Warden & Sheppard)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா - காரை கலாசார மன்றம்

*பெருமையுடன் வழங்கும்*

# காரை வசந்தம் -2014

## 15வது ஆண்டு கலைவிழா சிறப்பிதழ்

**SIR JOHN A MAC DONALD COLLEGIATE INSTTITUTE**

2300 Pharmacy Avenue, Scarborough, ON. Canada.

ஒக்ரோபர் 25, 2014 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00மணி

பிரதமவிருந்தினர்

**திரு. மகேஷ்வரன் பாலசுப்பிரமணியம்** B.Sc

(Senior Software Engineering Manager & Systems Architect at ARINC - Philadelphia U.S.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை வசந்தம் 2014 கலைவிழா மகத்தான வெற்றிபெற

**Dr. V. Vijayaratnam M.D**

M.R.C.P. (UK), M.R.C.P.C.H., F.R.C.P (C), F.A.A.P, D.C.H. (LONDON), D.C.C.H (EDIN.)
PAEDIATRICS, GASTROENTEROLOGY AND NUTRITION



3430 Finch Avenue East, Unit #6A
Scarborough, Ontario, M1W 2R5
**Tel: 416 496 1990**
Fax: 416 496 1984

600 Sherbourne Street, Suite #711
Toronto, Ontario, M4X 1W4
**Tel: 416 929 0929**
Fax: 416 929 8084



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா - காரை கலாச்சார மன்ற கீதம்

கனடா காரை கலாசார மன்றம்
வாழிய வாழியவே!
இனிதே காரை நகர் வாழ் மக்கள்
இன்புற்று வாழியவே!

மருதமும் நெய்தலும் மருவித் தோன்றும்
மாநிலம் காரைநகர்
கருதும் கல்வி கலையொடு ஒழுக்கமும்
கண்டபண் பாட்டுநகர்!

பால்நிறமான கடலலை மோதிப்
பரவிடும் கரையினிலே
மேலொளி வீசும் கலங்கரை விளக்கம்
விளங்கிடும் மேன்மை நகர்!

அருளம் பலவனார் அல்லின் ஏபிரகாம்
ஆனோர் வளர்த்தநகர்
பொருளை வளர்க்கும் வர்த்தக ராலே
பொலியும் பொன்னரகம்!

பாரிற் புகழொடு பஞ்சரதம் வரும்
பதியும் இதுவே தான்
தேரில் பொலிதரு சுந்தரேஸ் வரரும்
திகழ்வதும் இங்கேதான்

ஈழத்துச் சிதம்பரம் இலங்கிடும் காரை
என்றென்றும் வாழியவே!
தோளொத்த காரை –கனடா மக்கள்
தொடர் பென்றும் வாழியவே!

ஆக்கம்: தமிழருவி ஆசிரியமணி த. சிவகுமாரன்
இசையமைப்பு
குரல்: சங்கீத பூஷணம் காரை ஆ. புண்ணியமூர்த்தி
வயலின்: அளவையூர் இசைஞானபூபதி கேசவமூர்த்தி
மிருதங்கம்: மிருதங்க கலாவித்தகர் பரஞ்சோதி ரதிரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா காரை கலாச்சார மன்றத்தின் 2014ம் ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர்கள்



**நிழல்படத்தில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக** திருமதி கருணாவதி சுரேந்திரகுமார், திருமதி ஞானாம்பிகை குணரத்தினம், திரு.அம்பிகைபாகன் தம்பையா, திரு. பரமானந்தராஜா தம்பையாதிரு.பேரின்பராஜா திருநாவுக்கரசு

நிற்பவர்கள் இடமிருந்து வலமாக திரு.தவக்குமார் பொன்னம்பலம், திரு.உருத்திரலிங்கம் தம்பையா,திரு.கேதீஸ்வரன் பரமு, திரு.ஜெயச்சந்திரன் தம்பிராஜா, திரு.ஜெயக்குமார் நடராஜா

**புகைப்படத்தில் இல்லாதோர் நிர்வாக அங்கத்தவர்கள்:** திருமதி கிருஸ்ணவேணி சோதிநாதன், தயாநிதி திருக்குமார், திருக்குமாரன் கணேசன்,பிரகலாதீஸ்வரன் நடராஜா, மணிவண்ணன் செந்தில்நாதன், சிவசோதி வில்வராஜா, கணபதிப்பிள்ளை ரஞ்சன், ஜெகசோதி குமார், மார்க்கண்டு செந்தில்நாதன், தவராசா சங்கரப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா காரை கலாச்சார மன்றத்தின் தற்போதைய நிர்வாகசபை - 2014.10.25

**தலைவர்:** திரு. தம்பிஜயா பரமானந்தராஜா
**உபதலைவர்(பதில்):** திரு. பொன்னம்பலம் தவக்குமார்

**செயலாளர்(பதில்):** திரு. தீசன் திரவியநாதன்
**உப செயலாளர்:** திரு. ஜெயச்சந்திரன் தம்பிராஜா

**பொருளாளர்:** திரு. பேரின்பராஜா திருநாவுக்கரசு
**உப பொருளாளர்:** திரு. ஜெயகுமார் நடராசா

**நிர்வாகசபை உறுப்பினர்கள்:**

1. திரு.தம்பையா அம்பிகைபாகன்
2. திருமதி. கிருஷ்ணவேணி சோதிநாதன்
3. திருமதி. தயாநிதி திருக்குமார்
4. திருமதி. ஞானாம்பிகை குணரத்தினம்
5. திரு. உருத்திரலிங்கம் தம்பையா
6. திரு. திருக்குமரன் கணேசன்
7. திரு. பிரகலாதீஸ்வரன் நடராஜா
8. திருமதி.கருணாவதி சுரேந்திரகுமார்
9. திரு. கேதீஸ்வரன் பரமு
10. திரு. கனகசபை குமரேசன்
11. திரு. மணிவண்ணன் செந்தில்நாதன்
12. திரு. சிவசோதி வில்வராஜா
13. திரு. கணபதிப்பிள்ளை ரஞ்சன்
14. திரு. ஜெகசோதி குமார்
15. திரு. மார்க்கண்டு செந்தில்நாதன்
16. திரு. தவராஜா சங்கரப்பிள்ளை

**தயார்நிலை உறுப்பினர்கள்:**

1. திரு. பாலசுப்பிரமணியம் விக்கினராஜா
2. திரு. சிவகரன் சிவலிங்கம்
3. திரு. ஆறுமுகநாதன் தர்மலிங்கம்
4. திரு. சிவபாதசுந்தரம் கனகசுந்தரம்

**போசகர் சபை:**

திரு. வேலுப்பிள்ளை இராசேந்திரம்(இணைப்பாளர்)
திரு. ரவீந்திரன் ராஜதுரை
திரு. கந்தப்பு அம்பலவாணர்
திரு. திருவாதர் தர்மராஜா
திரு. கோடீஸ்வரன் ஆறுமுகம்

கணக்காய்வாளர்: திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை
இணையத்தளம்
இணையத்தள தொழில்நுட்ப ஆலோசகர்: திரு. குலசேகரம் விமலராசா
இணையத்தள பராமரிப்பு: திரு.ஜெயச்சந்தின் தம்பிராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெள்ளிவிழாக் காணும் கனடா-காரை கலாச்சார மன்றத்தின்**

**காரை வசந்தம் - 2014**

**நிகழ்ச்சி நிரல்**

5:00 **மங்கள விளக்கேற்றல்:**
மன்ற நிறுவுநர் சிவநெறிச் செல்வர்
தி.விசுவலிங்கம்
முன்னாள் பொருளாளர்
திரு.திருமதி.சி.குகநேசபவான், முன்னாள்
தலைவர் திரு.திருமதி.சண்முகம் கந்தசாமி

5:05 **கனடாப் பண், தமிழ்ப் பண், மன்றப் பண்**
பயிற்றுவித்து வழங்குபவர் நாட்டியகலைமணி
திருமதி.ஞானாம்பிகை குணரத்தினம்
பாடுபவர்கள்:காரை சிறார்கள்

5:20 **அகவணக்கம்**

5:22 வரவேற்புரை: மன்றத்தின் நிர்வாக சபை
உறுப்பினரும், ஓய்வுநிலை கொழும்பு வலய
சேவைக்கால ஆசிரிய ஆலோசகரும் சமாதான
நீதவானும் ஆகிய திரு. தம்பையா
அம்பிகைபாகன் அவர்கள்

5:27 **நட்சத்திரா இசைக் குழுவின் "இன்னிசை மழை" பகுதி I**
இசை: பிருந்தா ஜெயானந்தன், ஜனுஜா
சிவானந்தன், சுரேகா ஆனந்தராஜா

5:37 **பேச்சு - பாலர் பிரிவு ம் இடம்**
செல்வி.பிரனுஷா சிவரூபன்

5:41 **பேச்சு - கீழ் பிரிவு ம் இடம்**
செல்வி.கிருஷானி நடனசபேசன்

5:45 **பேச்சு - மத்திய பிரிவு ம் இடம்**
செல்வன்.தனுஷன் மகாராஜா

5:50 **சந்திரசேகரா நாட்டிய கலைமன்றம் அதிபர்**
திருமதி.அனுசியா ஜெயன் அவர்களின்
மாணவி செல்வி.அக்ஷிகா அரியரட்ணம்
வழங்கும "கீர்த்தனம்"

5:55 **சாயி சகானா அதிபர் நாட்டிய கலைமணி**
திருமதி.ஞானாம்பிகை குணரட்ணம் அவர்கள்
தயாரித்து வழங்கும் கோலாட்டம்
பங்குபற்றும் மாணவர்கள்:
அஞ்சனா சற்குணராஜா, சஹானா
குணரட்ணம், சஜனி குணரட்ணம், சுருதி
கிருபாகரன், பிரியங்கா கேதீஸ்வரன், மீரா
சிறிவர்ணசூரியா, மிதுசா சிறிவர்ணசூரியா,
அஷ்வினி சண்முகரட்ணம், நிந்துஜா
மோகனேந்திரன், பவிஷா மோகனேந்திரன்

6:05 சிவசக்தி நர்த்தனாலய அதிபர் நாட்டிய
கலாஜோதி திருமதி.நிரஞ்ஜனா நிமலன்
அவர்களின் மாணவிகள் வழங்கும் நடனம்
**"சின்னத் தேனி"**
பங்குபற்றும் மாணவர்கள்:
நிந்துஜா மோகனேந்திரன், பவிஷா
மோகனேந்திரன், கனிஷா நவயுகன், பார்கவி
பார்த்திபன்

6:10 நாட்டிய கலைமணி திருமதி.ஞானாம்பிகை
குணரட்ணம் அவர்கள் தயாரித்து வழங்கும்
**காவடி நடனம்**
பங்குபற்றும் மாணவர்கள்:
அஜந்தன் கேதீஸ்வரன், ஜெயந்தன்
கேதீஸ்வரன், ஆனந்த் சற்குணராஜா, ஜனகன்
செந்தூரன், ராகுலன் செந்தூரன், சேயோன்
ஜெயக்குமார், மலரோன் ஜெயக்குமார், சங்கர்
ஜெயச்சந்திரன், மலரவன் விஜயகுமார்,
சயந்தன் கணேசலிங்கம், சேரன் கிரபாகரன்,
மேகலன் சுதாகரன்

6:20 **வாழ்த்துரை:** வெள்ளிவிழாக் காணும் கனடா
காரை கலாச்சார மன்றத்தின் நிறுவுனர்களில்
ஒருவரான சிவநெறிச் செல்வர்
திரு.தி.விசுவலிங்கம் அவர்கள்

6:25 சதாகான நிலைய அதிபர் இசைகலா வித்தகர்,
இசைக்கலைமணி, திருமதி.பவானி
ஆலாலசுந்தரம் அவர்களின் மாணவிகள்
வழங்கும் **"இன்னிசை விருந்து"**
பங்குபற்றும் மாணவர்கள்:
ஆரணி சந்திரேஸ்வரன், கவிதா சிவநாதன்,
காவிரி சிவநாதன்
மிருதங்கம்: லயபிருந்தம் நுண்கலைக்
கல்லூரி அதிபர் திரு.ரதிரூபன் பரஞ்சோதி
அவர்களின் மாணவன் செல்வன். பிரவீன்
பிரபாகரன்
வயலின்: சங்கீதவித்துவான் திருமதி.தனதேவி
மித்திரதேவா அவர்களின் மாணவி
செல்வி.துர்க்கா சுதர்சன்

6:40 கலைக்கோயில் இசைக் கல்லூரி அதிபர்
திருமதி.நவராஜகுலம் முத்துக்குமாரசுவாமி
அவர்களின் மாணவி செல்வி.காயத்திரி
பரமேஸ்வரன் வழங்கும் **திரை கானங்கள்**
மிருதங்கம்: பிரவீன் பிரபாகரன் கீபோட்:
சுவேதன் துஷியந்தன் ட்றம்ஸ் லக்ஷன்
துஷியந்தன்

6:55 சங்கீதவித்துவான் திருமதி.தனதேவி
மித்திரதேவா அவர்களின் மாணவி
செல்வி.அஜந்தா நடராஜா வழங்கும்
**வயலின் இசை**
மிருதங்கம்: லயபிருந்தம் நுண்கலைக்
கல்லூரி அதிபர் திரு.ரதிரூபன் பரஞ்சோதி
அவர்களின் மாணவன் செல்வன். பிரவீன்
பிரபாகரன்

7:05 பிரித்தானியாவிலிருந்து வருகைதந்த செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரா அருட்பிரகாசம் வழங்கும் பரத நாட்டியம்

7:10 கலைஅருவி நுண்கலைக் கல்லூரி அதிபர் திருமதி.ரேணுகா விக்கினேஸ்வரன் அவர்களின் மாணவிகள் வழங்கும்
**"நாட்டுப்புற கலைகளின் சங்கமம்"**
பங்குபற்றும் மாணவிகள்
ஆர்த்திகா சசிகுமார், பிருந்தா செந்தில்நாதன், கௌசிகா வரதராஜா, துஷா சுரேந்திரன், மயூரா செந்தில்நாதன், கஷ்மியா பாலபாஸ்கரன், பிருதிவி ஜெயராஜன்

7:20 **வில்லிசை**
விடுப்பு வில்லிசைக் குழுவினர் வழங்கும்
**"கதை கதையாம் காரைநகராம்"**
எழுத்துருவாக்கம் அவுஸ்ரேலியா காரை கலாச்சார மன்றம் சார்பாக காரை,விசாகன் குமாரசாமி (சிங்கப்பூர்)
அணிசெய் கலைஞர்கள்: ஹார்மோனியம்: சின்னத்தம்பி மாஸ்ரர்
மிருதங்கம்: ரவி , தபேலா: ராஜன் மற்றும் சண்முகநாதன்

7:50 **தலைவர் உரை:**
திரு.தம்பிஐயா பரமானந்தராஜா (தலைவர்)

7:55 **பரிசளிப்பு**

8:25 **பிரதமர் விருந்தினர்**
மகேஸ்வரன் பாலசுப்பிரமணியம்
B.Sc.Eng.(Hons) in Electrical Engineering, Major in Communications and Control Systems - Reside in Arcadia, CA – Southern California, USA.
**சிறப்பு விருந்தினர்கள்:**
திரு.விக்கினேஸ்வரன் தர்மலிங்கம்
B.Sc.Eng.(Hon) in Civil Engineering( University of Waterloo, Canada) (Reside in Boston, USA)
திரு.மனோ சுப்பிரமணியம், York Cinema நிறுவன அதிபர்
Dr.ஆதிகணபதி சோமசுந்தரம்
வீடு விற்பனை முகவர் ராஜ் நடராஜா
**கௌரவ விருந்தினர்கள்:**
(மன்றத்தின் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர்கள்)
திரு. மு. காசிப்பிள்ளை
திரு.குகநேசபவான் சிவசுப்பிரமணியம்
திரு.சச்சிதானந்தம் சிற்றம்பலம்
திரு. கனக சிவகுமாரன்
திரு.கோபால் மயில்வாகனம்
திரு.குஞ்சிதபாதம் நாகலிங்கம்
திரு.சிவராமலிங்கம் சிவசுப்பிரமணியம்
திரு.ரவி ரவீந்திரன்

8:55 கவிதை திரு. தீசன் திரவியநாதன் – மன்ற செயலாளர்

9:05 இடைவேளை

9:20 நட்சத்திரா இசைக் குழுவின்
**"இன்னிசை மழை"** பகுதி 2
இசை: பிருந்தா ஜெயானந்தன், ஜனுஜா சிவானந்தன், சுரேகா ஆனந்தராஜா

9:40 சிறப்புரை: திரு.வேலுப்பிள்ளை இராஜேந்திரம் அவர்கள் மன்றத்தின் முன்னாள் தலைவரும், தற்போதய போசகர் சபை இணைப்பாளரும்

9:45 பிரித்தானியாவிலிருந்து வருகை தந்த செல்வி மதுரா அருட்பிரகாசம் வழங்கும் காவடிச் சிந்து

9:50 Keyboard வாத்திய இசை
கீபோட்: ஜதுஷன் கோடீஸ்வரன், ட்றம்: கார்த்திக் கோடீஸ்வரன்

10:00 **திரை இசை நடனம்**
பங்குபற்றும் மாணவிகள்: நிலானி பரமானந்தராஜா, நிதுஷா பரமானந்தராஜா, மயூரா செந்தில்நாதன், பிரணவி பேரின்பராஜா, பிரவீனா கணேசராஜா, ஹரிணி கணேசராஜா

10:10 **நாடகம்**
காரை மணிவண்ணனின் கதை, வசனத்திலும் சுரேஸ்ராஜாவின் நெறியாள்கையிலும்
**"விடியலைத் தேடி"**
பங்குபற்றும் கலைஞர்கள்
யசோதா, யாழினி, சண்முகநாதன், ராஜன், சுரேஸ்ராஜா, கமல்பாரதி

10:40 நட்சத்திரா இசைக் குழுவின்
**"இன்னிசை மழை" பகுதி 3**
இசை: பிருந்தா ஜெயானந்தன், ஜனுஜா சிவானந்தன், சுரேகா ஆனந்தராஜா

11:10 **நல்வாய்ப்பு சீட்டிழுப்பு**

11:20 **நன்றியுரை**
திரு.தவக்குமார் பொன்னம்பலம், மன்றத்தின் உப–தலைவர்

**நிகழ்ச்சி தொகுப்பு**
**தமிழ்:** P.S. சுதாகரன், பைரவி சிவராமலிங்கம் காரை மணிவண்ணன்
**ஆங்கிலம்:** சங்கவி சண்முகலிங்கம் நிதுஷா பரமானந்தராஜா, பிருந்தா செந்தில்நாதன், மதுரா சோதிநாதன், மயூரா சோதிநாதன்

சுபம்

**www.karainagar.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



PRIME MINISTER · PREMIER MINISTRE

*I am pleased to extend my warmest greetings to the members of the Canada-Karai Cultural Association and to everyone taking part in Karai Vasantham.*

*Canadians are fortunate to be living in a country that embraces diversity. This festival, now in its 14th year, offers you a chance to gather with family and friends and celebrate your unique cultural traditions.*

*I would like to commend the Canada-Karai Cultural Association for fostering fellowship amongst Sri Lankan Canadians who trace their roots to Karainagar, Sri Lanka. You can take pride in your contributions to our great nation.*

*Please accept my best wishes for a memorable celebration.*

*The Rt. Hon. Stephen Harper, P.C., M.P.*

OTTAWA
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Ontario

Premier of Ontario - Première ministre de l'Ontario

October 25, 2014

## A PERSONAL MESSAGE FROM THE PREMIER

On behalf of the Government of Ontario, I am honoured to extend my warm greetings to the Karainagar community celebrating Karai Vasantham.

Ontario derives much strength from our multicultural nature. We embrace diversity and thrive upon an inclusive culture that enriches us all. The Karainagar community is a valued part of our province's dynamic cultural landscape.

I would like to thank the Canada-Karai Cultural Association for playing a key role supporting the Karai-Canadian population in the Greater Toronto Area. Your stewardship is appreciated and your contributions benefit the province as a whole.

Please accept my best wishes for an enjoyable and memorable celebration.

Kathleen Wynne

**Kathleen Wynne**
**Premier**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OLYMPIC
WOOD WORK INC.

www.olympicwoodwork.com

Kitchen is a best place where we satisfy our needs,olympic wood work forward-thinking kitchen design specialized in creating extraordinary kitchen and bath spaces. As a division of Design , our talented team, with background in both architecture and interior design, is experienced in designing kitchens and bathrooms that not only suit your lifestyle, but also based on a holistic approach to design.

- ⇨ **Kitchen**
- ⇨ **Closets**
- ⇨ **Cabinets**
- ⇨ **Counter Tops**
- ⇨ **Store Fixtures**
- ⇨ **Windows / Doors**





## OLYMPIC WOOD WORK INC.


1680 midland road, Unit 14, Scarborough, ON. M1P 3C4

Tel : **416-483- 3700** , Cell : **416-827-9290**

Fax: **416-752-2700**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைவசந்தம்
2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**LEXUS OF RICHMOND HILL**

LEXUS

**குமார் ஜெகசோதி**

**Kumar Jegasothy**

New & Pre-owned Sales Consultant

11552 Yonge Street
Richmond Hill, Ontario, L4E 3N7
www.lexusrh.com

Tel: 905 883 8812 x2378
Tel: 416 789 7871 x2378
Toll Free: 1 866 891 8812
Fax: 905 883 4519
Cell: 416 451 0565
kjegasothy@lexusrh.com

Weins Canada





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS



வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...

**Thana Yoganathan**
Sales Representative

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife Landmark Realty Inc.
INDEPENDENTLY OWNED & OPERATED Brokerage

*Higher Standard Agents... Higher Results!*

**416.418.5749**
www.thanahomes.com

TOP 5%

## LOOKING FOR A NEW CAREER - JOIN THE WINNING AAA LTD. TEAM

25 Karachi Dr., Unit B26
Markham, ON L3S 0B5
(Markham & 14th)
T: 905.201.1115
F: 905.201.1175

REAL ESTATE • LIFE-HOME & AUTO INSURANCE • TAX & ACCOUNTING

**AAA APEX ADVANCED ACTION LTD.**

MORTGAGES • TRAVELS & TRAFFIC TICKETS • INVESTMENTS

80 Nashdene Rd., Unit B27
Toronto ON M1V 5E4
(Markham & Finch)
T: 416.291.3600
F: 416.291.3601

*Our Team offers Friendly & Professional Services*

ஒரே கூரையின் கீழ் இயங்கும்
அனைத்துக்குமான நட்பான சேவைகளுக்கும் நம்பிக்கையுடன்
நாடவேண்டிய தமிழர் ஸ்தாபனம்

**Thana Yoganathan** - *President & CEO*

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Corporate Office:
200-2005 Sheppard Ave. E. Toronto ON M2J 5B4
T: 416.499.5454 Toll Free: 1 877-366 3487

**Thana Yoganathan**
Mortgage Agent - Lic# M09000424

**416.418.5749**
thanaever@gmail.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CAP REIT

# CAP REIT

## Canadian Apartment Properties Real Estate Investment Trust

We have you covered in Scarborough

1757 Victoria Park Ave
(Victoria Pk & Lawrence)
1,2 Bedrooms from $850
Utilities Included 416-759 9977

10 & 30 Tuxedo Court
(Markham & Ellesmere)
1,2,3 Bedrooms from $929
Utilities Included 416-289 7423

25 Bay Mills Blvd
(Warden & Sheppard)
1,2 Bedrooms from $960
Utilities Included 416-293 0924

215 Markham Road
(Markham &Eglinton)
1,2 Bedrooms from $880
Utilities Included 416-267 5223

370 McCowan Road
(McCowan & Eglinton)
1,2,3 Bedrooms from $905
Utilities Included 416-266 7025

567 Scarborough Golf Club
(Scarborough Golf Club & Lawrence)
1,2 Bedrooms from $865
Utilities Included 416- 431 6994

1050 Markham Rd
(McCowan & Ellesmere)
Jr1,1,2 Bedrooms from $720
Utilities Included 416 - 438 3400

4000/4010 Lawrence Avenue East
(Lawrence & Kingston)
1,2,3 Bedrooms from $825
Utilities Included 416- 724 4040

30 Livonia Place
(Neilson & Ellesmere)
1,23 bedrooms from $870
Utilities Included 416- 281 5353

## மிகவும் தரமான வாடகை குடியிருப்பு

Visit our website

**www.capreit.net**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத் தலைவரின் இதயத்திலிருந்து....



இன்று வெள்ளிவிழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் கனடா-காரை கலாச்சார மன்றத்தினை கட்டியெழுப்பிய நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் அனைத்துத் தொண்டர்களுக்கும் நிதி உதவி வழங்கிய வர்த்தக

பெருமக்களுக்கும் கனடா வாழ் காரைநகர் மக்களுக்கும் முதற்கண் நன்றியை கூறிக் கொளள விரும்புகின்றேன்.

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க எமது ஊர் பாடசாலைகளின் முன்னேற்றத்தினையும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு இம்மன்றம் இயங்கி வருகின்றது. இன்றைய சூழலில் மனிதரை மனிதனாக அடையாளப் படுத்துவது பகுத்தறியும் தன்மையும் பலவும் கற்கும் திறனும் ஆகும். இத்தகைய கல்வியறிவையும் ஒழுக்கத்தையும் ஒருவனுக்கு அளிக்கவல்லது கல்வியாகும். ஆகவே எம் மண்ணில் எம் சிறார்களுக்கான கல்வியை உலகத் தரத்தோடு உற்சாகப்படுத்த வேண்டியது எமது மிக முக்கியமான கடமையாகும்.

கல்வியே எமது வருங்கால சந்ததியினர் வளமாக வாழ்வதற்கும் இனமாக அடையாளம் பெறுவதற்கும் உதவும் செல்வமாகும். "எழுத்தாணி குனியும் போது சமுதாயம் நிமிர்கின்றது" என்ற வாசகத்திற்கு அமைய சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கனடா-காரை கலாச்சார மன்றம் முன்நிற்கின்றது.

நாம் சாதிக்க வேண்டியவை நிறையவே உண்டு. சத்தம் இல்லாது நித்தம் பணி செய்திடுவோம். ஒற்றுமையாய் பயணித்திடுவோம். ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிசைய உழைப்போம். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதை கருத்திற் கொண்டு மாணவர்களின் ஆற்றல்களையும் திறமைகளையும் பெருமைகளையும் வளர்க்க முன்நின்று உழைக்கும் கனடா-காரை கலாச்சார மன்றத்திற்கு கை கொடுத்திடுவோம்.

"கல்வி வளர்ச்சிக்கு கை கொடுப்போம்"
வாழ்க மன்றம்! வளர்க அதன் பணிகள்!

நன்றியுடன்,

தம்பிஜயா பரமானந்தராஜா
தலைவர்
கனடா-காரை கலாச்சார மன்றம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் மனதிலிருந்து...



கனடா–காரை கலாச்சார மன்றம் 1989ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ம் திகதி ஈழத்து சிதம்பரம் திருத்தொண்டர் சபையாக ஆரம்பித்து, இன்று கனடா– காரை கலாச்சார மன்றமாக 25 வருடங்களை கடந்து 25.10.2014 இன்று "காரை வசந்தம்" கலை நிகழ்வை வெற்றிகரமாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

கடந்த 25 ஆண்டுகளில் இம்மன்றம் கடந்து வந்த பாதைகளையும், அனுபவங்களையும் உள்வாங்கி கனடா வாழ் காரைநகர் மக்களின் பேராதரவுடன் கனடாவிலும், காரைநகரிலும் கல்விப் பணி, சமூகப்பணி, மருத்துவ பணி, மனிதாபிமான பணி, சமய பணி என்பவற்றில் கனடா– காரை கலாச்சார மன்றம் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த 25 வருடங்களில் இம்மன்றத்தின் வளர்ச்சிக்காக, கனடா வாழ் காரைநகர் மக்களின் ஒற்றுமைக்காக உழைத்த உன்னதமான உள்ளங்களை நினைவு கூர்ந்து, அவர்களின் வழித்தடங்களை பின்பற்றி திரு.தம்பிஐயா பரமானந்தராஜா தலைமையிலான தற்போதைய நிர்வாக சபை கனடா–காரை கலாச்சார மன்றத்தின் வளர்ச்சியை மேலும் முன்னேற்ற பாதையில் எடுத்து சென்று வருகின்றது என்பதனை உறுதியுடன் ஆணித்தரமாக கூறிக்கொள்கின்றேன்.

கனடா–காரை கலாச்சார மன்றத்தின் 15வது மேடை நிகழ்வாக இக்காரை வசந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 2000ம் ஆண்டில் இருந்து கனடாவில் காரைநகர் வசந்தம் வீச ஆரம்பித்தது. 2009ம் ஆண்டு உறவுகளின் தேவையினை உணர்ந்து "காரை விழுதுகள்" என்ற மேடை நிகழ்வாக அரங்கேற்றப்பட்டது. இன்று 15வது மேடை நிகழ்வாக 14வது காரை வசந்தம் நிகழ்வு இதமான இலையுதிர் காலத்தில் சில்லென்ற காற்றில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கனடா–காரை கலாச்சார மன்றம் கடந்த 25 வருடங்களில் மண்ணிற்காக, மக்களிற்காக ஆற்றிய பணிகள் எண்ணில் அடக்க முடியாதவை. அந்த வகையில் இம்மன்றத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழாவினை இம்மன்றத்தின் மற்றுமோர் மைல் கல்லாக பதிவாக்கும் முயற்சியில் காரைநகர் பாடசாலைகளின் வருடாந்த அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நடைபெற்று வருகின்றது. காரைநகரில் தற்போது கல்விப் பணியில் ஈடுபட்டு வரும் 12 ஆரம்ப பாடசாலைகளிற்கு தலா 10 இலட்சம் வரை நிரந்தர வைப்பில் இட்டு வழங்குவதற் மூலம் இவ்வாரம்ப பாடசாலைகளின் செயற்பாடுகளை நிரந்தரமாக தங்கு தடையின்றி நடாத்துவதற்கும், அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய இப்பாடசாலை அதிபர்கள் முன்னெடுக்கும் சிரமங்களை அரைவாசிக்கும் மேலாக குறைக்கவும் முடியும்.

காரைநகர் ஆரம்ப பாடசாலைகளின் அடிப்படை தேவைகளான மேலதிக உதவி ஆசிரியருக்கான வேதனம், மெல்லக் கற்கும் மாணவர்களிற்கான மேலதிக வகுப்புகளிற்கான ஆசிரியர் வேதனம், மாதாந்தம் மேலதிகமாக செலுத்த வேண்டிய மின் கட்டணம், மலசலகூட துப்பரவு, கற்றல் உபகரண பராமரிப்பு கட்டணம் என்பன பாடசாலை நிர்வாகத்தினை வருடந்தோறும் மாதம்தோறும் நிறைவேற்ற முடியாத வகையில் நெரித்து வரும் தலையாய பிரச்சனைகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக ஆசிரியர் வேதனம் கல்வித் திணைக்கழத்தினால் அறவே நிவர்த்தி செய்ய முடியாத பிரச்சனையாகும், மற்றைய அத்தியாவசிய தேவைகளிற்கு கல்வித்திணைக்களத்தினால் வழங்கப்படும் நிதியுதவி மிகமிக குறைந்தளவே ஆகும். எடுத்துக்காட்டாக மாதந்தம் கல்வித் திணைக்கழத்தினால் மின் கட்டணமாக ஆரம்ப பாடசாலைகளிற்கு 800 ரூபாய்களே வழங்கப்படுகின்ற நிலையில் தற்போதைய கணணி பாவனை மற்றும் மின் உபகரணங்களின் பாவனையினால் மாதாந்தம் 1500 ரூபாய்களிற்கு மேல் மேலதிக செலுத்த முடியாத மின்கட்டணமாக உயந்து கொண்டு இருக்கின்றது.

மெல்லக் கற்கும் மாணவர்களாக அனைத்து பாடசாலைகளிலும் 20 தொடக்கம் 30 விகிதமான மாணவர்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு தற்போதைய ஊரின் வாழ்க்கை சூழ்நிலை காரணமாக இருக்கின்றது. அதற்கான வழிமுறைகளை கைக்கொண்டு அவர்களையும் கற்றலில் ஈடுபடுத்த வேண்டிய கட்டாயம் கல்விச் சமூகத்திற்கு உண்டு. அது மட்டுமன்றி மெல்லக் கற்கும் மாணவர்களிற்கு பாடசாலை நேரம் தவிர்ந்த மாலை நேரங்களில் விசேட வகுப்புக்கள் மூலம் அவர்களின் நேரத்தை கற்றலில் ஈடுபடுத்தி அவர்களையும் சமுதாயத்தில் நற்பிரஜைகளாக வளர்த்தெடுப்பதற்கு உதவியவர்களாவோம்.


கனடா–காரை கலாச்சார மன்றம் கனடாவில் இவ்வருடம் தமிழ், சமய, யோகா மற்றும் பிரெஞ் மொழி வகுப்புக்களையும் ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தி வருகின்றது. கனடாவில் வாழும் காரைநகர் மக்களிடையே இம்மன்றத்தின் கொள்கைகள், குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு முன்னைய நிர்வாக சபை உறுப்பினர்களின் ஆலோசனையை பெற்று இயங்கி வருவதால் மன்றத்தின் நிர்வாக செயற்பாடுகள் மிகவும் இலகுவாகவும், வெளிப்படையாகவும் இயங்கி வருவதுடன் கனடா வாழ் காரை மக்களினதும், இம்மன்றத்தின் அபிமானிகளிடத்தும் ஆதரரை பெற்றுள்ளதுடன் இம்மன்றத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆர்வமுடன் பணி புரிந்து வருவதையும் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

கனடா–காரை கலாச்சார மன்றம் மென்மேலும் சிறந்து விளங்கவும், கனடாவில் காரைநகர் மக்களின் ஒற்றுமையினை எடுத்தியம்பும் அமைப்பாகவும் தொடர்ந்து வளர்வதற்கு அனைத்து கனடா வாழ் காரைநகர் மக்களினதும், அனுசரணையாளர்களினதும், விளம்பரதாரர்களினதும் ஒத்துழைப்பினை வேண்டிக்கொள்வதோடு, எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரத்தான் இம்மன்றத்தின் பணிகளிற்கு துணையிருக்க வேண்டிக்கொண்டு இச்செயலாளர் செய்தியினை நிறைவு செய்து கொள்கின்றேன். நன்றி!

தீசன் திரவியநாதன்
(பதில்) செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொருளாளரின் செய்தி

கனடா-காரை கலாச்சார மன்றத்தின் பதின்னான்காவது ஆண்டாக வீசும் 'காரை வசந்தம் 2014 இல் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

புலம் மாறினாலும் தடம் மாறாமல் பிறந்த மண்ணின் நினைவுகளோடு வாழும் உங்களைப் போன்ற கனடா வாழ் காரை மக்களின் ஒத்துழைப்போடும் எமது நிர்வாக உறுப்பினர்களின் பொன்னான நேரத்தைச் செலவு செய்யும் கடின உழைப்போடும் வணிகப் பெருமக்கள் வாரி வழங்கும் பொருளுதவியோடும் எமது மன்றம் அடுத்த கட்டத்தை நோக்கி வீறு நடை போடுவதைக் கண்டு பொருளாளர் என்ற வகையில் பெருமிதம் அடைகின்றேன்.

" **காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது**"

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய குறுகிய காலத்தினுள் பல மனிதநேயப் பணிகளையும், கல்விசார் உதவிகளையும் எமது ஊரில் வாழும் உறவுகளுக்கு உதவும் வகையில் காரை அபிவிருத்தி சபையினூடாக எமது மன்றத்தினால் வழங்கக் கூடியதாக இருந்தமைக்கு தக்க காலத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் செய்த உதவியே காரணமாகும். அதற்காக பொருளாளர் என்ற வகையில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் போல் இன்றும் 'காரை வசந்தம்' விழா வெற்றி விழாவாக அமையவும் விழாவில் வெளியிடப்படும் காரை வசந்தம் சிறப்பு மலர் அழகிய மலராக நறுமணம் வீசவும் வாழ்த்துவதுடன், மன்றத்தின் பணிகள் மேன்மையுற எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்துறை சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசப் பெருமானை வேண்டுகின்றேன்.

பேரின்பராஜா திருநாவுக்கரசு
பொருளாளர்
கனடா-காரை கலாச்சார மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசகர் சபையினரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்து சிதம்பர திருத்தொண்டர் சங்கம்–கனடா என்ற அமைப்பு கனடாவில் 1989 ஆம் ஆண்டளவில் உருவாகி நன்கு இயங்கி வந்து கொண்டு இருந்தது. எனினும். பரந்துபட்ட அளவில் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை தழுவி இயங்கவும் இளைய தலைமுறையினரைக் கவரவும் பெயர்மாற்றம் அத்தியாவசியம் என்று உணரப்பட்டது. எனவே 1994 ஆம் ஆண்டளவில் அப்போது கடமையில் இருந்த நிர்வாக சபையினர் மேற்படி சங்கத்தின் பெயரை "கனடா–காரை கலாச்சார மன்றம்" என பொது மக்களின் ஆதரவுடன் ஒரு பொதுக் கூட்டத்தில் பெயர் மாற்றம் செய்து பதிவு செய்தனர். இதனை நடைமுறைப் படுத்தியதில் எமது நல்லாசான் சபாபதிப்பிள்ளை சபாநடேசன் அவர்களின் பங்கு மிக மிக முக்கியமானது.

இன்று இந்த அமைப்பானது அகவை 25இல் வெள்ளி விழா காண்பதனை கண்டு போசகர் சபையின் சார்பில் இந்த வாழ்த்துச் செய்தியினை பதிவு செய்வதில் எனது உள்ளம் பூரிப்பு அடைகின்றது. ஆரம்பகாலத்தில் இருந்து இன்று வரையிலும் இருந்த நிர்வாக சபையினரும் பொதுமக்களும் ஒன்றிணைந்து செயல்பட்டதின் காரணமாகவே நாம், நாம் பிறந்த நாட்டிற்கு(காரைநகர்) கணிசமான தொகை பணத்தினை கல்வி மேம்பாட்டிற்காக அனுப்பமுடிந்தது. தீதும் நன்றும் பிறர் தர வாராது! என்ற நல்வாக்கியம் காட்டிய பாதையில் அவ்வப்போது இருந்த நிர்வாக சபையினரின் கடின உழைப்பாலும் பொதுமக்களின் பரோபகார தன்மையினாலும் மன்றம் வெற்றி நடை போடுகின்றது.

இன்று அரங்கேறும் காரை வசந்தம் 2014 எம்மவரின் கடின உழைப்பின் அடுத்த படிக்கல்லாகும். இந்த விழாவானது எம்மவர் மத்தியிலும் வந்திருக்கும் விருந்தினர் மத்தியிலும் அழியாத கோலமாக வரைபட எல்லாம் வல்ல இறை சக்தியினதும் நல் உள்ளம் கொண்ட பெரியோர்களினதும் ஆசியினையும் வேண்டி நிற்கின்றேன்.

போசகர் சபையின் சார்பாக
இணைப்பாளர் திரு.வே.இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காரைநகர் கோட்ட கல்வி அதிகாரி**
**திரு. பு. ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்கள் வழங்கிய செய்தி:**

# காரைநகர்க் கோட்டப் பாடசாலைகள்

கனடா காரை கலாச்சார மன்றத்தின் 25வது ஆண்டு நிறைவு காரை வசந்தம் – 2014 மலருக்காக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். கனடா காரை கலாச்சார மன்றம் காரைநகர்ப் பிரதேசத்தில் கல்விக்கு கூடுதலான பங்களிப்பை நல்குவது பெருமைக்குரியதாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான 12 பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களை வருடம்தோறும் தீவகம் முழுவதும் வழங்கி வருவது அதிசிறப்புக்கு உரியதாகும். இம்மன்றம் தன்பணியை மேன் மேலும் சிறப்பாக ஆற்ற வாழ்த்துகின்றேன்.

காரைநகர் பிரதேசத்தில் மொத்தம் 15 பாடசாலைகள் உள்ளன. இதில் 1ABஇல் 2, வகை IIஇல் 2, வகை IIIஇல் 11 உம் உள்ளன. இங்கு வகை III பாடசாலைகளில் 2 பாடசாலைகள் இதுவரை மீளத்திறக்கப்படவில்லை. ஏனைய 13 பாடசாலைகளும் தம் பணியை சிறப்பாக ஆற்றுகின்றது. அரச உதவிக்கு மேலாக புலம் பெயர் நாடுகளிலுள்ள பழைய மாணவர்கள், கலாச்சார மன்றங்கள் காரை அபிவிருத்தி சபை ஊடாக பல்வேறு உதவிகளை வழங்கி இக்கல்விச்சாலைகளை கவினிலையாக தம்பணியை ஆற்ற பெரிதும் உதவி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்**

காரைநகர்ப் பிரதேசத்தில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டு பல அபிவிருத்திப் பணிகள் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றது. திறமையான நல் ஆசிரியர் வளமிக்க இப்பாடசாலையில் அதிபர் நல்வழிகாட்டலில் மாணவர் கல்விச் செயற்பாட்டிலும் இணைபாடவிதான செயற்பாட்டிலும் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றனர். இங்கு தரம் 6 தொடக்கம் தரம் 13வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றது. மேலதிக வகுப்புக்கள் நடைபெற பல வசதிகளை பழைய மாணவர்கள் பாடசாலை நிர்வாகம் மூலம் வழங்கி வருகின்றனர். க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) ஆகிய பரீட்சைகளில் மாணவர்கள் வருடம் தோறும் நல்ல பெறுபேறுகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்க்கின்றனர். இங்கு க.பொ.த (உ.த) விஞ்ஞான கணிதப் பிரிவுகளில் மாணவர் இணைந்து கொள்ளும் வீதம் குறைவாக இருப்பது ஓர் குறையாக உள்ளது. வடமாகாணத்தில் முதன் முதலாக இங்கு டியிற்றல் நூலகம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

**யாழ்ற்ரன் கல்லூரி**

இங்கு தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றது. ஆரம்ப பிரிவு சிறிய தூரத்தில் ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. இதில் சிரேஷ்ட பாடசாலையில் கட்டட வளங்களும் ஏனைய பௌதீக வளங்களும் போதுமான அளவு அமைந்திருக்கின்றது. ஆரம்ப பிரிவில் கட்டட வளம் போதுமானதாக இல்லை. சிரேஷ்ட பாடசாலை மிகப் பெரிய மைதானத்தைக் கொண்டிருப்பது சிறப்புக்குரியதாகும். நல்ல அதிபர், நல்ல ஆசிரியர் வழிகாட்டலில் கல்விப் பெறுபேறுகளிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மாணவர் சாதனை படைத்து வருகின்றனர். பழைய மாணவர் பாடசாலை வளர்ச்சியிலும் சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கி வருவது குறிப்பிடத்தக்கது. மிகவும் கவினிலையாக இருக்கும் இப் பாடசாலையில் புதிய மலசலகூடத் தொகுதிகள் அமைக்கப்படவேண்டியது அவசியமாகவுள்ளது. மேலதிக வகுப்புக்கள் மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

இங்கு தரம் 1 தொடக்கம் தரம் 11 வகுப்பு வரை நடைபெறுகின்றது. தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்ப பிரிவு சிரேஷ்ட பாடசாலையில் இருந்து 200m தூரத்தில் தனிமையான கட்டடத்தில் இயங்குகின்றது. சகல வளங்களையும் ஒருங்கே கொண்ட இப்பாடசாலையில் திறமைமிக்க அதிபரும், அனுபவம் உள்ள ஆசிரியர்களும் கடமையாற்று கின்றனர். விசேடமாக கவனிக்க வேண்டிய மாணவர் கள் இங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

#### வியாவில் சைவ வித்தியாலயம்

மிகவும் பழமைவாய்ந்த இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றது. வளங்கள் நலிவடைந்த நிலை யிலும் தனது பணியை ஆற்றுகின்றது. இப்பாடசாலை க்கு மாணவர் தொகை குறைவாக இருப்பது ஓர் சவாலாக அமைகின்றது. இருந்தும் தமது கடமையை அதிபர், ஆசிரியர்கள் செவ்வனே ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

#### ஆயிலி சிவஞானோதயா வித்தியாலயம்

01.09.2014 இப் பாடசாலை மீளத்திறக்கப்பட்டு தனது கல்விப் பணியை தொடருகின்றது. பல பௌதீக வளத்தேவைகளைக் கொண்டுள்ள இப் பாடசாலை யில் பழைய மாணவர் திரு. சுப்பிரமணியம் கதிர்காம நாதன்(சுவிஸ் நாதன்) அவர்களால் 60"X25" மாடிக்கட்டடம் ஒன்று அமையவிருப்பது இனிப்பான செய்தியாகும். ஆரம்ப பாடசாலையான இங்கு தற் போது தரம் 1, தரம் 2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 2015 இல் ஏனைய வகுப்புக்களும் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றன.

#### மெய்கண்டான் வித்தியாலயம்

ஆரம்ப பாடசாலையான இங்கு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. நல்ல வளங்களைக் கொண்ட இப்பாடசாலையில் பாடசாலை எல்லைகள் இருபக்கம் சீராக இல்லாதமை ஓர் குறைபாடாகும். நல் அதிபர், நல்லாசிரியர்களைக் ஒருங்கே கொண்ட இப் பாடசாலையின் மாணவர் அடைவு மட்டம் சீராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

#### ஊரி அ.மி.த.க வித்தியாலயம்

பழமை வாய்ந்த இப்பாடசாலை ஓர் ஆரம்ப பாடசாலை யாகும். பல நெருக்கடியின் மத்தியிலும் படிப்படியாக இப்பாடசாலை வளர்ச்சி பெற்று வருகிறது. நல்அதிபர், நல்லாசிரியர்களைக் கொண்ட இப்பாடசாலையில் மாணவர் வரவு ஒழுங்கு சிறப்பாக இருப்பது குறிப் பிடத்தக்கது. புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு களிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் இம்மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெறுவது சிறப்புக்குரியதாகும். பாடசாலை–பெற்றோர் உறவு மிகவும் சிறப்பாக இருப்பது குறிப்பிடத்தக்கது. வகுப்பறைக் கட்டட வசதி இங்கு குறைவாக இருப்பது ஒரு குறைபாடாகும்.

#### பாலாவோடை இ.த.க பாடசாலை

இது பழமை வாய்ந்த சகல வளங்களையும் கொண்ட ஆரம்ப பாடசாயையாகும். இப்பாடசாலை 1990 இடப் பெயர்வின் பின்னர் மக்கள் மீளக்குடியமராத காரணத்தால் மிகக் குறைந்தளவு மாணவர்களுடன் தன் பணியை ஆற்றிவருகிறது. மாணவர் தொகையை அதிகரிக்க எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி பெறாதமை குறிப்பிடத்தக்கது.

#### தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயம்

போதிய வளங்கள் அற்ற நிலையில் 2011 இல் மீளத்திறக்கப்பட்ட இப்பாடசாலை மெதுமெதுவாக வளங்கள் பெற்று சிறப்பான வகையில் தற்போது தன் பணியைஆற்றி வருகிறது. நல்அதிபர், நல்லாசிரியர்கள், பெற்றோர்களின் செயற்பாடுகளால் வளர்ச்சி பெற்று வரும் இப்பாடசாலையில் மாணவர் அடைவு மட்டம் சிறப்பாக இருப்பது குறிப்பிடத்தக்கது. விளையாட்டு மைதானம் இல்லாத போதும் அருகிலுள்ள ஆலய வீதியை பயன்படுத்தி செயற்பாடுகளை நிறைவேற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

#### வலந்தலை வடக்கு அ.மி.த.க வித்தியாலயம்

ஆரம்ப பாடசாலையான இப்பாடசாலை தன் பணியை செவ்வனே ஆற்றிவருகிறது. நல்அதிபர், நல் ஆசிரியர்களின் செயற்பாடுகளால் மாணவர் அடைவுமட்டம் சிறப்பானதாகவும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் பெறுபேறுகள் நல்லமுறையிலும் இருக்கின்றன. நல்ல வளங்களைக் கொண்டுள்ள இப்பாடசாலையில் மூன்று பக்க எல்லை வேலிகள் சீர் செய்ய வேண்டியது அவசியமாகிறது

#### வலந்தலை தெற்கு அ.மி.த.க வித்தியாலயம்

2012 இல் மீளத்திறக்கப்பட்ட இப் பாடசாலை மிகவும் பழமையான ஆரம்ப பாடசாலையாகும். ஆங்கில பாடத்திற்கு முக்கியத்துவம் வழங்கி வரும் இப்பாடசாலை மாணவர் கோட்ட, வலய போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். நல்அதிபர், நல்லாசிரியர்களின் வழிகாட்டலில் மாணவர்கள் தம் திறமைகளை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

#### வேரப்பிட்டி ஸ்ரீ கணேச வித்தியாலயம்

போதிய வளங்களற்ற நிலையில் 2011 இல் மீளத்திறக்கப்பட்ட இவ் ஆரம்ப பாடசாலை வலயக்கல்வி அலுவலகத்தின் பொருளாதார அமைப்பு நிதி மூலம் திருத்தம் செய்யப்பட்டு தன்பணியைத் தொடருகின்றது. பின் தங்கிய பிரதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவான நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பாடசாலையிற்கு வகுப்பறைக்கட்டம் தேவையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. நல் அதிபர், நல்லாசிரியர்களின் வழிகாட்டலில் மாணவர் தம் கல்வியை சிறப்பாகப் பெறுகின்றனர். மைதானம் இல்லாத போதும் விளையாட்டு செயற்பாடுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. எல்லை வேலிகள் சீர் செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

**சுப்பிரமணிய வித்தியாசாலை**

பழமையான இவ் ஆரம்ப பாடசாலை வலிகாம இடப் பெயர்வின் பின் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய நிர்வாகத்தின் கீழ் இயங்கியது. மீண்டும் 2012 ஆம் ஆண்டு முதல் தனித்துவமாக இயங்கிவருகிறது. பல வளங்களற்ற நிலையிலும் தமது செயற்பாட்டை சிறந்த முறையில் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. நல் அதிபர், நல்லாசிரியர்களின் வழிகாட்டலில் மாணவர் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளிலும் இணைபாட விதான செயற்பாடுகளிலும் சிறப்பான பெறுபேறு களைப் பெற்று வருகின்றனர். இங்குள்ள மிகப் பழைய கட்டடம் சீர் செய்யப்படவேண்டியதும், வகுப்பறைகள் காட்சிப்படுத்த வசதி செய்யவேண்டியதும் அவசியமாகும்.

# காரையின் வசந்தம் வாழி

காரைமண் நினைவி னோடு
கலைபல வளர்த்து–ஊரார்
கூடியே மகிழ்ந்து–ஊரின்
குறைகளைந் துதவப் பொங்கும்
“காரையின் வசந்தம்“ என்ற
கவின்விழா சிறக்க வேண்டும்.
ஊர்ப்புகழ் உலக மெங்கும்
ஓங்கியே ஒலிக்க வேண்டும்

தமிழொடு சைவம், எங்கள்
சடங்குகள், சம்பிர தாயம்,
எமன் வாயிற் சிக்கக் கூடாது
என்றடையாளங் காத்து
அமைதியாய்ப்–“புகுந்த“ நாட்டில்
அயராது உழைத்து– ஊரின்
கமழ் புகழ் நினைந்து போற்றும்
காரையின் வசந்தம் வாழி!

த.ஜெயசீலன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை(அப்புத்துரை)

காரைநகரில் கிபி 19ம்நூற்றாண்டளவில் அமெரிக்க மிஷனரிமாரின் வருகையோடு 1855ல் தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டது. சமயம் பரப்பும் நோக்கோடு வந்த மிஷனரிமார் சமயத்துடன் கல்வியையும் இணைத்து வளர்க்க முற்பட்டனர். இதனால் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து 1857ல் தேவாலயத்தோடு இணைந்ததாக ஓலைக்கொட்டிலால் அமையப்பெற்ற பாடசாலை ஒன்றை உருவாக்கினர். அந்தப்பாடசாலை வலந்தலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை என அழைக்கப் படலாயிற்று. ஆரம்பகாலத்தில் தலைமையாசிரியராக அப்புத்துரை வாத்தியார் கடமையாற்றினார். இவரின் பெயரால் இப் பாடசாலை அப்புத்துரை பள்ளிக்கூடம் எனவும் அழைக்கப்படலாயிற்று. இதற்குக் காரணம் அவ்வாசிரியரின் அர்ப்பணம் மிக்க சேவையேயாகும்.
இவருக்குப் பின்னர் பாடசாலையை பொறுப்பேற்ற தலைமையாசிரியர்களும் கல்வி கற்பித்த ஆசிரியர் களும் அளப்பரிய கல்விப் பணியாற்றியுள்ளார்கள் என்பது இங்கு கற்ற பழையமாணவர்கள் வாயிலாக அறியமுடிகிறது. இவ்வாறு காரைநகரில் இயங்கிய ஆரம்ப பாடசாலைகளில் சிறந்த முன்னனிப் பாட சாலையாக விளங்கியது என்பதையும் அறியமுடிகிறது. இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் பலர் இலங்கையிலும் புலம்பெயர் தேசங்களிலும் சிறந்த அறிஞர்களாக கல்விமான்களாக தொழில்சார் வல்லுணர்களாக பணியாற்றுவதையும் காணக் கூடியதாகஉள்ளது. இப் பாடசாலை கல்விப்புலத்தில் சிறப்பானதொரு பங்களிப்பை காரைநகர் பிரதேசத்தில வழங்கி வந்தமையை இச் சான்றோர்கள் மூலம் உணரமுடிகிறது.

இவ்வாறு காரைநகர் பிரதேசத்தில் ஆரம்பப் பாடசாலைகளுக்கு முன் மாதிரியான பாடசாலையாக திகழ்ந்த இப் பாடசாலை காரைநகரில் ஏற்பட்ட இடப்பெயர்வினைத் தொடர்ந்து 1991ம் ஆண்டளவில் மூடப்பட்டது. இடப்பெயர்வு காரணமாக பாடசாலைக் கட்டிடங்கள் பெருமளவில் முழுமையாகச் சேதமுற்றன. பின்னர் 2012ம் ஆண்டளவில் இப்பாடசாலை மீளத்திறக்கப்பட்டது. அப்போது 18 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று தரம் 1 – 3 வரையான வகுப்புக்களில் 62 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

தற்போது எமது பாடசாலை மாணவர்கள் வலயமட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்று மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர்.

**மாணவர்களது சாதனைகள்**

**2012**

க.கஜேந்தினி
திருக்குறள் வலயமட்டம் 1ம் இடம் (தரம் – 1)
ச.கெத்சீயாள்
சித்திரப்போட்டி வலயமட்டம் 4ம் இடம் (தரம் – 1)

**2013**

வி.துஸ்யந்தி
திருக்குறள் வலயமட்டம் 1ம் இடம் (தரம் – 1)
க.கஜேந்தினி
திருக்குறள் வலயமட்டம் 1ம் இடம் (தரம் – 2)
ச.கெத்சீயாள்
சித்திரப்போட்டி வலயமட்டம் 1ம் இடம் (தரம் – 2)
ப.ஜெயானி
சித்திரப்போட்டி வலயமட்டம் 1ம் இடம் (தரம் – 2)
இ.தமிழினி
விரைவுகணிதப்போட்டி வலயமட்டம் 1ம்இடம்(தரம் – 2)
சிறுவர் அரங்கு
கோட்டமட்டம் 3ம் இடம் (தரம் – 1,2)
English Action song
(Group Level 1) – வலயமட்டம் 3ம் இடம்

- மணிவாசகர் சபை நடாத்திய சைவசமய அறிவுப் பரீட்சையில் தரம் 2 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி.இ.தமிழினி 1வது இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டார். மேலும் இப்போட்டியில் சிறப்பு பரிசில்களை செல்வன்.பா.டர்னிகன், செல்வி.கு.வைஷ்ணவி ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

2014

சி.நவநிதி

திருக்குறள் வலயமட்டம் 1ம் இடம் (தரம் – 1)

வி.துஸ்யந்தி

திருக்குறள் வலயமட்டம் 2ம் இடம் (தரம் – 2)

க.கஜேந்தினி

திருக்குறள் வலயமட்டம் 1ம் இடம் (தரம் – 3)

ச.கெத்சீயாள்

சித்திரப்போட்டி வலயமட்டம் 1ம் இடம் (தரம் – 3)

இ.தமிழினி –

விரைவுகணிதப்போட்டிவலயமட்டம்1ம்இடம் (தரம் – 3)

ப.துவாரகா –

விரைவுகணிதப்போட்டிவலயமட்டம்2ம்இடம்(தரம் – 2)

ஆங்கில கவிதை

ச.கெத்சீயாள் வலயமட்டம்1ம்இடம் (தரம் – 3)

(Recitation)

கு.வைஷ்ணவி வலயமட்டம்2ம்இடம் (தரம் – 3)

ஆங்கில நாடகம் – வலயமட்டம் 1ம்இடம் (தரம்–3)

(English Primary Dialogue Drama)

ஆங்கில உறுப்பெழுத்து

க.கஜேந்தினி வலயமட்டம் 1ம்இடம் (தரம் – 3)

(English hand writing)

ஆரம்பக்கல்வி ஆங்கில பாடல்

வலயமட்டம் 1ம்இடம்

(English Action Song Group Level I Gr 1,2)

இந்த வகையில் எமது பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் சாதனை படைத்து வருகின்றமை குறிப்பிடதக்கது.

எமது பாடசாலையினல் பின்வரும் பௌதீக நிதி தேவைகளை நிறைவு செய்து தருமாறு இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றோம்.

1. பாடசாலைக்கு விளையாட்டு மைதானம்.
2. நூலகத்தை மேம்படுத்துவதற்காக
   1. புத்தகறாக் கைகள்
   2. நூல் கொள்வனவு
   3. நூலகத் தளபாடங்கள்
3. கனணி அறிவை விருத்தி செய்ய கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள
   1. கணனிகள்
   2. மல்ரிமீடியா
4. பாடசாலையில் வருடந்தோறும் நடைபெறும் பின்வரும் போட்டிகளுக்கான நிதி அனுசரனை
   1. விளையாட்டுப்போட்டி
   2. பரிசளிப்பு விழா
   3. பாடசாலையில் நடைபெறும் கல்வி ஊக்குவிப்பு போட்டிகள்
4. மாதாந்த முன்னோடிப்பரீட்சைகள்
5. தொண்டராசிரியரின் கொடுப்பனவு
6. பாடசாலையின் பொருட்களை பாதுகாப்பதற்கும், களஞ்சியப்படுத்துவதற்கும் களஞ்சிய அறை அமைத்தல்.
7. குடிநீர் தாங்கி அமைத்தல்.
8. வலயமட்ட, மாகாணமட்ட, போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கான போக்குவரத்து கட்டணங்கள்.
9. வகுப்பறை கட்டடங்கள்.
10. குடிநீர் மின்சாரத்திற்கான மேலதிக கட்டணங்கள்.
11. சிறுவர் பூங்கா அமைத்து பாடசாலையை கவி நிலைப்படுத்தல்.
12. பாடசாலையின் மேற்குப்புறவேலி, கிழக்குவேலி என்பவற்றிற்கு மதில்கட்டுதல்
13. பாடசாலையில் மதிய உணவு தினமும் வழங்கப் படுகின்றது. இதற்கு சமையலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் அவருக்கான மாதாந்த கொடுப்பனவுகள்.
14. பாண்ட் அணிக்கான உடை தயாரிப்பு

எமது பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய பழையமாணவர்கள் நலன்விரும்பிகள் பாடசாலையின் சில வசதிக்குறைபாடுகளைப் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில் எமது பாடசாலையை நகர்ப்புற பாடசாலைகளுக்கு இனையாக தரமிக்க பாடசாலையாக உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை பாடசாலைச் சமூகத்திற்கு உண்டு என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஊரி அ.மி.த.க.பாடசாலை

1858 ஆம் ஆண்டு அமெரிக்க மிசனரி சபையால் காரைநகர் தேவாலயத்துடன் இணைந்து இயங்கி வந்தது. 1920 ஆம் ஆண்டளவில் தற்போது உள்ள இடத்தில் திரு. அப்புக்குட்டி வேலு அவர்கள் வழங்கிய காணியில் தரம் 1–5 வகுப்புக்களை உள்ளடக்கி ஓலைக்கொட்டிலில் இயங்கிவந்தது. பின்னர் 1945இல் 15X30 நிரந்தரக்கட்டடம் அமைக்கப்பட்டது.



அதன் பின்னர் 1975 இல் 70X20 கட்டடமும் 1985 இல் 20X40 கட்டடமும் அமைக்கப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இயங்கிவந்தது. அக்கால கட்டத்தில் இவ்வூரைச் சேர்ந்த திரு மு.கிருஸ்ணப் பிள்ளை அதிபராக இருந்தார். 1990 களில் ஏற்பட்ட கரையோர இடப்பெயர்வுகளின் போது இப்பாடசாலை யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் பின்னர் காரைநகர் பாடசாலைகள் அனைத்தும் ஒன்றினைந்து மாவடி வட்டுக்கேட்டையில் அதிபர் திரு பரமசிவம். அவர்களின் கீழ் இயங்கியது.

1995 ஆம் ஆண்டளவில் குடநாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளுடன் பாடசாலை இயங்கவிலலை. 2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து 2002/2003 ஆம் ஆண்டுகளில் பாலாவோடை அ.த.க வித்தியாலயத்தில் இயங்கியது. 19.01.2003 இல் திரு T. மாதவன் அதிபராக கடமையேற்றார். 2003ம் ஆண்டு ஆடிமாதம் 09 திகதி G.T.Z உதவியடன் பெற்றோர் நலன்விரும்பிகள் பழையமாணவர்கள் குறிப்பாக தம்பிராசா நிமலதாசன் போன்றவர்களின் முயற்சியினால் வலயக் கவிப்பணிமனை அனுமதியுடன் திரு.இராதகிருஸ்ணன் (பிரதிக்கல்விப்பணிப்பாளர் நிர்வாகம்) அவர்களும் இணைந்து தற்போது உள்ள இடத்தில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. 14.01.2003இல் புதிதாக இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். 03.05.2004 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை திரு.இ.சிறிதரன் அதிபராக கடமையாற்றுகின்றார். தற்போது இப் பாடசாலை கல்வியிலும் ஒழுக்கத்திலும் விளையாட்டிலும் சிறந்து விளங்குவதுடன் மாணவர் தொகை அதிகரித்துள்ளதால் இடவசதி கருதி மாகாணக் கல்வித்திணைக்களத்தால் 2011ல் மாடிக்கட்டடத்தின் கீழ்த்தளம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. துர்ரதிஷ்ட வசமாக இக்கட்டடத்தின் மிகுதிவேலைகள் நடைபெறாதுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி இப்பாடசாலையின் நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதில் காரை அபிவிருத்திச் சபை பெரும் பங்காற்றி வந்துள்ளது. அவ்வகையில் மின்சார இணைப்பு, எல்லைப் பாதுகாப்பு வேலி, போட்டே பிரதி இயந்திரம், ஒலி பெருக்கிச் சாதனங்கள், பல்லூடக எறியி, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள கற்றலில் இடர்படும் மாணவர்களின் அடைவுமட்டத்தினை உயர்த்துவதற்கான செயற்திட்டம், மைதானக் கட்டட புனரமைப்பு என்பவற்றை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் காரை அபிவிருத்திச் சபையூடாக கனடா – காரை கலாச்சார மன்றம் மின்இணைப்பு (மின் இணைப்பில் ஒருபகுதி நிதியினை Dr கலைச்சந்திரன் கனடா), பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள கற்றலில் இடர்படும் மாணவர்களின் அடைவுமட்டத்தினை உயர்த்துவதற்கான செயற்திட்டம் (06 மாதம் – ரூபா 214,810.00) என்பவற்றை செயற்படுத்திவருகின்றது.

எமது பாடசாலையின் எதிர்காலத்திலும் (2015) இச்செயற்திட்டத்தை (பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள கற்றலில் இடர்படும் மாணவர்களின் அடைவுமட்டத்தினை உயர்த்துவதற்கான செயற் திட்டம்) நடைமுறைப்படுத்த உதவினால் பின்தங்கிய மாணவர்களின் அறியாமையை அகற்றமுடியும். மேலும் மழைகாலங்களில் வடகீழ் பருவக்காற்று மழைச் சாரல் குறுகிய தாழ்வாரமூடாக வகுப்பறைக் குள் உட்புகுவதனால் கற்றல் இடர்பாடு ஏற்படுகின்றது. மேற்காட்டப்பட்ட இரண்டு அவசியமான தேவை களையும் பாடசாலைச் சமூகம் எதிர்பார்க்கின்றது.

கனடா – காரை கலாச்சார மன்றத்தின் 25வது காரை வசந்தம் வெளியீடு காரைநகரை வசந்தம் ஏற்படுத்தச் செய்யும் என்ற எதிர்பார்க்கையில் “காரை வசந்தம்” சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். நன்றி

அதிபர்
இ.சிறிதரன்
ஊரி அ.மி.த.க.பாடசாலை
காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/காரை மெய்கண்டான் வித்தியாலம்

எமது பாடசாலை சிவகாமி அம்பாள் ஸ்ரீ சிதம்பரரேஸ்வரர் ஆலயத்திற்கு வடக்குத் திசையில் அமைந்துள்ளது. எமது பாடசாலை 1925ம் ஆண்டு உமாபதி உபாத்தியாரால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையை உமாபதி பாடசாலை எனவும் அழைப்பார்கள். இப்பாடசாலையின் மகுட வாசகம் "இளமையில் கல் கற்றாங்கு ஒழுகுக என்பதாகும்.

பணிக்கூற்று "அன்புடன் அரவணைத்தல் உளத்தேவைகளை அறிந்து எண்ணுடன் எழுத்துடன் ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல சிந்தனை ஆற்றலை ஊட்டிடுவோம் என்பதாகும். தூர நோக்கு "புத்துணர்வும் புத்தாக்கமும் கற்று வரும் புத்தம் புதிய சமூகத்தை நாம் படைப்போம் என்பதாகும். இப்பாடசாலை ஆரம்பத்தில் ஓலையால் வேயப்பட்டு நிலம் மண்ணால் ஆனதுமான ஒரு பகுதிக் கட்டடமே இருந்தது. 3 சதுர அடி விட்டங்கொண்ட சிறிய கிணறும் காணப்பட்டது. மற்றும் மாமரமும் தென்னங்கள்றுகளும் நாட்டப்பட்டிருந்தன.

இச்சுற்றாடலில் வாழ்ந்த மக்கள் அனைவரும் இப்பாடசாலை யில் கல்வியைக் கற்று சிறந்து விளங்கினார்கள். தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களில் ஏறக்குறைய 250 மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். உமாபதி உபாத்தியாயர் தொடக்கம் பல் அதிபர்களும் ஆசிரியர்களும் கடமையாற்றி தமது சேவைகளை செவ்வனவே செய்து வந்தனர். இவ்வரிசையிலே கார்த்திகேசு உபாத்தியார், ஆறுமுக உபாத்தியார், சுப்பையா உபாத்தியார், கதிரவேலு உபாத்தியார், சிதம்பரப்பிள்ளை உபாத்தியார், பேரம்பல உபாத்தியார், சின்னையா உபாத்தியார், ஐயம்பிள்ளை உபாத்தியார், கனகசுந்தரம் உபாத்தியார் என்போர் அதிபராக கடமையாற்றி வந்துள்ளனர்.

இக்காலத்தில் மாணவர்கள் மிகவும் பயபக்தியுடன் தமது கல்வியைக் கற்று தமது வாழ்க்கையயை சிறப்பாக முன் னெடுத்துச் சென்றனர்.

பின்னர் 1975ம் ஆண்டு தொடக்கம் கிருஸ்ணர் சிவமணி அவர்கள் அதிபராக கடமையாற்றி வந்தார். இக்காலத்தில் ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையான வகுப்புக்களும் மாணவர்கள் 250ம் காணப்பட்டனர். ஆசிரியர்களாக திருமதி கனகசுந்தரம், திருமதி நடராசா சிவபாக்கியம், திரு.கனகேந்திரம், திரு.பொன்னம்பலம், திரு.சாந்தகுமார், திருமதி புஸ்பராணி சந்திரராசா ஆகியோரும் கடமையாற்றி வந்துள்ளனர்.

மற்றும் பௌதீக வளங்களும் மேலோங்கி காணப்பட்டன. வட்டுக்கோட்டை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தா.திருநா வுக்கரசு அவர்களால் கிழக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் இரண்டு வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டன. அவருடைய காலங்களில் தொண்டர் ஆசிரியர்களும் கடமையாற்றி மாணவர்களை கல்வியில் சிறந்து விளங்க வைத்தனர். வருடா வருடம் விளையாட்டுப் போட்டிகளில் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், மகாண மட்டங்களில் வெற்றியீட்டி வந்தனர். புலமைப்பரிசில் சித்தி பெற்று வந்தனர். இப்படியாக கல்வியில் மேலோங்கி செல்லும் போது 1991 சித்திரை மாதம் இடப்பெயர்வு ஏற்பட்டது. இடம் பெயர்ந்து இப்பாடசாலை 1993ம் ஆண்டு வரை இயங்கியது.

மீண்டும் இப்பாடசாலை 2002ம் ஆண்டு இந்து கலாச்சார அமைச்சர் திரு.தி.மகேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 23 மாணவர்களுடன் தரம் 1 முதல் தரம் 4 வரையான வகுப்புக்களும் அதிபராக திருமதி புஸ்பராணி சந்திரராசா அவர்களும் 2 தொண்டர் ஆசிரியர்களும் கடமையாற்றி வந்தனர். பின்னர் பௌதீக வளங்களான மலசலகூடம் போறூட் நிறுவனத்தால் கட்டப்பட்டும் திருத்தப்பட்டும் கொடுக்கப்பட்டது. பின்னர் 2005ம் ஆண்டு 4 வகுப்பறைகள் நிக்கோட் நிறுவனத்தினால் கட்டப்பட்டது. அந்நிறுவனத்தினாலே தளபாடங்கள் வழங்கப்பட்டன. 2007ம் ஆண்டு சமையலறை, நீர்த்தொட்டி, கிணறு, குளாய் இணைப்பு, மாணவர் சலகூடம் என்பன மூவின்டோ நிறுவனத்தினால் வழங்கப்பட்டன. பாடசாலை திருத்தங்கள் கல்வி சம்பந்தமான உபகரணங்கள் வலயத்தினால் வழங்கப்பட்டன. இப்பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு போட்டி, தமிழ்த்தினப் போட்டி, சதுரங்க போட்டி, கோலப்போட்டி, சித்திரப்போட்டி என்பன வருடா வருடம் நடைபெற்று வருகின்றன. இப்போட்டி களில் மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்று வருகின்றார்கள். 2003ம் ஆண்டு தொடக்கம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தி எய்தி வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

தற்போது(2014) எமது பாடசாலையில் 4 ஆசிரியர்களும் 75 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றார்கள். அத்துடன் எமது பாடசாலைக்கு மின் இணைப்பும் செய்து தரப்பட்டுள்ளது. அத்துடன் எமது பாடசாலை போதிய பௌதீக வளத்தையும் கொண்டு சிறப்புற்று விளங்குகின்றது.

2014ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 11 மாணவர் கள் தோற்றினார்கள். அதில் ஒரு மாணவி 157 புள்ளிகளையும், ஒரு மாணவன் 156 புள்ளிகளையும், 8 மாணவர்கள் 100க்கும் மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள். 72வீதமான மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேலாக பெற்றுள்ளார்கள். தரம் 4 கணித அறிவுப் போட்டியில் மாணவர் ஒருவர் வலய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அதிபர்
திருமதி புஸ்பராணி சந்திரராசா
மெய்கண்டான் வித்தியாசாலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை (சடையாளி)

யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க.வித்தியாலயமானது ஏறத்தாழ 90 ஆண்டுகளாக தொடர்ந்து இயங்கி வருகின்றது. இவ்வித்தியாலயத்தில் புகழ் பூத்த அதிபர்கள், ஆசிரியர்கள் கடமையாற்றி இளைப் பாறியும், வேறுபாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றும் சென்றுள்ளார்கள்.

இப்பாடசாலையின் அதிபராக செல்வி விமலாதேவி விஸ்வநாதன் ஆகிய நான் 2012ம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டேன். பொறுப்பேற்ற நாள் முதல் இன்றுவரை சமூகம் இப்பாடசாலையின் செயற்பாட்டிற்கு தங்களாலான பங்களிப்புக்களைச் செய்து வருகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலை இன்று புதுப்பொலிவுடன் மிளிர்வதற்கு வர்ணம் தீட்டுவதற்கான நிதியை வழங்கியது. மகிந்த சிந்தனையின் கீழ் பிரதேச செயலகத்தினால் ஐந்து இலட்சம் ருபா நிதி வழங்கப்பட்டது. அந்நிதியில் இருந்து மண்டபம்(30க்கு 60 அடி) மூடி அடைக்கப் பட்டது. மண்டபத்தின் நிலம் முழுவதும் காறை போடப் பட்டது. விளையாட்டு முற்றத்தில் சறுக்கீஸ் முழுமையாக சீமெந்தினால் ஆக்கப்பட்டது. உணவு களஞ்சிய அறை, கணணி அறை என்பவற்றிற்கு சீற் அடிக்கப்பட்து. 2012ம் ஆண்டு முதன் முதலாக பரிசளிப்பு விழா வைபவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பழைய மாணவர்களால் பான்ட் வாத்திய இசைக் கருவிகள், கணணி 1, CD Player, Printer என்பன வழங்கப்பட்டன. போட்டோ பிரதி இயந்திரம் பன்முக வரவு செலவு திட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் திரு.உதயன் அவர்களால் வழங்கப்பட்து. வலயக் கல்விப் பணிப்பாளரால் வகுப்பறைகளுக்கு தேவையான அலுமாரிகள் வழங்கப்பட்டன. 2012ம் ஆண்டு நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழாவை ஊரிலுள்ள பழைய மாணவர்கள் முழுப்பொறுப்பையும் ஏற்று நடாத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் கடந்த ஆண்டுகளில் சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. 2013ம் ஆண்டு காரைநகர் கல்விக் கோட்டத்தில் கூடிய புள்ளியைப் பெற்று எமது பாடசாலை முன்னணியில் திகழந்தது. அதனால் இப்பாடசாலைக்கும் பாடசாலை அமைந்துள்ள கிராமத்திற்கும் பெருமையைத் தக்க வைத்தது. தமிழ்த்தினப் போட்டி 2013இல் பேச்சில் நீண்ட காலத்திற்குப் பின்னர் வலய மட்டத்தில் இடத்தை தக்க வைத்தது. காரைநகர் இலகடியைப் பிறப்பிடமாகக் கொண்ட யசோதா என்பவர் lamenating மிசின் உபகரணம் ஒன்றை அன்பளிப்பு செய்து கற்றலுக்கு ஊக்குவித்தார்.

தொலைத்தொடர்பு ஆணைக்குழுவினால் கணணிகள் ஆறு, Pcaner, Printer, Multy Media Projector, Projector screen இரண்டு, கணணி மேசைகள் மூன்று, கதிரைகள் ஐந்து, Fan இரண்டு, இன்ரநெற் வசதி என்பவற்றை வழங்கி கணணி அறையைப் புதுப் பொலிவு பெற வைத்தார்கள். இதனால் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சடையாளியை இ.சிவகுமார் என்பவர் ஒலிபெருக்கித் தொகுதியை வழங்கினார். 2012, 2013ம் ஆண்டுகளில் பாடசாலையின் தேவைகளுக்கு நிதி இல்லை என்று இடர்படும் போது கனடாவைச் சேர்ந்த பழைய மாணவரான தீசன் திரவியநாதன் அவர்கள் நிதியுதவி வழங்கி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கினார். தொடர்ந்து எமது பாடசாலைக்கு பழைய மாணவன் என்ற ரீதியில் தனிப்பட்ட நிதியுதவிகளையும் வழங்கிய வண்ணம் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2012ம் ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கு ஆ.தேவராசா, ந.தர்மலிங்க் என்பவர்களும் நிதியுதவி வழங்கி இருந்தார்கள்.

கடந்த காலங்களில் இப்பாடசாலையில் பழைய மாணவர் சங்கம் இயங்கவில்லை. முதன் முதலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013ம் ஆண்டு தை மாதம் பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இச்சங்கம் ஆரம்பித்த பின்பு முதல் நிகழ்வாக திருமதி.தா.நாகரத்தினம்(ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவினை பழைய மாணவர்களால் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு மிகவும் கூடிய பங்காளியாக திரு.தீசன் திரவியநாதன் திகழ்ந்தார். விளையாட்டு போட்டிகளிற்கு செந்தில் நாதன், தீசன் ஆகியோர் நிதியுதவி அளித்திருந்தார்கள்.
2014ம் ஆண்டு இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கு திரு.ச.சிவஞானம், திரு.ந.லோகநாதன் ஆகிய நலன் விரும்பிகளின் நிதியுதவியுடனும், கனடா தீசன் திரவியநாதனின் நிதியுதவியுடனும் நடைபெற்றது. இலண்டன் காரை நலன்புரிச் சங்கத்தினரால் 60,000 ரூபா வழங்கப்பட்டு கணணி அறை கொத்தி புதிதாக காறை போடப்பட்டது. அதனால் கணணி அறை புதுப்பொலிவு பெற்றது.

2013ம் ஆண்டு கனடா காரை கலாச்சார மன்றத்திற்கு வழங்கிய செயற்திட்டத்தின் பிரகாரம் 2014ம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு கணனி அறிவை மேம்படுத்துவதற்கு 98,000 ரூபாவும், ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்கு 30,000 ரூபாவும், மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு மொழித்திறனை விருத்தி செய்வதற்கு 7500 ரூபாவும் வழங்கியுள்ளார்கள். அவர்களின் அனுசரணையுடன் மேற்படி வகுப்புக்கள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இதனால் மாணவர்கள் மிகவும் பயன் பெற்று வருகின்றார்கள். இந்நிதி உதவியை செய்த மன்றத்திற்கு பாடசாலை சார்பாக நன்றியை தெரிவிப்பதுடன், அம்மன்றம் மென்மேலும் வளர்ச்சியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.
இவ்வருடம் யூலை மாதம் 6ம் திகதி அமரர் இராமலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் 100வது பிறந்த நாள் ஞாபகர்த்தமாக மாணவர்களுக்கு சீருடை, கற்றல் உபகரத் தொகுதி, மதிய உணவு என்பன வழங்கப்பட்டது. 25.09.2014 அன்று கல்வித் திணைக்களத்தால் 2ம் கட்ட சீருடை வழங்கப்பட்டது.

2011ம் ஆண்டு திருக்குறள் போட்டியில் வலய மட்டத்தில் தரம் 4 மாணவி ஜெ.சரண்யா 1ம் இடத்தையும், ஆங்கில copy writing இல் தரம் 4 மாணவி கி.அபிராமி 1ம் இடத்தையும் பெற்று மாகாண மடத்தில் இரு மாணவிகளும் கால் பதித்தமை எங்கள் பாடசாலைக்கு ஒரு சாதனையாகும்.

நான் அதிபராக கடமை ஏற்ற காலத்தில் இருந்து இன்றுவரை பாடசாலையில் நடைபெற்ற பௌதீக அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி, இணைப்பாட விதான செயற்பாடு என்பவற்றுக்கு நிதியுதவி வழங்கிய கல்வித்திணக்களம், பழைய மாணவர்கள், காரை அபிவிருத்தி சபை, கனடா காரை கலாச்சார மன்றம், இலண்டன் காரை நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், SDP பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பாடசாலையில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள்:**

எமது பாடசாலை கஸ்ரப் பிரதேசத்தில் அமைந்திருப்பதால் எங்கள் பாடசாலைக்கான நிதியினை பெறுவதில் இடர்கள் ஏற்படுகின்றன. பாடசாலை மலசலகூடத்தை சுத்திகரிப்பதை ஆசிரியர்களும், மாணவர்களுமே செய்து வருகின்றனர். எமது பாடசாலை Type 111 வகை என்பதால் கல்விசாரா ஊழியர்கள் இல்லை. ஆரம்ப பாடசாலை என்பதால் மாணவர்களினால் இச்சுத்திகரிப்பை செய்வதில் இடர்பாடுகள் உண்டு. எனவே இச்சுத்திகரிப்பு பணிக்கென ஒருவரை நியமிக்க வருடா வருடம் 4000 ரூபா தேவைப்படுகின்றது.

2015ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை இலக்காக கொண்டு தற்போது தரம் 4இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை பாடசாலை ஆசிரியர்கள் மாலை நேரத்தில் நடாத்தி வருகின்றார்கள். அவர்களை ஊக்குவிப்பதற்கு நிதி தேவையாக உள்ளது.

பாடசாலை எல்லை வேலிகள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதால் பாடசாலையை அழகுபடுத்தவும், பாடசாலை பொருட்களைப் பாதுகாக்கவும், எல்லைகளை செப்பனிட்டு பலப்படுத்தவும் நிதி தேவைப்படுகின்றது.

வருடா வருடம் நடாத்தப்படும் தரம் ஒன்றிற்கான கால் கோல்விழா, இணைப்பாட விதான செயற்பாடுகள், விளையாடடுப் போட்டி, நவராத்திரி விழா, பரிசளிப்பு விழா, ஒவ்வொரு தவணையும் முதல் 3 நிலைகளைப் பெற்ற மாணவர்களை ஊக்குவித்தல் என்றும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இந் நிகழ்வுகளுக்கு பாடசாலை நிதி, பெற்றோர் நிதி, நலன் விரும்பிகள் நிதியுதவி, பழைய மாணவர்களது நிதி உதவிகள் மூலமே நடைபெற்று வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வருடந்தோறும் இவற்றினை நடாத்துவதற்கு உள்ளூரில் இருந்து 50 விகிதத்திற்கும் குறைவான நிதியினையே பெற்றுக்கொள்ள முடிகின்றது. மேலதிக நிதிப் பற்றாக்குறையை இடம் பெயர்ந்து வாழும் மக்களும் மன்றங்களுமே கொடுத்து உதவ முன்வரவேண்டும்.

கனடா–காரை கலாச்சார மன்றம் ஆரம்ப பாடசாலை களிற்கு வருடாந்த அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நிலையான வைப்பில் 10 இலட்சம் ரூபா நிதியினை வைப்பில் இடுவதாக அறிந்து மகிழ்வடைகின்றோம். இச்செயற்பாட்டை முன்வைத்த மன்றத்திற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இதனால் காரைநரக் ஆரம்ப பாடசாலைகள் அனைத்தும் பயன் பெற்று மிளிர்வார் கள் என்பதில் ஐயமில்லை. காரை வசந்தம் 25ம் ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். அதற்கு எனது பாராட்டுக் களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். இவ்வசந்தத்தின் செயற்பாட்டால் காரைநகர் பாடசாலைகள் பன்முகப் பட்ட வளர்ச்சியடையகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. நன்றி.

அதிபர்
செல்வி விமலாதேவி விஸ்வநாதன்
வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை, காரைநகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காரை வசந்தம்**
**சிறப்புற**
**வாழ்த்துகிறோம்!**

AIRCOMPLUS
breaking IT barriers...™



INTERNET • PHONE • NETWORK

www.aircomplus.com


**416 · CONNECT**

416 · 266 · 6328

# *RajahRam Caterers*

*Specializing in Sri Lankan & Indian Cuisine*

*Excellence Through Professionalism, Quality Through Servic*



Unit 20,589 Middlefield Road
Scarbrough, ON M1V 4V6
Tel: (416) 299-5200
Fax: (416) 299-5795
E-mail: order@rajahram.com
Web: rajahram.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/சுப்பிரமணிய வித்தியாசாலை

காரைநகரில் சைவ மாணவர்களின் கல்வியையும் சமயத்தையும் வளர்ப்பதற்காக 1889ம் ஆண்டு ஸ்ரீமான் சுப்பிரமணியம்பிள்ளை அவர்களின் சொந்த நிலப் பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே யா/சுப்பிர மணிய வித்தியாசாலையாகும். 1971ம் ஆண்டு வரை தனித்து இயங்கிய இப்பாடசாலை கல்வி அமைச் சினால் பாடசாலைகளை கட்டமைப்பு ரீதியாக வகைப்படுத்தலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியால யத்துடன் இணைந்து அப் பாடசாலையின் ஆரம்ப பிரிவாக இயங்கி வந்தது.

01.01.2012ம் திகதி தொடக்கம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து பிரிந்து மீளவும் யா/சுப்பிரமணிய வித்தியாசாலை என்ற பெயருடன் தனித்து இயங்கி வருகின்றது. 2011ம் ஆண்டுவரை யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தி யாலயத்துடன் இணைந்திருந்தமையால் ஆரம்ப பிரிவிற்கான பௌதீக வளத் தேவைகளை சிரேஸ்ட பாடசாலை வளத்துடன் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. தனித்து இயங்க முற்பட்ட வேளையில் பாடசாலைக்கான பௌதீக வளத் தேவைகள் பற்றாக்குறையான நிலையில் காணப்படுகின்றன.

வலயக்கல்வித்திணைக்களத்தின் உதவியுடனும் "யுனிசெவ்" நிறுவனத்தின் அனுசரணையுடனும் புலம் பெயர் வாழ் மக்களின் அமைப்புக்களின் பங்களிப் புடனும்இ பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புடனும் படிப்படியாக பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வரும் அதே வேளையில் ஏற்கனவே தனியாக இயங்கிய ஆரம்பபாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் இப்பாடசாலையின் கவின்நிலைஇ மூடப்பட்ட வகுப்பறை என்பன குறைவாக உள்ளமை கண்கூடு எனினும் கல்வியே கருந்தனம் என்பதற்கு ஏற்ப எமது பாடசாலை சிறந்த அடைவு மட்டத்தை கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறு பேறு சுட்டி நிற்கின்றது.

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோர் | வீதம் | 100இற்கு மேல் | % | 71-100 | % | 70இற்கு கீழ் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2011 | 30 | 05 | 17 | 10 | 33 | 11 | 37 | 09 | 30 |
| 2012 | 27 | 02 | 07 | 10 | 37 | 10 | 37 | 07 | 26 |
| 2013 | 33 | 06 | 18 | 19 | 57 | 06 | 18 | 08 | 24 |
| 2014 | 30 | 03 | 10 | 21 | 70 | 06 | 20 | 03 | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தலுக்கான பயிற்சிப்பரீட்சைகளை, எமது பாடசாலையில் போட்டோபிரதி இயந்திரம் அற்ற நிலையில் கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் காரைநகர் கோட்டத்தின் பங்களிப்புடன் நடாத்தி வருவதனால் எமது மாணவர்கள் அனைவரும் பெரும் பயன் அடைகின்றனர். அப் பணிக்கு உதவிய காரை கனடா கலாச்சார மன்றத்தினருக்கும், வலயக்கல்விப்பணிப்பாளர், காரைநகர் கோட்டக் கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர் எமது பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி.

மேலும் பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இவ்வருடம் செல்விஅ.யேயந்தினி தமிழ்த்தின பேச்சுப்போட்டியில் வலயமட்டத்தில் முதலாம் இடம் பெற்று மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ளார். தரம் ஐந்து மாணவர்கள் வினாடி வினாப் போட்டியில் வலயமட்டத்தில் முதலாம் இடம் பெற்று மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ளார்கள். “பரிகல்பனா” அகில இலங்கை சிறுவர் சித்திரப் போட்டியில் செல்வி ம.நித்தியா 5ம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தகது.அத்துடன் விளையாட்டுப்போட்டி, வாணிவிழா, ஆசிரியர் தினம், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறுவோருக்கான பரிசுத்தினம் என்பன வருடந்தோறும் நடைபெற்று வருகின்றன.

பௌதீக வள விருத்தியில் சமையலறை, நவீன அமைப்புடனான மலசலகூடத்தொகுதி, விளையாட்டு முற்றம், கிழக்குப்பகுதி எல்லை மதில் பகுதியளவில் அமைத்தல், கிணறு திருத்தம், மூடிஅமைத்தல், பாடசாலை வளவிற்குள் மண்பறித்து பள்ளத்தை நிரப்பல், பழைய மாணவர் டாக்டர்.சி.கலைச்சந்திரன்(கனடா) அவர்களினால் களஞ்சிய அறை அமைத்தல், தண்ணீர்தாங்கி புனரமைத்தல் போன்ற பணிகள் கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. கற்றல் விருத்திச் செயற்பாடுகளில் தரம் ஐந்து மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆசிரியர்கள், அதிபர் மாலை நேர, சனிக்கிழமை மேலதிக வகுப்புக்களை எடுத்து வருகின்றனர். மெல்லக்கற்போருக்கான செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப் பாடசாலையில் தற்போது 128 மாணவர்களும் ஆறு ஆசிரியர்களும் கற்பித்து வருகின்றனர்.

**பாடசாலைக்கான தேவைகள்**

1. பாடசாலையின் மேற்குப்புற மண்டபம் “100x25“ வலையமைப்பினால் மூடியடைத்தல், வர்ணம் பூசுதல்
2. மேற்குப்புற எல்லை வேலி வலையமைப்பினால் மூடியடைத்தல்.
3. முன்புற மதிற் சுவர் புனரமைப்பு செய்தல். (மதில் உடைந்த நிலையில் காணப்படல்)
4. கிழக்கு மேற்கு மண்டப கூரை ஓடுகள் சீர் செய்தல்
5. கிழக்குப்புற எல்லை மதிலை கட்டிப் பூரணப்படுத்தல்.

பாடசாலைக்கான கற்றல் உபகரணத் தேவைகள்

- போட்டோக்கொப்பி இயந்திரம்
- தொலைக்காட்சிப்பெட்டி & DVD Player
- டிஜிற்ரல் கமரா
- அம்பிலி Set
- மேடைப் பேச்சுத் தாங்கி
- இணைபாடவிதான திறன் விருத்தி தேவைகள்
- இல்லமெய்வல்லுநர் போட்டிக்கான நிதித்தேவைகள் பரிசுத்தினத்திற்கான நிதித் தேவைகள்.

இயங்க ஆரம்பமாகிய போது கிழக்குப்புற ஒரு பகுதி எல்லை எதுவும் இன்றி திறந்த வெளியாக இருந்தமையும் பாடசாலை வளவு மிகுந்த பள்ளமாகவும் இருந்ததுடன் மண் அடித்து சென்றமையும் கட்டாக்காலி ஆடு மாடுகளின் தொல்லை காரணமாகவும் அப் பகுதிக்கான எல்லையை ஊட்டப் பாடசாலை வேலைத்திட்ட நிதியுடனும் காரை பிரித்தானியா நலன்புரிச்சங்கத்தின் அனுசரனையுடனும் பகுதியளவில் மேம்படுத்தப்பட்டது.

இவ்வாறு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்லும் எமது பாடசாலைக்கு தங்களால் இயன்ற ஒத்துழைப்புக்களை வழங்கி பாடசாலையின் கல்வி முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக உள்ள கனடா காரை கலாச்சார மன்றத்தினருக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு மன்றத்தினரின் 14ஆம் ஆண்டு விழாவானது கனடா வாழ் காரை மக்களுக்கு எமது ஊரின் கலாசாரங்களை எடுத்துக் காட்டும் ஒரு விழாவாக சிறப்புற அமைய சுப்பிரமணிய வித்தியாசாலை சமூகம் சார்பாக எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை

ஈழநாட்டின் வடபால் அமைந்துள்ள காரைநகரின் தென்திசை கண்கீர்த்தி மிக்க பழம் பதி தோப்புக்காடு கிராமம் ஆகும். காரைநகர் துறைமுகத்திலிருந்து கடற்கரை ஓரமாக கிழக்கே கால் மைல் தொலைவில் வடபால் ஸ்ரீ சுப்பிரமணிய பெருமான் ஆலயத்தையும், தென்பால் அலைகடலையும், கிழக்கே ஒழுங்கை வீதியினையும், மேற்கே ஆஞ்சநேயர் ஆலயத்தையும் எல்லைகளாகக் கொண்டு மறைஞான சந்பந்த வித்தியாசாலை அமைந்துள்ளது.

திருவாளர் வீ.வே.முருகேசு அவர்களின் பெரு முயற்சியினால் 1928ம் ஆண்டு வைகாசி மாதம் யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்தி சங்கத்தினால் பாடசாலை பொறுப்பேற்கப்பட்டது. ஓலையால் வேயப்பட்ட பாடசாலை மண்டபம் ஒன்று அமைக்கப் பட்டது. இப்பாசாலையின் முதல் அதிபராக திரு.நாகமணி கந்தையா அவர்கள் நியமனம்பெற்றார். இவரைத் தொடர்ந்து பல அதிபர்கள் இப்பாடசா லையைப் பொறுப்பேற்று சிறப்பாக கடமையாற்றி பல்வேறு திட்டங்களை முன்னெடுத்தனர்.

1952ம் ஆண்டு பாடசாலைக்கு கிழக்குப் பக்கத்தி லிருந்த மூன்று பரப்பு காணியை சைவ வித்தியா விருத்தி சங்கம் விலைக்கு வேண்டி 800 சதுர அடி விஸ்தீரணத்தில் ஓர் தற்காலிக கட்டிடத்தை அமைத்தது. பின்னர் 1958ம் ஆண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் பாடசாலைக்கு ஓர் நிரந்தர கட்டிடத்தை அமைத்தனர். தரம் 5வரை ஆரம்பிக்கப் பட்ட பாடசாலை பின்பு SSC வகுப்பு வரை தரம் உயர்தப்பட்டது. 1962ம் ஆண்டு அரசாங்கம் பாடசா லையை பொறுப்பேற்றது. 1964ம் ஆண்டு அரசாங் கத்தினால் 80க்கு 20 அடி 1600 சதுர அடி விஸ்தீரணத் தில் ஒரு நிரந்தர கட்டிடம் அமைக்கப்பட்டது.

10.06.1990இல் போர் காரணமாக மக்கள் இக்கிராமத்தை விட்டு வெளியேறினார்கள். இதனால் இப்பாடசாலை ஆவணங்களையும் பொருட்களையும் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

பூட்டப்பபடடிருந்த இப்பாசாலை இக்கிராம மக்களின் ஊக்குவிப்பினாலும் கல்வி அதிகாரிகளின் தொலை நோக்கு சிந்தனையினாலும் 01.01.2011 இல் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.பு.ஸ்ரீவிக்கி னேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மீள்திறக்கப்பட்ட காலப்பகுதியில் இப்பாடசாலையின் அதிபராக திருமதி மங்களேஸ்வரி தேவராசா நியமிக்கப்பட்டார். 2011 இல் அடிப்படை வசதியற்று ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு கல்வித்திணைக்களத்தி னாலும், நிறுவனங்களினாலும், மகிந்த சிந்தனை அபிவிருத்தி திட்டத்தின் கீழும் பல்வேறு பௌதீக வள அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றி இப்பாடசாலை மிளிர்ந்து வருகின்றது.

மாணவர்களின் கல்விச் செயற்பாடானது தரம் 4 வரை ஆரம்பிக்கப்பட்டு இப்பாடசாலை 2012இல் தரம் 5 வரை உயர்த்தப்பட்டு அதே வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 3 மாணவர்கள் 100 புள்ளிகளிற்கு மேல் பெற்று சாதனையை நிலைநாட்டினார்கள்.

2013இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவர்கள் உயர்புள்ளியான 168 புள்ளியினைப் பெற்றும் 4 மாணவர்கள் 100 புள்ளிகளிற்கு மேல் பெற்றும் பாடசாலையின் வளர்ச்சியினை தெரியப்படுத்தினார்கள். இதோ இவ்வருடம் 2014இல் 5 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி எய்தியமையும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

கோட்ட வலய, மாவட்ட வலய போட்டிகளில் 2011,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் சித்திரப்போட்டி, திருக்குறள் போட்டி, இசைவும் அசைவும், கோலப் போட்டி, வாசிப்பு போட்டி, விரைவு கணித போட்டி, ஆங்கில தினப்போட்டி, சிறுவர் நாடகம் மற்றும் மணிவாசகர் சபை நடாத்தும் போட்டிகள் போன்ற பல போட்டிகளில் 1ம், 2ம், 3ம் இடங்களை் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பிரதேச மட்ட இலக்கியப் போட்டியில் எமது பாடசாலை மாணவன் தேசிய மட்டம் வரை சென்று விருது பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இது எமது பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை தேடித்தந்தமையை சுட்டிக்காட்டியதாயுள்ளது. மேலும் எமது பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற் பாட்டை மேம்படுத்தி இக்கிராமத்திற்கு பெருமை தேடிக்கொடுப்போம் என்பதில் ஐயமில்லை.

கனடா காரை கலாச்சார மன்றம், இலண்டன் காரை நலன்புரிச் சங்கம், காரைநகர் அபிவிருத்தி சபை என்பவற்றால் எமது பாடசாலையின் தேவைகள், கல்விச் செயற்பாடுகள் என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் உதவிகளை வளங்கி வருகின்றனர்.

இவ்வருடம் இலண்டன் காரை நலன்புரிச் சங்கத்தி னரால் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியின் நோக்கத்தை கருத்திற் கொண்டு தரமான போட்டோ கொப்பி இயந்திரத்தை வளங்க முன்வருவதாக அறிவித்துள்ளார்கள்.

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த பின்வரும் தேவைகளை நிறைவேற்ற வேண்டி உள்ளன:

- மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான எண், எழுத்தை விருத்தி செய்தல். அதற்கான மேலதிக ஆசிரியருக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 3,000 வீதம் வருடத்திற்கு 36,000 ரூபா தேவைப்படுகின்றது.
- மாணவர்களின் கல்வியை கவின் நிலையாக்குவதற்கு Multi Media பல்லூடக எறியி – 150,000 ரூபா.
- மெருகூட்டப்பட்ட சிறுவர் பூங்கா 100,000 ரூபா
- விளையாட்டு துறையை மேம்படுத்த ஒலிபெருக்கி சாதனம் 50,000 ரூபா
- கணணி அறிவை மேம்படுத்த கணணிகள் கொள்வனவிற்காக 200,000 ரூபா
- மாணவர்களின் கற்றல் உபகரணங்களை பாதுகாப்பதற்காக வகுப்பு ரீதியாக அலுமாரிகள் 5 கொள்வனவிற்காக 100,000 ரூபா
- பாடசாலை நிகழ்வுகளை நடாத்துவதற்கு 50 பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவிற்காக 40,000 ரூபா
- பாடசாலை பெயர் வளைவு நாட்டுவதற்காக 50,000 ரூபா
- தூண் செப்பனிடுவதற்காக 20,000
- மேலதிக கணணி வகுப்பிற்காக ஆசிரியர் கொடுப்பனவிற்காக மாதாந்தம் 3,000 ரூபா விகிதம் ஒரு வருடத்திற்கு 36,000 ரூபா
- மாணவர்கள் உள நல செயற்பாட்டை விருத்தி செய்ய விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவிற்காக 50,000 ரூபா

என்பன உடனடியாக இவ்வருடம் செய்யப்பட வேண்டிய திட்டங்களாகும்.

கனடா காரை கலாச்சார மன்றத்தின் 25வது ஆண்டு நிறைவினையொட்டி நடைபெறும் காரை வசந்தம் 2014 நிகழ்வுகளின் போது எமது பாடசாலையின் சார்பாக எமது பாடசாலையின் நிலமையினை இவ்விழா மலர் மூலம் அறியத்தருகின்றேன்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிகள் புரிந்த, உதவிகள் புரிந்து கொண்டிருக்கும் கனடா, இலண்டன் மன்றங்களிற்கு எமது பாடசாலை சமூகம் நன்றி தெரிவிப்பதுடன், கனடா காரை கலாச்சார மன்றத்தின் 25வது ஆண்டு நிறைவினையொட்டி நடைபெறும் காரை வசந்தம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம். இம்மன்றம் எமது பாடசாலைக்கு மென்மேலும் உதவிகளை வழங்க கனடா வாழ் காரைநகர் மக்கள் உறுதுணையாக நின்று மன்றம் மென்மேலும் மேலோங்கி வளர எல்லாம் வல்ல முருகப்பெருமானின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

அதிபர்
திருமதி.ம.தேவராசா
தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை
காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் கல்விப்புலத்தில் மங்கா ஒளிவிளக்கு யாழ்ற்ரன் கல்லூரி

சைவப்பாரம்பரியம் ஊடாக ஆங்கில மொழிமூலக் கல்விக்கு வித்திட்டவர் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார். அவரின் வழியைப் பின்பற்றி வந்த காரைநகர் அருணாசல உபாத்தியாயர், இந்துபோட் இராசரத்தினம் போன்றவர்கள் கிராமங்கள் தோறும் சைவ ஆங்கில வித்தியாசாலைகளை நிறுவினர். இதன் பேறாக இன்றும் விளங்குபவை யாழ்ப்பாணக் குடாநாட்டில் தோற்றம் பெற்ற இந்துக் கல்லூரிகளாகும்.

இவ்வாறு காரைநகரிலும் தோற்றம் பெற்ற இந்துக் கல்லூரி சைவ ஆங்கிலக் கல்விக்கு வித்திட்டது. இதன் பயனாக கிறிஸ்தவப் பாரம்பரியம் ஊடாக ஆங்கிலக் கல்வியை வழங்கி வந்த சாமி பள்ளிக்கூடம் (அல்லின் வீதி ஆரம்பிக்கும் சந்திக்கு தெற்குப் பக்கத்தில் அமைந்திருந்தது) மாணவர் தொகை வீழ்ச்சியடைய மூடப்படலாயிற்று. இதனால் காரைநகர் மேற்கிலே ஒரு சைவ ஆங்கில வித்தியாசாலையை நிறுவும் நோக்குடன் 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் ஆயிலிப் பகுதியில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஆ.தியாகராசா அவர்களின் இல்லத்தில் பிரம்மஸ்ரீ கா.சி மகேசசர்மா (நொத்தாரிசு) அவர்கள் தலைமையில் பல பெரியோர்கள் கூடி காரைநகர் மேற்கிலே சைவ ஆங்கில வித்தியாசாலை ஒன்றை நிறுவுவதென்று தீர்மானித்தனர். இக் கல்லூரியே இன்றும் கல்விப் புகழ் மங்காது ஒளிவீசும் யாழ்ற்ரன் கல்லூரியாகும்.

இக் கல்லூரியை நிறுவுவதற்கு திரு.சி.ஆ.கணபதிப் பிள்ளை (தலைப்பா) அவர்கள் தனது 20 பரப்புக் காணியை நன்கொடையாக வழங்கினார். இதன் பேறாக 1947ஆம் ஆண்டு மாசி மாதம் 5ஆம் திகதி 57 பிள்ளைகளோடு New English School என்ற பெயருடன் கல்லூரி உதயமாயிற்று.

1947ஆம் ஆண்டு தொடக்கம் 1960ஆம் ஆண்டு அரசு கல்லூரியை பொறுப்பேற்கும் வரை காரை வித்தியா பரிபாலன சபையினர் கல்லூரியை முகாமைத்துவம் செய்து நடாத்தி வந்தனர். முகாமைத்துவ சபை தலைவர்களாக திருவாளர்கள் K.S.சோமசுந்தரம், K.S.வேலுப்பிள்ளை, S.A.கணபதிப்பிள்ளை, A.T.ஆறுமுகம் ஆகியோர் சேவை புரிந்தனர்.1960 டிசம்பர் 1ஆம் திகதி கல்லூரியை அரசு பொறுப்பேற்றது. 1971ஆம் ஆண்டு ஏப்பிரல் 1ஆம் திகதி தங்கோடை அமெரிக்கன் மிசன் பாடசாலை(கோவிந்தன் பாடசாலை)யாழ்ற்ரன் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு கல்லூரியின் ஆரம்பப் பிரிவாக இன்றும் செயற்பட்டு வருகின்றது.

இக்கல்லூரியின் முதலாவது அதிபராக திரு.க.கனக சபை அவர்களும் ஆசிரியர்களாக திரு.K.பொன்னம் பலம், திரு.K.சிவரட்ணம் ஆகியோரும் கடமை ஏற்றனர். இவர்கள் மூவரும் காரைநகர் இந்துக் கல்லூரியில் உதவி ஆசிரியர்களாகப்பணியாற்றி கடமையிலிருந்து விடுவிக்கப்பெற்றவர்களாவர். மேலும் அமெரிக்கன் மிசன் ஆங்கிலப் பாடசாலையில் கடமையாற்றிய திரு.C.K.முருகேசு அவர்கள் கணித ஆசிரியராக இணைக்கப்பட்டார்.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதி 172 மாணவர்களுடனும் 8 ஆசிரியர்களுடனும் கல்லூரி இயங்கியது. புதிய சைவ ஆங்கில வித்தியாசாலை வளர்ச்சியடையவே 1947ஆம் ஆண்டு ஒக்டோபர் 1ஆம் திகதி எமது கல்லூரி அரசாங்க உதவி நன்கொடை பெறும் தனியார் கல்லூரியாக அங்கீகரிக்கப்பட்டு 1948ஆம் ஆண்டிலிருந்து 1ஆம் தரக்கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. இதன் பேறாக புதிய அதிபர் ஒருவர் தேவைப்படவே யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்தவரும் கல்விப்புலத்தில் உயர்ந்த தகைமை களைப் பெற்றவருமான திரு.ஐயாத்துரை கருணானந்தன் B.sc,M.A,Ph.D அவர்கள் அதிபராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்டார்.

இவர் புதிய சைவ ஆங்கில வித்தியாசாலைக்கு "YARLTON COLLEGE" என்ற பெயரையும் தமிழில் யாழ்நகர்க் கலாசாலை என்ற பெயரையும் சூட்டினார். கல்லூரிச் சமூகம் அதனை மிக்க மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டது. 1948ஆம் ஆண்டு ஒக்டோபர் 1ஆம் திகதி திரு கருணானந்தன் அதிபராகக் கடமையேற்றதோடு புதிய பெயருடன் தோற்றம் பெற்ற யாழ்ற்ரன் கல்லூரியை மிகுந்த உற்சாகத்துடன் கட்டி யெழுப்பினார். அவரது கல்வித்தகைமைகள் காரணமாக அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்து விரிவுரையாளராக நியமனம் பெறவே 1949ஆம் ஆண்டு செப்ரம்பர் 1ஆம் திகதி இளவாலையைச் சேர்ந்த திரு.க.சிவராசா அவர்கள் கல்லூரி அதிபராகக் கடமையேற்றார். 18ஆண்டுகள் திறமையான அர்ப்பணிப்புடன், தன்னலமற்ற சேவையை வழங்கிய பெருந்தகையாவார். இவர் காலத்தில் ஆங்கிலக் கல்வி நன்கு போதிக்கப்பட்ட பல மாணவர்கள் இவரிடம் கற்ற ஆங்கிலக் கல்வி மூலம் உயர்பதவிக்குச் சென்றனர்.

1967 டிசம்பர் 31ஆம் திகதியுடன் திரு.க.சிவராசா அவர்கள் ஓய்வு பெற திரு.மா.வைத்தியநாதன், திரு.மு.கைலாயநாதன் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர். இவர்களைத் தொடர்ந்து திரு.நா.வேலுப்பிள்ளை அவர்கள் 11ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றினார். இவரும் கல்லூரியின் முன்னேற்றத்தை தனது இலட்சியமாகக் கொண்டு கல்லூரியை மேலும் வளம்படுத்தினார். இவர் காலத்தில் க.பொ.த (உயர்தர) விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. பல்கலைக் கழக பொறியியல் பீடத்திற்கும் விஞ்ஞான பீடத்திற்கும் மாணவர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவருக்குப் பின் திரு.K.K.நடராசா அவர்கள் கல்லூரியைப் பொறுப்பேற்றார். இவர் காலத்தில் புதுப் பொலிவுடன் கல்லூரி விளங்கத் தொடங்கியது. சிறந்த கணித ஆசிரியரான இவர் கல்லூரிச் சமூகத்திற்கு உடன்பாடான சிறந்த சேவையை வழங்கியமை பெருமைக்குரிய விடயமாகும்.

இவரைத் தொடர்ந்து திரு.செ.பத்மநாதன் அவர்களும் திரு.ச.சேனாதிராசா அவர்களும் அதிபராக தன்னலமற்ற சேவையை வழங்கினர். 1992 ஆகஸ்டில் திரு.நல்லதம்பி பரமசிவம் அவர்கள் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் காரைநகர் மக்கள் இடம்பெயர்ந்த போதும் யாழ்ற்ரன் கல்லூரி என்ற பெயருடன் 1993 ஜனவரி மாதம் வட்டுக்கோட்டையில் கல்லூரியை ஆரம்பித்த அதிபர் திரு.ந.பரமசிவம் அவர்கள் நம் கல்லூரி சிறார்களுக்கு உன்னதமான கல்விப்பணியை ஆற்றினார்.

அத்துடன் 1996ஆம் ஆண்டு மீண்டும் எமது பிரதேசத்தில் கல்லூரியைக் கட்டியெழுப்பி பொலிவுடன் மிளிர வழிகோலினார். புதிய விஞ்ஞான ஆய்வுகூடம், 10வகுப்பறைகளைக்கொண்ட புதிய மேல்மாடிக் கட்டடம் என்பவை இவர் காலத்தில் நிறுவப்பட்டன. புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியடைந்தனர். மேலும் பல்கலைக் கழக அனுமதி பெற்று பொறியியல், கலை மற்றும் வர்த்தக பீடங்களுக்கு மாணவர்கள் சென்றனர். மிகவும் இக்கட்டான நிலையில் கல்லூரியை அதன் தனித்துவத்துடனும் மாணவர்களின் ஒழுங்கு கட்டுப்பாடு என்பவற்றுடனும் கல்லூரியை நடாத்தி வந்தார். தன்னலமற்ற ஒரு சிறந்த சேவையை செய்தவர் அதிபர் திரு.ந.பரமசிவம் அவர்கள் என்பதை கல்லூரி சமூகம் என்றும் நன்றியுடன் நினைவு கூரும். அதன் பின்னர் அதிபராகக் கடமையேற்ற திரு.தி.சோமசேகரம் அவர்களும் குறுகிய காலத்தில் பல பௌதீக அபிவிருத்திகளையும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வரும் வேளை ஊர்காவற்றுறை பிரதேசக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச் சென்றார்.

இவரைத் தொடர்ந்து 2011 செட்டெம்பர் 7ஆம் திகதி தொடக்கம் திரு.வேலுப்பிள்ளை முருகமூர்த்தி அவர்கள் அதிபர் கடமையைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றார். கல்லூரியின் பௌதீகவள அபிவிருத்தியிலும் கற்றல் சூழ்நிலைகளுக்கு ஏற்றதான கவின் நிலை மாற்றங்களிலும் கல்லூரி தொடர் முன்னேற்றத்தை கண்டு வருகின்றது. புதிய உலகின் போக்கிற்கேற்ப 37 கணினிகளுடன் கூடிய கணினி ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றமையானது குறிப்பிடத்தக்கது.

**கல்லூரி ஆரம்பக்கல்விப் பிரிவு**

1971ஆம் ஆண்டு ஏப்பிரல் 1ஆம் திகதியில் எமது கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தங்கோடை அ.மி.த.க பாடசாலை ஆரம்பப்பிரிவு (தரம்1–தரம்5) காரைநகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முன்னணிப் பாடசாலை ஆகும். வருடாவருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற வெற்றிகள் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். 2012ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 12 மாணவர்கள் சித்தியடைந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் 10ஆம் இடத்தை பெற்றமை கல்லூரி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

அத்துடன் தீவக வலயமட்டத்தில் தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலதினப்போட்டி, விரைவு கணிதப்போட்டி, திருக்குறள்போட்டி என்பவற்றில் பங்குபற்றி முதலாம் இடத்தைப்பெற்று மாகாணமட்டப் போட்டிகளில் கலந்து கல்லூரியின் ஆரம்பப்பிரிவுக்கு பெருமையைச் சேர்த்துள்ளனர். 211 மாணவர்களுடன் 7 ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுடனும் செயற்படும் எமது ஆரம்பப்பிரிவின் வெற்றிகரமான இப்பயணம் கல்லூரியின் இடைநிலைப்பிரிவு துலங்கச்செய்ய ஓர் உந்து சக்தியாக அமைகின்றது.

**இடைநிலைக்கல்விப் பிரிவு**

இப்பிரிவில் 425 மாணவர்களுடன் (மொத்த மாணவர்தொகை 626) 29 ஆசிரியர்களுடன் (மொத்த ஆசிரியர்தொகை 36) சிறப்பாக இயங்கி வருகின்றது. 2013ஆம் ஆண்டு க.பொ.த(சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகள், தேசிய மட்டங்களில் மாணவர்கள் பெற்ற சாதனை விருதுகள், க.பொ.த(உயர்தர) கலைப்பிரிவில் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி என்பன குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

**மாணவர், ஆசிரியர் வெற்றிகள்**

2012ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரீட்சையில் 12 மாணவர்கள் சித்தியடைந்து யாழ் மாவட்டத்தில் கல்லூரி 10ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை வரலாற்றுக் குறிப்பாகும். மேலும் தேசியமட்டங்களிலும் கோட்ட, வலய, மாவட்ட, மாகாணமட்டங்களிலும் இணைப்பாடவிதான போட்டிகளிலும் பாடவிதானம்சார் போட்டிகளிலும் ஆர்வத்துடன் மாணவர்கள் பங்குபற்றி வெற்றிகளையும் பெற்றுக் கொண்டு கல்லூரி அன்னைக்கு புகழாரம் சூட்டி வருகின்றனர்.

2013ம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா-பிரபா" விருதை கல்லூரி ஆசிரியை செல்வி.சுபத்திரா இராஜசிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

2014ம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சிறந்த அதிபருக்கான "பிரதீபா-பிரபா" விருதினை கல்லூரி அதிபர் திரு.வேலுப்பிள்ளை முருகமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மேற்கூறிய வெற்றிகளுக்கு காரணமாக அமைந்த ஆசிரியர் குழாத்தினருக்கும் கல்லூரிக்கு பல வகைகளிலும் உதவி வழங்கி வரும் பழைய மாணவர்களிற்கும், வெளிநாடுகளில் இயங்குகின்ற காரைநகர் பிரதேச நலன்புரிச் சங்கங்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

குறிப்பாக கனடா காரை கலாச்சார மன்றத்தினர் கல்லூரிக்கு வழங்கிய அண்மைக்கால உதவிகளை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

- மாலை நேர கணினி ஆங்கில வகுப்புகளுக்கான ஆசிரியர்களுக்குரிய சம்பளம் வழங்கியமை.
- கணினி ஆய்வு கூடத்தை மாணவர்கள் வினைத்திறனுடன் பயன்படுத்தும் நோக்குடன் 10 கணினிகளை அன்பளிப்பு செய்தமை.
- ஆரம்பப் பிரிவு வகுப்புகளிற்கான கற்றல் சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கான அன்பளிப்புகளைச் செய்து உதவியமை.
- இதற்கு முன்னரும் பல்வேறு உதவிகள் கல்லூரிக்கு வழங்கப்பட்டமை.

இவ் உதவிகளையும் சேவைகளையும் வழங்கிய கனடா காரை கலாசார மன்றத்தின் தலைவருக்கும் அதன் நிர்வாகத்தினருக்கும் யாழ்ற்ரன் கல்லூரிச் சமூகம் சார்பாக எனது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்வரும் காலங்களிலும் பின்வரும் உதவிகளை மன்றம் செய்யும் என்ற நம்பிக்கையையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றேன். கல்லூரி மாணவர்களின் கற்றலை தேசிய, சர்வதேச மட்ட தரநிலைகளுக்கு ஏற்றவாறு வினைத்திறனும், விளைதிறனும் ஆக்குவதற்கு பின்வரும் விடயங்களில் மன்றம் உதவி செய்து கல்லூரியை மேலும் துலங்கச் செய்யும் என்பது எமது நம்பிக்கையாகும்.

- ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான ஒரு கணினி அறையை ஏற்படுத்தல்.
- ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கற்றற் சூழ்நிலைகளை மேம்படுத்தல, சிறுவர் விளையாட்டு முற்றத்தினை விருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BALA SELVAM

**JEWELLERY**

**FOREIGN MONEY EXCHANGE**



**€ $ £ ¥**

**YOU CAN BUY AND SELL**

**ALL CURRENCIES**

**WE GIVE YOU BEST RATE**

# 416-264-4000

2480 Eglinton Ave.E.#6 Scarborough, ON M1K 2R4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை

தானங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததானம் வித்தியா தானம். பள்ளிகள் நிறுவுதல் தானங்களுள் சிறந்த வித்தியாதானமாகும். கல்விக்கூடமும் ஒரு கோவிலுக்கு சமமானதாகும். காரைநகர் பாலாவோடையில் போக்குவரத்து வசதி குறைந்த காலகட்டத்தில் அங்குள்ள சிறுவர்கள் கல்விகற்று முன்னேற வேண்டுமென்ற பரந்த மனப்பான்மையுடன் தனவந்தர்களாகிய A.S.சங்கரப்பிள்ளை, A.S.ஆறுமுகம், A.S.கந்தையா (Postmaster) ஆகியோர் பாடுபட்டனர்.

அக்காலத்தில் தில்லையம்பலம் மகள் (சுந்தரம்மா) சரஸ்வதி என்பவர் சிரேஸ்ர தராதரம் படித்துவிட்டு வீட்டில் வேலை அற்று இருந்தவர். அதனால் அருணாசலம் கந்தையா என்பவர் தனது சொந்தக் காணியை நன்கொடையாக பாடசாலை அமைப்பதற்கு வழங்கினார். அக்காணியில் A.S.சங்கரப்பிள்ளை சகோதரர் தங்கள் சொந்தப்பணத்தில் கட்டடம் அமைத்து கிடுகால் வேயப்பட்ட கூரையின் கீழ் இப்பாடசாலை 1945ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மாணிக்கவாசகர் வித்தியாசாலை என்று பெயரிட்டு A.S.சங்கரப்பிள்ளை சகோதரர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. அக்கால கட்டத்தில் காரைநகர் பலுகாட்டைச்சேர்ந்த ஐயனார் சபாபதிப்பிள்ளை என்பவர் தலைமை ஆசிரியராக கடமைபுரிந்தார். வேலுப்பிள்ளை காசிநாதனும், தில்லையம்பலம் (சுந்தரம்மா) சரஸ்வதி என்பவரும் உதவி ஆசிரியராக பணிபுரிந்தனர்.

1948ம் ஆண்டளவில் பாலாவோடையைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் என்பவர் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றார். அக்கால கட்டத்தில் இராசநாயகம் தெய்வானை சண்டிலிப்பாய், கோப்பாய் போன்ற இடங்களில் இருந்து ஆசிரியரை வரவழைத்து 1960ம் ஆண்டு வரையும் தங்கள் சொந்தப்பணத்தில் சம்பளம் கொடுத்து நிர்வாகம் செய்துவந்தனர்.

1961ம் ஆண்டு இப்பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு தேசியமயமாக்கப்பட்டது. யா/பாலாவோடை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது.

1948ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டு வரையும் கந்தையா ஆறுமுகம் என்பவரே தலைமை ஆசிரியராக பணிபுரிந்தார். அக்கால கட்டத்தில் குணநாயகம் உலகேஸ்வரி ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்தார் உலகேஸ்வரி ஓய்வு பெற்றதன் பின்பு திருநாவுக்கரசு விக்கினேஸ்வரி ஆங்கில ஆசிரியராக கடமையாற்றினார்.

1970ம் ஆண்டின் பின்னர் கந்தையா ஆறுமுகம் என்பவர் ஓய்வுபெற்றபின் நடனலிங்கம் வல்வெட்டித்துறை, இராசதுரை ஊர்காவற்றுறையில் இருந்து வந்து 1971, 1972, 1973ம் ஆண்டுகளில் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார்கள். அதன் பின் 1974 – 1976 இல் திரு.கா.தம்பையா என்பவர் தலைமையாசிரியராக கடமையாற்றினார். காரைநகர் விளானையைச் சேர்ந்த தில்லையம்பலம் இராசம்மா என்பவர் 1976 – 1986 வரையும் தலைமையாசிரியராகவும் 1967 – 1973 இல் உதவிஆசிரியராகவும் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலகட்டத்தில் முன்னாள் வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஆ.தியாகராசா அவர்களால் ஒதுக்கப்பட்ட நிதிஉதவியால் பாடசாலை புதுக்கட்டடம் அமைக்கப்பட்டு பெரிய பாடசாலையாக மிளிர்கின்றது. தில்லையம்பலம் இராசம்மா தலைமையாசிரியராக கடமையாற்றிய காலப்பகுதியில் 200 – 250 மாணவர்கள் கல்வி பயின்றனர். இராசம்மா தில்லையம்பலம் ஓய்வுபெற்றபின் பொன்னையா சுப்பிரமணியம் என்பவர் தலைமை ஆசிரியரக 1986 – 1990 வரையான காலப்பகுதியில் பணிபுரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்கால சூழ்நிலையால் மக்கள் இடம்பெயர்ந்த போதும் பாலகிருஷ்ணன் தலைமையாசிரியராக பொறுப்பேற்று 1991 – 2001 வரை இப்பாடசாலை இயங்கி வந்தது.

மக்கள் மீளக்குடியமர்ந்த பின்பு அருளானந்தம் சாந்தகுமார் தலைமையாசிரியராக கடமைபுரிந்தார். 2002 – 2014 வரை இக்காலகட்டத்தில் தோப்புக்காடு மீள்குடியேற்றத்தின் பின் 2009ம் ஆண்டு மாணவர் தொகை கணிசமான அளவு அதிகரித்தது. மீண்டும் 2011ம் ஆண்டு யா/தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாலயம் மீளத்திறக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இதனால் இப்பாடசாலையில் மாணவர் தொகை குறைவாக காணப்பட்டது. இன்னும் அழகாபுரி, அம்பிளா, சாந்திபுரம், பாலாவோடையில் மீள்குடி யேற்றம் ஏற்படின் இப்பாடசாலைக்கு மாணவர் தொகை அதிகரிக்கும் என்பது திண்ணம்.

நாகரீக உலகின் நாடோறும் பெரும் வியத்தகு விஞ்ஞான தொழிநுட்பங்களையும் புதுமைகளையும் வளர்ந்துவரும் நவீன தொடர் சாதனங்கள் மூலம் எமது ஊரில் கல்வி பயிலும் மாணவர்களையும் புலம்பெயர் நாடுகளில் பல மொழிகளில் சாதனை படைத்துவரும் மாணவர்களும் ஒன்றிணைந்து கல்வியறிவு வளர்ச்சிக்கு ஒரு உறவுப்பாலம் அமைத்திட வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் காரை கனடா கலாச்சார மன்றம் தொடங்கி 15வது ஆண்டு விழா கொண்டாடும் வேளையில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலையின் இதரதேவைகள்**

- மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான மொழித் திறன் விருத்தி செயற்பாடு
- நூல் நிலையத்திற்கு தேவையான சிறுவர் கதைப்புத்தகங்கள்
- விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா நடாத்தல்
- கிணற்றை மூடி (பாதுகாப்பு) அடைத்தல்
- சமையல் கூலியாளுக்கு சம்பளம் கொடுத்தல்
- பாடசாலையின் இருபக்கமும் மதில் கட்டுதல்
- வகுப்பறையைச்சுற்றி காகம், புறா வராமல் Net அடித்தல்
- குடிநீர் பெறுவதற்கு நிதியுதவி
- பாடசாலை வளவில் நீர்தேங்கி நிற்காமல் பள்ளமான இடத்திற்கு மண் பரவுதல்
- சமையலறைக்கு லெவல் சீற் அடித்தல்
- கணினி, போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம், இரும்பு அலுமாரி (02) என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

யாழ்ப்பாணத்தின் சப்ததீவுகளில் ஒன்றாக விளங்கும் காரைதீவிலே (காரைநகரிலே) மேற்கு கரையோரமாக விளங்கும் வாரிவளவு என்ற புண்ணிய கிராமத்துக்கு அண்மித்ததாக கடலோரமாக அமைந்து இருப்பது வேரப்பிட்டி என்ற மீனவ கிராமம் ஆகும். இந்தக் கிராமம் பழம் பெரும் வரலாற்றைக்கொண்டிருந்தது என்றும் மன்னராட்சிக்காலத்தில் போர் வீரர்களது தளமாக அமைந்தது என்றும் செவிவழிக்கதைகள் கூறுகின்றன. இதனால் இது வீரப்பிட்டி என்று அழைக் கப்பட்டதாகவும் வீரப்பிட்டி என்ற பெயர் வழக்கு பின் னர் வேரப்பிட்டியாக மாறியது என்றும் கூறப் படுகின்றது.

காலணித்துவ ஆட்சியாளர்கள் ஆங்கில மொழிப் பாடசாலைகளை நிறுவி முறைமைசார் கல்வி முறையை இலங்கையில் அறிமுகம் செய்து அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை கிறிஸ்தவ மிசனறி இயக்கங் களிடம் ஒப்படைத்தனர். அவர்கள் அப்பாடசாலை களை கிறிஸ்தவ மதமாற்றத்தை நோக்காகக்கொண்டு இயக்கி வந்தனர். இந்த நடவடிக்கைக்கு எதிராக மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்து வதற்காக மதமறுமலர்ச்சி இயக்கம் உருவாக்கம் பெற்றன. இந்த வகையில் இந்த மறுமலர்ச்சி இயக்கம் முதன்மையானதாகும். இவ் இயக்கத்தின் தொடர்ச்சியாக "இந்து சபை" என்ற அமைப்பும் இந்துக்களின் தாய்மொழி மூலமான கல்விச்சாலை களை நிறுவியது. இந்த வகையில் 1955ம் ஆண்டு வேரப்பிட்டி கிராமத்தில் வாழ்கின்ற மீனவ சமூகத்தவர்களது கல்வி நிலையை கருத்தில் கொண்டு உருவாக்கப்பெற்றதே யா/வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலயம் ஆகும்.

இப்பாடசாலையின் நிறுவுனராக திருவாளர் க.வைரமுத்து மாஸ்ரர் விளங்கினார். அவரே அப்பள்ளியின் முதலாவது முதல்வராகவும் விளங் கினார். ஆரம்பத்திலே இப்பாடசாலையில் ஏறக்குறைய 35 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். 1 – 5ம் வகுப்பு வரையிலான வகுப்புக்கள் இடம்பெற்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மிகவும் பின்தங்கிய பாடசாலையாகவும் அதிகஸ்ர பிரதேச பாடசாலையாகவும் இது விளங்கியது. இன்றும் அதிகஸ்ரபாடசாலையாகவே பிரகடனம் செய்யப்பட் டுள்ளது. ஆரம்பத்தில் 50அடி நீளமான ஓலைக் கொட்டிலாக நிறுவப்பட்ட பாடசாலை 1970களில் 100அடி நீளமான சீமெந்து கட்டடத்திலான பாடசாலை யாக மாறியது. இன்றும் அதே கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

அரசபாடசாலையாக உள்ளீர்க்கப்பட்ட இப்பாடசாலை 1970இற்கும் 1990க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அதிபர் ஆசிரியர்களுக்கு தண்டனை இடமாற்றத்திலான பாடசாலையாக விளங்கியதாக கூறப்படுகின்றது. இங்கு அதிபராக கடமையாற்றிய திரு.க.வைரமுத்து மாஸ்ரரோடு, காரைநகர் வாரிவளவு கிராமத்தினைச் சேர்ந்த K.இராமுப்பிள்ளை அவர்கள் உப அதிபரா கவும் ஏனைய மூன்று (03) ஆசிரியர்களையும் கொண்டு இயங்கி வந்தது. 1990இல் ஏற்பட்ட யுத்த நெருக்கடி காரணமாக காரைவாழ் மக்கள் அனை வரும் புலம் பெயர்ந்து செல்லும் நிலை ஏற்பட்ட பொழுது இப்பாடசாலை முழுமையாக மூடப்பட்டது.

கடற்கரையை அண்மித்ததாக இப்பாடசாலை அமைந்திருந்தமையால் யுத்தப்பாதிப்புக்களால் சிதைவடைந்தது. இந்நிலையில் காரைநகர் மீள் குடியமர்வு 1996 இடம் பெற்றது. பல பாடசாலைகள் மீளத்திறக்கப்பட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் எமது பாடசாலை மீளத்திறக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது. 2011ம் ஆண்டு செப்டொம்பர் மாதம் 5ஆம் திகதி எமது பாடசாலை மீளத்திறக்கப்பட்டது. கல்விப்பணிப்பா ளராக விளங்கிய திரு. V.இராதாகிஸ்ணன் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். இப்பாடசாலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அதிபர் சேவையை தொடர்ந்த நான் வடமாகாண கல்வி அமைச்சால் நியமனம் செய்யப்பட்டேன். இப்பாடசாலையைப் பொறுப்பேற்ற போது கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான எந்த வசதிகளும் காணப்படவில்லை. மலசலகூடவசதி, குடிநீர் வசதி, அலுவலகம், வகுப்பறைவசதிகள் எவையும் இருக்கவில்லை. கூரைகள் சிதைந்த நிலையில் 100 அடி நீளமான கட்டிடத்தில் நாம் எமது பணியை தொடங்கினோம்.

பாடசாலை திறக்கப்பட்டு சில நாட்களின் பின்னர் காரைநகர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் வடமாகாண ஆளுநர், மற்றும் கல்வி அதிகாரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் அதிபர் என்ற வகையில் நானும் கலந்து கொண்டு எனது பாடசாலையின் நிலையை எடுத்து விளக்கினேன். இதனைத் தொடர்ந்து கௌரவ ஆளுநர் பாடசாலையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்து வதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுத்தார். காரைநகர் கடற்படையால் “வோக்ஸ்” நகையகத்தின் நிதிப்பங்களிப்புடன் பாடசாலைக்கு மலசலகூடவசதி, நீர்வடிகால் வசதி, தண்ணீர்த்தாங்கி, எல்லைவேலிகள் பாடசாலை நுழைவாசல் என்பவற்றை அமைத்துத் தந்தனர். காரை அபிவிருத்திச் சங்கம் எமது கோரிக்கையை ஏற்று 500L பிளாஸ்ரிக் தண்ணீர்த்தாங்கியை வழங்கி உதவியது. தொடர்ந்து நாம் மேற்கொண்ட கடும் முயற்சியாலும் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் வீ.கண்ணன் அவர்களது அயராத உழைப்பினாலும் எமது பாடசாலை 1000 ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்டு எல்லை சுவர் அமைப்பு வேலைகள், குழாய்க்கிணறு அமைத்தல், நீர்விநியோக இணைப்பு வேலைகள் மற்றும் மின்மோட்டர் பொருத்துதல். ஆகிய வேலைகள் நிறைவேற்றப் பட்டன.

2011ஆம் ஆண்டின் மாணவர்களது எண்ணிக்கை 22 ஆக இருந்தது. 2012இல் 30 ஆகவும் 2013 இல் மாணவர் தொகை 45 ஆகவும் 2014இல் 61 ஆகவும் உயர்வடைந்துள்ளது. 2011இல் அதிபருடன் ஒரு ஆசிரியர் மட்டுமே கற்பித்தல் பணியில் ஈடுபட்டார். 2012இல் ஆசிரியர் எண்ணிக்கை 03 ஆக உயர்ந்தது. 2013இல் 04 ஆகவும் 2014இல் 05 ஆகவும் உயர்வடைந்தது.

2011 இல் மீளத்திறக்கப்பட்ட போது பாடசாலை புனரமைப்பு செய்யும் பணிகளில் அயராது உழைத்த திருமதி தனுசா தேவராசா கற்பித்தல் பயிற்சிக்காக கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு சென்றார். அவர் தற்போது கற்பித்தல் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறிய போதிலும் எமது பாடசாலைக்கு நியமனம் செய்யப்படவில்லை. அவர் வேறு பாடசாலையில் பணியாற்றுகிறார். எமது மாணவர்கள் ஏழைக்குடும்பங்களின் பிள்ளைகளாக இருந்தபோதும் கல்வித்திணைக்களம், மணிவாசகர் சபை, சைவபரிபாலனசபை ஆகியவற்றால் நடாத்தப்பட்ட பரீட்சைகள் மற்றும் போடடிகளில் பங்கு பற்றி சாதனை படைத்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தினப்போடடியில் பங்கு பற்றிய எமது மாணவன் செல்வன் முரளிதரன் வஜிதரன் என்பவர் கதைகூறல் போட்டியில் கோட்ட மட்டம், வலயமட்டம் ஆகியவற்றில் முதலாவது இடத்தைப் பெற்று மாகாணமட்டப்போட்டியில் தீவக் வலயம் சார்பாகப் போட்டியிட்டார்.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற பலமைப்பரிசில் போட்டிப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் செல்வி துஸ்யந்தி சிவலிங்கம் என்பவர் 151 புள்ளிகளைப் பெற்றுசாதனை படைத்ததுடன் 04 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்திருந்தனர். இப்பரீட்சைக்கு மொத்தம் 8 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

எமது பாடசாலை மாணவர்களது கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் திட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம். அதற்காக காரைநகர் அபிவிருத்திச் சபையூடாக கனடா காரை கலாசார மன்றம் எமக்கு 15,600 ரூபா நிதியினை எமது கோரிக்கைக்கமைவாக வழங்கியுள்ளது. எதிர்காலத்திலும் எமது கற்றல் செயற்பாட்டிற்கு கனடா காரை கலாச்சார மன்றம் உதவும் என நம்புகின்றேன்.

மாணவர்களை உற்சாகப்படுத்தும் செயற்றிட்டத்தினை எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் முதலாக நடத்தவுள்ள பரிசில் வழங்கும் நிகழ்வுகள் மூலம் ஆரம்பிக்க இருக்கின்றோம். வருடந்தோறும் விளையாட்டு விழாவைச் சிறப்பாக நடாத்தி வருகின்றோம்.

பாடசாலையை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்காக பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் உள்ளடக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவ சபை நிர்வாக செயற்பாடுகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் அச்சபை கையாள்கிறது. இதனைத் தவிர பாடசாலை அபிவிருத்திக்கு அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பனவும் செயற்பட்டு வருகின்றன.

**பாராட்டுகின்றோம்.. மனமார வாழ்த்துகின்றோம்.**

கனடாவில் காரை கலாசார மன்றம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கிறது. கால்நூற்றாண்டு காலமாக தனது தாய்மண்ணுக்கு அளவிடமுடியாத சேவைகளை வழங்கி வளர்த்தெடுக்கும் மன்றத்தின் பணியை நாமும் பாராட்டுகின்றோம். எமது பள்ளிக்கும் உதவி எம்மை வளப்படுத்தியுள்ளீர்கள் என்றும் மறவோம். எமது ஏழைக்குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றும் திட்டத்திற்கு உதவும் உங்கள் பணி தொடரவேண்டும். பல்லாண்டு காலம் புகழ் பரப்பி காரைமண்ணின் மைந்தர்கள் உலகெல்லாம் பெருமைபெற்று நிற்க அதனைத் தாங்கி நிற்கும் தந்தையாக விளங்கிட வாழ்த்துகின்றோம்.

14வது இதழாக வெளிவரும் காரைவசந்தம் விழா மலருக்கு எமது பாடசாலையின் சார்பாக இச் செய்தியை வழங்கு வதில் மனநிறைவு அடைகின் றோம்.

சி.இளங்கோ<br>
அதிபர்<br>
யா/வேரப்பிட்டி ஸ்ரீகனேசா வித்தியாலயம்<br>
காரைநகர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Special Care For Nervous Drivers

Driving For All Ages

Discount Certificate for car Ins (With full course)

Early Road Test Arrangements

Defensive Driving Course (C.S.C)

Individual Lessons are also Available

# MILLENNIUM DRIVING SCHOOL

**M.T.O. Approved Beginner Driver Edu. Course Provider**

## A. A. KANDASAMY

**3098 Danforth Ave. Suite #D Scarborough, ON. M1L 1B1**

**Tel: 416 699 4747 Cell: 416 569 1421**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வியாவில் சைவ வித்தியாலயம்

காரைநகர் பலகாட்டில் மாவடியார் என்பவரால் ஒரு பாடசாலை அமைக்கப்பட்டு அப்பாடசாலையை மாவடியார் என்பவரே நடாத்தி வந்தார். இப்பாடசாலை கிறிஸ்தவ சமய பாதிரியார் ஒருவரால் மேற்பார்வை செய்து வரப்பட்டது. இதனால் கருங்காலி, பலகாட்டில் வாழ்ந்த சைவப் பெரியார்களும், சைவக்கோயில் குருவாகிய வேதகுட்டி ஐயரும் சேர்ந்து உடையார் நாகலிங்கத்தாரின் வளவில் 1938ம் ஆண்டு ஓர் சைவ வித்தியாசாலையை ஆரம்பித்தனர். இதன் மேற்பார்வையாளராக வேதக்குட்டி ஐயரே இருந்து வந்தார்.

சிறிதுகாலத்தின் பின் இப்பாடசாலைப் பொறுப்பு முழுவதையும் உடையார் இ.நாகலிங்கம் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு வேதக்குட்டி ஐயர் அவர்கள் விலகிக் கொண்டார். இப்பாடசாலையில் தலைமை ஆசிரியராக உடையார் இராமலிங்கம் அவர்கள் சு.வேலுப்பிள்ளை என்பவரை நியமித்து பாடசாலையை நன்றாக நடாத்தி வந்தார். அதிகமாக பலகாடு, கருங்காலியைச்சேர்ந்த பிள்ளைகள் யாவரும் இப்பாடசாலையிலேயே கல்வி கற்க முன்வந்தார்கள். இதனால் மாவடியார் பாடசாலை மூடப்பட்டது.

இதன்பின் உடையார் நாகலிங்கம் அவர்களின் பெரும் முயற்சியால் பாடசாலை நல்ல முன்னேற்றம் கண்டது. எனவே உடையார் நாகலிங்கம் அவர்கள் இப்பாடசாலைக்கு நல்ல படித்த பண்டிதர் அவர்களை நியமிக்க வேண்டும் என்பதை விரும்பி இடைக்காட்டைச்சேர்ந்த பண்டிதர் சு.இராமசாமி என்பவரை தலைமை ஆசிரியராக நியமித்தார். அவருடைய காலத்தில் இப்பாடசாலையில் ஏறக்குறைய 200 மாணவர்களுடன் எட்டாம் வகுப்புவரை இயங்கிவந்தது. பண்டிதர்.R.இராமசாமி அவர்கள் ஓய்வுபெற உடையார் நாகலிங்கம் அவர்கள் திரு.K.நல்ல தம்பி ஆசிரியர் அவர்களை தலைமை ஆசிரியராக நியமித்து நடாத்தி வந்தார்கள்.

பின்பு களபூமியைச்சேர்ந்த வெற்றிவேலு கந்தையா அவர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவருடைய காலத்தில் இப்பாடசாலை 1961ஆம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்றது. அதன் பின் பாடசாலை அதிபராக ஊர்காவற்றுறை பருத்தியடைப்பைச்சேர்ந்த திரு.க.சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள் தலைமை ஆசிரியரானார். பின்னர் அரசாங்கம் மாற்றமடைய இப்பாடசாலை வளர்ச்சி பெற்று சிரேஷ்ட பாடசாலையாக இயங்கி வந்தது. இக்காலத்தில் படித்த சில மாணவர்கள் சிரேஷ்ட பாடத்தராதர வகுப்பு பரீட்சையில் சித்தி அடைந்தார்கள். அதன்பின் இப்பாடசாலையில் கல்வி கற்ப்பித்த கணிதபாட ஆசிரியர் திரு.வி.அருளானந்தம் என்பவர் அதிபராக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் இப்பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாக இயங்கி வந்தது. திரு.வி.அருளானந்தம் என்பவர் ஓய்வுபெற அவருடைய இடத்திற்கு திரு.கு.கதிரவேலு என்பவர் நியமிக்கப்பட்டு அவர்கள் பாடசாலையை நடாத்தி வந்தார்.

எதிர்பாராதவிதமாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடப் பெயர்வு காரணமாக எல்லோரும் காரைநகரை விட்டு அகன்றனர். இதனால் இப்பாடசாலை சிறிதுகாலம் செயலிழந்து இருந்தது. பின் 1998ம் ஆண்டு சிலமாணவர்கள் திரும்பவும் இப்பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்கத்தொடங்கினார்கள் அப்போது இப்பாடசாலையை பொறுப்பு ஏற்று ஆ.குமரேசமூர்த்தி என்பவர் அதிபராக நடாத்தி வந்தார். இவருடைய காலத்தில் பழைய கட்டடங்கள் யாவும் திருத்தம் செய்யப்பட்டு பொலிவு பெற்றது. இதன்பின் திரு.ஆ.குமரேசமூர்த்தி அவர்கள் மாற்றம் பெற்று யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு அதிபராக சென்றவுடன் அவ்இடத்திற்கு திரு.க.சுந்தரலிங்கம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். க.சுந்தரலிங்கம் அவர்கள் இன்றும் தொடர்ந்து செவ்வனே இப்பாடசாலையில் அதிபராக கடமை ஆற்றி வருகின்றார். தற்போது 13 ஆசிரியர்கள் கல்விபோதித்து வருவதுடன் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 128 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

### பாடசாலைக்கீதம்

வேதக்குட்டி விஸ்வநாதர் விளங்கும் பெரிய நாகலிங்கம் வேதம் என்றும் வியாவில் பதியும் பெற்ற சைவ வித்தியா லயம்

கற்றனைத்தூறும் அறிவதனை பெற்றிட நாங்கள் முயல்வோம் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றுணை எமக்கு நமச்சிவாய பொற்பதம் பணிந்து அற்புதம் படைப்போம்

(வேதக்குட்டி)

அறிவொளி எங்கள் சுடர் ஒளி அதுவே
நெறிவழி எம்மை நிமிர்த்திடும் பேரொலி
சிறுவுரு நூல்வழி செயல் வழி மனவழி
குருவழியாக குறித்துமேல் உயர்வோம்.

(வேதக்குட்டி)

வேதக்குட்டி விஸ்வநாதர் விளங்கும் பெரிய நாகலிங்கம்
வேதம் என்றும் வியாவில் பதியும் பெற்ற சைவ வித்தியாலயம்
பெற்ற சைவ வித்தியாலயம் பெற்ற சைவ வித்தியாலயம்

### தூரநோக்கு (Vision)

பாடசாலையின் தரமான கல்வியினுடாக தரமான சமூகத்தினை உருவாக்குதல்

### குறுகிய நோக்கு (Mission)

மாணவர்களுக்கு தரமான கல்வியினை வழங்குவதன் ஊடாக சமய, சமூகப்பற்றும், ஆற்றலும் மிக்க மாணவர்களை உருவாக்குவதுடன் மாணவர்களது திறமையை வெளிக்கொணர்தல்.

**மகுட வாசகம்**

"கற்றனைத் தூறுமறிவு"

### 25ம் ஆண்டு வெள்ளிவிழா வாழ்த்துமடல்

கனடா காரை கலாச்சாரமன்றம் ஆரம்பித்து இன்றுடன் 25ம் ஆண்டு நிறைவுபெற்று இம்மன்றம் 25ம் ஆண்டிற்குரிய விழாவினைக்கொண்டாடுவதனை முன்னிட்டு எமது பாடசாலை சமுகம் வாழ்த்தினைக் தெரிவித்துக் கொள்கின்றது. இம்மன்றம் ஆனது காரைவாழ் மக்கள் அனைவரினதும் நலனில் கவனம் செலுத்துவது மட்டுமல்லாது காரைநகரில் அமைந்துள்ள அனைத்து பாடசாலைகளிலும் மாணவர்களினது கற்றல் செயற்பாட்டிலும் கவனமும் ஆர்வமும் செலுத்தி வருகின்றார்கள்.

இம்மன்றத்தின் சேவையானது என்றென்றும் பாராட்டப் படவேண்டிய தொன்றாகும். கனடா காரை கலாச்சார மன்றமானது காரைவாழ் ஒவ்வொரு மக்களினதும் நலனில் அக்கறை செலுத்தி வருகின்றது. இதன் மூலம் சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதற்கெல்லாம் ஊன்றுகோலாக திகழ்வது கனடா காரை கலாச்சாரமன்றம் என்று சொன்னால் மிகையாகாது.

நிகழ்கால நோக்கமின்றி எதிர்காலத்தையும் நோக்காகக் கொண்டு தனது திட்டமிடலை மேற்கொண்டு அதனை முன்னெடுத்துச்செல்வதில் முனைப்பாக காரைநகர் கனடா காரை கலாச்சார மன்றம் விளங்குகின்றது. "விளக்கிற்கு எண்ணெய் எவ்வளவு முக்கியமோ அதே போன்று காரைவாழ் மக்களின் நலனிற்கு கனடா காரை கலாச்சார மன்றத்தின் சேவை முக்கிமானது" அத்தகைய சேவையினை வழங்கி 25 வருட பூர்த்தி விழாவைக்கொண்டாடும் கனடா காரை கலாச்சார மன்றத்திற்கு எமது வாழ்த்துக் களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

வருடங்கள் பல கடந்தாலும் தம் பணிகளையும் சேவை களையும் சிறப்பாக ஆற்றும் இம்மன்றம் தொடர்ந்தும் வளர வேண்டுமென பாடசாலைச்சமுகம் காரைவாழ் மக்கள் சார்பாக வாழ்த்துகின்றோம்.

க.சுந்தரலிங்கம்

அதிபர்
யா/வியாவில் சைவ வித்தியாலயம்
காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

யாழ் குடாநாட்டு தீவகத்தின் சிகரமாய் காரைநகர் களபூமி என்னும் அழகிய கிராமத்தில் சமயத்தின் பெருமையை நிலைநாட்டும் சமய குரவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் நாமம் தாங்கி சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம் உருவானது.

இக்கிராமத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பரமநாதி கோவளம் வெளிச்சவீட்டுச் சாமியார் பேப்பர் முருகேசு, விளானைச் சேர்ந்த கந்தர் சுப்பிரமணிய (வள்ளிசுப்பர்) ஆறுமுகம் சங்கரப்பிள்ளை ஆகிய பெரியோர்களின் முயற்சியினால் தொடங்கப்பட்ட இப்பாடசாலையின் ஆரம்பம் கொட்டில் பாடசாலையாகவே திகழ்ந்தது. பின்பு நந்தாவில் என்ற தற்போதைய பாடசாலை அமைந்துள்ள இடத்தை விலைக்கு வாங்கி கந்தர் சுப்பிரமணியமும் ஆறுமுகம் சங்கரப்பிள்ளை ஆகிய இருவரும் சேர்ந்து இப்பாடசாலைக் கட்டிடத்தை ஆரம்பித்து தங்களது செலவில் கட்டி முடித்து சுந்தரமூர்த்தி நாயனார் பாடசாலை என்னும் பெயர் சூட்டப்பட்டு 1928 – 1956 ஆம் ஆண்டு வரை தலைமை ஆசிரியராக முருகேசு கார்த்திகேசு என்பவர் கடமை புரிந்தார். 1962ஆம் ஆண்டு சித்திரை மாதம் அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்டது.

எமது பாடசாலையானது தரம் 01 – தரம் 11 வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மாணவர் தொகை 168 ஆகும். ஆசிரியர் 13 பேர் கடமை புரிகின்றனர். மற்றும் நூலகர், காவலாளி, அலுவலகப் பணியாளர் போன்றோர் பணிபுரிகின்றனர். ஆரம்பப் பிரிவு மாணவர்களின் முதன்மையான தரம் ஐந்திற்குரிய புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த இரண்டு வருடங்களிலும் தலா 02 மாணவர்கள் வீதம் சித்தியெய்தினர். இவ்வருடம் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் வீதம் 100 ஆக இருந்தது. அதேபோன்று கடந்த வருடங்களில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 04 பேர் 02 பேர் எனச்சித்தி எய்தினர். ஆங்கில தினப் போட்டியில் மாகாண மட்டங்களில் வெற்றி பெற்றுள்ளனர். அதேபோல தமிழ்த் தினப்போட்டி, விரைவு கணிதப்போட்டி, திறக்குறள் போட்டி என்பனவற்றில் கோட்ட மட்டங்களிலும், பண்ணிசைப்போட்டி, கரபந்தாட்டப்போட்டியிலும் மாகாணமட்டத்திலும் வெற்றியீட்டியுள்ளனர். இவ்வாறு எமது மாணவர்கள் கல்வித் தரத்தோடு இணைப்பாட விதானச் செயற்பாடுகளான விளையாட்டுத்துறை, கலைத்துறையிலும் சாதனை படைத்துள்ளார்கள். அதேபோன்று மன்றங்கள் ஊடாக விழாக்கள், கல்விச் சுற்றுலா, களப்பயணம் போன்ற சமூக மயமாக்கல் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள், பெற்றோர்களின் உதவிகளைக் கண்டு பெருமதிப்படைகின்றேன். மேலும் பாடசாலை முதன்மை நிலை பெறுவதற்கு எமது பெற்றோர் பிள்ளையின் பால் காட்டும் கல்வியல் ஆர்வம், அவர்களின் வாழ்க்கைத் தரம் என்பன இன்னும் மேம்பட வேண்டிய நிலை உண்டு. காரைநகரின் கிழக்கு றோட் பகுதி களபூமியிலே தனியார் கல்வி தனியார் கல்வி வசதிகள் இல்லை. எமது பாடசாலை கற்றல் கற்பித்தற் செயற்பாட்டிலேயே மட்டும் பிள்ளைகள் தங்கியுள்ளனர். கற்றல் உபகரணம் பெறுவதற்கான கடை வசதியோ, போட்டோ பிரதி எடுப்பதற்கான வசதியோ அற்ற நிலையில் தான் பிள்ளைகள் உள்ளனர். மேலும் மாணவர்கள் மாறிவரும் மாற்றங்களை மேலும் அறிவதற்கு நேரடியாக பொறுவதற்கு களப்பயணங்கள் கூட்டிச் செல்ல வேண்டிய நிலை அவசியமானது.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை விஞ்ஞான, சித்திர, புவியியல் மற்றும் ஆரம்ப ஆங்கிலம் போன்றவற்றிற்கு ஆசிரியரின்மையால் அப்பாடத்தைக் கற்பதில் பெரிதும் இடர்படுகின்றனர். எனினும் பழைய மாணவர் சங்கம் போன்றோரின் உதவியுடன் இவ் விடைவெளி குறைக்கப்படுகின்றது.

ஆரம்பப் பிரிவைப் பொறுத்தவரையில் பின்வரும் செய்றிட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

– ஆங்கில மாழித்திறன் விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றை அதிகரிப்பு
- நேரடி அனுபவம் பெறுவதற்கான களப்பயணம்
- கற்றல் ஊக்குவிப்பதற்கான பரிசளிப்பு விழா
- திறமை வெளிக்கொணர்வதற்கான போட்டிக ளுக்கு தயார்ப்படுத்தலும் அதற்கான போக்கு வரத்துகளும்.
- நேர் மனப்பாங்கு சமூக இயைபாக்கத்திற்கான விழாக்களைக் கொண்டாடுதல்
- அடிப்படை வசதிகள் கொள்வதற்கான குடிநீர் வசதி, சித்திரை, புரட்டாதி மட்டும் ஏனைய நீர் வழங்கல்.
- அறிவை மேம்படுத்துவதற்கான வாசிப்பு நூல்கள்

மேலும் எமது ஆரம்ப பாடசாலையின் வகுப்பறை மூடப்படாத நிலையிலுள்ளமையால் ஆடு, நாய், காகம் போன்றவற்றால் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரிய மாணவர்கள் இடர்படுகின்றனர். அக்கட்டிடப் பணியினை பழைய மாணவர்கள் மேற்கொண்ட மையால் அவர்களே செய்து முடிக்க வேண்டிய நிலை உள்ளது. மேலும் பாதுகாப்பிற்கான மதில் விளை யாட்டு முற்றம் என்பன அவசியமானதாகும்.

எமது மேற்பிரிவு மாணவர்களைப் பொறுத்தவரை க.பொ.த.சாதாரணப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர் கள் உள்ளனர். அவர்கள் பெறுபேற்றை அதிகரிக்கச் செய்யவும், அடுத்துவரும் நிலையிலுள்ள மாணவர் களின் முதன்மையை பாடங்களான கணிதம், ஆங்கி லம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைப் மேம்படுத் தவும் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டிற்கு இலகுபடுத்த வும் மாணவர்களின் கற்கும் வேகம் குறை நிலையில் உள்ளமையாலும் கீழ்க்காணும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம்.

- கணித பாடச் செயற்றிட்டம்.
- ஆங்கில மொழித்திறன் விருத்தி.
- மெல்லக் கற்போருக்கான துரித கற்றல் செயற்றிட்டம்
- விஞ்ஞான புவியியல் பாடத்திற்கான செயற்றிட்டம்
- நேர அனுபவம், மனமகிழ்ச்சிகளுடனான களப்பயண செயற்றிட்டம்
- மாணவரின் அடிப்படை வசதியை மேற்கொள்வத ற்கான குடிநீர் சித்திரை – புரட்டாதி வரையான ஏனைய நீருக்கான நிதி எமது பாடசாலைக்கு குடிநீருக்கான நிதி கிடைப்பதில்லை.
- இரண்டாம் மொழித்திறனை விருத்தி மேற்கொள்ளல்.

மேலும் பாதுகாப்பு வேலியின்மை, வர்ணப் பூச்சற்ற அறைகள், சுவாமிக்கான அறை வசதயின்மை நூலகத்திற்கான அலுமாரி இன்மை, வீடியோ கமரா மற்றும் பாடசாலை உபகரணம் மற்றும் உடைப் பயிற்சி கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்டத்திற்கான உடை போன்ற வழங்கப்பட வேண்டும் பழைய மாணவர்களால் வழங்கப்பட்ட போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் பழுதடைந்த நிலை சீர்திருத்த வேண்டியுள்ளது. இத்தேவைகள் பூர்த்திசெய்யு மிடத்து எமது பாடசாலை முதன்மை நிலை அடைய முடியும். இவ்வுதவிகளை பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளை எதிர்பார்த்துள்ளோம். காரை கனடா நலன்புரிச் சங்கத்தால் எமது பாடசாலைக்கு வழங்கப்பட்ட பல்வேறு நிதி உதவிகளுக்கு பாட சாலை சமூகத்தின் சார்பின் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். காரைக் கனடா நலன்புரிச் சங்கம் வெள்ளி விழாவைக் கண்டும் வசந்தம் நூல் வெளியிட்டதையிட்டும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

வி.சாந்தகுமார்
அதிபர்
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ஆயிலி சிவஞானோதயா வித்தியாலயம்

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகிய காரைநகரில் காலத்திற்கு காலம் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு பல அறிஞர்களும் பெரியவர்களும் தொண்டாற்றினர். அந்த வகையில் காரைநகர் கோவளம், மணற்பிட்டி, ஆயிலி, போன்ற கிராமங்களில் உள்ள சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக இற்றைக்கு 120 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றதுதான் ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்கள் இங்கு இடம்பெற்று வந்தன. காரைநகரில் தரமான கல்வியை வழங்கும் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கிய இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற பலர் இன்றும் உயர் பதவிகளில் இருப்பதுடன் உலகெங்கும் பரந்து சிறப்பாக வாழ்கின்றனர்.

இவ்வாறு சிறப்பாக நூறுக்கும் மேற்பட்ட மாணவர்களுடன் இயங்கிவந்த இப் பாடசாலையானது 1991 இல் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வுடன் மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் 1996இல் மீளக்குடியமர்ந்தும் கடந்த 18 வருடங்களாக மூடப்பட்ட நிலையிலேயே காணப்பட்டது. கிராமங்களில் ஆரம்பப் பாடசாலைகளின் அவசியத்தைக் கருத்தில் கொண்ட காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் எடுத்த முயற்சியால் இப்பாடசாலை மீளவும் 01.09.2014 இல் திறக்கப்பட்டது.

தற்போது தரம் ஒன்று வகுப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் பத்து மாணவர்கள் இணைந்து கல்வி பயில்வதுடன் அதிபருடன் இரு ஆசிரியர்களும் கல்வி போதித்து வருகின்றனர். காலப்போக்கில் தரம் 5 வரையான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

ஐயாயிரம் பாடசாலைகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் இப்பாடசாலை கட்டடம் ஐந்து இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கான காகிதாதிகளையும் அலுவலகப் பொருட்களையும் கனடா காரை கலாசார மன்றம் கடந்த மாதம் வழங்கியிருந்தது.

போதிய பௌதீக வசதிகள் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு பாடசாலையின் பழைய மாணவன் திரு.கதிர்காமநாதன் (சுவிஸ்) அவர்களினால் 60x25 மாடிக்கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளது. அதற்கான அடிக்கல் கடந்த மாதம் நாட்டப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிகளற்று ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரினதும் அரசினதும் ஒத்துழைப்புடன் காரைநகரின் முதற்தரப் பாடசாலையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இப்பாடசாலையின் அதிபராக வேலணையை சேர்ந்த திரு.இ.வசீகரன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்தர அபிவிருத்திப் பாதையில் காரை தியாகராசா ம.ம.வி....



தரம் அல்லது பண்புசார் தன்மை என்பது தேவைக் குரிய அனுகூலத்தின் மையம் எனப் பொருள்படும். பொருள் உற்பத்தித் துறையில் விருத்தியான "பண்புசார் தன்மை" சேவைத்துறையில் உள்ளீர்க்கப் பட்ட போது அது ஓரளவு வேறுபாடான கருத்தைக் கொண்டிருக்கின்றது. கல்வியையும் ஒரு உற்பத்திச் செயற்பாடாக நோக்கும் போது அதன் உற்பத்தித் திறன் மாணவரிடத்தில் பொதுவானதாக நோக்கக் கூடியதாக இருப்பினும் கல்விச் செயற்பாட்டின் மூலம் ஒரே வகையான பொருள் உற்பத்தியை மேற்கொள்வதை விடக் கல்வி பெறுபவராகிய மாணவரிடம் நிபுணத்துவ வளர்ச்சியை ஏற்படுத்தப் பயன்படுத்த வேண்டும். இது பற்றி பல்வேறுபட்ட மாணவர்களிடையே வேறுபாடு கள் காணப்படக் கூடியதாக இருப்பினும் அத்தியாவசிய நிபுணத்துவங்கள் சகல மாணவர்களிடமும் விருத்தியடைவது அத்தியாவசியமென்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகும். மாணவரின் நிபுணத்துவ வளர்ச்சிக்காக உபயோகிக்கப்படுகின்ற செயற்பாடு மற்றும் இணைந்த உள்ளீடுகளிலும் கூட பண்புசார் தன்மை அல்லது தரம் இருக்க வேண்டும். மனித உள்ளீடுகளான ஆசிரியர், அதிபர் மற்றும் உத்தி யோகத்தர்கள் ஆகிய கல்விசார் ஆளணியினர் தமது செயற்பாட்டிற்கேற்ப சகல விடயங்களையும் உரிய முறையில் நிறைவேற்ற நிபுணத்துவம் பெற வேண்டும். உள்ளீடுகளாக உபயோகிக்கின்ற பலவகையான நூல்கள், கட்டடங்கள், தளபாடங்கள், கணனி மற்றும் உபகரணங்கள் உரிய தரத்தினை உடையதாக இருத்தல் வேண்டும். பயன்படுத்தப்படும் முகாமைத் துவச் செயற்பாடு சிறந்த பண்புசார் தன்மை கொண் டதாக இருத்தல் வேண்டும். உள்ளீடுகள் எவ்வளவு பண்புசார் தன்மை கொண்டனவாக இருப்பினும் முகாமைத்துவச் செயற்பாட்டில் பண்புசார் தன்மை இல்லையெனில் ஆக்கங்கள் தரமானவையாக இராது. உற்பத்திச் செயற்பாடுகள் சரியான முறையில் கண்காணிக்கப்பட்டால் உற்பத்திப் பொருட்கள் தம்மைத் தாமே கண்காணித்துக் கொள்ளும். எந்த ஒரு பொருளுக்கோ அல்லது சேவைக்கோ பண்புசார் லேபலை ஒட்ட வேண்டியது அதற்கான தரத்தைப் பூர்த்தி செய்த பின்னரேயாகும்.

கல்வி சார் நடவடிக்கைகளில் அளவு ரீதியான முன்னேற்றமான நிலைமைகளை வலுப்படுத்தும் முதலாம் கட்ட நிலையிலிருந்து பண்புசார் அல்லது தரவிருத்தியினை நோக்கி நகரும் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கை ஒன்றினை நோக்கி இலங்கைப் பாடசாலைகள் நகர்வதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டளவில் இலங்கைப் பாடசாலைகள் தரமான கல்வி ஒன்றிற் கான அடிப்படைக் கட்டுமானங்களை பெற்றிருக்க வேண்டும் என்ற வகையில் கல்வியில் மறுசீரமைப்பு களும் பண்புசார் விருத்திக்கான வேலைத்திட்டங்களும் முன்மொழியப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகின்றன. அதாவது எல்லோருக்கும் கல்வி என்ற நிலையிலி ருந்து "எல்லோருக்கும் தரமான கல்வி" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு மேல்நோக்கி நகர்வதாகும். அண்மைக் காலங்களில் கல்வி சார் நிறுவனங்களிலும் தரவிருத்தி, தரஉறுதிப்பாடு, தரக்கட்டுப்பாடு, தரவட்டம், முழுத்தர முகாமைத்துவம் போன்ற பதங்கள் எடுத்தாளப்படுகின் றன. ஒரு தரமான உற்பத்தி அல்லது சேவை என்பது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை திருப்தி செய்கின்ற அல்லது அத்திருப்திக்கு மேலான ஒன்று எனலாம். எனவே வாடிக்கையாளரின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக குறிப்பிட்ட ஒரு பொருள் அல்லது சேவை கொண்டிருக்க வேண்டிய பல்வேறு அம்சங்களும் உள்ளடங்கிய மொத்தத் தன்மையே தரம் எனப்படும். முழுத்தரம் என்பது வாடிக்கையாளரின் திருப்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஓர் ஒழுங்கமைப்பின் அல்லது நிறுவனத்தின் தொழிற்பாடுகள் யாவும் தொடர்ச்சியான மேம்பாடு நோக்கிக் கவனக் குவிப்பைப் பெறுவதற்கான மாட்சிமை நோக்கிய ஓர் அர்ப்பணிப்பு ஆகும்.

இந்த அம்சங்களின் அடிப்படையில் தரம் என்பது,

- ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டமன்று
- ஒரே மாதிரியான பழைய சிந்தனை முறையன்று
- நெருக்கடி நிலைக்கான தீர்வு காணலன்று
- சுலோகங்களால் கொண்டு செலுத்தப்படுவதன்று
- குறுங்காலத்திற்குரிய தன்று.
- விரைந்து தீர்வு காணப்படவேண்டிய தர்மசங்கடமான நிலைமையன்று என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

வாடிக்கையாளர்கள் அனைவரும் பூரணத்துவத்தை எதிர்பார்க்கின்றார்கள் என்பதுவும் அதனை நிறைவேற்ற வேண்டியது முழுத்தரக் கட்டுப்பாட்டின் அடிப்படை என்பதுவும் கருத்தில் கொள்ளல் வேண்டும். அவ்வகையில் முழுத்தரம் பற்றிய பின்வரும் அடிப்படை வினாக்கள் தொடர்பில் விடைகாணல் வேண்டும்.

- எனது வாடிக்கையாளர்கள் யாவர்?
- அவர்களது தேவைகள் யாவை?
- அவர்கள் கருத்திற் கொள்ளும் அளவைகளும் அவர்களின் எதிர்பார்ப்புகளும் யாவை?
- நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள் அல்லது வழங்கும் சேவை எது?
- எனது உற்பத்திப் பொருள் அல்லது சேவை வாடிக்கையாளரது எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்றதா அல்லது அந்த எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளதா?
- எனது உற்பத்தியை அல்லது சேவையை மேம்படுத்துவதற்கான செயன்முறை யாது?
- எனது செயன்முறையை மேம்படுத்துவதற்கு நான் அனுசரிக்க வேண்டிய திருத்த நடவடிக்கைகள் யாவை?

எனவே முழுத்தரத்தைப் பேணும் ஒவ்வொருவரும் தமது வாடிக்கையாளர்கள் அவர்களது தேவைகள் எதிர்பார்ப்புகள் என்பவற்றை சரியாக இனங்கண்டு கொள்ள வேண்டும். அத்தோடு மேலே குறிப்பிட்ட வினாக்களை எழுப்பி தமது சேவையை மேன்மேலும் தரம் மிக்கவையாக மாற்றுவதற்கான தொடர் முயற்சியில் ஈடுபடல் வேண்டும். இவ்வகையில் முழுத்தர மேம்பாட்டிற்கான சில படிமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

முழுத்தரம் குறித்த வெற்றிக்கு அடிப்படையான முதன்மைக் காரணிகளாக அமைவன,

- முகாமைத் தலைமைத்துவம் மேலிருந்து கீழ் நோக்கியதாக அர்ப்பணிப்புள்ளதாக செயலூக்கமுடையதாக இருத்தல்.
- இலக்குகளை அல்லது நோக்கங்களை தெளிவாக விளங்கி அவற்றுடன் உடன்பாடு கொண்டிருத்தல்.
- குழுவேலைக்கு இடமளித்தல்
- பயிற்சி வழங்கல்
- வெற்றியைப் பகிர்தலும் மேம்படுத்தலும், மீளவலியுறுத்தலும் என்பனவாகும்

பாடசாலைப் பாடவிதானச் செயற்பாடுகளூடாக தேசிய கல்வித் தரத்தை அடையும் வகையில், தேசிய நோக்கம் மற்றும் பொதுத் தேர்ச்சியை மேற்கொள்ளக் கூடியவாறு பாடவிதானத்தை அமுல்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

1. தேசிய நோக்கம், பொது மற்றும் பாடத்தேர்ச்சியை இலக்காகக் கொண்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிட்டு அமுல்படுத்தல்
2. தேசிய நோக்கத்திறனை மேற்கொள்வதற்காக உதவக் கூடிய கற்றல், கற்பித்தல் செயற் பாடுகளுக்காக உரிய வள உபகரணம் மற்றும் கற்கை முறைகளைப் பயன்படுத்தல்
3. சந்தர்ப்பத்திற்கேற்ப நவீனமயம் மூலம் ஆக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன் மிக்க கற்கை சூழலை ஏற்படுத்தல்

4. பாடநோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, திறன் அபிவிருத்திக்காக ஆசிரியர்களின் தரச்சுற்றை பேணுவதன் மூலம் செயற்றிறன் மிக்க ஆசிரிய பங்கேற்பை வெளிக்காண்பித்தல்.
5. மதிப்பீடு மற்றும் மீளூட்டல் செயற்பாடுகள் மூலம் பாடத்தேர்ச்சி எட்டப்பட்டதாக உறுதிப்படுத்தல்.

மேலும் மாணவனின் பண்புசார் அபிவிருத்திக்கு உதவக்கூடிய பல்வகையான கற்றல் ஊடக உபகரணங்கள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

1. மாணவர் ஆர்வத்திற்கமைய பாட மற்றும் கற்கைச் செயற்பாடுகளைத் தேர்ந்தெடுத்து ஆய்வுக்கு சந்தர்ப்பம் வழங்கல்
2. மாணவரின் விசேட ஆக்க இயலுமைகள், சிந்தனை விருத்திக்குரிய வழிகாட்டல்கள் கொண்ட திட்டங்களை அமுல்படுத்தல்.
3. மாணவரின் அபிவிருத்திக்கு உதவும் பல்வகைப் பட்ட உபகரணங்கள் மற்றும் கற்றல் ஊடகங் களைப் பயன்படுத்தி அறிவியல் முகாமைத்து வத்திற்கு ஊக்கப்படுத்தல்.
4. மாணவர் அறிக்கை மற்றும் புள்ளிவிபர ஆய்வுகள் மூலம் கிரமமாக மாணவர் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்.
5. சிறந்த சமூக முன்மாதிரிகள் கொண்ட கற்றற் செயற்பாடுகளைப் பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்குதல்.
6. இலங்கை கலாசாரம் மற்றும் சம்பிரதாயங்களைப் பாதுகாத்து மாணவரின் பண்புசார் தரம் ஏற்படு வதை உறுதிப்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட படிமுறைகளூடாக பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள் திட்டமிட்டு வழங்கப்படும் நிலையில் பாடசாலை மட்டத்தில் கல்வித் தர உறுதிப்பாட்டைப் பேணும் அதே நேரம் தேசிய கல்வித் தரமும் மேம்படுத்தப்படும் உன்னத நிலையை அடையலாம்.

கட்டிளமைப் பருவ மாணவர்களின் அறிவு, தொழின் முறையியல் என்பன நாள்தோறும் விரிவடையும் தற்கால உலகைத் திறந்த மனதோடு நோக்கவும் வகுப்பறைக்கு வெளியே புத்தாக்கச் சிந்தனையுடன் தம் கற்றற் செயற்பாடுகளை ஆற்றவும் வேண்டும். இதற்கு வினைத்திறனும், விளைதிறனும் பொருந்திய கற்றல், கற்பித்தல் செயன்முறை அறிமுகம் செய்யப்பட வேண்டும். கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஏற்ப இவ்விடயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள துடன் பொருத்தமான மதிப்பீட்டு முறையும் திட்டமிடப் பட்டுள்ளது. கடினமான பரீட்சைகளை மையமாகக் கொண்டதும், முறைசார்ந்ததுமான கற்றலிலிருந்து மாணவனை விடுவித்து நடைமுறை உலகைப்பற்றிக் கற்பதற்கும், சுயமாகக் கற்பதற்கும் வழிப்படுத்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

வேலைவாய்ப்புகளுக்குப் பொருத்தமான கல்விமுறை யின் பால் மாணவர்கள் வழிப்படுத்தப்படுவதில்லை என்பது இன்றைய கல்வி மீதுள்ள குற்றச்சாட்டாகும். மரபுவழி ஆசிரியர் மைய கற்றல், கற்பித்தல் செயன் முறையில் பெரும்பாலும் முறைசார் கலைத்திட்டம் வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் அதற்கப்பால் காணப்படும் கற்றல் வாய்ப்புகளின் மீது மாணவர்கள் வழிப்படுத்தப்படல் மிக்க குறைவாகவே உள்ளது. இதனால் மாணவர்களின் சுயமான கல்வி மேலும் நலிவடைந்து வருகின்றது. குறிப்புகளை மனன மாக்கல் போன்ற குறுகிய கற்றல் முறைகள் மாணவர்களின் சிந்தனைத் திறன்களையும், அறிவு வளர்ச்சியையும் மட்டுப்படுத்துகின்றன. கட்டிளமைப் பருவ மாணவர்கள் சிந்திக்கத் தலைப்படும் வளர்ச்சிப் பருவத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் நுழைகின் றான். இக்கால கட்டத்தில் தனித்துவம், சுதந்திரமான சிந்தனை, சூழல் பற்றிய ஆய்வு, தர்க்க ரீதியான சிந்தனை போன்ற அறிவு சார் செல்நெறிகளின்பால் வழிப்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய கால கட்டத்தில் ஆசிரியர் மையக் கற்றல் முறையானது மாணவனது சிந்தனை விருத்தியைப் பெரிதும் பாதிக்கும் விடயங்களாக உள்ளன.

தெரிந்த விடயங்களை மெருகூட்டுவதிலும், ஏற்கனவே முடிவு செய்தவற்றைக் கற்பதிலும், இருக்கும் விடயங் களை மீண்டும் அதே அடிப்படையில் கட்டியெழுப்புவதி லுமே அண்மைக்காலக் கல்வி முறைகள் அமைந்தன. இவ்விடயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து ஒரு தெளிவான கோட்பாட்டின் கீழ் புதிய கலைத்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. தெரிந்தவற்றை மாற்றியமைத்தும், புதியவற்றைக் கண்டறிந்தும், எதிர்காலத்திற்குத் தேவையானவற்றை உருவாக்கியும், நாளைய வெற்றிக்காக தயார் நிலையில் இருக்கக் கூடிய மாணவர் குழுவை உருவாக்குவது இதன் அடிப்படை நோக்கமாகும். அவ்வகையில் இன்றைய நிலையை வெற்றி கொள்ள பாடசாலைக் கற்றல் கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதுவரை காலமும் வகுப்பறைகளில் நிலவி வந்த அறிவைக் கடத்தல் வகிபாகம், பரிமாற்றல் வகிபாகம் என்பவற்றிற்குப் பதிலாக மாணவர் மைய, தேர்ச்சி மையச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிலைமாற்று ஆசிரியர் வகிபாகத்தின் நிலைமைகளை நன்கு விளங்கி புதிய ஆசிரியர் வகிபாகத்தில் நின்று செயற்படவேண்டிய நிலை இன்றைய ஆசிரியர் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

கலைத்திட்டம் பாட அறிவை நோக்காகக் கொள்ளாது அடிப்படைத் தேர்ச்சி மட்டங்களை அடைவதை நோக்காகக் கொண்டது. இத் தேர்ச்சி மட்டங்கள் தேசிய கல்வி ஆணைக்குழு வெளியிட்ட 8 தேசியகல்விக் குறிக்கோள்களையும், யுனெஸ்கோ இன் சர்வதேச ஆணைக்குழு இனங்கண்ட கல்வியின் 4 தூண்களான,

1. அறியக் கற்றல் learning to know
2. செய்யக் கற்றல் learning to do
3. வாழக் கற்றல் learning to be
4. பிறருடன் இணைந்து வாழக்கற்றல். Learning to live together

என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. எனவே தேர்ச்சி மையக் கல்விக் குறிக்கோள்களின் அடிப்படை எண்ணக்கருக்களான,(KASP)

- K - Knowledge அறிவு
- A - Attitude மனப்பாங்கு
- S - Skill திறன்
- P - Practice பயிற்சி

என்பவற்றுடன் சமநிலை ஆளுமைப் பண்புகளுடன் கூடிய தேர்ச்சி விருத்தி என்பது இன்றைய பாடசாலைக் கல்வித் தராதர விருத்திச் செயற்பாட்டின் முக்கிய விடயங்களாகும். அவ்வகையில் மாணவர்களை மையமாகக் கொண்ட, செயற்பாடுகளுடன் கூடிய, தேர்ச்சி மையக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை திறம்பட செயற்படுத்துவதற்கான புதிய தந்திரோபாயமாக, கல்வியில் தரவிருத்தி (Quality in Education) எனும் அம்சம் இன்று சகல வகுப்புகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கல்வியில் தர விருத்தியை ஏற்படுத்தும் தந்திரோபாயங்களாக,

தேர்ச்சி மையக் கலைத்திட்டம்
(Competency based Curriculum)

- செயற்பாட்டு ரீதியிலான (5E முறை) கற்றல் கற்பித்தல் அணுகுமுறை
- 3T ஆசிரியர் வகிபாகம்
- பாடத் தெரிவு முறைமை என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அவ்வகையில் முழுத்தர முகாமைத்துவம் செயற்படுத்தப்படும் பாடசாலை ஒன்றில் இடம்பெறும் வகுப்பறைக் கற்றல் செயலொழுங்கானது மாணவர் மையமான தேர்ச்சிக் கற்றலுக்குரிய கவிநிலையுடையதாகவும், இற்றைப்படுத்திய தேர்ச்சிகளைக் கொண்ட ஆளணியினரால் ஆளுகை செய்யப்படுவதாகவும் அமைதல் வேண்டும்.

| | ஆண்டு | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | Carder | உள்ளது | தேவை/மேலதிகம் |
| | 2012 | 562 | 38 | 46 | 8 |
| | 2013 | 602 | 38 | 31 | 7 |
| | 2014 | 605 | 42 | 40 | 2 |

மாணவர்கள் சம்பந்தமான வெளியீடு, தேர்ச்சிகளது விருத்தியாக அமைவதால் விருத்தியாக்கப்பட வேண்டிய தேர்ச்சிகளை இனங்கண்டு அவை விருத்தியடையும் விதமாக பாடவிதானச் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஏனெனில் வெளியீற்றலின் வெற்றியானது உள்ளீட்டுச் செயன்முறையின் வெற்றியிலேயே தங்கியுள்ளது. எனவே மானிட, பௌதிக உள்ளீடுகள் யாவும் குறித்த தரங்களைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

அவ்வகையில் நவீன செல்நெறிகளுக்கமைய கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. தனது கல்வி அபிவிருத்திப் பாதையின் தடங்களை இங்கே பதித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 3 வருடங்களில் பாடசாலை ஆளணி விபரம்

இவற்றுக்கும் மேலாக பாடசாலை மட்டத்தில் முழுத்தர மேம்பாட்டை ஏற்படுத்தும் முகமாக பல்வேறு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் கல்வித் தர விருத்திக்காகப் பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் நுட்பங்களாக,

- பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் (Programme for School Improvement -PSI)
- ESDFP செயற்றிட்டங்கள்
- பிள்ளை நேயப் பாடசாலைச் செயற்றிட்டம் (Child Friendly School - CFS)
- 5S அணுகுமுறை
- ஆசிரியர் தரவட்டங்கள்
  - ஆய்வும் அபிவிருத்தியும்

போன்ற அம்சங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் பிரதானமாக பாடசாலையைச் சமூகத்துடன் இணைத்தல், பல்வேறு பாடசாலை அமுலாக்கற்றிட்டச் செயற்பாடுகளிலும், அபிவிருத்தித் திட்டம் தயாரித்தலிலும், செற்படுத்தலிலும் சமூகத்தவர்களை அங்கத்தவர்களாகக் கொள்வதன் மூலம், கற்றல் கலாசாரம், மிகைநிரப்புக் கற்றல் செயற்பாடுகள் என்பவற்றை மேம்படுத்துவதுடன், சமூகத்தின் கலை, கலாசார, பாரம்பரியங்கள், விழுமியங்கள் போன்றவற்றைப் பேணுவதுடன் தரமான கல்விச் சமூகத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டது.
- ESDFP செயற்றிட்டங்கள் பிரதானமாக 4 கருத்திட்டங்களை உள்ளடக்கியது.

  கருத்திட்டம் 1-விசேடகல்வி, முறைசாராக் கல்வி தொடர்பானது

  கருத்திட்டம் 2-மாணவர்கள், மற்றும் ஆசிரியர்களின் உயர்மட்டச் செயற்பாடுகள் தொடர்பானது

  கருத்திட்டம் 3-தகவல் இற்றைப்படுத்தல் தொடர்பானது.

  கருத்திட்டம் 4-பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பானது.



இடைநிலைக் கல்வி மாணவர் தொடர்பில் கருத்திட்டம் 2 இல் உள்ளடக்கப்படும் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவ்வகையில் கற்றல் செயற்பாடுகளின் போது மாணவர்களிடம் உயர் மட்டத்திலான திறமைகள் மற்றும் பலத்தை விருத்தி செய்ய தேவைப்படும் திட்டங்கள், திட்டங்களை அமுல்படுத்தத் தேவைப்படும் சேவைகள், செயற்பாடுகளிற்காக மாணவரை அடிப்படையாகக் கொண்ட உயர் மட்டச் செயற்பாடுகள் (Student Based High Order Process - SBHOP) என்ற வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி பாடரீதியான மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள், பாடவிதான இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், மாணவர் நலன்புரித்திட்டங்கள், மாணவர் தலைமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்கள், தொழில் வழிகாட்டல் மற்றும் மாணவர் ஆலோசனை வேலைத்திட்டங்கள், மாணவர் படைப்பாற்றல் செயற்றிட்டம், விசேட பாடங்கள் தொடர்பான வெளிவாரி நிபுணத்துவ சேவைகள், விசேட கல்வித் தேவை கொண்ட மாணவர்களுக்கான விசேட வேலைத்திட்டங்கள் என்பவற்றைப் பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் சகல மாணவர்களதும் தகைமைத் திறன்களை விருத்தி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றினடிப்படையில் எமது பாடசாலையின் அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் 2014 ஆம் கல்வியாண்டில் ஐப்பசி மாதம் வரை நிகழ்த்தப்பட்ட செயற்றிட்டங்கள் பின்வருமாறு,

2014 ஆம் கல்வியாண்டில் பாடசாலையில் நிகழ்த்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட மாணவர் ஆளுமை விருத்திக்கான விசேட நிகழ்வுகள்

1. தரம் 6 மாணவர்களுக்கான கால்கோள்விழா
2. தைப்பொங்கல் விழா
3. வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு
4. ஆண்கள் சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு
5. சிந்தனை நாள் நிகழ்வு
6. புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வு ஊர்வலம்
7. உலக சுற்றாடல் தின நிகழ்வு
8. நிறுவுநர் தினமும், பரிசளிப்புவிழாவும
9. மாணவ முதல்வர், வகுப்பு முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு
10. சிறப்புப் பெறுபேற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு
11. ஆடிப்பிறப்பு விழா
12. மணிவாசகர் குருபூசை
13. தரம் 7, 10 மாணவர்களுக்கான சுகாதார முகாம்
14. உயர்தர மாணவர் ஒன்றுகூடலும் மதிய போசன நிகழ்வும்
15. பாடசாலை மட்ட விஞ்ஞான தின நிகழ்வு
16. பாடசாலை மட்ட ஆங்கில தின நிகழ்வு
17. உலக உளநல நாளும், சிறுவர் தின நிகழ்வும்
18. வாணிவிழா
19. உலக ஆசிரியர் தினம்
20. மகிந்தோதய ஆய்வு கூடத் திறப்புவிழா

2014 ஆம் கல்வியாண்டில் பாடசாலையில் நிகழ்த்தப் பட்ட மாணவர் தேர்ச்சி மேம்பாட்டுச் செயற்றிட்டங்கள்

1. மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான துரித கற்றற் செயற்றிட்டம் (ALP வகுப்பு) மாசி மாதத்திலிருந்து நடத்தப்படுகிறது.
2. மாணவ முதல்வர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.
3. 100% மாணவர்களும் பங்குபற்றும் வகையிலான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு நடத்தப்பட்டது.
4. பாடசாலை, கோட்ட, வலய, மாகாண மட்டங் களில் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி சாதனை பெறுவதற்கான விசேட பயிற்சிகள் நடத்தப்பட்டது.
5. நாட்டிய நாடகப் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.
6. பாடசாலை, கோட்ட, வலய, மாகாண மட்டங் களில் ஆங்கிலதினப் போட்டிகளில் பங்குபற்றி சாதனை பெறுவதற்கான விசேட பயிற்சிகள் நடத்தப்பட்டது.
7. மாணவர்கள் குண்டு போடுதல், தட்டு, ஈட்டி எறிதல் போன்ற மைதான நிகழ்ச்சிகளில் தேர்ச்சி பெறும் வகையில் விசேட பயிற்றுநர் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது.
8. பாடசாலை, கோட்ட, வலய, மாகாண மட்ட கணித, விஞ்ஞான, சமூகவிஞ்ஞான, அனர்த்த முகாமைத் துவ, வணிகப் போட்டிகளில் பங்குபற்றி சாதனை பெறுவதற்கான விசேட பயிற்சிகள் நடத்தப் பட்டது.
9. புவியியல் பாடத்திற்கான படவேலைப் பயிற்சிகள் நடத்தப்பட்டது.
10. க.பொ.த (சாதாரண தர) மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய பிரதான பாடங்களில் வார நாட்களில் காலை, மாலை நேர விசேட பயிற்சி வகுப்புகள், மாதிரி வினாத்தாள்கள், கடந்த கால வினாத் தாள்கள் மூலமான பயற்சிகள் வழங்கப் படுகிறது
11. க.பொ.த (சாதாரண தர) மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தில் தேர்ச்சி பெற புலமை வாய்ந்த விரிவுரையாளர் மூலம் வாரஇறுதி நாட்களில் பயிற்சி வழங்கப்படுகிறது.
12. க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சகல பாடங்களிலும் ஆவணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை காலத்தில் விசேட பயிற்சி வகுப்புகள், மாதிரி வினாத்தாள்கள், கடந்த கால வினாத்தாள்கள் மூலமான பயற்சிகள் நேர அட்டவணைக்கு அமைய வழங்கப்பட்டது.

13. க.பொ.த (சாதாரண தர) மாணவர்களுக்கு மே மாதத்தில் இருந்து வாராந்தம் சகல பாடங்களுக்கும் அலகுப் பரீட்சைகள் நடத்தப்பட்டு விளக்கமளிக்கப்படுகிறது.

14. க.பொ.த (உயர்தரதர) மாணவர்களுக்கு தமிழ், வரலாறு, புவியியல், இந்துநாகரிகம் ஆகிய பிரதான பாடங்களில் வார நாட்களில் காலை, மாலை நேர விசேட பயிற்சி வகுப்புகள், மாதிரி வினாத்தாள்கள், கடந்த கால வினாத்தாள்கள் மூலமான பயற்சிகள் வழங்கப்பட்டது.

15. க.பொ.த (உயர்தரதர) மாணவர்களுக்கு தமிழ், புவியியல் பாடங்களில் வருகை தரும் விரிவுரையாளரகள் மூலமான விசேட பயிற்சிகள் நடத்தப்பட்டது.

16. க.பொ.த (உயர்தரதர) மாணவர்களுக்கு அலகுரீதியான பரீட்சைகள் நடத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டதுடன், மாதிரிப் பரீட்சைகளும் நடத்தப்பட்டு விளக்க மளிக்கப்பட்டது.

17. க.பொ.த (உயர்தரதர) பொதுத் தகவல் தொழினுட்பப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வலய மட்ட விரிவுரையாளரகள் மூலமான விசேட பயிற்சிகள் நடத்தப்பட்டது.

18. தரம் 10 மாணவர்களுக்கு வரலாறு, சுகாதாரம் ஆகிய பாடங்களில் தேர்ச்சி பெறும் வகையில் மேலதிக வகுப்புகள் நடத்தப்பட்டது.

19. தரம் 6,8,9 வகுப்புகளில் உள்ள மெல்லக் கற்கும் மாணவர்கக்கு ஆவணிமாத விடுமுறை காலத்தில் விசேட வலுவூட்டல் வகுப்புகள் நடத்தப்பட்டது.

20. தரம் 9– க.பொ.த (உயர்தரதர) மாணவர்களுக் கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது.

21. க.பொ.த (உயர்தர) 2016 கல்வியாண்டு மாணவர்களுக்கு பாடத் தெரிவு வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

22. க.பொ.த (உயர்தர) செய்முறைப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களிற்கு விசேட பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டது.

23. தரம் 6–9 மற்றும் க.பொ.த (உயர்தர) 2016 கல்வியாண்டு மாணவர்கள் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையச் செயற்பாடுகளைப் பார்வை யிட்டு அனுபவம் பெற இடமளிக்கப்பட்டனர்

24. பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக மன்னார் திருக்கேதீஸ்வரம், மடு தேவாலயம், சென் சேவியர் ம.வி. கேரதீவு, சங்குப்பிட்டி ஆகிய இடங்களிற்கு களப்பயணம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

25. தரம் 6, 7 மாணவர்களின் ஒழுக்கவிழுமியங் களை மேம்படுத்தும் வகையில் சத்திய சேவா மனித மேம்பாட்டுக் கல்வி நிறுவனத்தினரை வளவாளர்களாகக் கொண்டு மனித மேம் பாட்டுக் கல்வி நிகழ்ச்சித் தொடர் சனிக்கிழமை களில் யூலை மாத இறுதியில் இருந்து நடத்தப் படுகிறது.

26. மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் வகையில் இந்து மாமன்றத் தினரால் காலை நற்சிந்தனை, தினம் ஒரு குறழமுதம், செய்தித்தாள் கண்ணோட்டம் ஆகியன நடத்தப்படுகிறது.

27. ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் வகையில் வாராந்தம் வியாழக்கிழமைகளில் கனிஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கான மாணவர் மன்ற நிகழ்வுகளும், வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் சிரேஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கான மாணவர் மன்ற நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

28. பொதுத் தகைமைத் திறனை விருத்தி செய்யும் வகையில் தினமும் இடைவேளையில் சகல மாணவர்களும் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிக்கும் வகையிலான நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. வாழ்க்கைத் தேர்ச்சிக்கான ஆங்கில விருத்திக்காக English as a Life skill வாராந்தம் வியாழக்கிழமைகளில் ஆங்கில மொழிமூல செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

30. பெண்சாரணரின் ஆளுமையை விருத்தி செய்யும் வகையிலான பயிற்சி வகுப்புகள் பொறுப்பாசிரியர்களால் நடத்தப்படுகிறது.

31. சுற்றாடல் முன்னோடிக்குழுவினரின் தகைமையை விருத்தி செய்யும் வகையிலான பயிற்சிகள் பொறுப்பாசிரியர்களால் வழங்கப்படுகிறது.

32. மாணவமுதல்வர்கள் 10 பேர் தலைமைத்துவப் பயிற்சி பெற மாத்தறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

33. உதைபந்தாட்ட அணியினருக்கான பயிற்சிகள் செப்ரெம்பர் மாதத்திலிருந்து தினமும் காலை, மாலை நேரங்களில் வார நாட்களில் உடற்கல்வி ஆசிரியரால் வழங்கப்படுகிறது.

2014 ஆம் கல்வியாண்டில் பாடசாலையில் வலுவூட்டப்படும் மாணவர் ஆளுமை விருத்திக் குழுக்கள்

1. ஆண்கள், பெண்கள பாண்ட் வாத்தியஅணி
2. இன்னிய அணி
3. சுற்றாடல் முன்னோடிக்குழு
4. ஆண்கள், பெண்கள் சாரணர் குழுக்கள்
5. நாட்டிய நாடக குழு
6. கவின்கலை, இந்து, கணித, விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், சமூக விஞ:ஞான மன்றம், சுகாதார மன்றம்
7. அனர்த்த முகாமைத்துவக் குழு
8. வன்பொருள் அணி
9. பாடசாலைக் கூட்டுறவு
10. இசைக்குழு
11. நடனக் குழு

- பிள்ளை நேயப் பாடசாலைச் செயற்றிட்டமானது கற்றலுக்குரிய மகிழ்ச்சிகரமான, ஆரோக்கியமான, பாதுகாப்பான பாடசாலைச் சூழல், பிள்ளைகளின் உரிமைகள் பேணல், பால்நிலை சமத்துவம் பேணல், தரமான கல்வி வழங்கல், பாடசாலைச் சமூக உறவு போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது.
- 5S அணுகுமுறையானது பணியிடத்தை சிறப்பாக்குவதையும் பௌதிகவளம், மானிட வளம், நேரம் என்பவற்றை உச்சளவில் வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் பயன்படுத்துவதையும் அடிப்படை நோக்காகக் கொண்டது.

அவ்வகையில் 2014 இல் மேற்கொள்ளப்பட்ட பாடசாலை பௌதிக வள அபிவிருத்திப் பணிகள் பின்வருமாறு,

1. இலத்திரனியல் நூலகம், அதிபர் அலுவலகத்திற்கு இணையத்தள இணைப்பு வழங்கப்பட்டது.
2. இலத்திரனியல் நூலகத்திற்கு 4 கணனிகள் வழங்கப்பட்டது.
3. பாடசாலைத் தரவுத் தளங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பனர்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டது.
4. பாடசாலையின் வடக்கு வளாகத்தில் பூந்தோட்டத்திற்கான அலங்கார வளைவு கட்டப்பட்டது
5. அழகியல் அறைகள் வர்ணம் தீட்டி அழகுபடுத்தப்பட்டது.
6. 145 தளபாடங்கள் திருத்தம் செய்யப்பட்டது.
7. சயம்பு மண்டபம் திருத்தம் செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டது.
8. விஞ்ஞான ஆய்வுகூட கூரையின் பீலி 60' நீளம் திருத்தம் செய்யப்பட்டது.
9. உள்ளக விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.
10. மைதான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது
11. உதைபந்தாட்ட வீரர்களுக்கான காலணி கொள்வனவு செய்யப்பட்டது.
12. பாடசாலையின் வடக்கு வளாக வடக்கு, கிழக்கு புற 270' எல்லை வேலி வயர் மெஸ் ஆல் அடைக்கப்பட்டது.
13. நூலகக் கூரை 140' Balance Board அடிக்கப்பட்டு பீலி பொருத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பாடசாலையின் வடக்கு வளாக கட்டிடத் தொகுதிகளில் உள்ள 26 யன்னல்களிற்கு கண்ணாடி இடப்பட்டது.

15. உடைந்த நிலையில் காணப்பட்ட 4 மர யன்னல்கள் நீக்கப்பட்டு புதிய யன்னல் கதவுகள் இடப்பட்டது.

16. பாடசாலையின் வடக்கு வளாக கட்டிடத் தொகுதிகளில் உள்ள சகல யன்னல்களிற்கும் திறாங்குகள் கொழுக்கிகள் சீர்செய்யப்பட்டதுடன் புதிதாகவும் இடப்பட்டு சகல யன்னல்களும் பூட்டக்கூடிய ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

17. பாடசாலையின் வடக்கு வளாக கட்டிடத் தொகுதிகளின் வெளிப் பார்வைக்குட்பட்ட பகுதிகள் வர்ணம் தீட்டி அழகுபடுத்தப்பட்டது.

18. ஆசிரியர் ஓய்வறை, முகாமைத்துவ மண்டபம் வர்ணம் தீட்டி அழகுபடுத்தப்பட்டது.

19. பாடசாலைப் பூந்தோட்ம் பூங்கன்றுகள் நாட்டி மெருகூட்டப்பட்டது.

20. சரஸ்வதி சிலையின் முற்றம் மாபிள் கற்கள் பதித்து அழகுபடுத்தப்பட்டது.

21. முகாமைத்துவ மண்டபத்தில் கழுவு தொட்டி பொருத்தப்பட்டது.

22. பாடசாலையின் வடக்கு வளாக பிற்புற நுழைவாயில் Gate ற்கு காறை இடப்பட்டு சுவர்கள் சீமெந்து பூச்சிட்டு வர்ணம் தீட்டப்பட்டது.

23. பாடசாலையின் வடக்கு, தெற்கு வளாக ஆண்கள் மலசல கூடக்குழி கழிவகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டதுடன், உடைந்த நிலையில் காணப் பட்ட கொங்கிறீற் தட்டு நீக்கப்பட்டு புதிய தட்டு இடப்பட்டது.

24. பாடசாலையின் வடக்கு வளாக முற்புற உட்பகுதி மதில்களுக்கு சீமெந்து பூச்சிட்டு வர்ணம் தீட்டப்பட்டது.

25. நடராசா மண்டபத்தின் கிழக்குப்புற அறைக்கும் மேடைக்கும் இடையிலான உடைந்த நிலையில் காணப்பட்ட படிகள் திருத்தம் செய்யப்பட்டது.

26. பாடசாலையின் வடக்கு வளாக நுழைவாயில் படிகள் திருத்தம் செய்யப்பட்டது.

27. பாடசாலையின் வடக்கு வளாகத்தின் பிற்புறம் குவிக்கப்பட்டிருந்த கற்கள் உடைந்த தளபாடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.

28. பாடசாலையின் வடக்கு வளாக மழைகால நீர்வடிகால் அமைப்பு சீர் செய்யப்பட்டது

29. வெற்றிகேடயங்கள் காட்சிப்படுத்துவதற்கான கண்ணாடி அலுமாரி செய்யப்பட்டது.

30. மீன் தொட்டிக்கான கூரை அமைக்கப்பட்டு கவின்நிலைப்படுத்தப்பட்டது.

31. பாடசாலைப் பெயர்ப்பலகை மும்மொழிகளிலும் எழுதபப்பட்டது

32. பாடசாலை மைதான விஸ்தரிப்பிற்காக 6 பரப்புக்காணி மேற்குப்புற எல்லையில் அன்பளிப் பாகப் பெறப்பட்டு பாடசாலைக்கான உறுதி ஆவணப்படுத்தல்கள் பூரணப்படுத்தப்பட்டது.

33. புதிதாகப் பெறப்பட்ட 6 பரப்புக் காணி 150 load மண் நிரவி மட்டப்படுத்தப்பட்டது.

34. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 50'*30' இருமாடி கொண்ட மஹிந்தோதய ஆய்வுகூடத் தொகுதி வளப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

35. பல்லூடக அறைக்கான பேச்சு மேடை புதிதாக செய்விக்கப்பட்டது.

ஆசிரியர் தரவட்டச் செயற்பாடுகளானது பாடசாலைக் கல்வித் தர விருத்தி தொடர்பாக எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகள், தடைகள் என்பவற்றை இனங்கண்டு அவற்றை உடனுக்குடன் களைவதன் மூலம் தர விருத்தியை மேம்படுத்துதலை

| நிகழ்ச்சி | பிரிவு | வலயமட்டம் | | |
|---|---|---|---|---|
| | | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
| மெய்வல்லுனர் போட்டி | 2013 | 12 | 14 | 07 |
| | 2014 | | | |
| பெரு விளையாட்டுக்கள் | 2013 | 2 | 3 | 8 |
| | 2014 | 4 | 3 | 5 |
| தமிழ்த்தினப் போட்டி | 2013 | 7 | 4 | 4 |
| | 2014 | 7 | 3 | 2 |
| ஆங்கில்தினப் போட்டி | 2013 | 11 | 2 | 7 |
| | 2014 | | 6 | 3 |
| கணித விநாடிவினாப் போட்டி | 2013 | 1 | 3 | 3 |
| | 2014 | | 2 | 1 |
| சமூக விஞ்ஞான போட்டி | 2013 | 1 | 2 | 1 |
| | 2014 | 5 | 5 | 6 |
| விஞ்ஞான வினாடி வினா போட்டி | 2013 | 1 | 1 | 1 |
| | 2014 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டது. அவ்வகையில் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் பணியிடைப் பயிற்சிகள் பின்வருமாறு,

1. பாடரீதியான தரவட்டங்கள்
2. நவின கற்றல் உபகரணப் பயன்பாடு
3. முகாமைத்துவ நடைமுறைகள்
4. பாடசாலை மேம்பாட்டுத் திட்டம்
5. பாடசாலை மட்டக் கணிப்பீடு
6. வகுப்பறை முகாமைத்துவம்
7. பண்புசார் விருத்தியை நோக்கிய உள்ளக மதிப்பீடு



ஆய்வும் அபிவிருத்தியும் – பாடசாலைகளின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை விருத்தி செய்ய பாடசாலைக் கலைத்திட்ட அமுலாக்கத்தில் ஆய்வுக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தல் வேண்டும். அதாவது கலைத்திட்ட அமுலாக்கம் பரிசீலனைக்கும், மீளாய் விற்கும் உட்படுத்தப்படும் போது மாணவர்களின் தரம் பண்புரீதியாகவும், அளவு ரீதியாகவும் பேணப்படும். அவ்வகையில் பாடசாலையின் அடைவுமட்ட கடந்த 3 வருட கால மதிப்பீட்டு புள்ளி விபரம் பின்வருமாறு,

| | ஆண்டு | க.பொ.த(சா/த) சித்தி % | க.பொ.த(உ/த) சித்தி % |
|---|---|---|---|
| 1 | 2011 | 44 | 59.3 |
| 2 | 2012 | 61.3 | 53.8 |
| 3 | 2013 | 61.4 | 65.8 |

2013 ஆம், 2014 ஆம் கல்வியாண்டின் இணைப் பாடவிதான சாதனைகளின் புள்ளி விபரம் தரப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டப் பண்புசார் முகாமைத்துவத்தில் தரவிருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றால் மட்டும் போதாது, கல்வியின் பண்புசார் விருத்தியை உறுதி செய்யும் வகையில் பொருத்தமான மதிப்பீட்டுச் செயன்முறையில் கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வகையில் 2008 ஆம் ஆண்டில் இருந்து நாடளாவிய ரீதியில் பாடசாலைகளின் மதிப்பீட்டு முறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டதுடன், பண்புத் தரக் குறிகாட்டி (Bench Mark) எனும் அம்சமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இம் மதிப்பீடானது இருமுறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. உள்ளக மதிப்பீடு – அதிபரின் தகைமைத் திறன் மதிப்பீடு, அதிபர் சுய மதிப்பீடு, ஆசிரியரின் தகைமைத்திறன் மதிப்பீடு, ஆசிரியர் சுயமதிப்பீடு, ஆசிரியர் சமாந்தர மதிப்பீடு, மாணவர் மதிப்பீடு, அபிவிருத்திக் கலந்துரையாடல் மூலமான மதிப்பீடு போன்றன உள்ளடகப்பட்டுள்ளன.
2. வெளியக மதிப்பீடு – பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பாக கல்வியதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு முறைமை

வெளியக மதிப்பீட்டுச்சுட்டி கடந்த 3 வருடங்களில் (வலய மட்ட மேற்பார்வை)

| | ஆண்டு | பாடசாலைப் பண்புத் தரச் சுட்டி(குறிகாட்டி) |
|---|---|---|
| 1 | 2012 | 61 |
| 2 | 2013 | 66 |
| 3 | 2014 | 75 |



பண்புத் தரக் குறிகாட்டி/ஒப்பு நோக்கி இலக்குக் குறித்தல் (Bench Mark) – பாடசாலைகளின் செயற் றிறனில் உயர்ந்த தரத்தைப் பேண இது ஒரு கருவியாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது சிறந்து விளங்கும் ஒரு நிறுவனம் அது அம்மேம்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை அடையக் காரணமான செயலாற்றுகை களையும், அம்சங்களையும் அபிவிருத்தியடைய விரும்பும் நிறுவனம் ஆராய்ந்து அதற்கான காரணங் களைக் கண்டறிந்து தனது முன்னேற்றத்திற்குரிய இலக்குகளைத் தீர்மானித்தலிற்கு உதவும்.

அவ்வகையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட வலயமட்ட வெளியக மதிப்பீடுகளின் அடிப்படையில் எமது பாடசாலை, தீவகக் கல்வி வலயத்தில் அதிஉன்னதமான பண்புத்தரச் சுட்டியைப் பெற்றுள் ளது என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் 25 சுட்டிகள் மேலும் அடைவதற்கு எட்டப்பட வேண்டிய எதிர்பார்ப்பு இலக்குகளாக பின்வருவன இனங் காணப்பட்டுள்ளன.

நிறைவேற்றப்பட வேண்டிய பௌதிகவள அபிவிருத் தித் திட்டங்கள்

1. பாடசாலையின் தெற்கு வளாகத்தில் பெண் பிள்ளைகளுக்கான மலசலகூடம் அமைத்தல்.
2. வகுப்பறைகளினுள் புறா நுழையாத வகையி லான ஏற்பாடுகள் மேற்கொள்ளல்.
3. பாடசாலை மைதானத்தை எல்லைப்படுத்தி பாதுகாப்பு மதில்/வேலிகளை அமைத்தல்
4. விளையாட்டு மைதானப் புனரமைப்பும், பார்வை யாளர் அரங்கம் (பவிலியன் அமைத்தலும்
5. உள்ளக விளையாட்டரங்கம் அமைத்தல்
6. பாடசாலைக்கான பெயர் வளைவு அமைத்தல்
7. பாடசாலையின் தெற்கு வளாகக் கவின் நிலையை மெருகூட்டும் வகையில் பூந்தோட்ட வளைவு அமைத்தல்
8. கீழைத்தேச, மேலைத்தேச பாண்ட் இசைக் கருவிகள் கொள்வனவு
9. நூலகத்தின் கூரைகள் திருத்தம் செய்தல்.
10. நூலகத்தின் வாசகர் பகுதி மற்றும் கணனிக் கற்கை நிலையத்தின் மாணவர் பயன்பாட்டுப் பகுதி விஸ்தரிக்கப்படல்
11. இரசாயனவியல் ஆய்வுகூடத்தின் மின்னி ணைப்பை சீர்செய்தல்.
12. வகுப்பறைக் கவின்நிலை இன்றைய கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் நவீனமயப்படுத்தல்.
13. பாடசாலையின் வீதியின் இருபுறமும் உள்ள வடக்கு, தெற்கு வளாகங்களை இணைக்கும் வேலைத்திட்டத்தை மேற்கொள்ளல்.
14. வகுப்பறைகளின் இரும்பு சுருக்கு Gates திருத்தம் செய்தல்.
15. தளபாடத்திருத்தம்
16. தளபாடங்களுக்கு வர்ணம் தீட்டல்
17. தரம் 6 வகுப்பறை திருத்தம் செய்தல்
18. துடுப்பாட்டம், கூடைப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கரப்பந்தாட்டத் திடல் கள் அமைத்தல்
19. தொங்கு நூலகம், மரநிழலின் கீழ் இருக்கைகள் அமைத்தல்
20. கொடிக்கம்ப மேடை அமைத்தல்

செயற்படுத்தப்பட வேண்டிய தேர்ச்சி விருத்திச் செயற்றிட்டங்கள்

1. அயற் பாடசாலைகளுடன் நட்பு ரீதியான போட்டிகள் நடத்துவதன் மூலம் விளை யாட்டுக் குழுக்களை வலுப்படுத்தல்.
2. பாடரீதியான முகாம்கள், பயிற்சிப்பட்டறைகள் நடத்துதல்.
3. மாணவர்களுக்கான வயலின், மிருதங்கம், ஓகன், நடனம், சித்திரம் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
4. ஆங்கில பாடத்தில் அடிப்படை அறிவை விருத்திசெய்வதற்கான விசேட வகுப்புகள் தரம் 6, 9 மாணவர்களுக்கு நடத்துதல்.
5. களப்பயணம் மேற்கொள்ளல்
6. பாடரீதியான கண்காட்சி நடத்துதல்
7. விஞ்ஞான பாடச் செய்முறைப் பயிற்சிப் பட்டறை நடத்துதல்

மேற் குறிப்பிட்ட செயற்றிட்டங்களை பாடசாலை ஆளணியினர் குழுவாக ஒருங்கிணைந்து நிறைவு செய்யும் நிலையில் பாடசாலை கல்வி அபிவிருத்திப் பாதையில் மேலும் முன்னேற்றத்தக் காணும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Over 7 Years Experience Full Time Professional Realtor**

**Multi Awarded – Excellence Service.**

# Find Out What Homes In Your Neighborhood Are Selling For...

## FREE SERVICE FOR EVERYONE.

**You can Receive a FREE computerized printout of recent home sales & current Listings anywhere in GTA mailed to you at NO Cost or Obligation.**

You don't have to talk to anyone. Just call my 24/hr hotline below and leave a message indicating which streets you would like to have information on. You will receive by mail, a computerized printout on each active property for sale or recently sold. Including the address and photo of the home, a description of key features, along with the list price.

This information will give you a good idea of what your home might sell for if you were to put it up for sale in today's market.



**To Receive a Free Computerized Area Home Sales Report Call :**

# 1 – 800 – 884 – 0478



Find Out What Your Home Is Worth On – Line. For a Free, Quick On –Line Home Evaluation Visit

**WWW.VTCRANJSON.COM**

For your investment Visit **WWW.TORONTOCONDOVIP.COM**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc.,**

Brokerage* *Independently Owned and Operated, Realtor

**Off : (905) 201-9977** Fax : (905) 201-9229

205-7 Eastvale Drive.,Markham, Ont, L3S 4N8

**RANJSON KANAPATHIPPILLAI**

Sales Representative

**647-406-6352**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரை வசந்தம் சிறப்புற வாழ்த்துகிறோம்!




உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது!
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்

MARANAM.com
HEAVEN CARES
Advising Families on your Loved One's Final Journey
www.maranam.com, E-mail: info@maranam.com
Working with Chapel Ridge
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1.



Call : Vilosan Sivatharman B.Eng,
Funeral Director
Dir: 416-993-0826
416-431-3600 Ext: 1

Call: Christeen Seevaratnam
Funeral Counsellor
416-431-3600 Ext : 2



Sunnyvale
SUNNYVALE SUPERMARKET
SRI LANKAN - INDIAN -CANADIAN - CARIBBEAN
Fresh Vegetables, Fruits, Fish, Meat and Groceries
DVD movies Rental & Sales






50 Sunnyvale Gate, Unit 5 Brampton (Airport & Bovaird)
905-789-8774




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் பிரதேச செயலக செயற்பாட்டறிக்கை

இலங்கைத் தீவின் வடமாகாணத்தின் யாழ்குடா நாட்டைச் சூழவுள்ள சப்த தீவுகளில் ஒன்றாகவும் முதல் தீவாகவும் விளங்கிய காரைதீவானது தீவுத் தன்மையினை இழந்து ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பொன்னாலை கடலூடாக பாலம் இணைக்கப்பட்டு 1923.09.12 இல் காரைநகர் எனும் பெயரைப்பெற்றது.

காரைநகர் பிரதேச செயலக பிரிவு நாற்புறமும் கடலால் சூழப்பட்டுள்ளது. கிழக்குப்பக்கமாகவுள்ள கடல் கோடைகாலத்தில் வற்றும் பாங்கான பரவைக்கடல், வடக்கு மேற்கு தெற்கு ஆழமான கடற்பரப்பினைக் கொண்டது. தெற்குக்கடல் இயற்கையாகவே கப்பற்றுறைக்கு ஏற்றதாக இருந்ததால் அங்கு கப்பல் துறைமுகம் அமைந்துள்ளது. அத்தோடு வங்காள விரிகுடாவில் பயணிக்கும் கப்பல்களுக்கு உதவும் வகையில் காரைதீவின் வடமேற்கு கரையிலுள்ள கோவளம் பகுதியில் பெரிய வெளிச்சவீடு ஒன்றினை ஆங்கிலேயர் நிர்மாணித்து இராக்காலத்தில் ஒளிரச் செய்தனர். பின்னர் போர்ச்சூழலினால் சிதைவடைந்த போதிலும் தற்பொழுது அது தொல்லியல் முக்கியத் துவம் வாய்ந்த இடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. காரைதீவானது 2295 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்டு ஷப்த தீவுகளில் மூன்றாவது இடத்தில் உள்ளதுடன் ஏறத்தாழ செவ்வக அமைப்புள்ள இப்பிரதேசமானது 7km நீளத்தினையும் 4 1/2km அகலத்தையுமுடையது.

காரைநகரானது ஆரம்பகாலத்தில் தீவுப்பகுதி காரியதிகாரி பிரிவில் இருந்தது. இப்பிரிவில் நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, காரைநகர், வேலணை, புங்குடுதீவு, அனலைதீவு ஆகிய ஏழு தீவுகளும் உள்ளடங்கியிருந்தது. ஆனால் 1973ம் ஆண்டில்

1. தீவுப்பகுதி வடக்கு காரியதிகாரிப்பிரிவு
2. தீவுப்பகுதி தெற்கு காரியதிகாரிப்பிரிவு
3. நெடுந்தீவு காரியதிகாரிப்பிரிவு

என மூன்றாக பிரிக்கப்பட்டு காரைநகர் தீவுப்பகுதி வடக்கு காரியதிகாரிப் பிரிவில் (ஊர்காவற்றுறை உதவி அரசாங்கப்பிரிவு) உள்ளடங்கியிருந்தது. பின்னர் 2003.04.07ம் ஆண்டிலிருந்து தீவுப்பகுதி வடக்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலிருந்து (ஊர்காவற் றுறை) பிரிந்து ஒன்பது கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கி காரைநகர் உதவி அரசாங்க பிரிவு என தனியான ஒரு பிரிவாக தோற்றம் பெற்றது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அலுவலகச் செயற்பாடுகள் ஆரம்பத்தில் (2003.04.07 – 2005.01.06) தனியார் வீடென்றில் இயங்கிவந்தது. பின்னர் காரைநகர் வலந்தலைச் சந்தியில் அமையப்பெற்ற இரண்டாவது இந்து உலக மகாநாட்டு ஞாபகார்த்த மண்டபத்தில் (2005.01.07 – 20130.9.18) எட்டு வருடங்கள் இயங்கி வந்தது.

மக்களின் தேவைகளுக்கு அனுசரனையாக உள்ளூர் மட்டத்தில் அவர்களுக்கு உரிய சேவைகளை வழங்கு வதனை பிரதான நோக்கமாகக் கொண்ட நிர்வாகத்தை பரவலாக்குதல் அடிப்படையில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 2012ம் ஆண்டு முதல் காரைநகர் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்ட போதிலும் ஆளணிப்பற்றாக்குறை, இடநெருக்கடி, போதிய தளபாடங்கள் இல்லாமை போன்ற இடர்பாடுகளின் மத்தியிலும் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றவேளையில் பிரதேச செயலக புதிய கட்டடம் 2013.09.18 ல் திறக்து வைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் தனது செயற்பாடுகளை பின்வரும் கிளைகளூடாக முன்னெடுத்துச் செல்கின்றது.

- நிதிக்கிளை
- நிர்வாகக்கிளை
- திட்டமிடல்கிளை
- சமூகசேவைகள் பிரிவு
- சமுர்த்தி மற்றும் சமுர்த்தி வங்கிக்கிளை
- காணிக்கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– பதிவகக்கிளை
– சிறுவர் மகளிர் அபிவிருத்தி பிரிவு
– அனர்த்த முகாமைத்துவ கிளை
– கிராம அபிவிருத்தி பிரிவு
– கலாசாரப் பிரிவு

### திட்டமிடல் கிளை

எமது செயலக திட்டமிடல் கிளையில் 2012, 2013 ம் ஆண்டுகளில் மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கிற்கேற்ப அறிவை மையமாகக் கொண்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக 5000 ஆரம்பப் பாடசாலையை புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் 09 பாடசாலைகள் புனரமைக்கப் பட்டன.

- இந்திய, இலங்கை நட்புறவு வீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் 30 வீடுகளும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் 70 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.
- 2013ம் ஆண்டு தேசத்தின் நிழல் நிகழ்ச்சித்திட்ட மாவட்ட நிகழ்வானது எமது பிரதேச செயலக பிரிவிலுள்ள சாம்பலோடை பகுதியில் மரநடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினரகளின் நிதியுதவியுடன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டு 31வேலைத் திட்டங்களும், 2013 இல் 08 வேலைத் திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டன.
- "நெனசல" அறிவகம் ஒன்று J/48 கிராம அலுவலகப் பிரிவிற்குட்பட்ட காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தில் திறக்கப்பட்டது.
- 2011ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட இரு கிராம சேவையாளர் பிரிவுகள் மீள் குடியேற்றப் பிரதேசங்களாக அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
- வறுமையற்றதோர் இலங்கை வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு வருடங்களில் வீட்டுத்தோட்டம் ,அமைத்தல், பழமரக் கன்றுகள் வழங்குதல், கோழி வளர்ப்பு கருவாடு பதனிடல், கைத்தொழில் உபகரணங்கள், தையல் இயந்திரங்கள், மீன்பிடி வலைகள், மந்தை வளர்ப்பு போன்ற உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- புனர்வாழ்வு அதிகார சபையால் பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.
- 10 விவசாயப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு விவசாயப் பயிற்சிச் சுற்றுலா மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டது.
- தொழிற்பயிற்சி தொடர்பான விழிப்புனர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.
- கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது

### நிதிக்கிளை

எமது பிரதேச செயலக நிதிக்கிளையின் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவுகள் மாவட்டச் செயலக நிதிக்கிளையின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு 2013ம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து மாவட்டச் செயலகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பிரதேச செயலக கணக்குக் கிளைக்கு தனியான வங்கிக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டு சேவையாற்றி வருகின்றது

- ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 169
- 2013ம் ஆண்டு வாகன வரி அனுமதிப்பத்திரங்கள்
- தனியார் வாகனம் 978
- அரச வாகனம் 15
- கூட்டுறவு வாகனம் 30

### மேலதிக மாவட்ட பதிவாளர் திணைக்களம்

எமது பிரதேச செயலகத்தில் மேலதிக மாவட்ட பதிவாளரது கடமைகள் 2014ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நிரந்தர மேலதிக மாவட்ட பதிவாளர் ஒருவர் நியமிக்கப் படவில்லை. ஆனால் பதில் கடமைக்காக ஒருவர் நியமிக்கப்பட்டு எமது பிரிவிற்குட்பட்ட வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

- 2013ம் ஆண்டில் இரண்டு தடவைகள் நடமாடும் சேவை "கபே" அமைப்பின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டன.
- பிறப்பு, இறப்பு , விவாக சான்றிதழ்கள், காலங் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் திருத்தங்கள், உத்தேச வயது அத்தாட்சிப்பத்திரம் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

### அனர்த்த முகாமைத்துவம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினது செயற்பாடுகள், மாவட்டஅனர்த்த முகாமைத்துவ நிலையத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் போது அனர்த்தத்தின் முன்னரான, அனர்த்தத்தின் போதான, பின்னரான முகாமைத்துவ செயற்பாடுகள் என்ற அடிப்படையில் முன்னெச்சரிக்கை, தேடுதலும், பதிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுத்தலும், நிவாரணம் வழங்கல், உடனடித்தேவைகள் வழங்கல் புனர்வாழ்வு , புனரமைப்பு மற்றும் மருத்துவ நலன்கள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. பிரதேச அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம், பிரதேச அனர்த்த முகரமைத்துவ குழு, கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவ குழு என்பன இயங்கி வருகின்றன.

- கிராம மட்ட அனர்த்த முன்னெச்சரிக்கை நிகழ்வு காரைவடகிழக்கு J/47 கிராம சேவையாளர் பிரிவில் இடம் பெற்றது.
- அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சக்கலாவோடை வாய்க்கால் புனரமைப்பு
- வெள்ளம் காற்று என்பவற்றால் முழுமையான சேதம் 17 பேருக்கு 35,000ரூ வீதமும், அரைச் சேதம் 919 பேருக்கு 6000ரூ வீதமும் இரண்டாம் கட்ட்மாக 58 பேருக்கு 9000ரூ வீதமும் 01 நபருக்கு 3000ரூ வீதமும் வழங்கப்பட்டன.
- எமது பிரதேசம் வருடந்தோறும் வரட்சியை எதிர் நோக்குவதனால் வரட்சிகால குடிநீர் விநியோகம்
- உவர்நீர் தடுப்பு அணை (வேணன் பன்ட்) புனரமைப்பு

### சமுர்த்தி வங்கி

எமது பிரதேச சமுர்த்தி வங்கி சங்கமானது 09.05.2003 ல் ஆரம்பிக்கப்பட்டு தற்காலிகமாக தனியார் வீட்டிலும், காரைநகர் கமநல சேவைகள் நிலையத்திலும் இயங்கி வந்தது. பின்னர் எமது பிரதேச செயலகம் அமைந்துள்ள காணியில் 5.5 மில்லியன் நிதி உதவியு டன் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் 2013 முதல் தனது சேவையை வழங்கி வருகின்றது.

மிகவும் குறைந்த மக்கள் தொகையை கொண்ட இவ்வங்கி யாழ்மாவட்ட வங்கிகளுடன் போட்டியிட்டு இலாபத்தன்மையுடன் வறிய மக்களுக்கு சேவையினை வழங்குகின்றது. வறிய மக்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக “சிப்தொற” திட்டத்தின் மூலம் வருடந்தோறும் 20 மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கி வருவதுடன் வறிய மக்களின் சமூக நலன் நோக்கில் குழந்தை பிறப்பு, மரணம், திருமணம், மருத்துவம் போன்ற நிகழ்வுகளுக்கு சமூக பாதுகாப்பு நிதி ஊடாக உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் இற்றைவரை சுமார் 75 மில்லியன் ரூபா இலகு கடன் வழங்கப்பட்டு மீளப் பெறப்பட்டு வருகின்றது. இவற்றினை விட 1881 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

### கிராம அபிவிருத்தி

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 16 கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 10 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் செயற்படுகின்றன. இவற்றின் மூலம் கிராம மட்டத்தில் அரசினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் கிராம மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான சுயதொழில் சுழற்சி கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் பிரதேச செயலகம் ஊடாக நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினூடாக வருடந்தோறும் 6மாதகால ஆடைவடிவமைத்தல் பயிற்சி நெறியும் 03 மாதகால அழகுக்கலை பயிற்சி நெறியும் வழங்கப்பட்டு பயிற்சியாளர்களின் செயற்பாட்டை வெளிப்படுத்தும் கண்காட்சியும் நடாத்தப்பட்டு வருகின்றது.

### கலாசாரம்

எமது பிரதேச செயலக ரீதியில் 06 கலைமன்றங்கள், இயங்கி வருவதுடன் இம்மன்றங்களில் நடனம், சங்கீதம், வாத்தியக் கருவிகள், நாடகமும் அரங்கியலும், யோகாசனம் தொடர்பான பயிற்சி நெறிகள் வழங்கப்படுதுடன் அரச நாடக நடனவிழா போட்டிகள், ஓவியப் போட்டி, ஆக்கத்திறன் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. கலாசார விழாவில் கலை நிகழ்வுகள், கலைஞர்கள் கௌரவித்தல் விருது வழங்கல் என்பனவும் இடம்பெற்று வருகின்றன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணயுடன் அருங்கலைப் பொருட்கள் பெட்டகமும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் கலைகலாசார அமைச்சின் நிதியுதவியுடன் கலாசார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டடுள்ளது.

இங்கு 64 இந்து ஆலயங்களும் 05 கிறிஸ்தவ ஆலயங் களும் அமைந்துள்ளன. அறநெறிப்பாடசாலைகள் 04 இயங்கி வருகின்றன. ஆலயங்களிலும் அறநெறிப் பாடசாலைகளிலும் மக்களின் ஆன்மீக வாழ்வினை மேம்படுத்த குருபூஜை, சொற்பொழிவுகளும் நடாத்தப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமூக சேவைகள் பிரிவு

எமது பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் பின்வரும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் வருடந்தோறும் முதியோர் மாற்று வலுவுள்ளோர் தினம் சிறப்பாக நடாத்தப்படுவதுடன் முதியோர் பகல் பராமரிப்பு நிலையமும் இயங்கி வருகிறது.

- 70 வயதிற்கு மேற்பட்ட 392 முதியவர்களுக்கு ரூபா 1000/= கொடுப்பனவு
- பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் 516 பேர்
- காசநோய் கொடுப்பனவு 01
- புற்று நோய் கொடுப்பனவு 20 பேர்
- சிறு நீரக பாதிப்புக் கொடுபப்னவு 07 பேர்
- அங்கவீனமுற்றவர்களுக்கான வீட்டுத் திட்டம் 250,000/= 03 பேர்
- தற்செயல் நிவாரணம் 02 பேர்
- சுயதொழில் கடன் 05 பேர்
- மூக்குக் கண்ணாடி வழங்கல் 04 பேர்
- சக்கர நாற்காலி வழங்கல் 01
- அங்கவீனர்களுக்கான மாதாந்தம் 3000/- கொடுப்பனவு – 50 பேர்

### சிறுவர், பெண்கள், உளவளத்துணை மற்றும் மனிதவலு மேம்பாடு

14 முன்பள்ளிகள் இயங்கி வருவதுடன் முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதுடன் விளையாட்டு முற்றமும் அமைக்கப்பட்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளும் பெற்றோர்களுக்கான விழிப் புணர்வுகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. பாடசா லையை விட்டு இடை விலகிய மாணவர்கள் மீளவும் பாடசாலையில் இணைக்கப்படுகின்றனர். துஷ் பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் சிறுவர்களை நன்னடத்தைபிரிவினால் ஆற்றுப்படுத்தல் மேற் கொள்ளப்படுவதுடன் எதிர்கால வழிகாட்டலும் வழங்கப்பட்டு வருகின்றன.

2013ம் ஆண்டில் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் நிதி அனுசரணையுடன் கிராம சேவையாளர் பிரிவுகளில் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வூட்டப்பட்டது.


மேலும் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக மகளிர் விவகார குழுக்கள் அமைக்கப்பட்டு பிரதேச ரீதியில் மகாசங்கத்தை அமைத்தல். பெண்களை தலைமைத் துவமாகக் கொண்ட 10 குடும்பங்களுக்கு சுயதொழிலுக் காக ரூபா 20,000/= வட்டியில்லா கடன் வழங்கல். மேலும் மீன்படித் தொழிலை மேற்கொள்ளும் பெண்களின் வருமானத்தை மேம்படுத்த தொழிற் பயிற்சியும் கடன் திட்டங்களும் மேற்கொள்ளப் படுகின்றன.

DRC நிறுவனத்தால் 02 குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களும் வறுமைக்குட்பட்ட சிறுவர்களின் கல்விக்காக கற்றல் உபகரணங்கள் 50 மாணவர் களுக்கும் துவிச்சக்கர வண்டி 06 மாணவர்களுக்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியுள்ளது. வருடந் தோறும் சிறுவர், மகளிர் தினங்களும் கொண்டாடப் படுகின்றன.

வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி அதிகார சபையூடாக தொழில் வழிகாட்டல் சேவை வழங்கல். குடும்ப வன்முறை, பெற்றோர்களால் கைவிடப்பட்ட சிறுவர்கள் , கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் உளவளத்துறையால் ஆற்றுப்படுத் தலும் மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ROGERS MOTORS

***Service & Repairs***



**Rajah**

**Class Lic. Automotive Master Technician**

45 Munham Gate, Unit # 7
Scarborough, ON. M1P 2B3

Tel: 416-755-1846
Fax: 416-755-9476

## Dr. Sabesan Thangathurai
**Dentist**



**Tel:416-666-7770**

**Cell:647-761-6644**

Email: stsabesan@yahoo.com

f : Dr Sabesan Dentist

1585 Markham Road, Unit 105,
Scarborough, ON. M1B 2W1.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் கிழக்கு J/42

காரைநகர் கிழக்கு கிராமசேவையாளர் பிரிவானது 3 சதுரகிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதுடன் இடைப்பிட்டி, மொந்திபுலம், வென்னனடைப்பு, தச்சன் பனையடி, பெரியமதவடி, பிட்டியெல்லை, கொட்டைப் புலம், பிள்ளையார் கோவிலடி, கரப்பிட்டியந்தனை, பொன்னாவளை, சத்திரந்தை, திக்கரை, தன்னை, கிளுவனை, குமுழங்குழியடி, காளிகோவிலடி போன்ற கிராமங்களை உள்ளடக்கியது.

| | |
|---|---|
| மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை | – 490 |
| மொத்த சனத்தொகை | – 1497 |
| ஆண்கள் | – 798 |
| பெண்கள் | – 699 |
| பாடசாலை செல்லும் மாணவர்கள் | – 635 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 25 |
| விதவைகள் | – 74 |
| கடற்தொழிலாளர் குடும்பங்கள் | – 150 |
| ஏனைய குடும்பங்கள் மேசன்,தச்சு,கூலி | – 103 |
| அரச ஊழியர்கள் | – 33 |
| சொந்த வீட்டு வசதி இல்லாத குடும்பங்கள் | – 175 |
| சீவல் தொழில் செய்வோர் | – 7 |
| ஊனமுற்றோர் | – 26 |

**பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள்:**

1. காளிகோவிலடி சன சமூகநிலையம்

**பொது அமைப்புக்கள்:**

1. திக்கரை கிராம அபிவிருத்திச் சங்கம்
2. பிட்டியெல்லை கிராம அபிவிருத்திச் சங்கம்
3. திக்கரை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
4. பிட்டியெல்லை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
5. காரை கிழக்கு விவசாய சம்மேளனம்
6. களபூமி கலையகம்
7. களபூமி ஆரணியகம்

**கோவில்கள்:**

– மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலயம்
– தெருவடிப் பிள்ளையார் கோவில்
– தன்னைப் பிள்ளையார் கோவில்
– திக்கரை முருகமூர்த்தி கோவில்

**முன்பள்ளிகள்:**

– திக்கரை முன்பள்ளி
– பேரம்பலம் முன்பள்ளி
– அன்புச்சோலை முன்பள்ளி
– காரை கிட்ஸ்பார்க்

**விளையாட்டுக் கழகங்கள்:**

– இளந்தென்றல் விளையாட்டுக் கழகம்

**பாடசாலைகள்:**

– சுப்பிரமணிய வித்தியாசாலை
– சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை

**மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள்:**

பிரிவில் உள்ள கேணிகள் குளங்கள் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு மழைநீர் தேக்கி வைப்பதன் மூலம் நீர் வளத்தைப் பாதுகாக்க முடியும்

**புனரமைக்கவேண்டிய குளங்கள்:**

1. கலட்டிக்குளம்

**கேணிகள்:**

– உதிராப்பிட்டி கேணி
– கிளுவனைக் கேணி

பிரிவில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான அனைத்து வீதிகளும் திருத்தப்பட வேண்டும்.

மலசலகூட வசதி இல்லாதவர்களுக்கான மலசலகூடங் கள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

1. மாணவர்களுக்கான கல்வி உதவி
2. விதவைப் பெண்களுக்கான சுயதொழில் நிதி உதவி
3. ஊனமுற்றோருக்கான உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் தெற்கு J/44

காரைநகர் தெற்கு கிராமசேவையாளர் பிரிவானது ஊரி, களபூமி, தோப்புக்காடு, கொட்டைப்புலம், துறைமுகம், சாந்திபுரம், மடத்துவளவு, வழுப்போடை, பாலாவோடை, அம்புலா ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 2.2 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதுடன் வடக்கு J/42, J/43 கிராமசேவை யாளர் பிரிவுகளும் தெற்கு, கிழக்கு கடலும் மேற்கு 43, 45 கிராமசேவையாளர் பிரிவுகளை எல்லைகளாகக் கொண்டது.

| | |
|---|---|
| மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை | – 495 |
| மொத்த சனத்தொகை | – 1555 |
| ஆண்கள் | – 705 |
| பெண்கள் | – 850 |
| பாடசாலை செல்லும் மாணவர்கள் | – 242 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 03 |
| விதவைகள் | – 71 |
| ஊனமுற்றோர் | – 00 |

பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள்: –

**பொது அமைப்புக்கள்:**

1. தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம்
2. தோப்புக்காடு கடற்தொழிலாளர் சங்கம்
3. ஊரி கிராம அபிவிருத்திச் சங்கம்

**கோவில்கள்:**

1. தோப்புக்காடு கந்தசுவாமி கோவில்

**முன்பள்ளிகள்:**

1. அன்புச்சோலை முன்பள்ளி
2. தோப்புக்காடு முன்பள்ளி

**விளையாட்டுக் கழகங்கள்:**

– நல்ல நண்பர்கள் விளையாட்டுக் கழகம்

**பாடசாலைகள்:**

– தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலையம் வித்தியாசாலை
– ஊரி அ.மி.த.க பாடசாலை

**மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள்:**

– பிரிவில் உள்ள கேணிகள் குளங்கள் ஆழமாக்கப் பட்டு புனரமைக்கப்பட்டு மழைநீர் தேக்கி வைப் பதன் மூலம் நீர் வளத்தைப் பாதுகாக்க முடியும்

**புனரமைக்கவேண்டிய குளங்கள்:**

– தோப்புக்காடு குளம்

பிரிவில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான பெரும்பாலான வீதிகளும் திருத்தப்பட வேண்டும்.
– மாணவர்களுக்கான கல்வி உதவி
– விதவைப் பெண்களுக்கான சுயதொழில் நிதி உதவி
– ஊனமுற்றோருக்கான உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் தென்மேற்கு J/45

காரைநகர் தென்மேற்கு கிராமசேவையாளர் பிரிவானது 4 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக்கொண்டதுடன் வாரிவளவு, கேசடை, கல்லந்தாழ்வு, ராசாவின் தோட்டம், முருகமூர்த்திகோவிலடி, வேரக்குளத்தடி, வேரப்பிட்டி, பலகாடு. வியாவில், நீலங்காடு, கருங்காலி போன்ற கிராமங்களை உள்ளடக்கியது.

| | |
|---|---|
| மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை | – 461 |
| மொத்த சனத்தொகை | – 1453 |
| ஆண்கள் | – 697 |
| பெண்கள் | – 756 |
| பாடசாலை செல்லும் மாணவர்கள் | – 232 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 4 |
| விதவைகள் | – 126 |
| கடற்தொழிலாளர் குடும்பங்கள் | – 217 |
| ஏனைய குடும்பங்கள் மேசன், தச்சு, கூலி, விவசாயம், வியாபாரம் | |
| அரச ஊழியர்கள் | – 8 |

**பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள்:**

1. வியாவில் சன சமூகநிலையம்
2. கல்லந்தாழ்வு சன சமூகநிலையம்

**பொது அமைப்புக்கள்:**

1. வியாவில் கிராம அபிவிருத்திச் சங்கம்
2. காரை தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
3. நீலங்காடு கிராம அபிவிருத்திச் சங்கம்
4. கல்லந்தாழ்வு கிராம அபிவிருத்திச் சங்கம்
5. வியாவில் கடற்தொழிலாளர் சங்கம்
6. நீலங்காடு கடற்தொழிலாளர் சங்கம்
7. கல்லந்தாழ்வு கடற்தொழிலாளர் சங்கம்.
8. காரைதென்மேற்கு விவசாய சம்மேளனம்

**கோவில்கள்:**

1. வியாவில் ஐயனார் கோவில்
2. கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி கோவில்
3. பலகாடு ராஜராஜேஸ்வரி அம்மன்கோவில்
4. கல்லந்தாழ்வு ஸ்ரீ முருகன் கோவில்

**முன்பள்ளிகள்:**

1. வியாவில் முன்பள்ளி
2. கல்லந்தாழ்வு முன்பள்ளி

**விளையாட்டுக் கழகங்கள்:**

1. துள்ளுமீன் விளையாட்டுக் கழகம்

**பாடசாலைகள்:**

1. வியாவில் சைவ வித்தியாசாலை
2. வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலயம்

**குளங்கள்:**

- சலவைக்குளம்
- வேரக்குளம் குளம்
- நெடுங்குளம்

**கேணிகள்:**

- கொட்டுக் கேணி
- கல்லந்தாழ்வுக் கேணி
- பெரியதம்பிரான் கோயில் கேணி

**மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள்:**

- பிரிவில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான அனைத்து வீதிகளும் திருத்தப்பட வேண்டும்.
- மாணவர்களுக்கான கல்வி உதவி விதவைப் பெண்களுக்கான சுயதொழில் நிதி உதவி
- ஊனமுற்றோருக்கான உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் வடகிழக்கு J/47

காரைநகர் வடகிழக்கு கிராமசேவையாளர் பிரிவானது நீலிப்பந்தனை, புதுவீதி, மல்லிகை, நெடுங்காடு, சடையாளி, மாப்பாணவூரி, பெரியமணல், சிவன் கோவிலடி, கசூரினா பீச்சடி, வலந்தலை, பழையகண்டி, சம்பந்தர்கண்டி, நடுத்தெரு, கணக்கனார் கண்டி, பண்டித்தாழ்வு, சயம்புறோட், இலகடி, மருதடி ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 2 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதுடன் வடக்கு கசூரினா பீச், தெற்கு வலந்தலை,கிழக்கு பரவைக்கடல், மேற்கு புதுவீதியும் இப்பிரிவுக்கு எல்லைகளாக அமைந்துள் ளன.

| | |
|---|---|
| மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை | – 615 |
| மொத்த சனத்தொகை | – 1852 |
| ஆண்கள் | – 845 |
| பெண்கள் | – 987 |
| பாடசாலை செல்லும் மாணவர்கள் | – 409 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 03 |
| விதவைகள் | – 88 |
| ஊனமுற்றோர் | – 35 |

கடற்தொழிலாளர் குடும்பங்கள் –
ஏனைய குடும்பங்கள் மேசன், தச்சு, கூலி
அரச ஊழியர்கள்

**பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள்:**

1. மருதடி பிள்ளையார் சனசமூகநிலையம்
2. பெரியமணல் சனசமூக நிலையம்

**பொது அமைப்புக்கள்:**

1. பெரியமயல் கிராம அபிவிருத்திச் சங்கம்
2. மருதடி இந்து இளைஞர் மன்றம்
3. சிவகௌரி கடற்தொழிலாளர் சங்கம்

**கோவில்கள்:**

1. ஈழத்துச் சிதம்பரம்
2. நீலிப்பந்தனை அம்மன் கோவில்
3. சடையாளி வைரவர் கோவில்
4. அத்திபுரம் கந்தசுவாமி கோவில்
5. சேவகர் கோவில்

**முன்பள்ளிகள்:**

1. அம்பாள் முன்பள்ளி
2. சிவகௌரி முன்பள்ளி

**விளையாட்டுக் கழகங்கள்:**

1. கலாநிதி விளையாட்டுக் கழகம்
2. சிவகௌரி விளையாட்டுக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் மத்தி J/48

காரைநகர் மத்தி கிராமசேவையாளர் பிரிவானது 1.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதுடன் அல்லின் வீதி, விக்காவில், வெடியரசன்வீதி, பொன்னம்பலம்வீதி, சிவகாமி அம்மன்கோவில் வீதி, ஆயிலி, ஆலடி போன்ற கிராமங்களை உள்ளடக்கியது.

| | |
|---|---|
| மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை | – 452 |
| மொத்த சனத்தொகை | – 1432 |
| ஆண்கள் | – 690 |
| பெண்கள் | – 742 |
| பாடசாலை செல்லும் மாணவர்கள் | – 323 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 04 |
| விதவைகள் | – 89 |
| கடற்தொழிலாளர் குடும்பங்கள் | – 120 |
| ஏனைய குடும்பங்கள் மேசன், தச்சு, கூலி | |
| அரச ஊழியர்கள் | – 32 |
| வன்னியிலிருந்து வந்து | |
| மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் | – 31 |
| சொந்த வீட்டு வசதி இல்லாத குடும்பங்கள் | – 120 |

**பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள்:**

1. ஸ்ரீசிதம்பரேஸ்வரா சன சமூகநிலையம்
2. கங்கைமதி சனசமூகநிலையம்
3. சர்வசக்தி சனசமூகநிலையம்

**பொது அமைப்புக்கள்:**

1. விக்காவில் கிராம அபிவிருத்திச் சங்கம்
2. காரை மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
3. காரை மத்தி மேம்பாட்டுக் கழகம்
4. அம்பாள் கடற்தொழிலாளர் சங்கம்

**கோவில்கள்:**

1. சிவகாமிஅம்பிகா சமேத ஸ்ரீசிதம்பரேஸ்வரர் ஆலயம்
2. பொன்னம்பலம் வீதி வீரபத்திரர் ஆலயம்
3. முல்லைப்பிளவு முனியப்பர் கோவில்
4. பிரதான வீதி– கதிர் வேலாயுத சுவாமி கோவில்
5. காமாட்சி வைரவர் கோவில் – அல்லின் வீதி

**முன்பள்ளிகள்:**

1. ஸ்ரீசிதம்பரேஸ்வரா முன்பள்ளி
2. கங்கைமதி முன்பள்ளி

**விளையாட்டுக் கழகங்கள்:**

1. ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகம்

**பாடசாலைகள்:**

1. ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை

**மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள்:**

1. பிரிவில் உள்ள கேணிகள் குளங்கள் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு மழைநீர் தேக்கி வைப்பதன் மூலம் நீர் வளத்தைப் பாதுகாக்க முடியும்

**புனரமைக்கவேண்டிய குளங்கள்**

1. சலவைக்குளம் (சலவைத் தொழிலாளர்களின் தொழிலிற்கான பிரதான குளமாக உள்ளது.)
2. விக்காவில் குளம்

**கேணிகள்:**

1. ஆலடிக் கேணி
2. காமாட்சி வைரவர் கேணி

3. பிரிவில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான அனைத்து வீதிகளும் திருத்தப்பட வேண்டும்.

4. நீண்ட காலத்திற்குப் பின் மீண்டும் இவ்வாண்டு மீளத்திறக்கப்பட்ட ஆயிலி சிவஞானோதயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயத்திற்கு கட்டட வசதிகள், உட்கட்டமானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. காரை மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் 2003ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது அங்கு ஐம்பதிற்கு மேற்பட்ட முதியவர்கள் பகல் நேர உணவினை தாமே சமைத்து உண்டு வருகின்றனர். நிலையம் கட்டட வசதிகளின்றி காரைமத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் இயங்கிவருகின்றது.இங்கு அடிப்படை வசதிகள் போதியளவு காணப்படவில்லை கட்டடத்திற்கான நிலம் போடப்பட வேண்டும் மலசல கூடம்,கிணறு வசதிகள் செய்யப்பட வேண்டும் போதியளவு சமையல் பாத்திரங்கள் வழங்குவதுடன் முதியவர்களின் பொழுது போக்கிற்காக தொலைக்காட்சி,வானொலி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

6. முன்பள்ளிகளில் மலசலகூட வசதிகள் போதியளவுஇன்மையால் மாணவர்களும், ஆசிரியர்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ஆவர்களுக்கான மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

7. பின்தங்கிய முன்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் போஷாக்கு மட்டத்தை உயர்த்துவதற்காக போஷாக்கான உணவு வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் மேற்கு J/40

காரைநகர் மேற்கு கிராமசேவையாளர் பிரிவானது 3.4 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக்கொண்டதுடன் குமுளங்குழி, வாரிவளவு, ஆலடி, சின்னாலடி, மணற்காடு, பயிரிக்கூடல், பத்தர்கேணி, மருதபுரம், கல்வந்தாழ்வு, சக்கலாவோடை, புளியங்குளத்தடி, கள்ளித்தெரு, சல்லை, நாகம்மாகோவிலடி, தங்கோடை, மானிடல், செம்பாடு, ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. இப்பிரிவில் 418 குடும்பங்களைச் சேர்ந்த 1268 பேர் வசித்து வருகின்றனர். இனி பிரிவு விபரத்தினை பார்ப்போம்

| | |
|---|---|
| மொத்தச் சனத்தொகை | – 1268 |
| ஆண்கள் | – 628 |
| பெண்கள் | – 660 |
| சொந்த வீடு உள்ளோர் | – 290 |
| சொந்த வீடு அற்றோர் | – 98 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 30 |
| அரச உத்தியோகத்தர் | – 40 |
| விவசாயிகள் | – 64 |
| கடற்தொழிளாளர்கள் | – 158 |
| சீவல் தொழிலாளர்கள் | – 45 |
| வர்த்தகர்கள் | – 20 |
| பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் | – 40 |
| விதவைகள் | – 52 |
| ஊனமுற்றோர் | – 15 |
| பாடசாலை செல்லும் பிள்ளைகள் | – 315 |
| மலசல கூட வசதியற்றோர் | – 66 |
| மின்சார வசதியற்றோர் | – 45 |

**பொது அமைப்புக்கள்:**
தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்கம்
மருதபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்
மருதபுரம் கடற்தொழிலாளர் சங்கம்

**பாடசாலைகள்:**
யா/யாழ்ற்ரன் கல்லூரி

**முன்பள்ளிகள்:**
தங்கோடை முன்பள்ளி
மருதபுரம் முன்பள்ளி

**கோவில்கள்:**
மணற்காடு முத்துமாரி அம்மன் கோவில்
பத்தர் கேணிப் பிள்ளையார் கோவில்
வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம்
புளியங்குளம் பிள்ளையார் கோவில்
மாதாங் கோவில்

**விளையாட்டுக் கழகங்கள்:**
மருதபுரம் விளையாட்டுக் கழகம்
மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள்:
பிரிவு கேணிகள் குளங்கள் புனரமைப்பு,
பிரிவு சிறு வீதிகள் திருத்தம்
முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு வழங்கல்
விதவைப் பெண்களுக்கான சுயதொழில் நிதி உதவி
முன்பள்ளிகளுக்கு போதிய மலசல கூடவசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் வடமேற்கு J/41

காரைநகர் வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவானது 1.94 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக்கொண்டதுடன் ஊரிக்காடு, வேதரடைப்பு, தங்கோடை, கோவளம், நட்டுப்பாளி, மணற்பிட்டி, ஆயிலி, ஆலடி, வேம்படி, நாகம்மாள்கோவிலடி, சாம்பலோடை, முல்லைப்பிளவு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. இப்பிரிவில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 336 பேர் வசித்து வருகின்றனர். இனி பிரிவு விபரத்தினை பார்ப்போம்

| | |
|---|---|
| மொத்தச் சனத்தொகை | – 336 |
| ஆண்கள் | – 150 |
| பெண்கள் | – 186 |
| சொந்த வீடு உள்ளோர் | – 50 |
| சொந்த வீடு அற்றோர் | – 47 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 11 |
| அரச உத்தியோகத்தர் | – 07 |
| விவசாயிகள் | – 34 |
| கடற்தொழிலாளர்கள் | – 18 |
| வர்த்தகர்கள் | – 06 |
| பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் | – 20 |
| விதவைகள் | – 37 |
| ஊனமுற்றோர் | – 10 |
| பாடசாலை செல்லும் பிள்ளைகள் | – 84 |
| மலசல கூட வசதியற்றோர் | – 44 |
| மின்சார வசதியற்றோர் | – 22 |

**பொது அமைப்புக்கள்:**

கோவளம் கிராம அபிவிருத்திச் சங்கம்

**பாடசாலைகள்:**

யா/ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை

**கோவில்கள்:**


புகலி சிவசுப்பிரமணியர் கோவில்

**விளையாட்டுக் கழகங்கள்:**

கோவளம் விளையாட்டுக் கழகம்

**மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள்:**

பிரிவு கேணிகள் குளங்கள் புனரமைப்பு,
பிரிவு சிறு வீதிகள் திருத்தம்
விதவைப் பெண்களுக்கான சுயதொழில் நிதி உதவி
வெளிச்ச வீடு புனரமைப்பு
உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் தென்கிழக்கு J/43

காரைநகர் தென்கிழக்கு கிராமசேவையாளர் பிரிவானது 1.5 சதுர கிலோ மீற்றர்பரப்பளவைக் கொண்டதுடன் திக்கரை, விளானை, வளப்போடை, நந்தாவில், பாலாவோடை, அழகாபுரி, கருவியாத்தனை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. இப்பிரிவில் 164 குடும்பங்களைச் சேர்ந்த 458 பேர் வசித்து வருகின்றனர். இனி பிரிவு விபரத்தினை பார்ப்போம்

| | |
|---|---|
| மொத்தச் சனத்தொகை | – 458 |
| ஆண்கள் | – 213 |
| பெண்கள் | – 245 |
| சொந்த வீடு உள்ளோர் | – 108 |
| சொந்த வீடு அற்றோர் | – 23 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 12 |
| அரச உத்தியோகத்தர் | – 05 |
| விவசாயிகள் | – 79 |
| கடற்தொழிலாளர்கள் | – 04 |
| வர்த்தகர்கள் | – 07 |
| பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் | – 08 |
| விதவைகள் | – 55 |
| ஊனமுற்றோர் | – 16 |
| பாடசாலை செல்லும் பிள்ளைகள் | – 116 |
| மலசல கூட வசதியற்றோர் | – 05 |
| மின்சார வசதியற்றோர் | – 14 |

**பொது அமைப்புக்கள்**

காரை கிழக்கு விவசாய சம்மேளனம்

**பாடசாலைகள்**

யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை

**கோவில்கள்**

பாலாவோடை முத்துமாரி அம்மன் கோவில்

**மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள்**

பிரிவு கேணிகள் குளங்கள் புனரமைப்பு,
பிரிவு சிறு வீதிகள் திருத்தம்
விதவைப் பெண்களுக்கான சுயதொழில் நிதி உதவி உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக் கப்படவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் வடக்கு J/46

காரைநகர் வடக்கு கிராமசேவையாளர் பிரிவானது 2.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதுடன் தபாற்கந்தோரடி, சந்தம்புளியடி, மல்லிகை, இலந்தச் சாலை, வேதரடைப்பு, அல்லின்வீதி, எஸ்.எம்.கேணி யடி, புதுறோட், சிவன்கோவிலடி ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. இப்பிரிவில் 249 குடும்பங்களைச் சேர்ந்த 673 பேர் வசித்து வருகின்றனர். இனி பிரிவு விபரத்தினை பார்ப்போம்

| | |
|---|---|
| மொத்தச் சனததொகை | – 673 |
| ஆண்கள் | – 308 |
| பெண்கள் | – 365 |
| சொந்த வீடு உள்ளோர் | – 155 |
| சொந்த வீடு அற்றோர் | – 97 |
| ஓய்வூதியம் பெறுவோர் | – 19 |
| அரச உத்தியோகத்தர் | – 33 |
| விவசாயிகள் | – 31 |
| கடற்தொழிளாளர்கள் | – 20 |
| சீவல் தொழிலாளர்கள் | – 07 |
| வர்த்தகர்கள் | – 07 |
| பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் | – 28 |
| விதவைகள் | – 55 |
| ஊனமுற்றோர் | – 11 |
| பாடசாலை செல்லும் பிள்ளைகள் | – 126 |
| மலசல கூட வசதியற்றோர் | – 21 |

**பொது அமைப்புக்கள்:**
வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம்
வேதரடைப்பு சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சங்கம்

**பாடசாலைகள்:**
யா/மெய்கண்டான் வித்தியாசாலை

முன்பள்ளிகள்:
**வேதரடைப்பு முன்பள்ளி**

**கோவில்கள்:**
ஆலங்கன்று வைரவர் கோவில்
சிதம்பராமூர்த்தி கேணியடி வைரவர் கோவில்
அரசடிக் காடு கதிர்வேலாயுத சுவாமி கோவில்
புதுறோட் கதிர்காம சுவாமி கோவில்

**விளையாட்டுக் கழகங்கள்:**
சோலையான் விளையாட்டுக் கழகம்

**மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள்:**
பிரிவு கேணிகள் குளங்கள் புனரமைப்பு,
பிரிவு சிறு வீதிகள் திருத்தம்
முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு வழங்கல்
பொது விளையாட்டு மைதானம் உருவாக்கல்
விதவைப் பெண்களுக்கான சுயதொழில் நிதி உதவி
முன்பள்ளிகளுக்கு போதிய மலசல கூடவசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச வைத்தியசாலை

காரைநகர் பிரதேச வைத்தியசாலையின் வரலாறு 1898இல் தொடங்குகின்றது. எனினும் 1952 இல் பிரசவ விடுதி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முறைப்படுத்தப்பட்ட வைத்தியசாலையாக தோற்றம் பெறுகிறது. ஊர் மக்களினதும் அரசினதும் பங்களிப்புடன் விரிவுபடுத்தப் பட்டு இன்று மூன்று விடுதிகள் ஒரு அவசர சிகிச்சை அறை என்பவற்றுடன் பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்ந்து மிளிர்கின்றது.

காரைநகர் பிரதேச வைத்தியசாலை உயர்வில் பிரிக்கமுடியாத பங்கு இவ்வூர் மக்களையும், தனிப்பட்ட மக்கள் அமைப்புக்கள் என அனைவரது பங்களிப்பும் இவ் வைத்தியசாலை வளர்ச்சியில் உண்டு. எமது உலக வங்கி என்று காரைநகர் அபிவிருத்திச் சபையினை நாம் அழைப்பதுண்டு. நிர்வா விடயங்களா யினும் சரி மேம்பாட்டுப் பணிகளானாலும் சரி எங்களுக்குத் தடைநீக்கியாக ஆபத்துதவியாக இருப்பது காரைநகர் அபிவிருத்திச் சபையே

எமது வைத்தியசாலையானது சுற்றியுள்ள பிரதேசங்க ளான பொன்னாலை, சுழிபுரம் மற்றும் மூளாய்க்கும் பணியாற்றுகின்றது. நாளாந்தம் நூற்றைத் தாண்டும் வெளிநோயாளர் பிரிவு, விடுதி வசதிகள், அவசர நோயாளர் காவுவண்டிச் சேவை என விரியும் வசதிகள் மக்களை எம்மை நாடி வரச் செய்தாலும், செயலற்றி ருக்கும் ஆய்வுகூடச் சேவை எம்மைப் பொறுத்தவரை பின்னடைவுதான்.

அதிகரித்து வரும் மது பாவனை, குடிநீர்ப்பிரச்சினை மற்றும் கூடவே இணைந்த வயிற்றோட்டம் என்பனவே இன்று நாம் எதிர்கொள்ளும் சவாலாக எழுந்து நிற்கின்றன.

இம்மண்ணில் பிறந்த மக்களின் வழிகாட்டலில் உருவான கனேடிய காரை கலாசார மன்றம் இவ் வாண்டு எமது வைத்தியசாலைக்கு மேலதிகமாக தேவைப்படுகின்ற நோயாளர் படுக்கைகளை கொள் வனவு செய்து வழங்க முன்வந்திருக்கின்றது. தரமும், வசதிகளும் மிக்க நோயாளர் படுக்கைகள் கொள்வன விற்காக காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக இரண்டு இலட்சம் வரை நிதி உதவி வழங்கப்பட்டு ஓடர் செய்யப்பட்டுள்ள நிலையில் இன்னமும் சில தினங் களில் அவை வைத்தியசாலைக்கு வரவிருக்கின்றன.

கனடா–காரை கலாச்சார மன்றத்தின் 25வது ஆண்டு நிறைவினை குதூகலமாக கொண்டாடி வரும் இவ்வேளையில் நடைபெறும் கலைவிழாவிற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தும் எமது உணர்வோடும் உழைப்போடும் கூடவே நிற்கின்ற தங்களின் அன்பும் நல்லெண்ணமும் அனைவரையும் வாழ்விப்பதாக.

நன்றி.
Dr.கெ.இந்திரமோகன்
பிரதேச வைத்திய அதிகாரி
பிரதேச வைத்தியசாலை
காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TK

## PERSONAL INCOME TAX SERVICE

**Revenue Canada Authorized E-filer**




$ Maximum Tax Refund
$ New customer 20% off
$ Mobile Tax Service available
$ E-file within 14 days



**Kumar Ponnampalam**

*(Certified Tax Preparer)*

**Tel: 416-576-7944**

**E-mail: thava1820@hotmail.com**

**Important Numbers**

Tax-Canada Customs & Revenue Agency, Child Tax Benefits Goods & Services Tax 1-800-387-1193, Credit Cheque 1-800-959-1953, Income Tax General Inquiries 1-800-959-8281, Refund Inquiries 1-800-959-1956, Service for the Hearing Impaired TTY: 1-800-665 -0354, Service for the Visually Impaired 1-800-267-1267, TIPS Automated 1-800-267-6999, For Government of Canada Numbers 1-800-465-7735




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா - காரை கலாச்சார மன்றம் நடாத்திய

# தமிழ்த்திறன், பண்ணிசைப் போட்டி - 2014

## பங்கு பற்றிய சிறுவர்கள்



பிரனுஷா சிவரூபன்



சுபாங்கி மகாராஜா



அனக்ஷன் நந்தகுமார்



அர்வின் சிவகுமார்



தயானி நடனசபேசன்



அபிஸ்னன் சிவானந்தன்



ஆரூஷன் சுதாகரன்



அபிஷன் நந்தகுமார்



அஞ்சனன் சிவகுமார்



அனந் சற்குணராசா



அஞ்சனா சற்குணராசா



வாசுகி தயானந்தராசா




பிரணவி பஞ்சலிங்கம்



வர்ணவி பஞ்சலிங்கம்



மாதங்கி மகாராஜா



அபிலாஸ் சிவகுமார்




துளசி தவராஜா


தீபிகா பிரமேந்திரதீசன்



கிருஜானி நடனசபேசன்



நிலானி பரமானந்தராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீரா சிறீவர்ணசூரியா



மிதுசா சிறீவர்ணசூரியா



அனுசா சிறீவர்ணசூரியா




நிலக்ஷனன் தயானந்தராஜா



ஹரிணி தயானந்தராஜா




தனுஷன் மகாராஜா



பிரவின் பிரமேந்திரதீசன்



விஷ்வா பிரமேந்திரதீசன்



அனோஜன் சுதாகரன்



நிதுஷா பரமானந்தராஜா

# கனடா - காரை கலாச்சார மன்றம் நடாத்திய
# தமிழ்த்திறன், பண்ணிசைப் போட்டி - 2014
# பரிசு பெற்றோர் விபரம்.

**பாலர் பிரவில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:**

**பண்ணிசை:**
**பாலர் பிரிவு:**
1ம் இடம்: பிரனுஷா சிவரூபன்
2ம் இடம்: தயானி நடேனசபேசன்
3ம் இடம்: அனுஷன் நந்தகுமார்

**வாசிப்பு:**
**பாலர் பிரிவு:**
1ம் இடம்: பிரனுஷா சிவரூபன்
2ம் இடம்: தயானி நடனசபேசன்

**எழுத்து**
**பாலர் பிரிவு:**
1ம் இடம்: பிரனுஷா சிவரூபன்
2ம் இடம்: அபிஸ்னன் சிவானந்தன்

**பேச்சு:**
**பாலர் பிரிவு:**
1ம் இடம்: பிரனுஷா சிவரூபன்
2ம் இடம்: தயானி நடனசபேசன்

**கீழ் பிரிவில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:**
**பண்ணிசை**
**கீழ் பிரிவு:**
1ம் இடம்: (இருவர் பெற்றுக்கொள்கின்றார்கள்)
அபிஷன் நந்தகுமார், ஆருஷன் சுதாகரன்,
2ம் இடம்: அஞ்சனன் சிவகுமார்

**மத்திய பிரிவில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:**

**பண்ணிசை**
**மத்திய பிரிவு:**
1ம் இடம்: ஆனந் சற்குணராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாலர் பிரவில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:**

**பண்ணிசை:**

**பாலர் பிரிவு:**

1ம் இடம்: பிரனுஷா சிவரூபன்

2ம் இடம்: தயானி நடேனசபேசன்

3ம் இடம்: அனுஷன் நந்தகுமார்

**வாசிப்பு:**

**பாலர் பிரிவு:**

1ம் இடம்: பிரனுஷா சிவரூபன்

2ம் இடம்: தயானி நடனசபேசன்

**எழுத்து**

**பாலர் பிரிவு:**

1ம் இடம்: பிரனுஷா சிவரூபன்

2ம் இடம்: அபிஸ்னன் சிவானந்தன்

**பேச்சு:**

**பாலர் பிரிவு:**

1ம் இடம்: பிரனுஷா சிவரூபன்

2ம் இடம்: தயானி நடனசபேசன்

**கீழ் பிரிவில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:**

**பண்ணிசை**

**கீழ் பிரிவு:**

1ம் இடம்: (இருவர் பெற்றுக்கொள்கின்றார்கள்)

அபிஷன் நந்தகுமார், ஆருஷன் சுதாகரன்,

2ம் இடம்: அஞ்சனன் சிவகுமார்

**மத்திய பிரிவில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:**

**பண்ணிசை**

**மத்திய பிரிவு:**

1ம் இடம்: ஆனந் சற்குணராசா

2ம் இடம்: அஞ்சனா சற்குணராசா

3ம் இடம்: (இருவர் பெற்றுக்கொள்கின்றார்கள்)

பிரணவி பஞ்சலிங்கம், வர்ணவி பஞ்சலிங்கம்

வாசிப்பு

மத்திய பிரிவு:

1ம் இடம்: கிருஷானி நடனசபேசன்

2ம் இடம்: துளசி தவராசா

3ம் இடம்: வாசுகி தயானந்தராசா

எழுத்து

மத்திய பிரிவு:

1ம் இடம்: வாசுகி தயானந்தராசா

2ம் இடம்: தீபிகா பிரமேந்திரதீசன்


3ம் இடம்: துளசி தவராசா

பேச்சு

மத்திய பிரிவு:

1ம் இடம்: கிருஷானி நடனசபேசன்

**கனடா-காரை கலாச்சார மன்றம் நடாத்தும் தமிழ், சமய வகுப்புகளில் கலந்து கொள்ளும் பிள்ளைகளுடன் ஆசிரியரும் உதவியாளர்களும்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.காசிப்பிள்ளை சகப் புத்திரர்கள்



கல்லெல்லாம் மாணிக்க
கல்லாகுமா...!



**57 ஆண்டுகள்**
**வர்த்தகத்துறையில் முன்னோடிகள்**

*24 வருடங்களாக துரித பணமாற்று சேவையில்*
*கனடா வாழ் தமிழ் மக்களின் மனதில்*
*நம்பிக்கை, நாணயம், நன்மதிப்பை*
*பெற்ற ஒரே ஸ்தாபனம்*

## M.KASIPPILLAI & SONS INC

**Tel: 416 267 8221**
**3228 Eglinton Ave. E, Suite #3 Scarborough, Ont. M1J 2H6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GRAND OPENING

# EVEREST FURNITURE

## Largest Showroom

## WHOLE SALE* & RETAIL







மீண்டும் புதுப்பொலிவுடன் தமிழரின் நிர்வாகத்தில் தொழிற்சாலையுடன் கூடிய மிக பிரமாண்டமான காட்சி அறையுடன் **"EVEREST FURNITURE"** தமிழரின் மத்தியில் மெத்தைஇ தளபாட உற்பத்தியில் 15 வருட கால முன்னனி நிறுவனமாக திகழ்ந்து வரும் இவ் வேளையில் எமது வளர்ச்சிக்கு ஆதரவு தந்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு தொடர்ந்தும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கிறோம்

## ALL MATTRESS ON 50%OFF

(With Purchase of Bedroom Set)

## 15 YEARS IN MANUFACTURING OF MATTRESSES & SOFAS

**80 Finchdene Sq, Scarborough,ON (Neilson/Finch)**



**416-332-0721**

*(Whole Sale Minimum of 5 Sets)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TD Canada Trust** Advice Whereever Whenever

## Supen Subramaniam
Manager, Residentail Mortgage



t: 416-844-8692 f: 1-888-809-9154
e: supenthiran.subramaniam@td.com

Competitive Rate

- Buying Home
- Refinance (Consolidation existing debts)
- Home Equity Line of Credit
- Switch your mortgage from another financial institution
- Pre-aproval



கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் என்னை அழையுங்கள்

**காரை வசந்தம் சிறப்புற வாழ்த்துகிறோம்.**

All your Income Tax and Accounting , Book Keeping needs,

# Sairam Accounting Tax Consultants
## Karuna Suren CGA,CPA

(Chartered Professional Accountant)

**Call: 647-200-9307.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PUBLIC CHOICE REALTY



**Manopalan(Mano) Kandiah, B.Eng.**
**Sales Representative**

REALTOR® MLS MULTIPLE LISTING SERVICE®

Direct:
905 580 1340
kandiam@gmail.com
www.publicchoicerealty.com


Public Choice Realty Inc., Brokerage
#88 - 7393 Markham Road, Markham, ON L3S 0B5
Off: 905 471 1181 Fax: 905 471 1187


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் வரவேற்கிறது

## Geographical Location

Karainagar is an island which is located 15km from Jaffna, Sri Lanka. It is surrounded by Indian Ocean and Jaffna Lagoon. The area of Karainagar is approximately 22Sq Km with 10Km from North to South and 2.2Km from East to West.




## History

According to oral history the name Karainagar was a derivative from Karai chedigal (plants) found there or because Karainagarans are descendents of settlers from Karaikkudi. Kaarai is also the name of a kind of fish. It is only a conjecture to associate the place name with migrations from places of similar names on the opposite coast of Tamil Nadu, such as Kaaraikkudi or Kaaraikkaal. All these names might have originated independently from the natural vegetation. The validity of these propositions has so far not been tested.

Kaarai chedigal can still be found widely in the island along hedges and in thickets. Elders in the island still remember the ritualistic significance of the shrub. Twigs of Kaarai leaves are presented to the Brahmin priest who officiates ancestral rites during anniversaries. Kaarai, Musuddai (Iponoea candicans) and Pira'ndai (Vivitis quardrangularia) are part of the offerings on those occasions.

Elders in Kaarainakar also remember making Champal from the leaves (a side dish made by grinding the leaves along with scraped coconut, onions and chillies).

There is also an early Buddhist site, known today as Vearap-piddi (the stupa mound), on the western side of the island. The Kings of Jaffna maintained an establishment in this island, near the harbour, which is called Raasaavin Thoaddam.

The Dutch renamed the island as New Amsterdam during their rule. They also built a small fort called Hammanhiel, off the Southwest corner of the island to guard the sea routes. The continuity of the strategic recognition can be seen in the location of the northern headquarters of the Sri Lanka Navy at this island.

## Administrative

Karainagar is part of Jaffna district of Northern Province and elevated as an Assistant Government Agent (AGA) division from 07th April 2003. It is divided into nine Grama Niladari (GN) divisions. AGA's office is situated near Valanthalai junction.

Karainagar is belonging to Voddukoddai


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

electorate in Jaffna electoral district.

Karainagar Local governance body known as Pradeshiya Sabha, which establish from 2005. The Pradeshiya Sabha consists of five members who are elected by the people of Karainagar.

## Population

Population of Karainagar is variously estimated at about 4,000 in 1900, 16,000 in 1950, 45,000 in 1990 and 9,000 in 2007.

According AGA's office recent statistics there are 10,564 people residing in karainagar. Population is staidly growing since 2009. Many Karainagarans are now living outside since 1990.

## Poonalai Causeway

A 4 km long causeway linking the island to the mainland was built during the period when Sir W Twynham was the Government Agent of Jaffna (1867 – 1884). An engraved stone plaque in the Sayambu Hall (founder of Karainagar Hindu College) gives the date of the bridge as 1869. The causeway ended the geographic isolation of Karainagar. Sir P Ramanathan after a visit to the island in 1922 had Karaitivu officially renamed Karainagar on 12.09.1922. The network of roads linking the settlements within Karainagar was built after that.

Vernon bund was purpose built to preserve the rain water instead of allowing it to run to the sea and that reduce the scarcity of water in the surrounding area.

## Climate

Climate of Karainagar is fall into low country dry zone of Sri Lanka. Temperature is ranging from $23^0$ to $30^0$c. Rainfall is received between October to January. Rainfall is the main source to obtain water. Water received during rainy season is percolated into the soil and stored as underground water, which is used for agriculture and other purposes during dry seasons. To obtain drinking water is very much difficult. Water is cultivated from wells and ponds ( Kulam). Currently there are number of water bowsers distribute drinking water fetched from Chunnakam.

## Economy

Agriculture and fisheries are the major sources of the income in the area. Approxomately 500Hec. Area was used for paddy cultivation in 2008.

Karainagar were once flourishing due to maritime trade, declined during late 1990's and 2000. Many Karainagarans are involved in business through out Sri Lanka and are many living in oversea. There is a well known phrases describing Karainagarans "Kaakam pa'rakkaa tha idamillai; Kaaraitheevan poakaatha oorillai" (There is no place on earth where the crow and the Kaaraitheevu islander cannot be seen).

### Place of Interest

Casuarina Beach: Casuarina beach is conside red as the best beach in the Jaffna peninsula. The beach is pretty different to a normal Sri Lanka beach In stead of coconut trees there casurina tree are growing along the beach.The colour of the sand is also a bit different and it was very soft making it a pleasant experience. The greatest thing about the casurina beach is the ability to walk towards the sea for miles. The shallowness of the beach combined with no waves makes it an ideal bathing place and it is also place of relax.

**Temples**: Temples are dotted in the Karainagar landscape and temple going was the main leisure activity for the people. There are 43 temples in Karainagar most dating back to the 19th century or earlier. The more popular deities were Pillaiyar, Murugan, Amman and Vairavar. The famous temple is Sivan temples known as Eelaththu Chidambaram.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வாழ்த்துச் செய்தி: கிழவன்காடு கலா மன்றம்**

காரைநகரில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் மக்களினால் காரைநகரில் மேற்கொள்ளப்பட்ட பல நற்பணிகளுக்கு ஆதாரமாக கனடா காரை கலாசார மன்றம் விளங்குவதனையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் தாய் மண்ணை மறந்து தன்னிலையை மாற்றி வாழ நினைக்கும் மக்களுக்கு மண்வாசனையினை நினைவுபடுத்துவதாக இந்த அமைப்பினுடைய செயற்பாடுகள் அமைவது குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பினால் பலருக்கும் நன்மை பயக்கத்தக்க பல ஆக்கங்களை இதழ்களாக கொண்டு மலர்கின்ற காரைவசந்தம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலங்களில் நம்முன்னோர் கலைகளுக்கு உயர்ந்த இடம் வழங்கியிருந்தார்கள். அவை தற்போது தடுமாற்றத்திற்கு உட்பட்டிருக்கின்ற இவ்வேளையில் கனடா போன்ற வெளிநாடுகளில் நம்மவர்கள் நடாத்துகின்ற நிகழ்வுகளை அவதானிக்கும் போது அவர்கள் கலைகளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தினை எம்மால் உணர முடிகின்றது. ஒரு அமைப்பினுடைய சேவையானது அச்சேவையினைப் பெறும் மக்களின் சோம்பல் தனத்தை நீக்கி சுயநலமற்ற நற்சிந்தனையினை வளர்ப்பதாக அமையச் செய்வதே சேவை செய்யும் அமைப்பிற்கு கிடைத்த வெற்றியாகும்.

அந்தவழியில் கனடா கலாச்சார மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தும் அமையும் என எதிர்பார்க்கின்றேன். கனடா காரை கலாசார அமைப்பினது சேவைகள் தொடர்ந்தும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடிகளை எமது கலாமன்றத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றேன்.

"கலைவளம் பெருக்கிநிலை இன்பம் பெறுவோம்"

கலைச்சுடர் . திரு .ந.சோதிநாதன்
அமைப்பாளரும் தலைவரும்
கிழவன்காடுகலாமன்றம்
காரைநகர்
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kajanth Grocery

**Video - Vegetable - Money Transfer, Meat**

துரித பணமாற்றுச் சேவை, உலர் உணவுப் பொருட்கள்,
உடன் மரக்கறி, கோழி, ஆட்டு இறைச்சி,
கணவாய், இறால், மீன்
இன்னும் பல..........



S&Rentals of
Tamil Movies
Audios & CD's
Video Transfer
from any systems

தமிழ்ப் படங்கள் ஓடியோக்கள், சீடிக்கள்
மற்றும் வீடியோ பிரதிமாற்றம்

**KUMAR**
**Tel : 416-240-0039**

**1708 Kane St. Weston, Ont. M9N 2S4**
**(Jane & Lawrence)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விக்கினேஸ்வராயநமஹ"

# மணிவிழா காணும் மணிவாசகர் சபை

சாதனைகள் பல படைத்து தனது எழுபத்தைந்தாவது அகவையைப் பூர்த்தி செய்து பவளவிழாக் காணும் மணிவாசகர்சபை சேவையை மக்களுக்காய் செவ்வனே செய்து வருகின்றது.

மணிவாசகரின் வாசகத்தை தேன் கலந்து பால் கலந்து தெவிட்டாமல் காரைநகர் மக்கள் மனங்களில் பதிய வைக்கும் அரும்பெரும் தொண்டாற்றும் மணிவாசகர் சபையின் பவளவிழாக் காண ஆவலுடன் காத்திருக்கின்றனர் காரைவாழ் மக்கள்.

காரை மாதா பெற்றெடுத்த தவப்புதல்வர் மூதறிஞர் பண்டிதமணி கலாநிதி பிரம்மஸ்ரீ-வைத்தீஸ்வர க்குருக்கள் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்.

"என் மனத்தைத் திருவாசகம் இழுத்துத் தன்வசமாக்கிவிட்டது. மக்கள் யாவரிடமும் திருவாசக பாராயணம் செய்யும் நியதியை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் உதயமாயிற்று. அதனைச் செயற்படுத்த வேண்டும் என்ற திடசித்தமும் ஏற்பட்டு விட்டது. முதற்கண் காரைநகரில் மணிவாசகர் சபையை ஆரம்பிக்க வேண்டும் என்ற அவா தெய்வத்திருவருளால் என் மனதிற் கருக்கொண்டது"

சிவஸ்ரீ வைத்தீஸ்வவரக்குருக்களின் எண்ணத்தில் உதித்து யோகர்சுவாமிகளின் அருளாசியுடன் தில்லைக்கூத்தனின் திருவருளால் பிரமாதி வருடம் மார்கழி மாதம் 17ம் திகதி (01-01-40) காரைநகர் மணிவாசகர்சபை ஆரம்பிக்கப்பட்டது.

பிற இனத்தவர்களாலும், பிற மதத்தவர்களாலும் போற்றப்படும் முதன்மை நூலாகவும், ஆன்மீகத்துறைக்கு ஒப்பற்ற வழிகாட்டி நூலாகவும் விளங்குவது மணிவாசகப் பெருந்தகை தந்த திருவாசகமாகும். இத்திருவாசக நூலைப் பொருள் உணர்ந்து ஓதி மக்கள் பயனுறவும் மேன்மை கொள்ள வேண்டும் என்ற உயர் நோக்கோடு உருவாக்கப்பட்ட மணிவாசகர் சபையின் பணிகள் அளப்பரியன எண்ணிலடங்காதவை.

மார்கழித் திருவாதிரைத் திருவிழாத் திருநாளில் மணிவாசக விழாவை மிகச்சிறப்பாக நடாத்தி வருகின்றது. இவ்விழாவில் இலங்கையில் உள்ள பேரறிஞர்களும், தமிழகத்தில் இருந்து வருகை தரும் பேரறிஞர்களும் நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்து வருகின்றார்கள்.

மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் தரம் 2-11 வரையான மாணவர்களுக்கு தர ரீதியாக சமய பாடப்பரீட்சை நடாத்தி அதி உயர் புள்ளிகளைப் பெறும் ஐந்து மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கியும், வகுப்பு ரீதியாக முதல் ஐந்து மாணவர்களுக்கு புத்தகப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வருகின்றது. மேலும் சிவராத்திரி திருநாளை ஒட்டி சமயப் பேச்சு, பண்ணிசை, மனனம், கட்டுரை, சமயக்கதை கூறல், வில்லிசை, பஜனை ஆகிய போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்குவதோடு சிவராத்திரி நிகழ்விலும் மாணவர்களை பங்கு பற்றச் செய்து வருகின்றது.

சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதைமணி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தொடர்ந்து 27 ஆண்டுகள் சொற்பொழிவு ஆற்றியமைக்காகவும், அவர் தமிழ் அறிவை வியந்தும் மணிவாசகர் சபையினர் "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டத்தை சூட்டியமை காரைநகர் மக்களுக்கு உலகளாவிய ரீதியில் பெருமையைத் தேடித் தந்துள்ளது.

திருவாசகத் தீந்தமிழைப் பரப்பி சமய அறிவையும், ஞான அனுபவத்தையும், வளர்க்க பயனுள்ள நூல்கள் பலவற்றை காலம் காலமாக வெளியிட்டு வருகின்றது. திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களுக்கு உரை எழுதியும், சைவ சமய வளர்ச்சி, மணிவாசகர் சபை மலர்கள், சபை பொன்விழாமலர் ஆகிய நூல்களை வெளியிட்டும்இ ஈழத்துச் சிதம்பர புராணம்இ ஆண்டிகேணி ஐயனார் புராணம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையும் இச்சபை பதிப்பித் துள்ளது. பண்டிதர் சு. அருளம்பலவானார் அவர்கள் திருவாசக ஆராய்ச்சி உரை செய்வதற்கும், வெளியிடுவதற்கும் தூண்டு கோலாக இருந்தது மணிவாசகர் சபையே ஆகும்.

பத்து ஆண்டுத்திட்டத்தில் மாணவரிடையே திருவாசகம் முற்றும் மனனம் செய்யும் போட்டியை 2013ம் ஆண்டு ஆரம்பித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

காரைவாழ் மக்கள் மத்தியில் திருவாசகப் புத்துணர்ச் சியை ஏற்படுத்தியமையால் காரைநகரில் உள்ள பெரும்பான்மையான கோயில்களில் திருவாசகம் முற்றும் ஓதல் வைபவம் நடைபெற்று வருகின்றது. ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் வெள்ளிக் கிழமைகளில் திருவாசகம் முற்றும் ஓதும் வைபவம் மணிவாசகர் சபையினரால் நடாத்தப்பட்டு வருகின்றது.

இச்சபையின் ஸ்தாபகர் கலாநிதி.க.வைத்தீஸ் வரக்குருக்கள் அவர்கள் போஷகராகவும், ஓய்வு நிலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்கள் தலைவராகவும், ஓய்வு நிலை அதிபர் திரு.க.தில்லையம்பலம் அவர்கள் உபதலைவராகவும், ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் திரு.து.நாகேந் திரம் அவர்கள் செயலாளராகவம், திரு.சு.அகிலன் அவர்கள் உபசெயலாளராகவும் காரைநகர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் திரு.ந.பாரதி பொருளாளராகவும், ஓய்வு நிலை அதிபர் திரு.கா. குமாரவேலு அவர்கள் பரீட்சைச் செயலாளராகவும், மற்றும் காரைநகரைச் சேர்ந்த பல பிரபல வர்த்தகர்களும், ஆசிரியர்களும், கல்விமான்களும் இச்சபையின் உறுப்பினர்களாகவும் விளங்குகின்றனர்.

தனது எழுபத்தைந்து வயது பூர்த்தியாகி வெற்றி நடைபோடும் மணிவாசகர் சபையின் பவளவிழாவை காரைநகா மக்கள் சிறப்புற நடத்தவும், மணிவாசகர் சபையினர் தொடர்ந்து சமயப் பணிகளை செவ்வனே செய்யவும் எல்லாம் வல்ல ஈழத்துச்சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமா னைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

கலாநிதி வீரமங்கைஸ்ராலினா யோகரத்தினம்
(M.A, B.Ed, Ph.D)
சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலம்
மொழியியல், ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Buying - Selling - Investing

## Residencial - Commercial



HOMELIFE
HIGHER STANDARDS

*Homelife/future Realty Inc.*, *Brokerage**
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229
* Independently Owned and Operated, Realtor

**Gugarajan** Mahathevan
*Sales Representative*
**Dir: 647.388.7065**
**mgrajan@rogers.com**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த கனடா-காரை கலாச்சார மன்றத்தின் தோற்றமும் - வளர்ச்சியும் (1989-2014)



காரைநகருக்கு சிறப்புத்தரும் அம்சங்களில் முதல் அம்சம் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படுகின்ற காரைநகர் சிவன்கோவில் இங்கு அமையப் பெற்றுள்ளதாகும். காரைநகர் மக்கள் எங்கு வாழ்ந்தாலும், இவ் ஆலயத்தினுடைய வளர்ச்சியில் சிரத்தையுடையவர்களாக, சிறப்பாக திருப்பணி, நித்தியபூசை, மஹோற்சவங்கள் ஆகியன செவ்வனே நடக்க மிக்க பயபக்தியுடன் ஈடுபாடுகாட்டி வருபவர்கள்.

1989ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கனடாவிற்கு புலம்பெயர்ந்திருந்த காரைநகர் மக்கள் இவ்வாலய வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடையவர்களாக இருந்தனராயினும், அவர்களது உதவிகளை ஒன்று திரட்டுவதற்கேற்ற பொது அமைப்பு எதுவும் அப்போது இருக்கவில்லை. இன்றிருப்பது போலல்லாது ஒரு சில அமைப்புகளே புலம்பெயர்ந்த மக்களால் ஆரம்பிக்கப் பட்டு செயற்பட்ட காலம் அது.

இக்காலகட்டத்தில் ஒருநாள் சமயப்பற்றாளரான திரு. வேலுப்பிள்ளை கந்தையா, திரு. தில்லையம்பலம் விசுவலிங்கம் அவர்களை முதன்முதலாக திரு. சபாபதி சபாநடேசன் அவர்களுடைய இல்லத்தில் சந்தித்த போது, சமயப்பற்றும், தமிழ்ப்பற்றும் பிரதிபலிக்கும் அவரது தோற்றத்தைக்கண்டு, ஆலயவளர்ச்சி தொடர்பான தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி, கனடாவிலுள்ள காரைநகர் மக்கள் உதவிசெய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். அதே சிந்தனையுடையவராகவிருந்த திரு. விசுவலிங்கம் அவர்களும் உடனடியாகவே செயலில் இறங்கியவராக, அவ்விடத்திலேயே இருவருமாக திரு. சபாநடேசன் அவர்களையும் இணைத்துக் கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதன் பின்னர், ஓர் பொது அமைப்பை ஏற்படுத்துவதென தீர்மானித்தனர். இது தொடர்பில் அக்கறையுள்ள மற்றும் காரைநகர் மக்களுடன் ஆலோசனைகள் மேற்கொண்டதன் பயனாக 05-08-1989ல் ஓர் அமைப்புக்குழு ஏற்படுத்தப்பட்டது.

திரு. வேலுப்பிள்ளை கந்தையா, திரு சபாபதி சபாநடேசன், திரு. தில்லையம்பலம் விசுவலிங்கம், திரு. நாகலிங்கம் குஞ்சிதபாதம், திரு. நடராசா அமிர்தலிங்கம், திரு. கனகரட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா, திரு. கண்மணிராசா சிவராசா, டாக்டர் கனகரத்தினம் விஜயரத்தினம், திரு. சபாரத்தினம் பாலச்சந்திரன், ஆகிய ஒன்பது பேர் இவ் அமைப்புக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். இவ்அமைப்புக் குழுவின் இணைப்பாளராக திரு. விசுவலிங்கம் அவர்களே செயற்பட்டதுடன், ஏற்படுத்தப்படவிருந்த அமைப்பிற்கு "ஈழத்துச்சிதம்பரம் திருத்தொண்டர் சங்கம் - கனடா" என்ற பெயரினையும் தேர்வு செய்திருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்குழு தீவிரமாகச் செயற்பட்டு, ஒருமாத காலத்தினுள் சங்கத்திற்கான யாப்பினைத் தயாரித்ததுடன் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டத் தினையும் ஏற்பாடு செய்திருந்தது. ஆலய வளர்ச் சியுடன் தேவையேற்படும்போது காரைநகரிலுள்ள கல்வி, சமூக ஸ்தாபனங்களிற்கு உதவுவதும் சங்க நோக்கங்களாக தீர்மானிக்கப்பட்டிருந்தன.

01-10-1989ல் Lansdown Ave உள்ள தமிழர் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டத்தில் திரு. ச. சபாநடேசன் தலைவ ராகவும், டாக்டர் க. விஜயரத்தினம் உபதலைவராகவும், திரு. தி. விசுவலிங்கம் செயலாளராகவும், திரு. ந. அமிர்தலிங்கம் பொருளாளராகவும், திருமதி விமலா தேவி விஜயரத்தினம் உப-செயலாளராகவும், நிர்வாக உறுப்பினர்களாக திரு. க. ஸ்ரீகந்தராசா, திரு. நா. குஞ்சிதபாதம், திரு.க. சிவராசா, திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை, திரு. மயில்வாகனம் கோபலசு தந்திரன், திரு, சுப்பிரமணியம் மனோகரராசா ஆகி யோரும் எண் பார்வையாளராக திரு. அருணாசலம் கருணாகரனும் தெரிவானார்கள். அக்காலகட்டத்தில் இந்நிர்வாகமும் இதனைத் தொடர்ந்து வந்த நிர்வா கங்களும் மிகத் திறமையாகச் செயற்பட்டு, பல லட்ச ரூபாய்களை காரைநகர் மக்களிடமிருந்து சேகரித்து ஆலய வளர்ச்சிக்காக அவ்வப்போது அனுப்பி வந்து ள்ளன.

காலப்போக்கில் கனடாவிற்கு புலம்பெயர்ந்து வந்து கொண்டிருந்த காரைநகர் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததையடுத்து, சங்கத்தின் பணிகளை விஸ்த்தரிக்க வேண்டும் என்பதுடன், அதற்கேற்றவாறு சங்கத்தின் பெயரையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் அங்கத்தவர்களிடையே மேலோங் கியிருந்தது.

16-04-1994 ஸ்காபுறோ லோறன்ஸ் அவென்யூ விலுள்ள சென்.லோறன்ஸ் ஆரம்ப பாடசா லையில் திரு. ச. சபாநடேசன் தலைமையில் நடை பெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஈழத்துச் சிதம்பர திருத்தொண்டர் சங்கம், கனடா என்பது கனடா-காரை கலாச்சார மன்றம் எனப்பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

1994 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக தனது பணிகளை கனடா-காரை கலாச்சார மன்றம் விஸ்த் தரித்து வந்துள்ளது. சிறப்பாகக் கூறப்போனால், 2000ஆம் ஆண்டிலிருந்தே மன்றம் துரித வளர்ச்சி பெற ஆரம்பித்தது எனலாம். 2000ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியினுள் மன்றத்தின் செயற்பாடு களை அவதானித்தால், மன்றம் பெற்றுள்ள அபரித மான வளர்ச்சி புலப்படும். குறிப்பாக 2002ஆம் ஆண்டு திரு. முருகேசு காசிப்பிள்ளை தலைமையில் நிர்வாகம் அமையப்பெற்ற போது பல இளைஞர்கள் மன்றத் துடன் தம்மை இணைத்துக் கொண்டு செயற்பட ஆரம்பித்தனர். இக்காலத்திலேயே இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் மன்ற அங்கத்தவர்களாக இணைந்து கொண்டதுடன், மன்றத்தின் வருடாந்த சிறப்பு நிகழ்வான "காரை வசந்தம்" கலைவிழா வளர்ச்சிபெற ஆரம்பித்தது.

தொடர்ந்து பதவிக்கு வந்த வேலுப்பிள்ளை இராஜேந் திரம் தலைமையிலான நிர்வாகம் காரைவசந்தத்தின் வளர்ச்சியை மேலும் முன்னெடுத்துச் சென்றதுடன், சிறிய அளவில் நடைபெற்றுவந்த வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வினை, பலநூற்றுக்கணக்கான காரைநகர் மக்கள் கலந்து கொள்கின்றதும், பல அம்சங்களை உள்ளடக்கியதுமான ஓர் நிகழ்வாக வளர்ச்சிபெற சிறப்பாகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

கனடா-காரை கலாச்சார மன்றத்திற்கு சிறப்பைத் தருகின்ற நிகழ்வாக காரை வசந்தம் அமையப் பெற்றுள்ளது. 06-05-2000ல் இவ்விழாவினை முதன் முதலாக ஆரம்பித்து நடத்தியதிலும், இவ்விழாவை யொட்டி சிறப்பு மலரினை வெளியிட்டதிலும் முக்கிய பங்காற்றியவர் திரு. கனகசுந்தரம் சிவகுமரன் ஆவார். திரு.கனக சிவகுமர் அவர்களே "காரை வசந்தம்" என்கின்ற சிறப்புப் பொருந்திய பெயரினையும் தெரிவு செய்திருந்தார். அத்துடன் இக்காலத்தில் தலைவராகப் பணியாற்றிய திரு. ச. சபாநடேசன் அவர்களுடைய வழிநடத்தலில் பொருளாளராகப் பணியாற்றிய திரு. சிற்றம்பலம் சச்சிதானந்தமும், நிர்வாக உறுப்பினர் களான திரு. நற்குணம் மகேந்திரன், திரு. பொன்னுத் துரை சிவசோதி, திரு. சிவசம்பு சிவநாதன், திரு சங்கரப்பிள்ளை தவராசா, திரு. சபாபதி. வேலாயுத பிள்ளை ஆகியோரும் உறுதுணையாக இருந்து முதலாவது ஆண்டு காரை வசந்தத்தின் வெற்றிக்காக அயராது உழைத்தனர்.

முதலாவது காரை வசந்தத்தின் வெற்றியின் விளைவே இன்று மன்றத்தின் 25வது ஆண்டில் 14வது காரை வசந்தத்தின் பாதம் பதிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்திற்கு வெளியே இருந்த ஏராளமான தொண்டர்கள் அவ்வப்போது நடைபெறும் மன்ற நிகழ்வுகளிலும், செயற்திட்டங்களிலும் பங்குகொண்டு உதவியும், ஊர்ப்பற்றுடன் கூடிய தாராள சிந்தையுள்ள அன்பர்கள், வர்த்தக உள்ளங்கள் ஆகியோர் நிதிஉதவியும் கனடா–காரை கலாச்சார மன்றத்தின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்து வருகிறார்கள்.

**மன்ற வளர்ச்சிப்பாதையில் சில முக்கிய பதிவுகள்:**

1989 – ஈழத்துச் சிதம்பர தொண்டர் சங்கம், கனடா அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.
1990 – றிச்மண்ட் ஹில் இந்து ஆலயத்தில் திருவாதிரைத் திருவிழாவினுடைய உபயத்தை ஏற்று தொடர்ந்து நடாத்திவருகின்றது.
1990 – 1994 – இக்காலப்பகுதியில் பல இலட்சம் ரூபாய்களை ஈழத்துச் சிதம்பரத்தின் திருப்பணிக்கும், இராஜகோபுரத் திருப்பணிக்கும் அனுப்பிவைத்தது.
1994 – கனடா – காரை கலாச்சார மன்றம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், இலாப நோக்கற்ற ஓர் அமைப்பாக கனடா அரசாங்கத்திலே பதிவு செய்யப் பட்டது.
1995 – ஒன்றுகூடல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது (மண்டபத்தில் இராப்போசனத்துடன்)
– கொழும்பு நாஷனல் வங்கிக் கிளையில் இலங்கை ரூபா 150,000 நிலையான வைப்பிலிடப்பட்டு, இதன் மாதாந்த வட்டி ஈழத்துச் சிதம்பர நித்தியபூசைக்கு பயன்பட்டு வருகின்றது.
– தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு ஆயிரம் டொலர்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.
1998– ஒன்றுகூடல் நிகழ்வு பூங்காவில் நடாத்த ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது (2002ம் ஆண்டு தவிர)

1999 – கொழும்பு நாஷனல் வங்கிக் கிளையில் இலங்கை ரூபா 100,000 வைப்பிலிடப்பட்டதன் மூலம், நிலையான வைப்புத்தொகை 250,000 இலங்கை ரூபாவாக உயர்த்தப்பட்டு, இதன் மாதாந்த வட்டிப் பணம் 1500 ரூபா ஈழத்து சிதம்பர நித்தியபூசைக்கு இன்றுவரை பயன்பட்டுவருகின்றது.

2000 – மன்றத்திற்கென ஓர் இலட்சினை (Logo) வடிவமைக்கப்பட்டது.
– "காரை வசந்தம்" கலைவிழா ஆரம்பிக்கப்பட்டதுடன் "காரை வசந்தம்" சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.
– மருத்துவ நிதியத்திற்கு ஆயிரத்து ஒரு டொலர்கள் ($1001.00) கனேடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக அன்பளிப்புச் செய்யப்பட்டது.

– தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு ஆயிரம் டொலர்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.
– தமிழ்ச் சிறார்களிடையே தமிழ்ப் பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி என்பன நடாத்தி பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

2001– காரைநகரில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழறிஞர் கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களின், காரைநகரில் நடந்த பாராட்டுவிழாவிற்கு இலங்கை ரூபா 15,000 அன்பளிப்புச் செய்யப்பட்டது.
– கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வித்தியாலயம், யாழ்ற்ரன் கல்லூரி ஆகியவற்றின் அபிவிருத்திக்கு தலா ரூபா 50,000 வழங்கப்பட்டது.
– தமிழச் சிறார்களிடையே 2வது ஆண்டாக பேச்சுப்போட்டி நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.
– கனடாவில் அரங்கேற்றம் செய்துவருகின்ற காரைநகரைச் சேர்ந்த கலைமாணவர்களை அரங்கேற்ற அரங்கில் விருதுவழங்கி பாராட்ட வேண்டும் என்ற தீர்மானம் நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

2002 – காரைவசந்தம் கலைவிழாவில் காரைநகர் பாடசாலைகளில் சேவையாற்றி இங்கு வசித்து வருகின்ற இருபத்திநான்கு ஆசிரியர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
– கொழும்பு நாஷனல் வங்கிக் கிளையில் பதினனாலாயிரம் ($14,000.00) டொலர்கள் நிரந்தர வைப்பிலிடப்பட்டு இதன் மாதாந்த வட்டி இலங்கை ரூபா 15,000 கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வித்தியா லயத்தின் கணனித்துறை ஆசிரியருக்கும் இரு உதவி ஆசிரியர்களுக்கும் சம்பளமாக வழங்கப்படுகிறது.

– மகப்பேறும், மகளிர் மருத்துவமும் என்கின்ற அறிவியல் நூலொன்றை எழுதி வெளியிட்ட காரைநகரைச் சேர்ந்தவரும், தற்போது நியூசிலாந்தில் வசித்து வருபவருமான மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ஆனைமுகனுக்கு பாராட்டுவிழா நடாத்தப் பட்டது.
– காரைநகர் வைத்தியசாலையின் பாவனைக்காக கனடாவிலிருந்து, பத்துக் கட்டில்களும், அதற்குரிய மெத்தைகளும், சக்கர நாற்காலி (Wheel Chair, Walker, Commode) என்பனவும் அன்பளிப்புச்செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003 – முற்றிலும் பல புதிய அம்சங்களுடன் திருத்தி அமைக்கப்பட்ட யாப்பு நடைமுறைக்கு வந்தது.

2004 – காரைநகரைச் சேர்ந்தவர்கள் இங்கு மரணமாகும் சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்ய வேண்டும் என்ற தீர்மானம் நடைமுறைக்கு வரஆரம்பித்தது.

2004 – காரைநகர் மருத்துவமனைக்கு 1700 டொலர்கள் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

2004 – மன்ற இலட்சினை (Logo) மாற்றி வடிவமைக் கப்பட்டதுடன் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (Working Together is sucess) என்ற மன்ற மகுட வாசகம் இதில் பதிக்கப்பட்டது.

2004 – www.karainagar.com என்ற பெயரில் நிஷாந்தன் சண்முகரட்ணம் அவர்களால் தனிப்பட்ட முறையில் பதிவு செய்யப்பட்டிருந்த இணையத்தளம் மன்றம் அவரை அணுகியபோது எதுவித மேலதிக கட்டணமும் இன்றி மன்றத்திற்கு கையளிக்கப்பட்டது.

2005 – சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்களின் நிவாரணப் பணிகளுக்கென இருபதினாயிரம் ($20,000) டொலர்கள் அன்பளிப்புச செய்யப்பட்டது. அதில் CTBC வானொலி ஊடாக பதினையாயிரம் ($15,000) டொலர்களும் காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழகத்தினூடாக ஐயாயிரம் ($5,000) டொலர்களும் அன்பளிப்புச செய்யப்பட்டது.

– இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சராகப் பணியாற்றிய திரு. தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் காரைநகரின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைக் கௌரவித்து, அவர் கனடவிற்கு பயணம் செய்தபோது ஓர் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

– கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம. வித்தியாலய சயம்பு மலர் வெளியீட்டிற்கென (ரூ25,000)இருபத்திஐயா யிரம் ரூபா அன்பளிப்புச்செய்யப்பட்டது.

**கனடா – காரை கலாச்சார மன்றத்தின் 2005-2006 ஆம் ஆண்டு நிர்வாக சபை செயற்பாடுகளின் முக்கிய பதிவுகள்**

– ஆகஸ்ட் மாதம் 2005 இல் கனடா–காரை கலாச்சார மன்றத்தினால் நடத்தப்பட்ட கோடைகால ஒன்று கூடல் நிகழ்வில் 2005–2007 ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவானது. தலைவர்: திரு.கோபாலசுதந்திரன் மயில்வாகனம், செயலாளர்: திரு.சந்திரசேகர் கந்தையா, பொருளாளர்: திரு.தம்பிஐயா பரமானந்தராஜா.

– குறுகிய காலம் பதவியேற்று அதே ஆண்டு டிசம்பரில் "காரை வசந்தம்–2005" கலை நிகழ்வு சிறப்பாக நடத்தப்பட்டது.

– 2005 டிசம்பரில் ஆருத்திரா தரிசனம் றிச்மன்ட் கில் இந்து ஆலயத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது.

– செப்டம்பர் 2006 இல் ரொரன்ரோ டொமினியன் வங்கியிலுள்ள கனடா–காரை கலாச்சார மன்றத்தின் வங்கிக் கணக்கில் பதினையாயிரம் ($15,000.00) டொலர்கள் நிரந்தர வைப்பில் இடப்பட்டது.

கனடா–காரை கலாச்சார மன்றத்தின் 2006–2007 ஆண்டு நிர்வாக சபை செயற்பாடுகளின் முக்கிய பதிவுகள்

– 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் 2006–2008 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவானது. தலைவர்: திரு.முருகேசு காசிப்பிள்ளை, செயலாளர்: திரு.கனக.சிவகுமாரன், பொருளாளர்: திரு.கணேசன் திருக்குமரன்.

– இவ்வாண்டு கோடைகால ஒன்றுகூடல் மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு குறைந்த பணச் செலவுடனும் மிகுந்த வரவேற்பையும் பெற்று நூற்றுக் கணக்கான காரைநகர் மக்களுடன் நடந்தேறியது.

– தலைவராக இருந்த திரு.மு.காசிப்பிள்ளை அவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக பதவி விலகியதை யடுத்து உப–தலைவராக இருந்த திரு.சண்முகம் கந்தசாமி அவர்கள் மன்றத்தின் பதில் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

– காரை வசந்தம் – 2006 கலை விழா ஒக்டோபர் 2006 இல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

– மன்ற இணையத்தளம்(karainagar.com) சீரமைக்கப் பட்டு சேவையில் ஈடுபடுத்த ஆரம்பிக்கப்பட்டது.

– காரைநகரில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் யாவும் காரைநகரின் அபிவிருத் தியை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்ட காரை நகர் அபிவிருத்தி சபையினூடாகவே நடைமுறைப் படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

– காரைநகரில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயல் பாடுகளுக்காகவும் அறநெறி, பண்ணிசை, நுண்கலை களின் அபிவிருத்திக்காகவும் மற்றும் முதியோர் நலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணவும் மொத்தமாக ஐந்து லட்சத்து தொண்ணூறா யிரம் இலங்கை ரூபா (ரூ5,90,000.00) காரைநகர் அபிவிருத்தி சபையினூடாக அன்பளிப்பு செய்யப் பட்டது.

– இதில் காரைநகரில் கல்வி பயிலும் 8ம் வகுப்பிற்கு மேற்பட்ட வசதிகுறைந்த, கற்றலில் ஆர்வமுள்ள மாணவர்களின் கல்விச் செலவுக்கு உதவுவதற்கு ரூ20,000 இலங்கை ரூபாவும்

– தங்கோடை சிறுவர் பாடசாலையின் அபிவிருத்திக்கு ரூ 60,00 இலங்கை ரூபாவும்

– யாழ்ற்றன் கனிஷ்ட வித்தியாலயத்தில் நவீன கற்பித்தல் சாதனங்களின் பாவனைக்கு வசதியாக மின்சார இணைப்புச் செய்வதற்கு ரூ100,000 இலங்கை ரூபாவும்

– கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய கனிஷ்ட பாடசாலையான சுப்பிரமணிய வித்தியாசா லைக்கு சுற்று வேலி அமைக்கவும், குடிநீர் வசதி ஏற்படுத்தவும் ரூ50,000 இலங்கை ரூபாவும்

– யாழ்ற்றன் கல்லூரியில் இருந்து பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட செல்வன். கணேசபிள்ளை கமலதீபனின் கல்விச் செலவுக்கு ரூ50,000 இலங்கை ரூபாவும்

– கிழவன்காடு கலாமன்றத்தினால் அறநெறி, பண்ணிசை, நுண்கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குவதற்கு ரூ 80,000 இலங்கை ரூபாவும்

– வட மாகாணத்தில் மூன்றாவது தடவையாக சிறந்த சேவைகளிற்காக முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ50,000 இலங்கை ரூபாவும் காரைநகர் அபிவிருத்தி சபையினூடாக அன்பளிப்புச் செய்யப்பட்டது.

– காரைநகரில் பாலர் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்விக்கான பல ஊக்குவிப்புப் பணிகளையும் இலக்கிய கலைப் பணிகளையும் சிறப்பாக ஆற்றி வந்த வாரிவளவு நல்லியக்க சபையின் நிறுவுனர்களுள் ஒருவரும் முப்பது ஆண்டுகளுக்கு மேலான சபையின் செயற்பாட்டாளருமாகிய அமரர். பத்மநாதன் (பட்டுமாமா) அவர்கள் அமரத்துவமடைந்தபோது அவருக்கு மரியாதை செலுத்தும் நினைவு வணக்கக் கூட்டம் நடத்துவதற்கு அதன் ஏற்பாட்டாளர்களுடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

– ஆருத்திரா தரிசனம் டிசம்பர் 2006 இல் றிச்மன்ட் கில் இந்து ஆலயத்தில் சிறப்புற நடத்தப்பட்டது.

## கனடா-காரை கலாச்சார மன்றத்தின் 2007-2008 ஆண்டு நிர்வாக சபை செயற்பாடுகளின் முக்கிய பதிவுகள்

– 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவானது. தலைவர்: திரு.அருணாசலம் கருணாகரன், செயலாளர்: திருமதி.கிருஷ்ணவேணி சோதிநாதன், பொருளாளர்: திரு.சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம்

– மன்ற இணையத்தளம் karainagar.com மறுசீரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மன்றத் தகவல்களையம் அறிவித்தல்களையும் பிரசுரித்ததுடன் காரைநகருடன் தொடர்புடைய ஒருவர் உலகின் எப்பாகத்தில் மரணமடைந்தாலும் மன்ற இணையத் தளத்தில் உடனுக்குடன் பிரசுரிக்கப்பட்டு வந்தது. இதற்கான தொழில்நுட்ப உதவியை திரு.குலசேகரம் விமலராசா இலவசமாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

– கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு ஐம்பதினாயிரம் இலங்கை ரூபா(ரூ50,000) காரை அபிவிருத்தி சபையினுடாக வழங்கப்பட்டது.

– ரொரன்ரோ பகுதியில் அமைந்துள்ள நகர சபை மண்டபங்கள் (Scarborough Civic Centre, North York Civic Centre) மன்ற செயற்பாடுகளுக்காக இலவசமாகப் பயன்படுத்தும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

– கோடை கால ஒன்று கூடல், தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டிகள், காரை வசந்தம், திருவாதிரைத் திருவிழா ஆகியன 2007, 2008 ஆகிய இரு ஆண்டுகளும் வழமைபோல நடத்தப்பட்டன.

– கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய த்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த பாடசாலையை விட்டு விலகிய காரைநகர் மாணவர்கள், வயது வந்தவர் களுக்கான கணனிக் கற்கை நெறி மீண்டும் நடைபெற ஐம்பதினாயிரம் இலங்கை ரூபா (ரூ50,000) காரை அபிவிருத்தி சபையினூடக வழங்குவதற்கு ஆவன செய்யப்பட்டது.

– காரைநகரில் கல்வி, வளர்ச்சிக்காக மூவாயிரம் கனடிய பொலர்கள் ($3000) மூன்று லட்சத்து இருபத்தோராயிரம் இலங்கை (ரூபா321,000) காரை அபிவிருத்திச் சபையினூடாக அன்பளிப்புச் செய்யப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– இதில் மன்ற அனுசரணையுடன் காரை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட "கல்வி தினத்திற்கு ஒரு லட்சம் இலங்கை ரூபா (ரூ100,000) ஒதுக்கப்பட்டது. இத்தினத்தில் பின்வரும் பரிசுகள் வழங்கப்பட்டன:

– காரைநகரில் கல்வி பயிலும் தரம் ஐந்து முதல் க.பொ.த உ–த வரை அரச பொதுப்பரீட்சைகளில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கும், பல்கலைக் கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கும் பணப்பரிசு வழங்கி ஊக்குவித்தல்

– காரைநகரில் கல்வி பயின்று ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுப் பரிசு வழங்குதல்

– கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயத்தில் கல்விபயின்று பொறியியல் பீடத்திற்குத் தெரிவுசெய்யப் பட்ட செல்வன் பேரம்பலம் புஸ்பராசாவின் கல்விச் செலவுக்கு ஐம்பதினாயிரம் இலங்கை ரூபா (ரூ50,000) ஊக்குவிப்புப் பணப்பரிசு வழங்குதல்.

– காரைநகரைச் சேர்ந்த மூத்த அதிபர்கள், கல்வியாளர்களைப் பாராட்டிக் கௌரவித்தல்

– காரைநகரில் சிறப்பாக இயங்கிவரும் ஒரே ஒரு நுண்கலைக் கல்வி நிலையமான கிழவன்காடு கலா மன்ற ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குவதற்கு ஐம்பதினாயிரம் ரூபா(ரூ50,000) அன்பளிப்பு செய்யப்பட்டது.

– காரைநகரில் கல்வி பயிலும் க.பொ.த சா.த, மற்றும் க.பொ.த உ.த வகுப்பு மாணவர்களுக்கான மேலதிக ஆங்கிலக் வகுப்புகளை நடத்துவதற்கு ஒரு லட்சத்து இருபதினாயிரம் இலங்கை ரூபா (ரூபா120,000) அன்பளிப்பு செய்யப்பட்டது.

– கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான அமரர். தியாகராஜா மகேஸ்வரன் அவர்களுக்கான இரங்கற் கூட்டத்தினை ஆதி அருள் நெறி மன்றத்துடனும் 45 ம் நாள் நினைவு தினத்தையொட்டி நினைவு வணக்க நிகழ்வினை அவரது உறவினருடனும் கனடியத்தமிழர் பேரவையுடனும் இணைந்து நடத்தியிருந்தது.

– காரைநகரில் தரம் 6 முதல் க.பொ.த சா–த வரை கல்வி பயிலும் வசதி குறைந்த, திறமையான 40 மாணவர்களுக்கு உதவுவதற்காக குழந்தைகள் மருத்துவ நிபுணர் டாக்டர் வி.விஜயரத்தினம் அவர்களின் ஆதரவில் "அமரர்.திருமதி.ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசில்" என்ற புலமைப்பரிசில் இரண்டு லட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபா (ரூ245,000) காரை அபிவிருத்திச் சபையினூடாக அன்பளிப்புச் செய்யப்பட்டது.

– காரைநகர் மணிவாசகர் சபைக்கு காரைநகர் மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் சைவசமய பரீட்சை நடத்தி பரிசில் வழங்குவதற்காக ஐம்பதினாயிரம் ரூபா(ரூ50,000) காரை அபிவிருத்தி சபையினூடாக அன்பளிப்பு செய்யப்பட்டது.

– காரைநகர் அபிவிருத்திச் சபை செயலாளர். அமரர் ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர் அவர்களுக்கான இரங்கற் கூட்டம் எமது மன்றத்தினால் நடத்தப்பட்டதுடன் இந்நிகழ்வின் போது அன்னாரின் இறுதிக் கிரியைகளுக்கான செலவுகளுக்காக ஆயிரம் டொலர்கள்($1000)இலங்கை ரூபா 109,500 சேகரிக்கப் பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

– ஈழத்தில் அவலப்பட்ட ஏதிலிகளுக்காக ஜூன் 2007 இல் இரண்டாயிரத்து எண்ணூற்று முப்பது டொலர்களும்($2830), ஜூலை 2008 இல் ஆயிரத்து எழுநூற்றி இருபத்தி ஐந்து டொலர்களும்($1725) தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அன்பளிப்புச் செய்யப் பட்டது.

– ரொரன்ரோ மருத்துவ மனைகளுக்கு உதவும் நிதியுதவி நடை பவனியில் மன்றம் பங்குபற்றியதுடன் அந்நிகழ்வில் ஜூன் 2007 இல் ஐந்நூறு டொலர்களும், ஜூன் 2008 இல் ஐநூற்றி இருபத்திஐந்து டொலர்களும் ($525) அன்பளிப்புச் செய்யப்பட்டது.

– காரைநகர், மொந்திபுலத்தைச் சேர்ந்த திரு.நடராசா சிவனேசன் அவர்களுக்கான சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கான அவசர கோரிக்கைக்குச் சேகரிக்கப் பட்ட ஆறாயிரம் கனடிய டொலர்கள்($6000) (ரூபா 615,000) திரு. சிவனேசன் அவர்களின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

–ஈழத்து சிதம்பர திருத்தொண்டர் சங்கம் – கனடா என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட மன்றத்தின் ஆரபகால உறுப்பினர்களின் விருப்பத்திற்கமைய ஈழத்து சிதம்பர திருப்பணிகளிற்காக இவ்வருடம் 2367 டொலர்கள் ஆலய திருப்பணி சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## கனடா காரை கலாச்சார மன்றத்தின் நிறைவேற்றப் பட்ட பணிகள் ஆகஸ்ட் 2009 – ஜூன் 2010

– 2009ம் ஆண்டுக்கான வைத்தியக்கலாநிதி டாக்டர். விஜயரட்ணம் விசுவலிங்கம் அவர்களின் தாயார் அமரர் திருமதி. ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்தமாக தரம் 6முதல் க.பொ.த வரை கல்வி பயிலும் வசதி குறைந்த திறமையான மாணவர்களுக்கான புலமைப் பரிசில் காரைநகரில் உள்ள 4பாடசாலைகளில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 மாணவர்களுக்கு மாதா மாதம் ரூ.500 வீதம் 12மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

– கடந்த வருட வன்செயல்களினால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து காரைநகரிற்கு வந்திருந்த பாடசாலை சிறார்கள் சுமார் 500 பேர் வரையில் காரைநகரில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் சேர்க்கப் பட்டிருந்தார்கள். இதில் 264 மாணவர்களும், 236 மாணவிகளும் அடங்குவர். காரைநகர் இந்துக் கல்லூரி 175, யாழ்ற்ரன் கல்லூரி 89, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை 51, பாலாவோடை அ.மி.த.க பாடசாலை 59, ஊரி 61, காரை மெய்கண்டான 13, வலந்தலை அ.மி.த.க பாடசாலை 40, வியாவில் அ.மி.த.க பாடசாலை 12. இந்த இடம்பெயர்ந்து காரைநகருக்கு வந்த பாடசாலை சிறார்களுக்கு 150,000 ரூபாய்கள் பெறுமதியான சீருடைகள் 2009 ஒக்டோபர் 30ம் திகதி காரை அபிவிருத்திசபையூடாக வழங்கப்பட்டது.

– காரைநகரில் வசிக்கும் வசதிகுறைந்த பல்கலைக் கழக மாணவர்கள், அவர்களின் அடிப்படை தேவை களை பூர்த்திசெய்யமுடியாமை காரணமாக காரை அபிவிருத்திசபையை நாடியுள்ளார்கள். இந்த மாணவர் களுக்கு உதவும் முகமாக மன்ற இணையத்தளம் www.karainagar.com மூலமாக கனடா வாழ் காரை அன்பர்களை கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களால் வழங்கப்பட்ட நிதிகள். அத்தோடு காரைநகரில் வசதிகுறைந்த சிறார்களும் இதில் அடங்குவர். இந்த உதவிப்பணம் வருடா வருடம், வருடத்தில் இருதடவைகள் மற்றும் மாதாந்தம் என்ற ரீதியில் உதவி வழங்குபவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

– காரைநகரைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவன் வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரனின் மேற்படிப்பு உதவிக்காக மாதாந்தம் 5000 ரூபா வீதம் 4 வருடங்களுக்கு(240,000ரூபாய்கள்) 2010 ஜனவரியில் திரு. கனக.சிவகுமாரன் அவர்களால் வழங்கப்பட்டது.

– குழந்தை நகுல்ராஜ் நக்கீரன், வயது 18 மாதங்கள் இவர் போரில் தனது பெற்றோரை இழந்துவிட்டார். தற்சமயம் இவர் தனது சித்தியின் பராமரிப்பில் உள்ளார். ஆனால் அந்த சித்தியின் கணவரும் கடந்த போரில் இறந்துவிட்டார். இப்படியான சூழ்நிலையில் சித்தியும் இந்த குழந்தையும் எந்தவித வருமானமும் இல்லாமல் உள்ளார்கள். எனவே இக்குழந்தையின் பராமரிப்புச் செலவிற்கு எமது கனடா–காரை கலாச்சார மன்றத்தை அனுகியுள்ளார்கள். கடந்த வன்செயலில் தனது பெற்றோரை இழந்த 18மாதக் குழந்தை நக்கீரனுக்கு 18வயது வரைக்குமான ஓர் நீண்ட கால பராமரிப்பு உதவியை கனடா வாழ் காரை அன்பர் ஒருவர் மனமுவந்து வழங்க முன்வந்துள்ளார். இவருக்கு மாதம் ரூ.2000 வீதம் நீண்டகால உதவித்திட்டமாக அவருடைய 18வயது வரைக்கும் இந்தப்பணம் வழங்கப்படும். (18வயது வரைக்குமான மொத்த பராமரிப்புச் செலவு 4இலட்சத்து 32ஆயிரம் ரூபாய்கள்).

– அத்தோடு இக்குழந்தை நகுல்ராஜ் நக்கீரனுக்கு திரு. செல்வராஜா தம்பையா 10,000 ரூபாய்களும், திரு. ஜெயச்சந்திரன் தம்பிராஜா 5,000 ரூபாய்களும் வழங்கியுள்ளனர்.

– சிறுவன் நகுல்ராஜ் நக்கீரனுக்கு வழங்கிய அதே அன்பர் அடுத்த வருடம் பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மருத்துவ பீட மாணவன் பிறேம்குமார் பிரசாத்திற்காக மாதம் 5000 ரூபா 4வருடங்களுக்கு (240,000 ரூபா) வழங்கும் உதவித் திட்டத்திற்கும் தனது உதவியை வழங்க முன்வந்துள்ளார். இவ்வு தவியை முன்வந்தளித்த அந்த அன்பருக்கு கனடா–காரை கலாச்சார மன்றம் தனது மனமுவந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றது.

– காரைநகரைச் சேர்ந்த கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலத்தில் சென்ற வருடம் 5ம் வகுப்பில் புலமைப்பரிசில் பெற்ற மாணவன் ஜனகாந்தன் ஏகாம்பரம். இவர் தனது இடைநிலைக் கல்வியை யாழ் இந்துக்கல்லூரியில் கற்று வருகின்றார். இவரது க.பொ.த.(உ–த) கல்வி முடியும் வரைக்கான உதவியாக மாதாந்தம் 3000ரூபாய்கள் (6 வருடங்கள் ரூ.216,000) கனடா காரை அன்பர் ஒருவரினால் வழங்கப்பட்டுள்ளது.

– காரைநகரைச் சேர்ந்த செல்வி சிவதர்சினி இரத்தினம் என்பவர் யாழ்ப்பாண பல்கலைக்ழகத்தின் துணைப் பிரிவான இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இசைத்துறையில் கல்வி பயின்று வருகின்றார். இவரது குடும்பநிலைமை காரணமாக இவருக்கு மாதாந்தம் 5000 ரூபா 4 வருடங்களுக்கு(240,000 ரூபா) ஜெயந்தி துரைசாமி என்பவரால் ஜ/ன் மாதம் தொடக்கம் வழங்கிவருகின்றது.

– 19–2–2010இல் ஊரி பாடசாலைக்கு மின்இணைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய்கள் காரை அபிவிருத்திச்சபை மூலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டது.

– 2010ம் ஆண்டுக்கான வைத்தியக்கலாநிதி டாக்டர். விஜயரட்ணம் விசுவலிங்கம் அவர்களின் தாயார் அமரர் திருமதி. ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் காரைநகரில் உள்ள 4 பாடசாலை களில் உள்ள திறமையான வசதிகுறைந்த 40 மாணவர்களுக்கு மாதா மாதம் ரூ.500 வீதம் 12மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

**கனடா-காரை கலாச்சார மன்றத்தின் ஜனவரி 2011 - பெப்ரவரி 2013 காலப்பகுதிக்கான செயற்பாடுகள்**

karainagar.com இணையத்தளம் இக்கால கட்டப் பகுதியில் மேன்மேலும் விரிவுபடுத்தப்பட்டு மிகப்பெரிய அளவில் உலகம் வாழ் காரை மக்களை கவர்ந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. நிதிஅன்பளிப்புகள் மக்கள் கருத்துக்கள் இதில் முக்கியமாகக் குறிப்பிடப் படவேண்டியன. குறிப்பாக சுதர்சன் என்பவருடைய புற்றுநோய் சிகிச்சைக்கான அன்பளிப்பு நிதி PayPal மூலம் உலகம் வாழ் காரை மக்களால் வழங்கப்பட்ட தொகையே மிகக்கூடுதலான தொகையாக இருந்தமை இதன் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு. அத்துடன் தமது அங்கத்துவப்பணத்தையும் இதனூடாக செலுத்தும் அங்கத்தவர்களும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அனைத் துலக காரை மன்றங்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது இணையத்தளத்திலே அவர்களுக்கெனத் தனித்தனியான பகுதிகள் அமைக்கப்பட்டு புதிய வடிவத்தில் 2013 தைப்பொங்கல் தினத்தன்று வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2011 நவெம்பர் மாதத்திலிருந்து ஆகஸ்ட் 2012 காலப்பகுதியில் காரைநகரிலுள்ள பாடசாலைகளுக்கு மன்றத்துடன் இணைந்த பழைய மாணவர் சங்கங்களை அமைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்ற போது முதன் முதலாக கூட்டம் புவயு ஏநுரயசந ர்யடட இல் நடைபெற்றது. காரைநகரின் பிரதான பாடசாலை களுக்கான பழைய மாணவர் சங்கம் அமைப்பதற்கு 3 இணைப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

களபூமி சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயமும் அதன் சார்ந்த பாடசாலைகளுக்கும் திரு. குகனேசபவான் சிவசுப் பிரமணியம், இந்துக்கல்லூரிக்கு – திரு. சிவகுமார் கனகசுந்தரம், யாழ்ரன் கல்லூரிக்கு திரு. மார்க்கண்டு செந்தில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதன் பின்னர் களபூமிப் பாடசாலைக்கு பழைய மாணவர் சங்கம் திரு.வேலுப்பிள்ளை ராஜேந்திரம் தலைமை யில் அமைக்கப்பட்டது. யாழ்ரன் கல்லூரிக்கு எமது மன்றம் முனைந்த போது அக்கல்லூரி பழையமாணவர் கள் முன்வராததால் அக்காரியம் தடைப்பட்டது.

காரைநகர் இந்துக்கல்லூரிக்கு மன்றத்துடன் இணைந்த பழைய மாணவர் சங்கம் ஒன்றை அமைப்பதில் எமது மன்றம் தீவிரமாக ஈடுபட்டு திரு.தர்மலிங்கம் திருச்செல்வம் அவர்களை தலைமையாகக் கொண்டு பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டது. அதன் பிற்பாடும் காரை இந்துக்கல்லூரிக்கு பழையமாணவர் சங்கத்தின் சார்பில் கனடா காரை கலாச்சார மன்றத்தின் பணத்தில் ரூ65,000 இந்துக்கல்லூரியின் விளையாட்டுப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

09-10-2011 இல் பதிரோவது ஆண்டாக 'காரை வசந்தம்" ஸ்காபரோ நகரிலுள்ள சீனக் கலாச்சார கலை அரங்கத்தில் கலை மணமும், காரை மண்ணின் மணமும் பரப்பி கலை ரசிகர்களை வசீகரித்துச் சென்றது. கணக்காய்வாளர் திரு.கந்தையா கனகராசா அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்திருந்தார். இவ்விழாவில் வழமைபோல வாழ்த்துச் செய்திகள், விளம்பரங்கள் அடங்கிய விழாமலரும் வெளியிடப்பட்டது.

07.10.2012 பன்னிரண்டாவது ஆண்டாக அதே சீனக் கலாச்சார கலைஅரங்கில் 'காரை வசந்தம்' நடைபெற்றது. இவ்விழாவிற்கு இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த டாக்டர் கனகமலர் சிறீகாந்தா அவர்கள் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக இலண்டனிலிருந்து வருகை தந்து கலந்து கொண்டு சிறப்பித்திருந்த ஊடகவியலாளர் திரு.இளையதம்பி தயானந்தா மற்றும் காரை நலன்புரிச்சங்கத் தலைவர் திரு.பரமநாதர் தவராஜா அவர்களும் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. அருளானந்தம் செல்வச்சந்திரன் அவர்களும் சிறப்பித்திருந்தமை வரலாறு காணாத பெருமை என்றே சொல்லவேண்டும்.

அத்துடன் ஊடகவியலாளர் திரு.இளையதம்பி தயானந்தாவின் வருகையும் அவருடன் சார்ந்த இலங்கையின் புகழ்பூத்த வானொலிக்கலைஞர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக் காட்சிக் கலைஞர்களும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தமை காரைவசந்தம் என்னும் விழா பல்வேறு கனேடிய தமிழ் மக்கள் மத்தியிலும் பிரபலம் அடைய வாய்ப்பாக இருந்தமை மேலும் சிறப்பு. அத்துடன் ஒவ்வொரு காரை வசந்தங்களிலும் நிகழ்ச்சிகளை வழங்கும் காரைநகர் கலைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துச்செல்வதையும் அவதானிக்கக் கூடியதாக வுள்ளது. வழமைபோல இவ்விழாவிலும் விழாமலர் வெளியிடப்பட்டது.

ஆருத்திரா தரிசனம் – கனடா–காரை கலாச்சார மன்றத்தினால் கனடா றிச்மண்ட் ஹில் இந்து ஆலயத்தில் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற ஆருத்திரா அபிஷேகமும், ஆருத்திரா தரிசனமும் மிகசிறப்பாக நடாத்தப்பட்டிருந்தது. எமது மன்றத்தால் மக்களின் அனுசரனையுடன் அமைத்துக்கொடுக்க ப்பட்ட விசேட திருவாசியில் விசேட மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நடேசப் பெருமான் விசேட தவில் நாதஸ்வர இசை முழங்க ஆனந்தத் தாண்டவமாடிய வண்ணம் உள்வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தது கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தது.

திருவாதிரை உற்சவத்தில் காரைநகரின் கலைஞன் நிஷாந் நந்தகுமார் குழுவினர் இசை நிகழ்ச்சி வழங்கினர். திரு.லக்கிராஜா அவர்கள் பிரதான அனுசரணையாளராக திருவிழாவிற்கான பூசைக்கும் மற்றும் அடியார்களுக்கு வழங்கிய பிரசாதத்திற்கும் நிதியுதவியாக 2000 டொலர்களை வழங்கியிருந்தார். திரு.ரஞ்சன் கணபதிப்பிள்ளை அவர்களின் ஆன்மீக சொற்பொழிவும் இடம் பெற்றன. அத்துடன் மன்றத்தி னால் வெளியிடப்பட்டிருந்த 2013ஆம் ஆண்டிற்கான நாட்காட்டிக் கலண்டரும் இவ்விழாவில் வெளியிடப் பட்டது.

கோடைகால ஒன்றுகூடல் : 2011. 2012 இரு ஆண்டுகளும் வழமைபோல Morningside பூங்காவில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

குளிர்கால ஒன்றுகூடல் 2011 – மக்களின் வேண்டகோளிற்கிணங்க குளிர்கால ஒன்றுகூடல் 2011 டிசெம்பர் 25ம்திகதி Baba Banquet Hall இல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வானது தனிப்பட்ட முறையில் பணம் சேகரிக்கப்பட்டு நடாத்தப்பட்டது. குறிப்பாக இவ்விழா மூலம் குழந்தைகள் மிகவும் சந்தோசமான அனுபவத்தைப் பெற்றிருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

தன்னியக்கத் தொலைபேசி – மன்றத்தின் அறிவித்தல் கள் அனைத்தையும் மக்களுக்கு அறியத்தரும் வகை யில் தன்னியக்க தொலைபேசி சேவை அறிமுகப் படுத்தப்பட்டு மக்களிடம் மிகுந்த பாராட்டையும் பெற்றுள்ளது. இச்சேவையானது விரிவுபடுத்தப்பட்டு லண்டன், சுவிஸ் காரை மன்றங்களுக்கும் கட்டண அடிப்படையில் சேவை வழங்கி வருவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டிருந்தது.

மன்றத்திற்கான நிரந்தர தொலைபேசி: 21.05.2011 மன்றத்திற்கான நிரந்தரமான தொலைபேசி இலக்கம் சேவையில் மிகக் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 416 642 4912 என்ற இலக் கத்தை அழுத்துவதன் மூலம் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் தனித்தனியாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் திறன் போட்டிகள்: சிறுவர்கள் மத்தியில் தமிழ்மொழித்திறனை வளர்க்கவும் சமய ஈடுபாட் டினை ஊக்குவிக்கவும் என மன்றம் நடாத்திவரும் தமிழ்மொழித்திறன், பண்ணிசைப் போட்டிகள் இரண்டு ஆண்டுகளும் Scarborough Civic Centre இல் நடைபெற்றன. 2011ம் ஆண்டில் 5–17வயதுக்குட்பட்ட 51 மாணவர்களும், 2012ம் ஆண்டில் 47மாணவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

பெப்ரவரி 2011: திருமதி. ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் 2011ஆம் ஆண்டு உயர்தரப் பாடசாலைகள் நான்கில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட நாற்பது மாணவர்களிற்கு கற்கைச் செலவுக்காக மாதாந்தம் ஐநூறு ரூபா வீதம் ஒரு ஆண்டிற்கு காரை அபிவிருத்திச்சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் அப்பணம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். இதன் காரணமாக குறிப்பிட்ட தேவைக்காக அனுப்பப்பட்ட நிதியினை வேறு தேவைகளிற்காக காரைநகர் அபிவிருத்தி சபை செலவிட்ட காரணத்தினால் 2011 ஆம் ஆண்டிற்கு பின்னர் திருமதி. ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்த புலமைப் பரிசில் பணம் அனுப்பி வைக்கப்படவில்லை.

– வன்னி யுத்தத்தின்போது தனது பெற்றோர்களைப் பறிகொடுத்த அனாதரவான ஒன்றரை வயதுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுல்ராஜ் நக்கீரன் என்ற குழந்தையினைப் பராமரிக்கும் செலவாக மாதாந்தம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயினை திரு.லக்கிராஜா அவர்கள் பெருமனதோடு வழங்கி வருகின்றார். அப்பணங்களும் தகுந்த முறையில் அந்தச் சிறுவனுக்கு 2012 டிசெம்பர் மாதம் வரை வழங்கப்பட்டுள்ளன.

– பெப்ரவரி 2011: கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஆதரவில் காரைநகரில் 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக விசேட பயிற்சிப் பட்டறைகளை காரைநகர் கல்விக்கோட்டம் நடாத்தியது. இதற்கு எமது மன்றம் சுமார் 107,950.00 அனுப்பி வைத்தது.

– 30.05.2011இல் காரைநகர் ஈழத்துச்சிதம்பர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிதிசேகரிப்பில் பல காரை அன்பர்கள் தம்மாலான நிதியுதவிகளை வழங்கியிருந்தனர். சுமார் 5இலட்சம் ரூபாய்கள($4283.00) அங்கு அனுப்பிவைக்கப்பட்டது.

– காரைஒளி சஞ்சிகை: 23.01.2011 இல் கனடா காரை கலாச்சார மன்றத்தின் வளர்ச்சிப்பாதையில் மற்றுமோர் முக்கிய பதிவாக முதன் முதலாக காரைஒளி சஞ்சிகை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச்சஞ்சிகை யானது காரைநகர் செய்திகளையும் மற்றும் கனடா காரை கலாச்சார மன்றத்தின் செய்திகளையும் தாங்கியதாக முழுவர்ணப் பதிப்பாக வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகையை வெளியீட்டு விழா கனடா செல்வச் சந்நிதி ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

– அத்துடன் அதன் இரண்டாவது சஞ்சிகை 30.06.2011இலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

காரைநகர் மாணவர் நூலகத் திட்டம்– நாகரீகமும், நவீன தொழில்நுட்பங்களும் நாளுக்குநாள் வளர்ச்சி பெற்றுவரும் இன்றைய காலகட்டத்தில் காரைநகரில் ஓர் மாணவர் நூலகம் ஒன்றை அமைக்கும் திட்டம் ஒன்று கல்வி ஆர்வலர்களால் முன்மொழியப்பட்டது. சிறார்கள் முதல் பெரியோர்கள் வரை கல்வி சார்ந்த அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் பல்துறை சார்ந்த நூல்களும், நவீன கற்றல் உபகரணங் களும் உள்ளடக்கப்பட்டு காரை அபிவிருத்திச் சபையினரால் அமைக்கப்படவுள்ள இந்நூல் நிலையத் திட்டத்திற்கு கனடா–காரை கலாச்சார மன்றம் தனது முழு ஆதரவினையும், ஒத்துழைப்பையும் வழங்கி வருவதுடன் இத்திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களையும் நடாத்தியிருந்தது.

இத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல சாத்தியமான வழிகளில் உதவிகள் புரிந்திடவும், நிதி சேகரிக்கவும் என உபகுழு ஒன்று திரு. அமிர்தலிங்கம் நடராஜா அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு கனடா வாழ் காரைநகர் மக்கள் பெருவரவேற்பை வழங்கி 14,332 டொலர்கள் நிதியுதவியினை வழங்கி ஆதரவளித்தார்கள் என்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயம்.

இத்திட்டத்திற்கு தமது முழுமையான ஈடுபாட்டினை வழங்கி கனடாவில் மட்டுமல்லாது ஏனைய நாடுக ளிலும் உள்ள காரை மன்றங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி நிதியுதவிகளை பெற்றுக்கொள்ள வசதி செய்துகொடுத்த எமது இணைப்பாளர் திரு.நடராஜா அமிர்தலிங்கம் அவர்களுக்கு எமது மன்றம் தனது பிரத்தியேகமான மனப்பூர்வமான நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

29.07.2011 இல் நூலககத்திட்டத்தின் ஆரம்பகட்ட கட்டுமாணிப்பணியை ஆரம்பிக்கும் முகமாக

– முதற்கட்ட நிதியாக கூ1726.00 டொலர்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

– இரண்டாவது கட்டமாக கூ10இ000.00 டொலர்களும் அனுப்பி வைக்கப்பட்டது.

– மூன்றாவது கட்டமாக 03.02.2013 இல் கூ2586.00 டொலர்களும் அனுப்பிவைக்கப்பட்டது.

மொத்தம் 54 பேரிடமிருந்து கூ14இ332.00 டொலர்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

05.11.2011 இல் தோப்புக்காடு பாடசாலைக்கு அலுமாரி வாங்குவதற்காக 30,000ரூபா நிதியுதவி வழங்கப் பட்டது.

05.11.2011 இல் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை ஊக்கு விக்கும் முகமாக அவர்களுக்கு காரை அபிவிருத்திச் சபையால் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது. இவ்விழா விற்கு அனுசரணையாக 50,000 ரூபா அனுப்பி வைக்கப்பட்டது.

24.12.2011 கனடா காரை கலாச்சார மன்றத்தினால் களபூமி சுந்தரமூர்த்திநாயனார் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் புவயு ஞநரயசந மண்ட பத்தில் நடாத்தப்பட்டது. இக்கூட்டத்தில் திரு. வேலுப்பிள்ளை ராஜேந்திரம் அவர்களை தலைவராக் கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் பாடசாலை மற்றும் களபூமியிலுள்ள சிறிய பாடசாலைகள் ஆகியன வற்றை விசேடமாக கவனிப்பதற்கு பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் ஒன்று எமது மன்றத்துடன் இணைந்து செயலாற்றக்கூடியதாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. துரதிஷ்டவசமாக பின்னர் அவை இயங்கமுடியாத நிலைமைகள் ஏற்பட்டன.

07.01.2012காரைநகர் மணிவாசகர் சபைக்கு 25 ஆயிரம் ரூபாய்களும் மாணிக்கவாசகர் மடாலயத்திற்கு 50 ஆயிரம் ரூபாய்களும் அனுப்பி வைக்கப்பட்டது.

21.01.2012இல் எமது மன்றத்தால் கடந்த இரண்டு வருடங்களாக காரைநகரில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு நடாத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார் செய்யும் பொருட்டு விசேட பயிற்சிப் பட்டறைகளை காரைநகர் கல்விக் கோட்டத்தினர் நடாத்தி வருகின்றனர். இவ்விசேட பயிற்சிப் பட்டறைகளுக்கு ஆரம்ப ஆயத்தங்களை (வினாத்தாள்) வழங்குவதற்கு 50,000 ரூபாய்கள் வழங்கப்பட்டது.

16.02.2012 இல் காரைநகர் வைத்தியசாலைக்கு கனடா வைத்தியசாலைகளில் பாவிக்கப்பட்ட கட்டில் ஒன்று அமரர் வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு ஞாபகார்த் தமாக அவர்களின் குடும்பத்தினர் காரைநகரிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு அனுகியிருந்தார் கள். எமது மன்றம் இதற்கான அனுப்பும் செலவை ஏற்று $425.00 டொலர்கள் செலவழித்து அனுப்பி வைத்தது.

18.02.2012 எமது மன்றத்தால் 600 டொலர்கள் பெறுமதியான Laptop Computer ஒன்று காரைநகர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

08.02.2012இல் காரைநகர் இந்துக்கல்லூரியின் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப்போட்டிக்கு எமது மன்றத்தால் 65,000 ரூபாய்கள் அப்போது தற்காலிகமாக மன்றத்துடன் இயங்கிய காரை இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கி அப்பணம் காரைநகர் இந்துக்கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

“முதுசங்களைத் தேடி“ என்னும் தலைப்பில் கனடா காரை கலாச்சார மன்றமும் காரை நலன்புரிச் சங்கமும் இணைந்து நீண்ட கால செயற்திட்டம ஒன்றினை முதன்முறையாக முன்னெடுத்துள்ளனர். அதாவது எங்கள் முன்னோரின் அரிய ஆக்கங்களையும் அவர்கள் பற்றிய தகவல்களையும் மீள உலகெங்கும் வாழும் எங்கள் ஊர் மக்கள் முன்கொண்டு வருதலேயாகும். இத்தேடல் பயணத்தில் அனைத்துக் காரை மன்றங்களும் இணைந்துள்ளன. இந்நூல் வெளியீட்டின் மூலம் கிடைக்கும் நிதி முதுசங்களைத் தேடி என்னும் திட்டத்தின் ஊடாக மீண்டும் இன்னும் ஒரு நல்ல படைப்பை வெளிக்கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்படும். இதில் முதலாவதாக “காரைநகர் மான்மியம்“ என்னும் நூலின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டுவிழா 7.02.2012இல் காரைநகரில் ஈழத்துச்சிதம்பர இரதோற்சவநாளில் வெளியிடப் பட்டது. அதனைத் தொடர்ந்து காரை வசந்தம் 2012 விழாவிலும் இந்நூல் வெளியிடப்பட்டது. கனடாவில் வெளியிடப்பட்டது. இதில் விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற பணம் முழுவதும் லண்டன் காரை நலன்புரிச்சங்கத்தினரால் முதுசங்களைத் தேடி நிதியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

மே. 2012: சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவுக்கு 50,000ரூபா அனுப்பி வைக்கப்பட்டது.

– யாழ்ரன் கல்லூரியில் கணினி ஆசிரியர்களின் சம்பளம் வழங்கவென முதல் 6 மாதத்திற்கான வேதனங்களை காரை நலன்புரிச்சங்கமும் அடுத்த 6 மாதத்திற்கான வேதனங்களை கனடா காரை கலாச்சார மன்றமும் வழங்க இணங்கியதற்கிணங்க 80,000 ரூபாய்கள்(ஜூலை 2012 மாதம் தொடக்கம் டிசெம்பர் 2012 வரை) அனுப்பிவைக்கப்பட்டது.

– அத்துடன் யாழ்ரன் கல்லூரிக்கு கொம்பியூட்டர் அறைக்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்துவதற்காக மேலும் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

26.12.2012 கனடா காரை கலாச்சார மன்றம், லண்டன் காரை நலன்புரிச் சங்கங்கம் ஆகியனவற்றின் ஆதரவில் 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையான சித்திகளைப் பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கு பாராட்டுவிழா ஒன்று நடாத்தப்பட்டது. இவ்விழாவிற்கு எமது மன்றம் சார்பில் 30 ஆயிரம் ரூபாய்கள் வழங்கப்பட்டது.

– திருமதி. இரத்தினபூபதி சோமசுந்தரம் அவர்கள் கடந்த வருடம் மறைந்த தமது கணவர் அமரர் சோமசுந்தரம் அவர்களின் ஞாபகார்த்தமாக நன் கொடையாக சுமார் 3000 டொலர்களை எமது மன்றத் திற்கு வழங்கியிருந்தார். இவ்வுதவிப்பணம் முழுவதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயமாக வறியோர்களையே சென்றடைய வேண்டுமென்ற அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கீழ்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

– காரைநகர் மாணவர் நூலகத்திற்கு அன்பளிப்பாக $2000 டொலர்களும்

– காரைநகர் அரசாங்க அதிபர் பணிமனையினால் சர்வதேச வறிய சிறுவர்கள், முதியோர் தினத்தை யொட்டி சுமார் 1இலட்சம் ரூபா பெறுமதிக்கு வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் முதியோர்களுக்கு உடுபிடவைகளும் வழங்கப்படவுள் ளன

– களபூமி விளானையில் இயங்கிவரும் திருமதி. ராசமலர் நடராசா அவர்கள் நடாத்திவரும் விளானை முத்தமிழ் பேரவைக்கு ரூபா 20,000 வழங்கப்பட்டது. இப்பேரவையில் அப்பகுதியைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு இலவச சங்கீத, மிருதங்க. பரதநாட்டிய வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

– மற்றும் வாழ்வாதார வசதி குறைந்த அருட்செல்வி என்கின்ற வறிய குடும்பத்தினரிற்கு ரூபா 10,000 வழங்கப்பட்டது.

– டிசெம்பர் திருவாதிரை உற்சவ காலத்தில் காரைநகரில் வழமைபோல் மன்றத்தால் ஒவ்வொரு வருடமும் வழங்கப்பட்டுவரும் உதவியாக மாணிக்க வாசகர் அன்னதானசபைக்கு 50,000 ரூபாய்கள் வழங்கப்பட்டது.

– அத்துடன் மணிவாசகர் சபைக்கு 25,000 ரூபாய்கள் வழங்கப்பட்டது.

– சுப்பிரமணியம் வித்தியாசாலைக்கு பாடசாலையின் அபிவிருத்திக்கு 50,000 ரூபாய்கள் வழங்கப்பட்டது.

– கனடா காரை கலாச்சார மன்றத்தினால் வழங்கப் படும் உறவுக்குக் கரம் கொடுப்போம்... திட்டத்தின் கீழ் மீண்டும் மூவருக்கு உதவித்தொகை அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

– காரைநகரைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வதிவிடமாகவம் கொண்ட கனகலிங்கம் சுதர்சன் எனபவரது இரத்தப்புற்றுநோய் சிகிச்சைக்கு மிகக் குறுகிய காலத்திற்குள் கனடா, மற்றும் உலகம் வாழ் காரை மக்களும் வழங்கிய அன்பளிப்புக்கள் மூலம் பெறபட்ட நிதியான 12,443 டொலர்கள் அவருக்கு உரிய முறையில் அனுப்பி வைக்கப்பட்டது.

– இத்திட்டத்தின் கீழ் காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த திரு.கனேசன் காந்தரூபன் என்பவரது மகன் கலைப்பிரியன்(இவருக்கு இருதயத்தில் துவார சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது) என்பவருக்கு சுமார் 92,800 ரூபாய்கள் எமது மன்றத்தினால் காரை அபிவிருத்திச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

– செல்வி வளர்மதி கந்தசாமி வயது 29. இவருக்கான சிறுநீரகமாற்றுச் சத்திர சிகிச்சையின் பின்னரான வைத்தியச் செலவுகளுக்கு கனடா வாழ் அன்புள்ளங் கள் வழங்கிய 725 டொலர்கள் (92,800 ரூபாய்கள்) முதற்கட்டமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

– இந்நிதியுதவிகளை தாமாக முன்வந்து சேகரித்துத் தந்த அன்புள்ளங்களுக்கும் மற்றும் தனியாக வழங்கிய அன்புள்ளங்களுக்கும் எமது அன்புகனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

– அஞ்சலி – மன்ற கொள்கைக்கு அமைய இங்கு அமரத்துவமடைந்த காரைநகரைச் சேர்ந்தவர்களுக்கு அஞ்சலி நிகழ்வுகளில் மன்ற உறுப்பினர்கள் நேரில் சமூகமளித்து மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவது வழமைபோல் ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றது.

– இதில் முக்கிய விடயமாக ஜனவரி 2011இல் எமது மன்றத்தின் ஆஸ்தான வித்துவானும் கனடா காரை கலாச்சார மன்றத்தின் கீதத்தைப் பாடியவருமான எமது காரை மண்ணைச் சேர்ந்த கலைஞன் சங்கீத பூஷணம் காரை ஆ.புண்ணியமூர்த்தி அவர்களின் திடீர் மறைவு அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியிருந்தது.

– அத்துடன் ஜனவரி 2012இல் எமது மன்றத்தின் முன்னாள் தலைவர் திரு.கருணாகரன் அவர்களின் மறைவு செய்தியும் சோகத்தில் ஆழ்த்தியிருந்தது. எமது மன்றம் அன்னாரின் மறைவுக்கு அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடா–காரை கலாச்சார மன்றத்தினால் நிறைவேற்றப் பட்ட செயற் திட்டப் பணிகள் (மார்ச்2013 – நவ.2013)

– காரை அபிவிருத்தி சபை மாணவர் நூலக அமைப்பதற்கான நிதி உதவி ஏப்.2013 இல் (4000 டொலர்கள்) நான்கு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து எழுநூற்றி அறுபத்தி ஐந்து ரூபாவும் (492,765), செப். 2013 இல் (2760 டொலர்கள்) மூன்று லட்சத்தி ஐம்பத்தி மூவாயிரத்து முன்னூறு ரூபா வும்(353,300) மொத்தம் 846,065 (6760டொலர்கள்) வழங்கப்பட்டது.

– தாய், தந்தையை இழந்த காரைநகர் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணலைச் சேந்த சிறுவன் நக்கீரனுக்கான மாதாந்த உதவிப் பணம் நாற்பதினாயிரம் ரூபா (40,000) காரை நகர் அபிவிருத்தி சபையினூடாக வழங்கப்பட்டு வருகின்றது. (அநுசரணை: திரு.ப.லக்கிராஜா, மே2013)

– 2013 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய தரம் 05 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சைகள், பயிற்சி வகுப்புகள் ஒரு லட்சத்து முப்பதினாயிரம் ரூபா (130,000) நிதி உதவியுடன் அபிவிருத்தி சபை ஊடாக நடாத்தப்பட்டது.

– காரைநகர் மணற்பிட்டியைச் சேர்ந்த பாலகௌரி சிவநேசன் அவர்களுக்கு சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்கான நிதியுதவியை பத்து லட்சத்து ஆயிரத்து முன்னூறு (1.001,300) காரை அபிவிருத்தி சபையி னூடாக வழங்கப்பட்டது. (செப்.2013)

– காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த வன்னிப் போரில் கண்பார்வை இழந்த கந்தசாமி ஐங்கரனுக்கான மருத்துவச் செலவுக்கான நிதி உதவி ஐந்து லட்சத்து இருபத்தி மூவாயிரத்து அறுநூறு ரூபா (523,600), வாழ்வாதாரத்திற்கான நிதி வங்கியில் நிலையான வைப்பிலிட்டும் வழங்கியமை. (செப்.2013)

– வறுமைக் கோட்டின் கீழ் வாழும் திருமதி.கயல்விழி அவர்களுக்கு வீடமைப்பதற்கான நிதியுதவி இருபத்தி நாலயிரத்து நானூறு (24,400)காரை அபிவிருத்திச் சபையினூடாக வழங்கப்பட்டது.

– சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை பரிசளிப்பு விழாவிற்கான நிதியுதவி ஐம்பதினாயிரம் ரூபா(50,000) காரை அபிவிருத்தி சபை ஊடாக அனுப்பி வைக்கப் பட்டது. (நவ.2013)

– காரைநகர் மணிவாசகர் சபையினால் நடத்தப்பட்ட சமயபாடப் பரீட்சை பரிசளிப்பு விழாவுக்கான நிதியுதவி ஐம்பதினாயிரம் ரூபா(ரூபா50,000)காரை அபிவிருத்தி சபையினூடாக அனுப்பி வைக்கப்பட்டது.(நவ.2013)
– கோடை கால ஒன்று கூடல் ஜூலை 20, 2013 அன்று பூங்காவில் சிறப்பாக நடத்தப்பட்டது. இம்முறை முதல் முறையாக சிறுவர்களின் கலைத்திறன் காண் நிகழ்வுகளும் சதுரங்கப் போட்டியும் நடைபெற்றது.

– காரை வசந்தம்– 2013 விழாவினையொட்டிய தமிழ்த்திறன், பண்ணிசைப் போட்டிகள் Scarborough Civic Centre இல் நடத்தப்பட்டது.

– கனடவில் வதியும் எம்மை விட்டுப் பிரிந்த உறவுகளான அமரர்.சின்னத்தம்பி தம்பிராஜா, அமரர்.பரஞ்சோதி பரமேஸ்வரி, அமரர்.கனகசபாபதி மனோரஞ்சனா, அமரர்.அருணாசலம் செல்வரட்ணம் ஆகிய உறவுகளின் இறுதி மரியாதைக்கு வைக்கப்படும் மலர்வளையத்திற்கான செலவு முறையே பாலகௌரி சிவநேசன் மருத்துவ நிதியம்( $165), கைதடி முதியோர் சாந்தி நிலையம்(ரூ12500), ஐங்கரன் கந்தசாமி மருத்துவ நிதியம் (கூ165), கைதடி முதியோர் சாந்தி நிலையம் ($100) ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டது.
– காரைநகர் செய்திகள் உடனுக்கு உடன் எமது செய்தித் தொடர்பாளர் திரு.பாரதி நடராஜாவின் உதவியுடன் பெறப்பட்டு மன்ற இணையத்தளத்தில் நிழற் படங்களுடன் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.
– மன்றம் தொடர்பான செய்திகளும் உலகின் எப்பாகத்தில் வதியும் எமது உறவுகள் எவராவது காலமாகும்போது அந்த மரண அறிவித்தல்களும் (இலவசமாக) பிரசுரிக்கப்படுகிறது.

கனடா–காரை கலாச்சார மன்றம் 2014ம் ஆண்டு காரைநகர் பாடசாலைகளின் மேம்பாட்டிற்காக வழங்கிய நிதி உதவிகளின் விபரம் வருமாறு:

**1. ஊரி அ.மி.த.க.பாடசாலை:**

யா–ஊரி அ.மி.த.க பாடசாலைக்கு பொருளாதாரத்தில் பின் தங்கிய கற்றலில் இடர்படும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான திட்டத்திற்காக 214,810 ரூபா வழங்கப்பட்டுள்ளது.
இப்பாடசாலையில் 145 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்களில் 90 விகிதமான மாணவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்ட குடும்பங்களை சார்ந்த மாணவர்களாவர். அத்துடன் 32 மாணவர்கள் வன்னி யுத்தத்தில் இருந்து மீளக் குடியமர்ந்த பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்த நிலையில் பாதுகாவலருடன் வாழும் பிள்ளைகளாவர்.
கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஊடாக வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் இம்மாணவர் களிற்கான கற்றல் உபகரணங்களான பென்சில், கொப்பிகள், சிற்றுண்டி, மற்றும் மின்சார கட்டணம், மேலதிக ஆசிரியர் சம்பளம் மற்றும் கற்றல் தேவை களிற்கான காரியாலய உபகரணங்கள் என்பனவும் ஒரு வருடத்திற்கு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**2. வடக்கு அ.மி.த.க. பாடசாலை(சடையாளி):**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை(சடையாளி) பாடசாலை கணனி அறிவை விருத்தி செய்தல் 68,000 ரூபாவும் ஆங்கில அறிவை விருத்தி செய்தலுக்கு 30,000 ரூபாவும் மொத்தம் 98,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் 2014 சித்திரை மாதம் முதல் 2014 மார்கழி வரை மேற்படி மேலதிக வகுப்புக்கள் இடம் பெறுகின்றன.

அத்துடன் மெல்லக் கற்கும் 11 மாணவர்களிற்கான மூன்று மாத பயிற்சி வழங்குவதற்கு மாதம் ஒன்றிற்கு 2500 ரூபா வீதம் மூன்று மாதத்திற்கும் ஆகும் ஆசிரியர் கொடுப்பனவு, செயலட்டை தயாரித்தல், என்பவற்றிற்கு 7500 ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இவ் வருடம் புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் இவர்களிற்கான மேலதிக வகுப்புக்கள் நடைபெறு கின்றன.

**3. வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை (அப்புத்துரை):**

– வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை (அப்புத்துரை) ஆங்கில, கணனி கல்விக்கான தொண்டாசிரியரின் கொடுப்பனவு (ஜூன்2014 – டிச.2014) ரூ 36,000 வும் இணைப்பாடவிதான செயற்பாடு ரூ12,000வும் Printer Toner ரூ13,500 வும், காகிதாதிகள் கொள்வனவு 15,000 ரூபாவும், அத்துடன் 05.10.2014 அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு பரிசுப்பொருள்களிற்கான செலவாக 24,000 ரூபாய்கள் மொத்தம் 100,500 ரூபா வழங்கப்பட்டது.

**4. பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை:**

– பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆங்கில பாட விருத்திக்கான உதவியாக ரூ40,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**5. வியாவில் சைவ வித்தியாலயம்:**

– வியாவில் சைவ வித்தியாலயம் பிரதி எடுக்கும் இயந்திரம் (Photo Copier) கொள்வனவுக்கான நிதியுதவியாக ரூ 56,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**6. சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை:**

– சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான உதவி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுக்காக 156,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**7. யாழ்ற்ரன் கல்லூரி ஆரம்ப பாடசாலை (கோவிந்தர் பள்ளிக்கூடம்):**

கல்லூரி ஆரம்ப பிரிவு கோவிந்தர் பாடசாலை கற்றல் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் படங்களை காட்சிப்படுத்தல் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 30,000 ரூபா வழங்கப்பட்டது.

**8. வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை:**

வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையில் இருந்து அதிபர் எஸ்.இளங்கோ அவர்களினால் கோரப்பட்ட தற்கு இணங்க விசேட கற்றல் செயற்திட்டத்திற்கான

– சிறுவர் வாசிப்பு நூல் கொள்வனவு – 2,000 ரூபா

– அப்பியாசக் கொப்பிகள் – 5,000 ரூபா

– பென்சில் பேனா – 1000 ரூபா

– கணணி மென்பொருள் – 500 ரூபா

– கோவை மட்டைகள் – 600 ரூபா

– DVD Player 6,500 ரூபா.

மொத்தம் 15,600 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

9. தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை:

தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசா லையில் இருந்து 18.08.2014 திகதியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தில் கற்றல் தேவைகளை மேம்படுத்துவதற்கு

| | |
|---|---|
| – TV | – 25,500 ரூபா |
| – 500W stabilizer | – 4500 ரூபா |
| – 7011 Radio Set | – 10,500 ரூபா |
| – Innovex DVD Player | – 5000 ரூபா |

இவற்றுடன் மெல்லக் கற்கும் மாணவர்களிற்கான ஆங்கில வகுப்பிற்காக மாதாந்தம் 2,500 ரூபா வீதம் ஒரு வருடத்திற்கு 30,000 ரூபாவும், மொத்தம் தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலைக்கு 75,500 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**10. மெய்கண்டான் வித்தியாசாலை:**

பின்தங்கிய சூழலில் அமைந்துள்ள இப்பாடசாலையின் வேண்டுகோள்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, கனடா காரை கலாச்சார மன்றத்தின் நிர்வாக சபையினரால் பின்வரும் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற கனடா காரை கலாச்சார மன்றம் நிதியுதவி அளித்துள்ளது.

– பின்னூட்டல் வகுப்பு – மாதம் ஒன்றிற்று 3,500 ரூபா வீதம் 12 மாதங்களிற்கு மொத்தம் – 42,000 ரூபா

– மாணவர்களுக்கு தவணைக்கு ஒருமுறை போட்டிகள் நடாத்தி ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்குவதற்கு தவணை ஒன்றிற்கு 3,000 வீதம் 3 தவணைகளிற்கும் மொத்தம் – 9,000 ரூபா

– மாணவர் முதல்வர்களுக்கு சின்னம் சூட்டு விழா, கழுத்துப்பட்டி, சப்பாத்து என்பவற்றிற்கு மொத்தம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7,000 ரூபா
– வாய்ப்பாடு 1" தர 6" ஒன்றிற்கு 2750 ரூபா
– பொன்மொழிகள் தொங்கவிடுதல் ஒன்று மட்டும் – 4,500
– ஆரம்ப விஞ்ஞான செயல்முறை உபகரணங்கள் தயாரித்தல், காற்றாடி, திசைகாட்டி, திசைஅறி கருவி, மின் சுற்றுக்கான பற்றிப் பெட்டி, வீதிச் சமிச்க மற்றும் உபகரணங்களுக்கான நிதி மொத்தம் – 15,000
– சிறுவர் நாடக பயன்பாட்டிற்காக மிருதங்கம், புத்தளிப்பு கருவிக்கான நிதி மொத்தம் – 7,500 ரூபா
– மலசல கூட திருத்தம் – 10,000 ரூபா
– மாணவர்களுக்கான சிறுவர் நாடகம், திருக்குறள் போட்டி, சித்திரப் போட்டி, தமிழ் தின போட்டி, ஆங்கில தினப் போட்டி, கணிதத்திறன் போட்டி போன்றவற்றிற்கு பாடசாலை மட்ட ஊக்குவிப்பு வரிசு வழங்குவதற்கான நிதி மொத்தம் – 5,000 ரூபா
மேற்படி 9 திட்டங்களிற்காக கனடா காரை கலாச்சார மன்றம் 102,750ரூபா(ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது) வழங்கப்பட்டுள்ளது.

**11. சுப்பிரமணியம் வித்தியாசாலை:**

மெல்ல கற்போர் 40 மாணவர்களிற்காக மேலதிக மாலை நேர வகுப்பு செயற்திட்டத்திற்கு 85,000 ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளது.

**12. ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை:**

– ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை 25 வருடங்களின் பின்னர் 01.09.2014 அன்று மீண்டும் கல்விப் பணிகளிற்காக இயங்க ஆரம்பித்து வைக்கப்பட்டது. உடனடி காரியாலய உபகரணங்கள் கொள்வனவிற்காக 10,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**யாழ்ற்றன் கல்லூரி:**

– யாழ்ற்றன் கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க தகவல் தொழில் நுட்ப ஆய்வு கூடத்திற்கான கணனிகள் கொள்வனவுக்காக 5 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

**கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம (காரைநகர் இந்துக் கல்லூரி):**

– கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் பல்லூடக அறையை மேம்படுத்தலும், தகவல் தொழில் நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்தலுக்குமான திட்டத்திற்கு ரூ13,60,000 ரூபாவிற்கு உள்ளான நிதி ஒதுக்கப்பட்டு இதுவரை 6 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் காரைநகரில் இன்னோரென்ன தேவைகளிற்காக இவ்வாண்டு(2014) கனடா காரை கலாச்சார மன்றத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவிகள் வருமாறு:

– காரை அபிவிருத்தி சபையினால் நடத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் கருத்தரங்கிற்கு 110,000 ரூபா வழங்கப்பட்டது
– திரு.தம்பையா அம்பிகைபாகன் (கொழும்பு வலய முன்னாள் ஆசிரிய ஆலோசகர்) அவர்களினால் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கிற்கு 43,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.
– காரைநகர் பிரதேச மருத்துவ மனைக்குத் தேவையான 5 நோயாளர் படுக்கைகள் (Bed with mattress Stainless Steel)கொள்வனவுக்கான நிதியுதவியாக ரூ150,000 வழங்கப்பட்டுள்ளது.
– வேதரடைப்பு ஆரம்ப பாலர் பாடசாலைக்கு குடிநீர் தாங்கி ஒன்று வழங்குவதற்கு 10,000 ரூபாய்கள் வழங்கப்பட்டது.
– ஆரம்ப பாடசாலைகளின் கற்றல் உபகரணம் (Pin Boards) 60,000 ரூபா செலவில் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.
– காரை மத்தி மேம்பாட்டு கழகத்தினரால் 11.11.2013 மற்றும் 11.04.2014 திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட நிதிவேண்டுகை தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு காரை மத்தி மேம்பாட்டு கழகத்தினரின் செயற்பாடுகள் மிகவும் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வரவு செலவு விபரங்கள் கனடா காரை கலாச்சார மன்றத்திற்கு அவ்வவ்பொழுது அனுப்பி வைக்கப் படுகின்றது. காரை மத்தி மேம்பாட்டு கழக அறிவக நிலையத்தின் செயற்பாடுகளிற்காக 20,000 ரூபாய்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

– கனடாவில் மரணத்துவம் அடைந்த காரைநகர் மக்களின் இறுதி அஞ்சலி நிகழ்வின் போது கனடா காரை கலாச்சார மன்றத்தினரால் மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்வது வழமையாகும், மலர் வளைத்துக்கு செலவிடப்படும் (அண்ணளவாக 100 டொலர்கள்) பணத்தினை இவ்வருடம்(2014) முதல் புண்ணிய தேவைகளிற்காக அமரத்துவம் அடைந்த மக்களின் சார்பாக வழங்குவது எனவும் தீர்மானிக்கப் பட்டு இவ்வருடம் அமரத்துவம் அடைந்தவர்கள் சார்பாக இதுவரை 700 டொலர்கள் காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்திற்கு பயிற்சி புத்தகங்கள் பெற்றுக் கொடுப்பதற்காக ஒதுக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது.


**மனிதாபிமான சேவைகளிற்கான உதவிகள்:**


– வன்னிப் போரில் பாதிக்கப்பட்ட செல்வராசா நிலாமதியின் காது கேட்பதற்கான சிகிச்சைக்கான நிதியுதவியாக 368,000 ரூபா அனுப்பி வைக்கப்பட்டது.

– இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் "காரை வசந்தம் – 2014" நிகழ்வுகளின் மூலம் திரட்டப்படும் நிதியில் இருந்தும் மன்றத்தின் நிதியிலிருந்தும் காரைநகரில் தற்போது இயங்கி வரும் தரம் 1 முதல் தரம் 5 வரையான ஆரம்ப பாடசாலைகளின் வருடாந்த அடிப்படை, அத்தியாவசிய தேவைகளான மேலதிக வகுப்புகளிற்கான ஆசிரியர் சம்பளம், மெல்லக் கற்கும் மற்றும் கற்றலில் இடர்படும் மாணவர்களிற்கான விசேட வகுப்புகளிற்கான மேலதிய ஆசிரியர் சம்பளம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAI SAIRAM
## Auto Collision



The Collision Specialist - Expert in Auto Body Repair
We cover your insurance deductible
A to Z auto works

**Krish**
**C: 416 829 6943**
**D: 416 269 7557**
**F: 416 269 7447**

122 Manville Rd, Unit # 1, Scarborough, ON M1L 4J5
E-mail: sairamauto@hotmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-காரை கலாச்சார மன்றம்

# 1989- 2014

இவ்வாண்டு(2014) வெள்ளி விழாக் காணும் கனடா-காரை கலாச்சார மன்றத்தில் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளை கடந்த 25 ஆண்டு காலப்பகுதியில் வகித்து மன்றத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றோர் விபரம்:

தலைவர்

| | |
|---|---|
| 1989 – 2002 | திரு. சபாபதி சபாநடேசன் |
| 2002 – 2003 | திரு. முருகேசு காசிப்பிள்ளை |
| 2003 – 2005 | திரு. வேலுப்பிள்ளை இராஜேந்திரம் |
| 2005 – | திரு. மயில்வாகனம் கோபாலசுதந்திரன் |
| 2006 | திரு. முருகேசு காசிப்பிள்ளை |
| 2006 | திரு. சண்முகம் கந்தசாமி (பதில்) |
| 2007 – 2008 | திரு. அருணாசலம் கருணாகரன் |
| 2009 | திரு. கந்தையா சிவசோதி(இளையபாரதி) |
| 2009 – 2012 | திரு. ரவி ரவீந்திரன் |
| 2013 | திருமதி. மலர் குழந்தைவேலு |
| 2013 – 2014 | திரு. தம்பிஜயா பரமானந்தராஜா |

செயலாளர்

| | |
|---|---|
| 1989 – 1992 | திரு. தில்லையம்பலம் விசுவலிங்கம் |
| 1992 – 1999 | திரு. வேலுப்பிள்ளை இராஜேந்திரம் |
| 1999 – 2003 | திரு. கனகசுந்தரம் சிவகுமாரன் |
| 2003 – 2004 | திரு. தர்மலிங்கம் பரமசிவம் |
| 2004 – 2005 | திரு. மார்க்கண்டு செந்தில்நாதன் (பதில் செயலாளர்) |
| 2005 | திரு. கந்தையா சந்திரசேகர் |
| 2006 | திரு.கனக. சிவகுமாரன் |
| 2007– 2008 | திருமதி.கிருஷ்ணவேணி சோதிநாதன் |
| 2009 | திரு. கந்தையா பஞ்சலிங்கம் |
| 2009– 2012 | திருமதி.மலர் குழந்தைவேலு |
| 2013 | திருமதி.கருணாவதி சுரேந்திரகுமார் |
| 2013 | திரு. மார்க்கண்டு செந்தில்நாதன் |
| 2014 | திரு. பிரமேந்திரதீசன் திரவியநாதன்(பதில் செயலாளர்) |

பொருளாளர்

| | |
|---|---|
| 1989 – 990 | திரு. நடராசா அமிர்தலிங்கம் |
| 1990 – 1991 | திரு. சபாரத்தினம் பாலச்சந்திரன் |
| 1991 – 1999 | திரு. கனகரட்ணம் ஸ்ரீஸ்கந்தராஜா |
| 1999 – 2002 | திரு. சிற்றம்பலம் சச்சிதானந்தம் |
| 2002 – 2003 | திரு. சிவசுப்பிரமணியம் குகநேசபவான் |
| 2003 – 2005 | திரு. வேலாயுதபிள்ளை மகேஸ்வரன் |
| 2005 – | திரு. தம்பிஜயா பரமானந்தராசா |
| 2006 | திரு. கணேசன் திருக்குமரன் |
| 2007 – 2008 | திரு. சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம் |
| 2009 | திரு. செல்லத்துரை தேவகுமார் |
| 2009– 2012 | திரு. சங்கரப்பிள்ளை தவராஜா |
| 2013 – 2014 | திரு. திருநாவுக்கரசு பேரின்பராஜா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பரம் திருத்தொண்டர் சங்கம், கனடா

மேற்படி சங்கத்தை கனடாவில் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்வதற்காக 05.08.1989 அன்று அமைக்கப்பட்ட அமைப்புக்குழு உறுப்பினர்கள்

1. வேலுப்பிள்ளை கந்தையா
2. சபாபதி சபாநடேசன்
3. தில்லையம்பலம் விசுவலிங்கம்
4. நாகலிங்கம் குஞ்சிதபாதம்
5. நடராசா அமிர்தலிங்கம்
6. கனகரத்தினம் ஸ்ரீஸ்கந்தராசா
7. கண்மணிராசா சிவராசா
8. மருத்துவகலாநிதி.கனகரத்தினம் விஜயரத்தினம்
9. சபாரத்தினம் பாலச்சந்திரன்

01-10-1989ல் லான்ஸ்டவுண் அவென்யுவில் உள்ள தமிழஉ கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்ற அங்குராஉப்பணப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது நிர்வாக சபை

## முதலாவது நிர்வாக சபை

## 1989-1991

| | |
|---|---|
| தலைவர்: | சபாபதி சபாநடேசன் |
| உப-தலைவர்: | மருத்துவ கலாநிதி.கனகரத்தினம் விஜயரத்தினம் |
| செயலாளர்: | தில்லையம்பலம் விசுவலிங்கம் |
| உப-செயலாளர்: | விமலாதேவி விஜயரத்தினம் |
| பொருளாளர்: | நடராசா அமிர்தலிங்கம் |

நிர்வாக உறுப்பினர்கள்:

கனகரத்தினம் ஸ்ரீஸ்கந்தராசா
நாகலிங்கம் குஞ்சிதபாதம்
கண்மணிராசா சிவராசா
பொன்னையா கணபதிப்பிள்ளை
மயில்வாகனம் கோபாலசுதந்திரன்
சுப்பிரமணியம் மனோகரராசா

எண் பார்வையாளர்: திரு.அருணாசலம் கருணாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய ஓர் அனுபவப் பகிர்வு

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா வைபவம் சிறப்பாக நடைபெற்றது. அந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆங்கிலப் புலமையை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. மிக – மிகத் திறமையாக பல நிகழ்ச்சிகளை அம்மாணவர்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்தியதையிட்டு பாடசாலை அதிபர்இ ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டிய கடமை எமது காரைநகர் மக்களுக்கு உண்டு.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதியோர் வாக்கு. எதை கற்க வேண்டும் என எண்ணுகிறோமோ அதை இளமையில் ஐயந்திரிபற கற்றுக் கொள்ளல் வேண்டும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற வாக்கிற்கு இணங்க எழுத்துஇ மொழி பயிலல் மாணவர்களுக்கு மிக முக்கியமானது. ஆங்கில மொழியும்இ கணனி அறிவும் இக்காலத்தில் மாணவர்களுக்கு மாத்திரமல்ல வளர்ந்தவர்களுக்கும் இன்றியமையாதவை. ஆங்கிலம் சர்வதேச மொழிஇ இணைப்பு மொழி – உலகின் எந்த மூலையிலும் ஆங்கிலம் பேசப்படுகின்றது. இந்த மொழியின் அவசியத்தை எமது காரைநகர் மாணவர்கள் உணர்ந்து கற்றுக் கொள்ளல் அவசியம்.

காரைநகர் மணியம் வீதியில் அமைந்துள்ள கிட்ஸ் பார்க்கில் பயிலும் மாணவர்களின் ஆங்கிலப்பாட்டு போட்டிக்கு வருடாவருடம் மத்தியஸ்தராகக் கடமையாற்றும் வாய்ப்புக் கிட்டுகின்றது. நிர்வாக சபை உறுப்பினர்களும், ஆசிரியர்களும் வருடந்தோறும் மாணவர்களின் ஆங்கிலக்கல்வி வளர்ச்சிக்கு ஆக்கமும்இ ஊக்கமும் அளிக்கின்றனர். ஓய்வு நிலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்கள் தலைவராகவும், திரு.ந.பாரதி அவர்கள் செயலாளராகவும் மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு கிட்ஸ்–பார்க் கல்வி வளர்ச்சியில் தங்கள் பெரும் பங்களிப்பை செய்து வருகின்றனர். மிகவும் சின்னஞ் சிறிய குழந்தைகள் ஆங்கிலப் பாட்டை நல்ல உச்சரிப்புடன் மனனஞ் செய்து மேடையில் பாடும் போது மிகவும் ஆனந்தம் அடைந்தேன். கிட்ஸ் – பார்க்கில் ஆங்கிலமொழியை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆரம்பத்தில் காரைநகர் கிட்ஸ் – பார்க்கில் இருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பல பிள்ளைகள் இடம்மாறிச் சென்றமையை அறிந்து வேதனையடைந்த நிர்வாக அங்கத்தவர்கள் வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலையை மீளவும் ஆரம்பித்து கிட்ஸ் – பார்க்கில் கல்வி கற்ற மாணவர்களை சேர்த்து கல்வி பயில வாய்ப்பு ஏற்படுத்தியமை வரவேற்கத்தக்க விடயமாகும். முக்கியமாக காரைநகர் –கிட்ஸ் – பார்க்கின் தொடர்ச்சியாக வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையில் மாணவாகள் ஆங்கிலக் கல்வியை மிகவும் திறமையாகக் கற்று வருவதை இவ்வருட பரிசளிப்பு விழாவின் போது கண்கூடாகக் காண முடிந்தது.

இப்பாடசாலை மாணவர்கள் தீவக வலயத்தில் ஆங்கிலப் பாட்டுஇ பேச்சு, நாடகம் போன்றவற்றில் முதலாம்இ இரண்டாம் இடங்களைப் பெற்றிருக்கின்றனர். அது மாத்திரமல்ல ஆங்கில நாடகம் ஒன்றை திறமையாக அரங்கேற்றியுள்ளனர். அந்த நாடகத்தின் மூலம் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியை குறிப்பாக ஆங்கிலம் சரளமாகப் பேசும் வாய்ப்பினையும் ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்துள்ளனர். நல்ல ஒழுக்க விழுமியங்கள், பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் மாணவர்கள் மாத்திரமல்ல வளர்ந்தவர்களும் அறிந்து அதன் படி ஒழுகக்கூடிய நல்ல பாடத்தை அந்த நாடகம் கற்றுத் தந்தது. தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் திறமையாக நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்கள் ஆங்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்திருந்தமை பாராட்டத்தக்க விடயமாகும்.

ஆங்கில மொழி கற்பது என்றாலே பெரும்பாலான மாணவர்கள் வேப்பங்காய் சாப்பிடுவது போல கசப்பு உணர்வை உணர்கின்றனர். இந்த பாடசாலை மாணவர்கள் ஆங்கில மொழியை இலகுவாகக் கற்கக் கூடிய வழிகளை மற்றய மாணவர்களுக்கு கற்றுத் தந்திருக்கின்றார்கள். அழகான, பிழையற்ற உச்சரிப்புடனும் நல்ல தொனியுடனும் பேசிய, பாடிய, நடித்த பிள்ளைகள் யாவரும் ஆங்கிலத்தை இலகுவாகக் கற்க முடியும் என்பதை நிரூபித்திருக்கின்றனர். அ.மி.த.க. பாடசாலை அதிபர் திருக.நேத்திரானந்தன் அவர்களையும், ஆசிரியர்களையும் ஊக்கமுடன் செயற்படும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு.ந.பாரதி அவர்களையும் பாராட்ட வேண்டிய கடமை எமக்கு உண்டு.

ஆங்கிலமொழியை சிறுவயதில் இருந்தே எமது இளம் சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எமது காரைவாழ் சமூகத்திற்கு உண்டு. முக்கியமாக பெற்றோர்கள்இ ஆசிரியர்கள்இ புலம்பெயர் தமிழர்கள் யாவரும் சேர்ந்து காரைநகர் மக்களின் ஆங்கில அறிவை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதே எனது பேரவா ஆகும். காரை கிட்ஸ்–பார்க் மாணவர்களையும் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை மாணவர்களையும் பாராட்டுவதுடன் அவர்கள் மேன்மேலும் தமது கல்வியில் முக்கியமாக ஆங்கிலக் கல்வியில் முன்னேற எல்லாம் வல்ல மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன்.

பழைய மாணவி,
வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை
கலாநிதி வீரமங்கைஸ்ராலினா யோகரத்தினம்,
M.A, B.Ed, Ph.D
சிரேஸ்ட விரிவுரையாளர்–ஆங்கிலம், மொழியியல்
ஆங்கிலத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்வளிக்கும் கனடாவில் நாம்

ஏனிந்த ஆனந்தம் மனதுக்குள்ளே
இந்நாட்டில் நாம் வாழ்வதற்கு
வான்புகழ் பெற்ற நாடிதே
வசதிகளுடன் நாம் வாழ்வதற்கு
தேனும் பாலும் தருகிறது
தேவைகள் யாவும் கிடைக்கிறது
காணும் உலகின் அதிசயக்காட்சி
கனடாவின் நயகரா நீர்வீழ்ச்சி

நால்வகைக் காலங்கள் இங்கே
நாம்காணும் காட்சிகள் வெவ்வேறே
பால்நிறப் பனியிலே சிறுபிள்ளைகள்
பனிமனிதன் செய்வது பனிக்காலத்திலே
பலநிறங்களாய் மாறும் இலைகள்பின்
பழுத்துச்சருகாய் விழுவது உதிர்காலத்திலே
அழகாய்ப் பூத்திருக்கும் மலர்களைநாம்
ஆனந்தமாய்ப் பார்ப்பது கோடையிலே

அமைதியெனும் தென்றல் வீசுகிறது
அளவிலா ஆனந்தம் தருகிறது
சுமைதரும் போரிங்கில்லை நாம்
சுகமாக வாழ்கிறோம் குறையில்லை
எமை வாழவிடுகிறது சுதந்திரமாக
எமதுரிமைகளைக் காக்கிறது நிரந்தரமாக
சமயங்கள் பலஇந்நாட்டிலே காண்பது
சமமான மனித ஜாதி ஒன்றே

மெய்வருந்த ஈட்டிய செல்வம்
மெல்லப் போய்விடும் எமைவிட்டு
நோய் வந்த நேரத்திலென்று
நொந்து மனம்வாடாது இதையிட்டு
செய்யும் சிகிச்சைகள் யாவிற்கும்
செலவிடுகிறது மாகாண அரசு
உய்ய முதியோரின் வாழ்வு
உதவுகிறது குறைந்த வரியிட்டு

கிழமைகள் முடிவில் அரங்கேற்றம்
கிடைக்கிறது பெலத்த கரகோசம்
வளருகிறது இங்கெம் கலாச்சாரம்
வரவேண்டாம் எமக்கு வீண்சந்தேகம்
புத்தக வெளியீடுகள் வருமடிக்கடி
புதறிவுபெறுகிறோம் படித்துநாம் தமிழ்ப்
பத்திரிகைகள் வரும்வாரம் வாரமாக
பார்ப்போம் அவற்றை இலவசமாக

கற்ற தமிழை மறவாதே
காலம் எத்தனை கடந்தாலும்
மற்ற நாடுகளில் வாழ்ந்தாலும்
மறவாதே தேமதுரத் தமிழை
பெற்று வளர்த்து ஆளாக்கிய
பெற்றோரைப் பேணுவதுன் கடமை
சொற்களைச் சற்றுசிந்தித்துச் சொல்
சாகும்வரை உன்தோழன் உனதுநா

இந்தநாட்டைப் போலெல்லாம் இருந்தால்
எந்தநாட்டிலும் இனிதாய்நாம் வாழலாம்
சொந்தஊர் அனைவருக்கும் சொர்க்கமே
அந்தஊரை ஒருபொழுதும் மறக்கோமே

அந்த ஊர் எமக்குக் காரைநகரே

Dr. தில்லைநாதன் சிவகுமாரன்
இளைப்பாறிய இணைப்பேராசிரியர்
மக்மாஸ்டர் பல்கலைக்கழகம்

தங்கத்தீபம் வார இதழில் வெளிவந்தது.
நன்றி: தங்கதீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# KARAINAGAR
## - An Introduction to our roots

Karainagar is a great village where our ancestors were born. Our hearts fill with joy when we say the name of our hometown 'Karainagar'.

Karainagar is an islet off the northern coast of Sri Lanka. It covers an area of 14 square miles. The old name of Karainagar is Karaitheevu. The reason for this name is said to be that karai plants were seen growing in this area in the early days.

Karainagar is located 4 km across a lagoon northwest of the city of Jaffna. A causeway built across the lagoon in 1869 connects the mainland by roadway. People struggled to travel before this causeway was built. It was a great relief for them.

In 1922 Sir Pon. Ramanathan visited Karaitheevu and changed its name for Karainagar. Even though it is an islet it has a number of divisions within. Some notable divisions are Valanthalai, Thangodai, Kalapoomi, Kovalam, Karungali and Palakadu.

There are paddy fields in the middle of the island and the population surrounds these paddy fields. There is a harbour in the south of the island with a large naval base nearby. There is an old quarantine sea fort built by the Dutch near this harbour when they ruled Sri Lanka. History has it that the Dutch demolished an Iyenar Temple built by the Sri Lankan king Kulakottan and built this sea fort with the materials such as granite pieces obtained from the demolition.

The people of Karainagar preserved their religion Saivam and their language Tamil promoting and nurturing them with their way of life and whatever worthy of their culture.

There are 43 temples in Karainagar. They are temples of olden days. Of these the notable ones are Eelathu Sithambaram, Varivalavu Pillaiyar Kovil, Palavodai Amman Kovil, Thikkarai Murugan Kovil, Viyavil Iyenar Kovil and Manatkadu Amman Kovil.

Eelathu Sithambaram has the exceptional practice of having grand temple festival (Mahotsavam) thrice every year.

There are many Saiva institutions in Karainagar. Saiva Mahasabai, Manivasagar Sabai, Pillai Madam,, Siva Ashramam and Kovalam Murugesu Swamiyar Ashram are noteworthy among them.

Suppaiyar, Murugesu Iyer, Karthikeya Iyer, Panchadchara Kurukkal, Subramaniya Desikar, Nagamuthup Pulavar and Pandithar Arulampalavanar are some of the scholars born in Karainagar and they are authors of books worthy of preserving for posterity.

Karainagar people have been marrying amongst themselves for a very long time and they are all related to each other. Because of this traditional practice they remain more and more inter related and take care of each other and help out each other.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

People of Karainagar have great ability to successfully complete any task they undertake.. They travelled to many parts of Sri Lanka and ran profitable businesses. In addition, under the British rule they went to countries such as Malaysia and Singapore and joined the administrative service. These activities made them very rich.

Though they became very rich they had the superior quality of not being arrogant with that count and always led a simplistic life. They used their wealth with great pleasure to help the poor and to build or support libraries, schools and temples.

Karainagar has limited water resources. But people are keen farmers and through their hard work they succeed in cultivating paddy, coconut, and other vegetables. They are so industrious that they make the most of Palmyra produce.

The work ethic of Karainagar people led to the building of Ceynor factory with the aid of Norway government to manufacture fishing boats and nets and to produce sea food.

People of Karianagar are very keen on education and there are 17 schools in Karainagar. The teachers in these schools felt teaching was a noble service and due to this belief people in Karainagar become educated. Colleges such as Yarlton College and Dr A.Thiagarajah Madhya Maha Vidyalayam are famous.

People of Karainagar love their soil and culture. There was a teacher known as Arunasala Upathiyayar in Karainagar in the late nineteenth century. He was keen about saving their tradition and culture from western influence. He gathered support to establish schools to maintain native tradition. He started schools such as Thirugnanasambantha Vidyalayam (Hindu College) and Viyavil Saivaparipalana Vidyalayam. He is hailed a pioneer in this service of establishing schools to uphold Saiva Faith.

Thirugnanasambntha Vidyasalai progressed as Sayambu Upathiyayar worked hard with his discipline of English education. In course of time the school became 'Hindu College' under the Hindu Board of Education. Until 1945 Hindu College had the original block of building and two temporary sheds to hold classes.

Mr. A.Thiagarajah, a postgraduate teacher in the school took office as Principal in late forties. Since then the school developed and expanded. The school reached a higher standard by early sixties when it was taken over by the State. It was then upgraded to the level of supra grade Madhya Maha Vidyalayam. The state recognized Dr.A.Thiagarajah's services to the school and named it after him.

The students from these colleges then proceeded to universities and then have held important positions. Karainagar has produced many educated men and women who include Justices, lawyers, administrative officers, doctors, engineers, college principals, university teachers and professors. Allen Abraham (1865-1922) a mathematician from Karainagar researched about Halley's Comet in 1910 and became world famous.

There have been parliamentarians from Karainagar. The first one elected was Dr. A.Thiagarajah, a popular principal of a leading college. The second one was Mr.T. Maheswaran, a famous businessman. Both members of Parliament tirelessly worked to develop Karimnagar in many ways.

Casuarina Beach in Karimnagar is quite well known for its white sand and Casuarina trees. Many tourists go to enjoy on this beach.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thousands of Karainagar people left Sri Lanka due to the communal violence. They went to countries such as Canada, America, England, Germany, Australia and New Zealand. Those who left never forgot their homeland. They have been keeping in touch with the people from their hometown and enjoying the relationships. They have organized associations in most of the countries they went to and are maintaining their relationships. In addition they are also helping their relatives who are still living in Karainagar.

Though we live abroad of Karainagar let us be aware of the greatness of Karainagar. Let us strengthen our relationships. Let us help our relatives. Let us live prosperously.

May Karainagar live forever. May our relation ships continue forever.

Thambipillai Nanthivarman, CA, ACMA Sydney, Australia.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# In Memory of Velupillai Suntharesu

Ceylon Fisheries Corporation, Various Districts Sri Lanka
**Regional Executive Manager**
**1967 – 1990**

Cloverdale Mall, Etobicoke ON Canada
**Maintenance Supervisor**
**1990 – 1995**

Canada-Karai Cultural Association ON Canada
Treasurer
**2002 - 2004**

Self Employed, GTA ON Canada
**Tamil/Sinhala Interpreter**
**1995 – 2014**






Born in Kalapumy Karainagar for the married couple Kailayapillai Velupillai and Suntharam. He was graduated from Jaffna Hindu College and started his career with government of Sri Lanka at young age in central part of the country. Which was highly populated with Singhalese and very difficult for a Tamil nationalist to work and develop business, but he took the opportunity as a challenge and reached out all the steps to learn the language so that he can communicate well with group of people. This was crucial as he was in fisheries and need to be able to speak the language fluently in order to make the sales. Having interaction with many fishermen with all variety of sea foods, determining cost analysis and making the right sales at almost instantaneous was close to impossible. He made it all happen with his extraordinary talent and innovative decision making skills.

As years goes by he was promoted several times from starting stage at basic grade level -12 to higher grade level - 2. His courage was recognized by the officials and added many districts that needed improvement in development and sales. Outcome was successful as the sales volume increased, created job opportunities and yearend bonus for the employees. Every employee was energized as they started to earn well above standard salary on the various new projects and accomplishments. His dedication and talent improved the sales, increased revenue and made a perfect team. He was the true leader and trust worthy as he worked for the government of Sri Lanka he managed to be a well representative which was recognized by the fisheries minister P. Peraira and congratulated in Kalpitiya Puttlam district in the year of 1988.

He wasn't just attached to his profession; he was an excellent family man, took care of his wife


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and children as well as his parents and siblings. As the civil war got worsen, changes in government made difficulties in his position. Among the violence and an assassination of a staff convinced him for an early retirement. Leaving the family and home country behind, he arrived in Toronto Canada for the safety of his life.

His hard work continued, started new career in translation service. As a self-employer he made many contacts and was able to take contracts with many companies in this line of business. His sales techniques started to kick back. Participated in Canada-Karai Cultural Association and became a Treasurer. When someone asks him "when are you planning to retire", his answer was "there is no such thing; this is a Canadian engine always on the run". He invested his time with family and funds in real estate. Bought his dream bungalow house in Brampton thinking he has knee pain and didn't want to trouble anyone at his late 60's by living on two-story house.

Unfortunately cancer played its role on his healthy body. No one had ever imagined this wonderful enthusiastic humble person would have a tumor in stomach. He fed many people in his previous employment, but this illness made him suffer and unable to eat solid food for about six months. Prayers, family support and treatment kept him active little over two years. He is now watching us from heaven. If you ask us, we would say he doesn't have any regrets in his life. Since he was a type of person who used to say; "if you think of something then get it accomplished" also he likes the dialog from the movie "life is like a river, always be on the run never stop". There are many to list, his memories will always be with us and we follow his footsteps in the next many generation.

Wife & Children
Rest in Peace, God Bless

# அத்தான் நினைவுகளிலிருந்து

நண்பர்கள் இல்லாத வாழ்க்கை நரம்பற்ற வீணைக்குச் சமம். நரம்பு இல்லாத வீணைக்கும் விறகுக் கட்டைக்கும் வித்தியாசம் அதிகம் இல்லை. ஆழமான அன்பே அழுத்தமான நட்புக்கு அணிகலன். சேர்ந்து அமர்ந்து திரைப்படம் பார்ப்பதும் தேநீர் அருந்துவதும் கடற்கரை மணலில் கனவுகளைப் பகிர்ந்து கொள் வதும் பழக்கத்தை வளர்க்கலாம். ஆனால் இவற்றால் மட்டுமே ஆழமான நட்பு அரும்பி விடாது. இந்தச் சுயநலப் பொழுதுபோக்குகளில் நாம் இன்பத்தைப் பகிாந்து கொள்ளலாம். இதயத்தைப் பகிர்ந்து கொள்ள இயலாது.

ஒவ்வொரு மனிதனுக்கும் மூன்று முகங்கள் அல்லது மூன்று வகைப் பரிமாணங்கள் உண்டு என்கிறார்கள்.

What you think you are?
What others think you are?
What you really are?

உன்னைப்பற்றி நீ என்ன நினைக்கிறாயோ அது ஒரு பரிமாணம். உன்னைப்பற்றி பிறர் என்ன நினைக்கிறார்களோ அது இரண்டாவது பரிமாணம். உண்மையில் நீ யாராக இருக்கிறாயோ அது மூன்றாவது பரிமாணம்.

இந்த மூன்று பரிமாணங்களையும் கணக்கிட்டு ஒப்பிட்டுப் பார்த்து முடிவெடுக்கும் போது தான் ஒருவனின் உண்மையான பரிமாணமும் சக்தியும் தெரியவருகிறது.

மகா பாரதத்தில் கர்ணன்!

ஏன்? இராமாயணம் முழுவதுமே நட்பினால் தான் நடக்கிறது. வேடன் குகனின் நட்புதான் ராமன் சீதை இலக்குவன் மூவரையும் படகில் கங்கையைக் கடக்கச் செய்தது. சுக்ரீவனின் நட்புதான் சீதையின் இருப்பிடம் காணத் துணை செய்தது. வீடணன் நட்பே ராவணன் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.

எனக்கும் சுந்தரேஸ் அண்ணைக்கும் (அத்தான்) இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு ராமனுக்கும் குகனுக்கும் இடையிலானது. இருவருக்கும் இருவரிடமும் ஆகவேண்டியது ஒன்றுமில்லை!
முதல் பார்வையிலேயே ஏற்படும் காதலும் நட்பும் முழுமையானவை அல்ல. சோதனை வரும்போது இந்தக் காதலும் நட்பும் சொல்லிக் கொள்ளாமலே கழன்றுவிடும். சோதனைகளின் வெம்மை தாளாமல் பாளம் பாளமாக என் நெஞ்சு பிளந்து கிடந்த பொழுது அமுத தாரையாக அன்பைப் பொழிந்து என் வாழ்வின் மீது தன் வசீகரத்தைக் காட்டியவர்! கேட்காத போதே என் தேவையறிந்து வரம் தந்த வள்ளல்! தான் சுந்தரேஸ் என்கின்ற என் அத்தான்.

தன்னுடைய வியர்வையின் விளைச்சலில் பசியாறிய சுயமரியாதைக்குரியவர். உழைப்பின்றி உண்ணும் உணவு திருட்டுக்குச் சமம் என்ற கீதையின் வாசகத்தை கற்றுத் தேறியவர். சோம்பியிருப்பதை விட உழைப்பதே சுகமானது என்ற எட்வின் அர்னால்ட்டைப் படித்தவர்.

காரை கனடா கலாச்சார மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர். மன்றத்தின் பல்வேறு பதவிகளில் பணிகளில் உடல் உள ரீதியாக பங்கு கொண்டவர். என்னைப் பொறுத்தவரையில் சிவனோடு தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டவர். கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஆருத்திரா தரிசனத்தில் முன்னின்று சேவை செய்ததாலோ என்னவோ சிவன் அவரது கலண்டரின் கடைசித் தாளையும் முழுமையாகக் கிழித்து விட்டான்.
சகலரும் சாகப் பயந்து தான் சாகிறார்கள். தன்னை அறிந்தவர் மட்டுமே மரணத்தைக் கண்டு அஞ்சாமல் வரவேற்கிறார். அவரால் மரணத்தைத் தள்ளி வைக்கவும் கூடும். முதலில் போராடி தன் மனோபலத்தால் நெல்முனையளவும் பதற்றம் இல்லாமல் கடைத்தேறி என் மகளின் பூப்புனித விழாவிற்கும் வந்தது தான் அற்புதம்! அதிசயம்!

ஆறு போல் அளவாக ஓடி தென்றல் போல் மிதமாக வீசி நேரத்தை இழக்க விரும்பாமல் உழைப்பையும் உறவுகளையும் கொண்டாடிய மனிதம். நெருப்பைக் கறையான் அரிக்க முடியாதது போல பழியும் பாவமும் நெருங்க முடியாத பொது வாழ்கையிலும் தன்னைக் கரைத்துக் கொண்டவர் அத்தான். (சுந்தரேஸ்)

இன்றைய கால கட்டத்தில் இவ்வுலகில் நேர்மை திண்டாடுகிறது! ஒழுக்கம் ஊசலாடுகிறது! அநீதியும் அக்கிரமமும் ஒழுங்கீனமும் தான் உயர்ந்த நிலைக்குச் செல்ல அடிப்படையாகிறது. நேற்றைய நினைவிலும் நாளைய கனவிலும் காலத்தைக் கழிக்காமல் ஆயிரம் அவலக் கவலைகள் தன்னைச் சுற்றி முற்றுகையிட்ட போதிலும் அவற்றின் தாக்குதலில் தோல்வியுற்றுத் துவண்டு விடாமல் காணும் அனைத்திலும் இன்பத்தைத் தரிசித்து எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா என்று ரசனையுடன் வாழ்ந்து முடித்தவர் சுந்தரேஸ் (அத்தான்).

காலை நேர நிழல் நேரம் ஆக ஆகக் குறையும். மாலை நிழல் நீண்டு கொண்டே போகும். நல்ல நட்பு மனிதனின் மரணம் வரை மாலை நிழலாக நீளும். வறுமையிலும் துயரத்திலும் இளைப்பாறுதல் தருவது இனிய நட்பும் நண்பர்களுமே.

மறந்து விடாதீர்கள்....... நண்பர்கள் இல்லாத வாழ்க்கை சாட்சி இல்லாத மரணத்துக்குச் சமம்!

– ரஞ்சன் கணபதிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா-காரை கலாச்சார மன்றம் 2014ம் ஆண்டு காரைநகர் பாடசாலைகளின் மேம்பாட்டிற்காக வழங்கிய நிதி உதவிகளின் விபரம் வருமாறு:

**1. ஊரி அ.மி.த.க.பாடசாலை:**
யா-ஊரி அ.மி.த.க பாடசாலைக்கு பொருளாதாரத்தில் பின் தங்கிய கற்றலில் இடர்படும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான திட்டத்திற்காக 214,810 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் 145 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்களில் 90 விகிதமான மாணவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்ட குடும்பங்களை சார்ந்த மாணவர்களாவர். அத்துடன் 32 மாணவர்கள் வன்னி யுத்தத்தில் இருந்து மீளக்குடியமர்ந்த பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்த நிலையில் பாதுகாவலருடன் வாழும் பிள்ளைகளாவர்.

கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஊடாக வழங்கப் பட்ட நிதியுதவியின் மூலம் இம்மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்களான பென்சில், கொப்பிகள், சிற்றுண்டி, மற்றும் மின்சார கட்டணம், மேலதிக ஆசிரியர் சம்பளம் மற்றும் கற்றல் தேவைகளிற்கான காரியாலய உபகரணங்கள் என்பனவும் ஒரு வருடத்திற்கு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**2. வடக்கு அ.மி.த.க. பாடசாலை(சடையாளி):**
– வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை(சடையாளி) பாடசாலை கணனி அறிவை விருத்தி செய்தல் 68,000 ரூபாவும் ஆங்கில அறிவை விருத்தி செய்தலுக்கு 30,000 ரூபாவும் மொத்தம் 98,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் 2014 சித்திரை மாதம் முதல் 2014 மார்கழி வரை மேற்படி மேலதிக வகுப்புக்கள் இடம் பெறுகின்றன.

அத்துடன் மெல்லக் கற்கும் 11 மாணவர்களிற்கான மூன்று மாத பயிற்சி வழங்குவதற்கு மாதம் ஒன்றிற்கு 2500 ரூபா வீதம் மூன்று மாதத்திற்கும் ஆகும் ஆசிரியர் கொடுப்பனவு, செயலட்டை தயாரித்தல், என்பவற்றிற்கு 7500 ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இவ்வருடம் புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் இவர்களிற்கான மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**3. வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை(அப்புத்துரை):**
– வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை (அப்புத்துரை) ஆங்கில, கணனி கல்விக்கான தொண் டாசிரியரின் கொடுப்பனவு (ஜூன்2014 – டிச.2014) ரூ 36,000வும் இணைப்பாடவிதான செயற்பாடு ரூ12,000வும் Printer Toner ரூ13,500 வும், காகிதாதிகள் கொள்வனவு 15,000 ரூபாவும், அத்துடன் 05.10.2014 அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு பரிசுப்பொருள்களிற்கான செலவாக 24,000 ரூபாய்கள் மொத்தம் 100,500 ரூபா வழங்கப்பட்டது.

**4. பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை:**
– பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆங்கில பாட விருத்திக்கான உதவியாக ரூ40,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**5. வியாவில் சைவ வித்தியாலயம்:**
– வியாவில் சைவ வித்தியாலயம் பிரதி எடுக்கும் இயந்திரம் (ழாழவழ ஊழிநைச) கொள்வனவுக்கான நிதியுதவியாக ரூ 56,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**6. சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை:**
– சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான உதவி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுக்காக ரூ156,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**7. யாழ்ற்ரன் கல்லூரி ஆரம்ப பாடசாலை(கோவிந்தர் பள்ளிக்கூடம்):**
கல்லூரி ஆரம்ப பிரிவு கோவிந்தர் பாடசாலை கற்றல் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் படங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிப்படுத்தல் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 30,000 ரூபா வழங்கப்பட்டது.

**8. வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை:**

வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையில் இருந்து அதிபர் எஸ்.இளங்கோ அவர்களினால் கோரப்பட்டதற்கு இணங்க விசேட கற்றல் செயற்திட்டத்திற்கான

– சிறுவர் வாசிப்பு நூல் கொள்வனவு – 2,000 ரூபா
– அப்பியாசக் கொப்பிகள் – 5,000ரூபா
– பென்சில் பேனா – 1000ரூபா
– கணனி மென்பொருள் – 500ரூபா
– கோவை மட்டைகள் – 600ரூபா
– ஞஏஞூீடயலநச 6,500ரூபா.

மொத்தம் 15,600 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**9. தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை:**

தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியா சாலையில் இருந்து 18.08.2014 திகதியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தில் கற்றல் தேவைகளை மேம்படுத்துவதற்கு

– TV – 25,500 ரூபா
– 500று stabilizer – 4500 ரூபா
– 7011 Radio Set – 10,500 ரூபா
– Innovex DVD Player – 5000 ரூபா

இவற்றுடன் மெல்லக் கற்கும் மாணவர்களிற்கான ஆங்கில வகுப்பிற்காக மாதாந்தம் 2,500 ரூபா வீதம் ஒரு வருடத்திற்கு 30,000 ரூபாவும், மொத்தம் தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலைக்கு 75,500 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**10. மெய்கண்டான் வித்தியாசாலை:**

பின்தங்கிய சூழலில் அமைந்துள்ள இப்பாடசாலையின் வேண்டுகோள்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, கனடா காரை கலாச்சார மன்றத்தின் நிர்வாக சபையினரால் பின்வரும் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற கனடா காரை கலாச்சார மன்றம் நிதியுதவி அளித்துள்ளது.

– பின்னூட்டல் வகுப்பு – மாதம் ஒன்றிற்று 3,500 ரூபா வீதம் 12 மாதங்களிற்கு மொத்தம் – 42,000 ரூபா
– மாணவர்களுக்கு தவணைக்கு ஒருமுறை போட்டிகள் நடாத்தி ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்குவதற்கு தவணை ஒன்றிற்கு 3,000 வீதம் 3 தவணைகளிற்கும் மொத்தம் – 9,000 ரூபா
– மாணவர் முதல்வர்களுக்கு சின்னம் சூட்டு விழா, கழுத்துப்பட்டி, சப்பாத்து என்பவற்றிற்கு மொத்தம் – 7,000 ரூபா
– வாய்ப்பாடு 1" தர 6" ஒன்றிற்கு 2750 ரூபா
– பொன்மொழிகள் தொங்கவிடுதல் ஒன்று மட்டும் – 4,500
– ஆரம்ப விஞ்ஞான செயல்முறை உபகரணங்கள் தயாரித்தல், காற்றாடி, திசைகாட்டி, திசைஅறி கருவி, மின் சுற்றுக்கான பற்றிப் பெட்டி, வீதிச் சமிக்க மற்றும் உபகரணங்களுக்கான நிதி மொத்தம் – 15,000
– சிறுவர் நாடக பயன்பாட்டிற்காக மிருதங்கம், புத்தளிப்பு கருவிக்கான நிதி மொத்தம் – 7,500 ரூபா
– மலசல கூட திருத்தம் – 10,000 ரூபா
– மாணவர்களுக்கான சிறுவர் நாடகம், திருக்குறள் போட்டி, சித்திரப் போட்டி, தமிழ் தின போட்டி, ஆங்கில தினப் போட்டி, கணிதத்திறன் போட்டி போன்றவற்றிற்கு பாடசாலை மட்ட ஊக்குவிப்பு வரிசு வழங்குவதற்கான நிதி மொத்தம் – 5,000 ரூபா

மேற்படி 9 திட்டங்களிற்காக கனடா காரை கலாச்சார மன்றம் 102,750ரூபா(ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது) வழங்கப்பட்டுள்ளது.

**11. சுப்பிரமணியம் வித்தியாசாலை:**

மெல்ல கற்போர் 40 மாணவர்களிற்காக மேலதிக மாலை நேர வகுப்பு செயற்திட்டத்திற்கு 85,000 ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளது.

**12. ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை:**

– ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை 25 வருடங்களின் பின்னர் 01.09.2014 அன்று மீண்டும் கல்விப் பணிகளிற்காக இயங்க ஆரம்பித்து வைக்கப்பட்டது. உடனடி காரியாலய உபகரணங்கள் கொள்வனவிற்காக 10,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**யாழ்ற்ரன் கல்லூரி**

– யாழ்ற்றன் கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க தகவல் தொழில் நுட்ப ஆய்வு கூடத்திற்கான கணனிகள் கொள்வனவுக்காக ரூ500,000 ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

**கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்**
**(காரைநகர் இந்துக் கல்லூரி)**

– கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் பல்லூடக அறையை மேம்படுத்தலும், தகவல் தொழில் நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்தலுக்குமான திட்டத்திற்கு ரூ13,60,000 ரூபாவிற்கு உள்ளான நிதி ஒதுக்கப்பட்டு இதுவரை 600,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகரில் இன்னோரென்ன தேவைகளிற்காக இவ்வாண்டு(2014) கனடா காரை கலாச்சார மன்றத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவிகள் வருமாறு:

– காரை அபிவிருத்தி சபையினால் நடத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் கருத்தரங்கிற்கு 110,000 ரூபா வழங்கப்பட்டது

– திரு.தம்பையா அம்பிகைபாகன் (கொழும்பு வலய முன்னாள் ஆசிரிய ஆலோசகர்) அவர்களினால் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கிற்கு ரூ 43,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

– காரைநகர் பிரதேச மருத்துவ மனைக்குத் தேவையான 5 நோயாளர் படுக்கைகள் (Bed with mattress Stainless Steel)கொள்வனவுக்கான நிதியுதவி யாக ரூ150,000 வழங்கப்பட்டுள்ளது.

– வேதரடைப்பு ஆரம்ப பாலர் பாடசாலைக்கு குடிநீர் தாங்கி ஒன்று வழங்குவதற்கு 10,000 ரூபாய்கள் வழங்கப்பட்டது.

– ஆரம்ப பாடசாலைகளின் கற்றல் உபகரணம் ீைை டீழயசனள) 60,000 ரூபா செலவில் பெறப்பட்டு வழங்கப்பட்டுஒதுக்கப்பட்டது.

– காரை மத்தி மேம்பாட்டு கழகத்தினரால் 11.11.2013 மற்றும் 11.04.2014 திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட நிதிவேண்டுகை தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு காரை மத்தி மேம்பாட்டு கழகத்தினரின் செயற்பாடுகள் மிகவும் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வரவு செலவு விபரங்கள் கனடா காரை கலாச்சார மன்றத்திற்கு அவ்வவ்பொழுது அனுப்பி வைக்கப் படுகின்றது. காரை மத்தி மேம்பாட்டு கழக அறிவக நிலையத்தின் செயற்பாடுகளிற்காக 20,000 ரூபாய்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

– கனடாவில் மரணத்துவம் அடைந்த காரைநகர் மக்களின் இறுதி அஞ்சலி நிகழ்வின் போது கனடா காரை கலாச்சார மன்றத்தினரால் மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்வது வழமையாகும், மலர் வளைத்துக்கு செலவிடப்படும் (அண்ணளவாக 100 டொலர்கள்) பணத்தினை இவ்வருடம்(2014) முதல் புண்ணிய தேவைகளிற்காக அமரத்துவம் அடைந்த மக்களின் சார்பாக வழங்குவது எனவும் தீர்மானிக்கப் பட்டு இவ்வருடம் அமரத்துவம் அடைந்தவர்கள் சார்பாக 700 டொலர்கள் காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்திற்கு பயிற்சி புத்தகங்கள் பெற்றுக் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**மனிதாபிமான சேவைகளிற்கான உதவிகள்:**

– வன்னிப் போரில் பாதிக்கப்பட்ட செல்வராசா நிலாமதியின் காது கேட்பதற்கான சிகிச்சைக்கான நிதியுதவியாக 368,000 ரூபா அனுப்பி வைக்கப்பட்டது.


cammtac Business Services Inc.

MORTGAGE • MUTUAL FUND • TAX • ACCOUNTING • CONSULTING

1200 Markham Road, Unit 428
Scarborough, ON. M1H 3C3

kan@cammtac.com
Tel: 416.431.0202
Fax: 905.317.2239
www.cammtac.com

A.K.Ananthanathan M.A., M.S.W, R.S.W
Registered Social Worker with OCSWSSW

• CPP Disability Pension
• Provincial ODSP & OW
• RDSP Tax Credit Certificate

வலுவளருக்கான உடல், உளநலப் பாதிப்பு மதிப்பீடு
சமூகநல கொடுப்பனவுகள்
சகல விண்ணப்பப்படிவங்களும் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் அபிவிருத்திச் சபையின் குறிப்பிடத்தக்க கடந்த இரு வருடச் செயற்பாடுகள்

காரைநகர் அபிவிருத்திச் சபையின் 06.01.2013 இல் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதன்படி தற்போதய தலைவராக திரு.தி.சிவாமகேசன் அவர்களும், செயலாளராக திரு.இ.திருப்புகழுர்சிங்கம் அவர்களும், பொருளாளராக திரு.ந.பாரதி அவர்களும், உப தலைவராக யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திரு.வே.முருக மூர்த்தி அவர்களும், உப செயலாளராக திரு.வே.சபா லிங்கம் அவர்களும் கடமையாற்றுவதுடன் பத்து நிர்வாகசபை உறுப்பினர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் மேற்கொள் ளப்பட்ட / படுகின்ற அபிவிருத்திப் பணிகளில் சில:

- பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் இரு குடிநீர்த் தாங்கிகள் (பவுசர்கள்) பெற்று சுண்ணாகத்திலிருந்து குடிநீர் எடுத்து வரப்பட்டு மக்களுக்கு தொடர்ச்சியாக விநியோகித் தல்.
- காரைநகர் சுப்பிரமணிய வீதி விவசாய வாய்க்கால் களை செப்பனிட்டு மதகுகளைப் புனரமைத்தமை. (உதவி – பிரித்தானியா காரை நலன்புரிச்சங்கம்).
- காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்குப் புதிய கட்டடங்கள் அமைத்துக் கொடுத்தமை. (உதவி – சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை).
- மாணவர்களுக்குக் கல்வி ஊக்குவிப்புக் கொடுப் பனவுகள் பெற்றுக்கொடுத்தமை. (உதவி: காரை கலாச்சார மன்றம், அவுஸ்திரேலியா நலன்புரிச் சங்கம்)
- காரைநகர் பிரதேச பாலர் பாடசாலை ஆசிரியர் களுக்கு மாதாந்தம் வேதனம் வழங்கல். (உதவி: பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம்).
- வருடந்தோறும் கண் நோயாளிகளுக்கு கண் சிகிச்சை (cataract operation) வழங்குதல். (உதவி: பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம்)
- தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் 15க்கும் மேற்பட்ட பயிற்சிப் பரீட்சைகளை நடாத்தல், உதவிக்கு கரம் கொடுப்போம் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நலிவுற்ற காரைமக்களுக்கான மருத்துவ சிகிச்சைக்கான நிதி உதவிகளை வழங்கிவருதல் (உதவி: கனடா கலாசார மன்றம்)

## கனடா காரை கலாசார மன்றம்

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

01. சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை பெற்ற காரை மத்தியை சேர்ந்த ஏ.வளர்மதிக்கான மருத்துவச் செலவு கொடுப்பனவு.
02. தாய், தந்தையை இழந்த காரைநகர் பெரியமணலைச் சேந்த சிறுவன் நக்கீரனுக்கான மாதாந்த உதவிப் பணம் வழங்கல், மாதாந்தம் 2500 ரூபாய்கள்(ஜனவரி–நவம்பர்).
03. இருதய சத்திர சிகிச்சைக்காக தோப்புக்காட்டைச் சேர்ந்த கலைப்பிரியனுக்கான கொடுப்பனவு வழங்கியமை.
04. சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை பெற்ற காரைநகர் மணற்பிட்டியைச் சேர்ந்த சி.பாலகௌரிக்கு நிதி உதவி வழங்கியமை.
05. 2013 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய தரம் 05 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சைகள், பயிற்சி வகுப்புக்களை நடாத்தியமை.
06. காரைநகரில் இயங்கும் இணக்கசபை தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் துண்டுப்பிரசுரங்கள், கையேடுகள் என்பவற்றை இணக்கசபைத் தவிசாளரின் கோரிக்கைக்கமைய மக்களுக்கு விநியோகிக்க அச்சிட்டு வழங்கியமை.
07. நூலக கட்டடம் அமைப்பதற்காக நிதி உதவி மேற்கொண்டமை.
08. கண்பார்வை இழந்த ஜங்கரனுக்கான மருத்துவச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுக்கான நிதி உதவியும் சீவநோபாயத் திற்காக நிதி வங்கியில் நிலையான வைப்பி லிட்டும் வழங்கியமை.

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்:**

01. காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் சைவசமய பாடப்பரீட்சை, மணிவாசகர் விழா என்பவற்றுக்கான நிதி உதவி வழங்கியமை.
02. சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பரிசளிப்பு விழாவிற்கான நிதி உதவி.
03. காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கான அலுவலக உபகரண கொள்வனவிற்கான நிதி உதவி.
04. 2014 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய தரம் 05 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சைகள், பயிற்சி வகுப்புக்களை நடாத்தியமை.
05. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவித்து பரிசில் வழங்கியமை.
06. தோப்புக்காட்டைச் சேர்ந்த மிகவும் வறிய குடும்பம் ஒன்றிற்கான வீட்டுத்திட்டத்திற்கு உதவியமை.
07. தாய், தந்தையை இழந்த காரைநகர் பெரியமணலைச் சேந்த சிறுவன் நக்கீரனுக்கான மாதாந்த உதவிப் பணம் தொடர்ந்து வழங்கல்.
08. காரைநகரைச் சேர்ந்த செல்வராசாவின் மகளின் மருத்துவச் செலவுக்கான நிதி உதவி வழங்கியமை.
09. வேதரடைப்பு முன்பள்ளிக்கு குடிநீர் தாங்கி வழங்கியமை.
10. காரைநகரில் உள்ள அனைத்துப் பாடசாலை களுக்கும் கற்றல் மற்றும் இணைபாட விதானச் செயற்பாடுகளுக்காக நிதி உதவி வழங்கியமை.
11. காரை மத்தி மேம்பாட்டுக் கழக அறிவக மேம்பாட்டுக்காக நிதி உதவி வழங்கியமை.

**பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம்**

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்:**

01. சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அபிவிருத்திப் பணிக்காக நிதி வழங்கியமை.
02. இரண்டு கட்டங்களாக கற்றாக் நோயினல் பாதிக்கப்பட்ட 19 பேருக்கு கண்சத்திரசிகிச்சை இலவசமாக மேற்கொண்டது.
03. களபூமியில் இயங்கும் யோகா ஆரணியகத்தின் செயற்பாட்டிற்காக நிதி வழங்கியமை.
04. தியாகராசா மத்திய மகா வித்தியாலய கற்றல் செயற்பாட்டை மேம்படுத்த பாடசாலை பழைய மாணவர் சங்கததிற்கு நிதி உதவி வழங்கியமை.
05. தியாகராசா மத்திய மகா வித்தியாலய கற்றல் செயற்பாட்டை மேம்படுத்த பாடசாலை பழைய மாணவர் சங்கததிற்கு நிலையான வைப்பிற்கான நிதி உதவி வழங்கியமை.
06. சுந்தரமூர்த்தி, யாழ்ற்ரன் கல்லூரி அபிவிருத்திக் கான நிதி உதவி.
07. காரைநகர் அரசினர் வைத்தியசாலை ஆண்கள் விடுதி புனரமைத்து நிலத்திற்கு மாபிள் பதித்து கட்டடம் தீந்தை பூசியமை.
08. காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய திருவாச கப் போட்டிக்காக நிதி வழங்கியமை.
09. காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மதில் அமைப்பதற்கான நிதி வழங்கியமை.
10. காரைநகர் கந்தர் குண்டு, காமாட்சி கேணி புனரமைப்பு.
11. வியாவில் குளம் புனரமைப்புக்கான கொடுப்பனவு வழங்கியமை.
12. சுப்பிரமணியம் வீதியில் கால்நடைகள் நீர் அருந்துவதற்கான தண்ணீர்த் தொட்டி அமைத்தமை.
13. ஆயுள் வேத வைத்திய சாலை நிறுவுவதற்கான காணி களபூமியில் கொள்வனவு செய்து வழங்கியமை.
14. தொடர்ச்சியான குடிநீர் விநியோகம்.
15. நூலக கட்டடம் அமைப்பதற்காக நிதி உதவி மேற்கொண்டமை.
16. காரைநகர் மக்களுக்கான மருத்துவ முகாம் காரைநகர் வைத்தியசாலை, ஊரி அன்ரசன் மண்டபம் ஆகியவற்றில் நடாத்தியமை.

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்:**

01. பத்தர் கேணி,காமாட்சி கேணி புனரமைப்பு.
02. காரைநகர் வைத்தியசாலை ஆண், பெண் விடுதிகள் புனரமைப்பு
03. மணிவாசகர் சபை போட்டிக்கான நிதி உதவி
04. சிவன்கோவிலடி கந்தர் குன்டு புனரமைப்பு.
05. காரைமத்தி மேம்பாட்டுக் கழகத்திற்கு தளபாடக் கொள்வனவிற்கான நிதி உதவி
06. காரைநகர் இந்துக் கல்லூரி புனரமைப்புக்கான நிதி உதவி
07. காரைநகர் மாணவர் நூலகத்தின் புத்தகக் கொள்வனவிற்கான நிதி உதவி.
08. சடையாளி வலந்தலை வடக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.மி.த.க.பாடசாலை திருத்தத்திற்கான நிதி உதவி
09. கற்றாக் நோயினல் பாதிக்கப்பட்டோருக்கு கண் சத்திரசிகிச்சை இலவசமாக மேற்கொண்டது.
10. யாழ்ரன் கல்லூரி கற்றல் செயற்பாட்டிற்கான நிதி உதவி
11. சுப்பிரமணிய வித்தியாசாலை அபிவிருத்திப் பணிக்கான நிதி உதவி
12. காரைநகர் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் நடத்தியமை
13. களபூமி கலையகத்திற்கான நிதி உதவி
14. களபூமி ஆரணியகத்திற்கான நிதி உதவி.
15. கண்பார்வையிழந்த ஒருவருக்கு வாழ்வாதாரத்திற்கான நிதி உதவி
16. சடையாளிக் கேணி புனரமைப்புக்கான நிதி உதவி
17. காரைநகரின் அனைத்துப் பிரதேசங்களிலும் 30 இற்கும் மேற்பட்ட கிணறுகள் இறைத்து தூர் வாரி புனரமைத்து வழங்கியமை

**பிரான்ஸ் காரைநலன்புரிச் சங்கம்**

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

01. தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதந்த வேதனம் வழங்கியமை.
02. முன்பள்ளிகளில் பால் காய்ச்சுவதற்காக 10 குக்கர்கள் பெற்று வழங்கியமை.
03. முன்பள்ளி பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிக்கான அனுசரனை வழங்கியமை.

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

01. தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதந்த வேதனம் தொடர்ந்து வழங்கிவருகின்றமை
02. 30 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கியமை
03. முன்பள்ளி பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிக்கான அனுசரனை வழங்கியமை

**சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை**

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்:**

01. யாழ்ற்ரன் கல்லூரி,மற்றும் சபையின் செயற்பாட்டிற்காக போட்டோக் கொப்பி இயந்திரம் வழங்கியமை.
02. தரம் 10 மாணவர்களுக்கான சங்கீம பாட புத்தகம் அச்சிட்டு தீவக வலய மாணவர்களுக்கு இலவசமாக வழங்கியமை.
03. தியாகராசா மத்திய மகா வித்தியாலய 125ஆவது ஆண்டு விழாவிற்கான அனுசரனை வழங்கியது.
04. பலகாட்டைச் சேர்ந்த பத்மசுலோசனா,தனலட்சுமி ஆகியோரின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்காக மாதாந்தம் 5000 ரூபா வீதம் வழங்கி வருகின்றமை.
05. மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி வழங்கியமை.

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

01. பலகாட்டைச் சேர்ந்த பத்மசுலோசனா,தனலட்சுமி ஆகியோரின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்காக மாதாந்தம் 5000 ரூபா வீதம் தொடர்ந்து வழங்கி வருகின்றமை.
02. காரைநகர் வைத்தியசாலை மகப்பேற்று விடுதி, பிரசவ விடுதி புனரமைத்து வழங்கியமை.
03. கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கதிரைகள் அன்பள்ப்புச் செய்தமை.
04. கற்றாக் நோயினல் பாதிக்கப்பட்டோருக்கு கண்சத்திரசிகிச்சை இலவசமாக மேற்கொண்டது.

**கனடா வாழ் காரை மக்களால் 2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

- தோப்புக்காட்டைச் சேர்ந்த கலைப்பிரியனுக்கான இருதய சத்திரசிகிச்சைக்காக கொடுப்பனவு வழங்கியமை.
- தோப்புக்காடு ஊரி பகுதிகளைச் சேர்ந்த காணிகளற்ற குடும்பங்களுக்கு வீடமைப்பதற்காக பாலாவோடையில் காணி கொள்வனவு செய்து வழங்கியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புயலை தாண்டினால் தென்றல்"



புயல் !
சொன்னால்
தெரியாது
அதன் வீரியம்
அனுபவித்தால் தான் தெரியும்

புயல் !
வாயு தேவனின்
கோரத்தாண்டவம்

புயல் !
உலகின்
அழகு முதல் எல்லாவற்றையும்
உலுக்கி எடுக்கும்
ஆயுதம்

எமது மண்ணில்
புயல்
ஆமாம் பெரும் புயல்

புயலால்
புழுதி பறக்கும்
பொருட்கள் தூக்கி
வீசப்படும்
எம் மண்ணில்
புது விதமான புயலில்
இரத்த ஆறு ஓடியது
இரத்த காட்டேறிகள் அதை
ரசித்து ருசித்து
தாண்டவமாடி மகிழ்ந்தன
எத்தனை
பூந்தளிர்கள்
மண்ணில் வீழ்ந்தன
எத்தனை இளம்
பூவையர் பூக்கள்
மறைந்தன
மறந்தன
மறைக்கப்பட்டன
அத்தனையும் உண்மை
அனைவருக்கும் தெரியும்

அட டா
எனக்கு தெரியாதே
என்று சொல்ல
இருளிலும் நடக்கவில்லை
இருவருள்ளும் நடக்கவில்லை

இரத்ததில் குழைந்தது எம் மண்
இரஞ்சி கதறினோம்
காப்பாற்றுங்கள் என்று
இருகரம் கூப்பி
அழைத்தோம்
இரக்கமின்றி இருந்தது
அண்டை நாடு முதல்
அகிலம் வரை

என்ன செய்வோம்
புயலுக்கு பயந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடத்தான் வேண்டும்
நாமும் ஓடினோம்

ஓடிய எமக்கு
அபயம் தருவதாக
அழைத்தது
இரத்த காட்டேறி
தெரிந்தும் சென்று
அடைக்கலம் தேடினோம்
அபயகரத்தினுள்
வேறு வழி

எம்மிடம் இருந்து
அபகரிக்கப்பட்டது
மானம் முதல் அத்தனையும்

"புயலை தாண்டினால் தென்றல்"

தென்றல்
எத்தனை இதமானது
சுகமானது
பனிகால தென்றலில்
பதுங்கி இருக்கும் சுகம்
சொல்லில் அடங்கா

தென்றல்
தேவதைகளின்
மூச்சுக்களால் மீட்டப்படும்
இதமான பூபாள ராகம்

ஆமாம்
எம் மண்ணிலும்
தென்றல் தானே வீசுகின்றது
அதுவும்
புயலின் பின்னான தென்றல்
இப்பொழுது......

இத் தென்றலின் சுகத்தை
அனுபவிக்கும் நாம்தான்
சொல்லவேண்டும்
வருபவர்க்கு

காப்பெற் றோட்டுகளில்
கார்களில் பவனி
எத்தனை அருமையாக
புயலின் பின்னான தென்றல்
இம் மண்ணில் என
நினைப்பீர்கள் மகிழ்வீர்கள்

உண்மையில்
எம் மண்ணில்
தென்றல்
தேவதைகளின் வேடம் தாங்கியவர்களின்
அக்கினி
மூச்சுக்களால் மீட்டப்படும் ஓர்
முகாரி ராகம் தான்

இத் தென்றலில்
நாம்
அழிந்தால் முடிந்துவிடும்
எல்லாம்
ஆனால் நடப்பது
நம்மை அழிக்கவில்லை
உயிருடன் தான் இருக்கின்றோம்
அங்கவீனப்படுத்தப்பட்டு
அலங்கோலப்படுத்தப்பட்டு
எமது நிஜம் பறிக்கப்பட்டு
முகம் சிதைக்கப்பட்டு
பதவிகளில் வைக்கப்பட்ட பாவைகளாக
நடைப்பிணங்களாக
நல்லவர்களிடம் வாழ்கின்றோம்

உண்மையில் நாம் எல்லாம்
முத்திரைகள் கிழிக்கப்பட்டு
முகவரிகள் கரைக்கப்பட்ட
தாபல்கள் தான்

எம் மண்ணில்
"புயலை தாண்டினால் தென்றல்"
என்பது

புயலை விட அழிவை
யாருக்கும் புலப்படாமல்
இதமாக பதமாக சுகமாக
செய்கின்றது....

**ஆக்கம்: தவராஜா பரமேஸ்வரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனடா காரை கலாச்சார மன்றத்தின் தமிழ் மொழி, பிரென்ஞ் மொழி மற்றும் சமய, யோகா வகுப்புக்கள்**

கனடா காரை கலாச்சார மன்றத்தின் கொள்கை விளக்கங்களில் ஒன்றான கனடாவில் காரைநகர் பிள்ளைகளிடையே தமிழ், சமய, வளர்ச்சியையும் கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்கு ஆவண செய்தல் என்ற ரீதியில் இவ்வருடம்(2014) இவ்வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மார்க்கம் வீதியில் அமைந்துள்ள சன் சிற்றி விற்பனை வளாகத்தில் அமைந்துள்ள வகுப்பறை ஒன்று மாதாந்த வாடகைக்கு அமர்த்தப்பட்டு இவ்வருடம் பெப்ரவரியில் யோகா வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன, அதனைத் தொடர்ந்து மார்ச் மாதமளவில் பிரென்ஞ் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து தமிழ், சமய வகுப்புக்கள் ஒக்டோபர் 24ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**யோகா பயிற்சியாளராக:**

**பிரென்ஞ் மொழி பயிற்சியாளராக:**

தமிழ், சமய பயிற்சியாளராக: திருமதி சாந்தினிதேவி ரமணிகரன்

உதவியாளர்களாக: முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு.தம்பையா அம்பிகைபாகன், நடன ஆசிரியை நாட்டிய கலைமணி திருமதி ஞானாம்பிகை குணரத்தினம்.

படங்கள்:

**கௌரவிப்பு!**

கனடா காரை கலாச்சார மன்றம் கனடாவிற்கு தாயகத்தில் இருந்து வருகை தந்திருந்த பிரபல வர்த்தகரும் சேவையாளருமான திரு.இ.எஸ்.பி நாகரத்தினம் அவர்களை 27.07.2014 அன்று கௌரவித்ததுடன், 10.08.2014 அன்று முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரின் சகோதரரும், வர்த்தகரும், சேவையாளருமான திரு.பரமேஸ்வரன் தியாகராசா அவர்களையும் கௌரவப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ பொன் பஞ்சாட்சரக்குருக்களின் வாழ்க்கை வரலாறு



யாழ்ப்பாணம் காரைநகர் தங்கோடையில் சிவஸ்ரீ பொன்னுத்துரை ஐயர் சொர்ணம்மா தம்பதிகளின் 5வது மகனாக 20.12.1938ல் பிறந்தார். இவருடைய உடன்பிறப்புக்களான (சிவப்பேறெய்திய) ஸ்ரீமதி சரஸ்வதி, சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள், (சிவப்பேறெய்திய) குமாரசுவாமிக் குருக்கள், (சிவப்பேறெய்திய) பிரம்மஸ்ரீ மார்க்கண்டுசர்மா ஆகியோரை தனது உடன்பிறப்புக்களாக கொண்டிருந்தார்.

இளமையிலேயே அன்பும், பாசமும் மற்றயவர்களை அரவணைக்கும் பண்பும் கொண்ட இவர் தனது ஆரம்ப கல்வியை தங்கோடை அ.மி.த.பாடசாலையில் ஆரம்பித்தார். தனது உயர் கல்வியை யாழ்ற்ரன் கல்லூரியிலும், காரைநகர் இந்துக் கல்லூரரியிலும் பயின்று(விஞ்ஞான துறையில்) சித்தி பெற்றார் இளமை பருவத்திலேயே பாடசாலைப் படிப்பு மட்டுமன்றி சமஸ்கிருதத்தையும் முறைப்படி சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்களிடம் கற்று திறம்பட விளங்கினார். புல்கலை களையும் தெரிந்து கொள்வதில் பேரார்வம் மிக்கவர். குருத்துவம், சோதிடம், அலங்காரம், மலர் மாலை தொடுத்தல் போன்ற பல் துறைகளில் அபார திறமையுடன் விளங்கிய பல்கலை விற்பன்னாவார்.

பருவ காலத்தில் புங்குடுதீவு சிவஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் – விஜயலட்சுமி தம்பதிகளின் மகளான சறோஜாவை தனது இல்வாழ்க்கைத் துணைவியாக தேர்ந்தெடுத்து 24.05.1974ம் ஆண்ட சுன்னாகம் சிவஸ்ரீ நா.சோமாஸ் கந்த குருக்கள் தலைமையில் இவர்களது திருமணம் னிதே நடந்தேறியது. வாழ்ந்தவர்கள் போற்றும் வகையிலும், வாழ்பவர்கள் புகழும் வண்ணமும் இல்லற வாழ்க்கையின் இலக்கண புருஷனாய் வாழ்ந்து வந்தார். இல்லறமாம் நல்லறத்தின் இனிய பயனாக முத்துக்களாய் நான்கு குழந்தைகள்.

சுதாகரசர்மா, சுதயாரஞ்சனி, ஸ்ரீகரன்சர்மா பிறந்தார்கள்.

கல்வியிலும, கலைகளிலும் இசைத்துறையிலும், ஆர்வமுள்ள இவர் தனது பிள்ளைகளுக்கும் கல்வியோடு கலைகளையும் கற்பித்தார். சுதாகரசர்மா இன்று ரெறன்ரோவிலுள்ள பிரபல வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக, நிகழ்ச்சி தயாரிப்பாளராக, சிறந்த நாடக, திரைப்பட நடிகராக பலவிருதுகளையும் பெற்று சிறந்த கலைஞராக திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாரஞ்சனி, ஸ்ரீரஞ்சனி ஸ்ரீகரன் ஆகியோர் கர்நாடக சங்கீதத் துறையில் படிக்க வைத்து தென்னிந்தியா சென்று பட்டப்படிப்பு முடித்து சிறந்த கர்நாடக சங்கீத ஆசிரியர்களாக ஆக்கியுள்ளார்.

சிறுவயதிலிரந்தே குலஆசார, அனுஷ்டானங்களில் அதீத ஈடுபாடு கொண்ட இவர் காரைநகர் நாகம்மாள் ஆலயத்தில் இளவயதிலிருந்தே அர்ச்சகராகப் பணி யாற்றி வந்தார். தனதுஊக்குவிப்பாலும், விடாமுயற்சி யாலும், ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் அவ்வாலய த்தை புனரமைத்து நிர்மானித்த பெருமை இவரையே சாரும். அதுமட்டுமன்றி அண்டவயல், வாரிவளவு. கற்பக விநாயகர் ஆலயம், புளியங்குளம் சித்தி விநாயகர் ஆலயம், மாத்தளை முத்துவிநாயகர் ஆலயம், காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயம், காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயம், முந்தல் திரெளபதி யம்மன் ஆலயம், ரத்தோட்டை கிருஷ்ணன் கோயில், சிவகாமி அம்மன் கோயில் போன்றவற்றில் பிரதம குருவாக பணியாற்றிஅ அவ்வாலயங்களின் வள்ச்சியில் அயராது பாடுபட்டு மக்களின் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியவராக திகழ்ந்தார்.

திருக்கேதீஸ்வரம் ஆலயம் முதல், புங்குடுதீவு, காரைநகர் வரை புகழ்பூத்த ஆலயங்களில் உற்சவ காலங்களில் அலங்கார சிவாச்சாரியராக தமது அபார திறமையினால் விதம் விதமான அலங்கார காட்சிகள் மூலம் தனது மற்றொர திறமையை வெளிப்படுத்தி மக்களின் பேரன்பிற்கும் மதிப்பிற்குமுரியவராக திகழ்ந்தார். பூமாலை, சடைநாகம் போன்றவை செய்வதிலும் மிகச்சிறப்பாக விளங்கினார். அதுமட்டுமன்றி சுதா அன்ட் பிரபா சவுண்ட சேவிஸ் என்ற பெயரில் ஒளிபெருக்கி சேவையையும் நடாத்தி வந்தார்.

1988ம் ஆண்டு புங்குடுதீவு சிவஸ்ரீ.ஸ்ரீநிவாஸக்குருக் களை தனது தீட்ஷா குருவாக ஏற்று ஆசார்ய அபிஷேகம் பெற்று ஈசான சிவாச்சார்யராக தனது குருத்துவப் பணியை ஆரம்பித்தார். இத்தியடிப் பிள்ளையார் கோவில் மகோற்சவத்தை வெகு சிறப்பாக நடாத்தி கிராம மக்களின் அன்பின் வெளிப்பாடாய், ஆலய நிர்வாக சபையின் அனுசரணையோடு அவரின் மகத்துவமான குருத்துவப்பணியை பாராட்டி மட்டுவில் சிவஸ்ரீ.கி.சோமாஸ்கந்த குருக்களினால் இவருக்கு "சிவாச்சார்ய திலகம்" என்னும் சிறப்புக் கௌரவம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1997ம் ஆண்டு தனது மூத்தமகன் சுதாகரசர்மாவின் அழைப்பின் பேரில் தனது குடும்பத்தோடு கனடா நாட்டில் குடியேறிய இவர்.கனடா நாட்டிலும் தனது குருத்துவப்பணியின் மூலம் சிறந்து விளங்கினார். கனேடிய திருமணப் பதிவாளராக கனேடிய அரசினால் நியமனம் பெற்று பல நூற்றுக்கனக்கான திருமணங் களை சமய முறைப்படியும்,கனேடிய சட்டப்படியும் நடாத்தி வைத்துள்ளார்.ஆகம முறைப்படி சிறந்த தெளிவான விளக்கங்களுடன்,பண்ணிசையோடு திருமணங்களை நடாத்துவதால் மக்களால் விரும்பி அழைக்கப்பட்டார். கனடாவில் ஒன்டாறியோ மாநிலத் தில் மட்டுமின்றி, வன்கூவர், எட்மிட்டன், போன்ற மாநிலங்களிலும், அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகளிலும் தனது குருத்துவப்பணி மூலம் எல்லோராலும் நன்கு அறியப்பட்டார். கனடாவில் பிரம்டன் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம்,திருச்செந்தூர் முருகன் ஆலயம்,ஆகியவற்றில் பிரதம குருவாக பணியாற்றி அவ்வாலயங்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார்.

அதுமட்டுமன்றி டொரன்டோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்,ஸ்ரீஜெயதுர்க்கா ஆலயம்,ஸ்ரீ கணேசதுர்க்கா ஆலயம் ஆகிய ஆலயங்களில் விஷேடகால உற்சவ குருவாகவும் பணியாற்றினார்.

தனது அதிசிறந்த குருத்துவப்பணியின் மூலம் பல சிறப்புக் கொரவ விருதுகளையும் பெற்றுள்ளார்.

1) சிவாச்சார்ய திலகம் –இத்தியடிப்பிள்ளையார் ஆலயம்
2) சிவாகம வித்வ சிரோண்மணி வரசித்தி விநாயகர் ஆலயம் கனடா
3) சிவாகம கிரியா வித்தகர்
4) பண்ணிசைச் செல்வர்
5) அலங்கார பூஷணம்
6) காரைநகர் தந்த நற்குருமணி
7) ஜோதிட மாமணி
8) குருத்துவப்பணிக்கான சிறப்புக் கௌரவம்– இந்துகுருமார் ஒன்றியம்–கனடா
9) மொடோன் இந்துகல்சர் மன்றம் –சிறப்புக் கௌரவம்.
10) காரை கலாச்சார மன்ற சிறப்புக் கௌரவம்

போன்ற பல விருதுகளைப் பெற்றதோடு,2013ம் ஆண்டு பீமரத சாந்தி பெருவிழாவையும் தனது குடும்ப உறவுகளோடுசிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தார். எந்தவித ஆடம்பரமுமின்றி. அமைதியாகவும், சாந்தமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் பழகும் தன்மை எல்லோரையும் அவர்பால் ஈர்த்துக் கொண்டது. பிறர் பொருள்மீது பேராசை கொள்ளாத நற்பண்பு அவருடைய பிள்ளை களிடத்திலும் சேர்ந்து கொண்டது.

தனது மகிழ்வான வாழ்வில் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டுஅவர்களின் விருப்பங்களையும் உள்வாங்கி, அவர்களுக்கேற்ற வாழ்க்கைத் துணைகளை தேர்ந்தெடுத்து அவர்களின் இல்வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொடுத்தார். தனது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், மீது அளவுகடந்த பாசமுடையவர் அவர்களின் மழலைப் பேச்சில் தன்னை மறந்து பேரின்பம் அடைவார்.

சுதாகரசர்மா அனுஷா அர்ச்சனா
சுதாரஞ்சனி+வாசுதேவக்குருக்கள் அஸ்வின்,அபூர்வா
ஸ்ரீரஞ்சனி+ தாரணசர்மா
ஸ்ரீகரன+ வைஷ்ணவி
என்ற தன் குலவிருட்சத்தின் நிழழில் கூடிமகிழ்ந்து களித்திருந்தவர்.தனது பரிபூரண வாழ்வை கண்ட மகிழ்விலும்,தன் கடமைகளை சரிவர செய்த மன நிறைவோடும் 12.04.2014 காலை 6.30 மணியளவில் இவ்வுலக வாழ்க்கை நீக்கி இறைவன் திருப்பாத நிழலில் நிரந்தர இடம் பிடித்துக் கொண்டார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ERAA SUPERMARKET & CATERING



***Trusted and founded for 19 years, Eraa Supermarket brings you the quality vegetables, fresh Meat and variety of Sri Lankan, Indian and international groceries at an unremarkable low price.***

**5930 Finch Ave. E,**
**Scaborough, ON**
**Tel: 416.292.2622**

**2607 Eglinton Ave. E,**
**Scaborough, ON**
**Tel: 416.269.2622**


"மலிவு என்றதும் நினைவில் வருவது இரா சுபெர்மார்கெட்"







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YORK CINEMAS

115 York Boulevard, Richmond Hill (Hwy 7 & Hwy 404)

www.yorkcinemas.ca | 905 707 3456

Dolby Surround | Stadium Seating

## NOW PLAYING




KATHI




HAPPY NEW YEAR




POOJAI

# woodside cinemas

1571 Sandhurst Circle (McCowan & Finch)

Hotline - 416 266 3456 | Info - 416 299 1045

graphicland - 416 412 0900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org